
# வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள்



வல்வை.ந.நகுலசிகாமணி

# வல்வெட்டித்துறை
# வரலாற்றுச் சுவடுகள்



வல்வை.ந.நகுலசிகாமணி

நூலின் பெயர் - வல்வெட்டித்துறை வரலாற்றுச்சுவடுகள்

ஆக்கியோன் - வல்வை ந.நகுலசிகாமணி N• NAGULASIGAMANY

பொருள் - வல்வை நகர மக்களின் பாரம்பரியம், அரசியல், கலாச்சாரம், பண்பாடு பற்றிய வரலாறு

அட்டைப்படம் -

வல்வையின் இலச்சினையும், பல வருடங்களுக்கு முன்பு ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனத்தினரால் வெளியிடப்பட்ட முத்துமாரி அம்மன் (**Picture Post Card** ) ஆலய முகப்புத் தோற்றமும்.

பதிப்பு - 1997

உரிமை: ஆக்கியோனுக்கே

கணணிப்பொறி அச்சமைப்பும் நூலின் வடிவமைப்பும் - **T.K.**பரமேஸ்வரன் (ஈழநாடு பதிப்பகம்)

அச்சிட்டோர் - விவேகா அச்சகம்

வெளியீடு - உமா நகுலசிகாமணி

**3161 EGLINTON AVE # 606**

**SCARBOROGH, ONTARIO**

**M1J 2G7**

**CANADA**


**(416) 264 - 2995**

## புனிதத் திருவடிகளில்.

நாம் தமிழர், நமது இனம் தமிழ்இனம், நமது மண் தமிழ்ஈழத்திருமண் என்ற தமிழ்த்தேசிய உணர்வைத் தமிழனின் குருதியில் ஏற்றி, ஈடிணையற்ற தியாகத்தினால் கலங்கா நெஞ்சோடு களம் பல கண்டு முப்ப தாண்டுகள் முனைப்புடன் பணியாற்றி சுதந்திரத் தமிழ்ஈழம் என்ற புனித இலட்சியக்கருவை உருவாக்கித் தந்த தந்தை செல்வா அவர்களின் திருவடிகளிலும், அன்னவருக்கு உறுதுணையாகவும் உந்து சக்தியாகவும் இருந்து இனவிடுதலை பணிகளைப் புரிந்த அண்ணன் அமிர்தலிங்கம் அவர்களுக்கும், அன்னவரை அடுத்து புதிய தலைமுறையின் தலைமைத்துவத்தை ஏற்று மறப்போர் தொடுத்து மாபெரும் சாதனைகள் படைத்து உலகசாதனைப் பொன்னேட்டிலும் தன் பெயரினைப் பொறித்த தமிழ்த் தாயின் தவப்பயனாம் வே.பிரபாகரன் வழியில் ஈழவிடுதலைப் போராட்டத்தில் தங்களை ஆகுதியாக்கிய அனைத்துப் போராளிகளுக்கும், விடுதலைப் போரில் மரணித்த தமிழ்ப் பெருமக்களுக்கும், என்னை ஈன்ற வல்லை அன்னைக்கும் இந்த நூலை இதயம் நிறைந்த மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன்.







# நுழை வாயில்


இலங்கைத்தீவின் வடபாகத்தின் கடற்கரையோரத்தில் எமது வல்வை கிழக்கே ஊறணியிலிருந்து மேற்கே ஊரிக்காடு வரையும் தெற்கே வல்வெட்டி கம்பர்மலை கிராமங்களும் அடக்கப்பட்ட 250 ஏக்கர் விஸ்தீரணமுள்ள சிறிய பட்டினமாகும். இது தான் ஆதி வல்வெட்டித்துறை. ஆனால் இன்று பழமை வாய்ந்த கந்த வனக் கடவை முருகன் தொடக்கம் செல்வச்சந்நிதி ஈறாகவும் மூன்றரை மைல் நீளமும் அரை மைல் அகலமும் உள்ள நகரசபையாக மிளிர்கின்றது.

ஒவ்வொரு கிராமமும் தமக்கென்று பாரம்பரியம், கலாச்சாரம், அரசியல் பண்பாடுகளைக் கொண்ட வரலாற்றுக் கதைகளை தாங்கியிருக்கின்றது. அதற்கு வல்வையும் விதிவிலக்கல்ல. ஆனால் இன்று பலருக்கும் பலராலும் பரிச்சயப்பட்ட இடமாகும். ஔவைப் பிராட்டி "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றார். வல்வை மக்கள் வீதிக்கு ஒரு கோயில், குறிச்சி க்கு ஒரு கோயில் அமைத்து குடியிருந்தார்கள். 1969ம் ஆண்டு இலங்கை தமிழரசுக்கட்சியின் உடுவில் மாநாடு நடந்த போது குரும்பசிட்டி திரு இரா. கனகரெத்தினம் தம்பதியினர் தமிழன் போராட்ட வரலாற்று நிகழ்ச்சிகளை 1947ம் ஆண்டிலிருந்து வருடம் வருடமாக சேகரித்து வைத்திருந்ததைப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அவை எனது மனதை வெகுவாக கவர்ந்தன. அப்போது எமது ஊர் வரலாற்றை, செய்திகளை அதுபோல் சேகரிக்க வேண்டும் என்ற எண்ணம் எனது உள்ளத்தில் பிறந்தது.

1974ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு அலங்கார ஊர்திப் பவனியில் வல்வையில் கட்டப்பட்டு அமெரிக்கா சென்ற "அன்னபூரணி" என்ற பாய் மரக்கப்பலின் மாதிரி உருவொன்றை அமைத்து அதில் பங்காற்றிய தோடு அது பற்றிய சிறிய கைநூல் ஒன்றையும் வல்வைக்கு வருகை தந்த தமிழறிஞர்களுக்கு கொடுத்து இருந்தோம். அந்நூலின் இறுதியில் ந.அனந்தராஜ், ச.காந்தி தாசன், ந.நகுலசிகாமணி ஆகியோர் தயாரிப்பில் வல்வை வரலாறு, வல்வையின் பாரம்பரியம், கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றைத் தாங்கிக் கொண்டு விரைவில் வெளிவர இருக்கின்றது என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

ஆனால்! ..... எனது நீண்ட விருப்பை இருபத்திமூன்று வருடங்களின் பின்னர் புலம் பெயர்ந்த கனடா நாட்டில் சொந்தங்களோடும் பந்தங்களோடும் வாழ்ந்த என் பிறந்தகத்தின் சிறப்புக்களை நூல் வடிவில் ஆக்க துணை புரிந்த எம் பிரானை நான் வாழ்த்தி வணங்குகின்றேன்.

தொடர்கின்ற போர் காரணமாக திரட்டிய ஆதாரங்கள், ஆவணச்சான்றுகளிற் சில அழிந்தும், சிதைந்தும், கரிந்தும்



போயின. எஞ்சியவற்றின் சிலவற்றை இங்கு தருவிப்பதிலும் நடைமுறைச்சிக்கல்கள் உள. இயன்ற வரை எமது ஊரின் முன்னேற்றத்திற்கு முன்னின்று உழைத்த பெரியார்கள், பெருமை தேடித் தந்தவர்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. இந்நூல் என் இனத்தவர்க்கு, குறிப்பாக வருங்காலச் சிறார் களுக்கும் வரலாற்று ஆய்வாளர்கட்கும் ஓரளவிற் கேனும் உதவிடும் என்பது எனது எண்ணமும் எதிர்பார்ப்பும் ஆகும். இந்நூலில் விடுபாடுகளும், குறைபாடுகளும் இருந்திட இட முண்டு. அறியத் தந்தால் நிச்சயம் திருத்தங்கள், மாற்றங்கள் செய்வேன் என அடக்கத்துடன் அறியத் தருகின்றேன்.

வல்வை நகரத்தின் வரலாற்றை அந்த மக்களின் இன விடுதலைக்காக உழைத்த, உழைக்கின்ற மூன்று சகாப்தங் களின் தலைமைத்துவத்திற்கு சமர்ப்பணமாகவும்,

நாற்பது வருடங்களுக்கு மேல் தமிழ்மக்களுடனும் வல்வை மக்களுடனும் ஒட்டி உறவாடியதோடு எமக்கு இடுக்கண் ஏற்பட்ட வேளையில் உடுக்கை இழந்தவன் கை போல ஓடி வந்து ஒத்துழைப்புகளும் நல்கிய எமது எல்லை உடுப்பிட்டி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவருமான பெருமதிப்புக்குரிய திரு எம்.சிவ சிதம்பரம் அவர்களின் அணிந்துரையுடன் வெளிவரும் இந்தச் சிறப்பு மலரை உங்கள் கரங்களில் தவழ விடுவதில் நான் விம்மிதம் கொள்ளுகின்றேன்.

**அன்பன்**

**ந.நகுலசிகாமணி**

**தெணியம்பைத் தெரு**

**வல்வெட்டித்துறை**

# அணிந்துரை

நண்பர் நகுலசிகாமணி யாழ்ப்பாணத்தின் கேந்திரமான வல்வை நகரத்தைப் பற்றி ஒரு நூல் வெளி யிடுவதைப் பாராட்டுகின்றேன். வல்வை இலங்கையின் சரித்திரத்தில் ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றது.

1938ம் ஆண்டு அமெரிக்காவுக்கு அன்னபூரணி என்ற கப்பலை .இயந்திரமின்றிச் செலுத்திச் சென்ற பெருமை வல்வைப் பெரியார்களுக்குண்டு. அதனைத் தொடர்ந்து தமிழ்மக்களுடைய போராட்டங்களில் முக்கியமான நிகழ்ச்சிகள் பல வல்வையில் நடந்ததென்பதைப் பலரும் அறிவர். 1956இல் இலங்கையின் ஆயுதப்படையினர் தமிழ்மக்களை அடக்கு வதற்கு யாழ்ப்பாணத்தில் பல இடங்களுக்குச் சென்ற பொழுது வல்வைக்கும் வந்தார்கள். வல்வை மக்கள் ஆண்களும் பெண்களும் ஆயிரக்கணக்கில் திரண்டு அப்படைக்கு முகம் கொடுத்தார்கள். அவர்களுடைய ஒற்றுமையையும் ஆர்வத்தையும். துணிச்சலையும் பார்த்த கேர்ணல் சேரம் வல்வைக்குப் பிரவேசிக்காது வேறுவழியாகச் சென்று விட்டார். 1961இல் சத்தியாக்கிரகத்தை தந்தை செல்வா அவர்கள் ஆரம்பித்து வைத்த கட்டம் சரித்திரப் பிரசித்தி பெற்றது. 1968ஆம் ஆண்டு வல்வெட்டிப் பொலிசாருடைய அட்டூழியத்தைக் கண்டித்து ஒரு பொதுக்கூட்டம் நடத்தியபொழுது அக்கூட்டத்தைக் கலைக்க வந்த பொலிசார் தியாகி சிவஞானசுந்தரத்தைப் படுகொலை செய்தார்கள். இவ்வேளையில் மக்கள் விசேடமாக இளைஞர்கள் எதிர்த்துப் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இரு பொலிசார் காயமடைந்தார்கள். இப்படியாக அரசினுடைய மூர்க்கத்தனமான அடக்குமுறைகளை எதிர்த்துப் போராடிய துணிச்சல்மிக்க வாலிபர்களைக் கொண்டது தான் வல்வை நகரம்.

1972ம் ஆண்டு ஸ்ரீமாவோ அரசு ஆக்கிய புதிய அரசியலமைப்புத் திட்டத்தில் தமிழ்மக்களை முற்று முழுதாகப் புறக்கணி க்கப்படுவதை எதிர்க்க தமிழர்களின் ஒற்றுமையை உருவாக்க வேண்டுமென வல்வைப் பெரியார்களாகிய வேற்பிள்ளை. சபாரட்ணம். ஞானமூர்த்தி அப்பா போன்றவர்கள் முன்னின்று அன்று செயற்பட்ட தமிழ்க்கட்சிகளின் தலைவர்களை ஒன்று சேர்த்து தமிழர் கூட்டணியை உருவாக்குவதற்கு முன்னின்று உழைத்தார்கள். அவர்கள் இட்ட வித்து பெரு மரமாகி வடக்கு கிழக்கு தமிழ்மக்களுடைய அன்பையும். ஆதரவையும் பெற்று தமிழர் விடுதலைக் கூட்டணியாகத் திகழ்கிறது. இந்தத் தியாகத்துணிவு வரலாற்றில் வந்தவர்கள் தான் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்கள். அதனைப் பின்தொடர்ந்து வல்வை இளைஞர்களும். வடக்கு கிழக்கு மாகாணத்து தமிழ்இளைஞர்களும் தமிழ்மக்களின் உரிமையை வென்றெடுக்க ஆயுதம் தாங்கிப் போராடுகிறார்கள். இவர்கள் வல்வையைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால் இலங்கையின் ஆயுதப் படையினரும் விமானப்படையினரும் வல்வையை குண்டுவீசியும். ஷெல் தாக்குதல்களினாலும் அழித்துக் கொண்டு வருகிறார்கள். ஆனால் வல்வை மக்கள் மனம் தளராமல் தமிழ்மக்களுடைய உரிமைப் போராட்டத்திலும் தமது பங்கைச் செலுத்தி வருகிறார்கள். இப்படியாகத் துணிச்சலும். தமிழார்வமும். தியாக உணர்வும் கொண்ட மக்களைக் கொண்டது தான் வல்வைநகரம்.

நமது தமிழ்மக்களுடைய உரிமைகளை வென்றெடுக்கும் இயக்கம் நிச்சயம் வெற்றிபெறும். அந்த வெற்றியில் வல்வை மக்களுடைய பங்களிப்பு மிகவும் பெரியது. தமிழினம் முழுவதும் வல்வை மக்களை நன்றியுடன் போற்றிப் பாராட்டும்.

இந்த நூலைப் பொருத்தமாக நண்பர் நகுலசிகாமணி எழுதுகிறார். ஏனென்றால் இந்த நடவடிக்கைகளிலெல்லாம் அவர் முக்கிய பங்கு கொண்டவர். வல்வையின் சரித்திரத்தை நன்றாக அறிந்தவர். எனவே இவரது முயற்சி வெற்றிபெற பாராட்டுகின்றேன்.

வணக்கம்

**மு.சிவசிதம்பரம்**
**தலைவர்**
**தமிழர் விடுதலைக்கூட்டணி**

# வாழ்த்துரை

*மாவை. சேனாதிராஜா*

**( முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)**

வல்வெட்டித்துறை தனியானதொரு பண்பாட்டின் உறைவிடம். வல்லவர்களின் துறை வல்வெட்டித் துறை என்றால் மிகையாகாது. திரைகடல் ஓடியும் திரவியம் தேடுவதில் வல்லவர்கள் மட்டுமல்ல வரலாற்றில் பல தசாப்தங்களுக்கு முன்னரே கப்பல் கட்டும் தொழில் நுட்பத்தில் தலை சிறந்தோரை ரயும் அத்தகைய கப்பலில் அமெரிக்கா வரை நெடுங்கடற் பயணம் செய்த வீரதீரச்செயல்களைச் சாதித்தோரையும் கொண்டதுதான் வல்வை பூமி.

1960களின் தொடர்ச்சியாய் இருபது ஆண்டுகளுக்கு மேல் வல்வை மக்களுடன் குறிப்பாக இளைஞர் களுடன் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதனை விட எனது நீண்டகாலச் சிறை வாழ்க்கை யில் வல்வை தந்த தியாகிகள் உடனிருந்தவர்கள் பலர் இன்று எம்முடனில்லை. தமிழின விடுதலைக்கு உயிர் கொடுத்தவர்கள் அத்தியாகச் செம்மல்கள். அந்த பசுமையான நினைவுகள் இதயத்தில் இன்றும் வாழ்கின்றன.

சொந்த வாழ்க்கையிலும் சரி, பொது வாழ்க்கையிலும் சரி அந்த மக்களிடம் தனியானதொரு மண்வாசனை மிளிரத்தான் செய்தது. அன்பு, நட்பு விருந்தோம்பல் எனும் பண்புகள் சிறந்திருந்த அந்த மக்களிடம் எந்தவொரு செயலிலும் ஒரு இலட்சியப் பிடிப்பும் திடசங்கற்பமும் விஞ்சியிருந் ததை அளவிடலாம்.

1972இல் தமிழ் இனவிடுதலை வரலாற்றில் ஓர் ஜனநாயக அரணை தமிழர் விடுதலைக் கூட்டணியை கட்டியெழுப்புவதில் வல்வைச் சான்றோர் ஆற்றிய பணி மகத்தானது. 1977இல் பொதுத் தேர்தலிலுங்கூடச் சாதி பேதங்களுக்குச் சாவுமணி அடிக்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினரைத் தெரிவு செய்வதில் குறிப்பாக வல்வை இளைஞர்கள் ஆற்றிய பணியை மறந்துவிட முடியாது. இன்று உலக வரைபடத்தில் வல்வெட்டித்துறை முத்திரை பதித்துள்ளது என்றால் ஒரு முக்கிய காரணமுண்டு. அதுதான் இலங்கைத் தமிழின விடுதலைப் போருக்குத் தலைமை கொடுத்துச் சாதனை படைத்துள்ள வரலாறாகும்.

தம்பி நகுலசிகாமணி எங்களை நினைத்து வாழ்த்துச் செய்தி கேட்டு எழுதியமை மனதில் நெகிழ்ச்சியையும் ஆதங்கத்தையும் ஏற்படுத்தியது. நாம் ஒன்றாக இருந்து பணிபுரிந்த காலங்களை எண்ணும் போது கண்கள் குளமாகின்றன. உங்களின் வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள் வரலாற்றுப் படைப்பாக வெளிவரும் என்று நம்புகிறேன். வரலாறு தொடரும் மலர் மணங் கமழும் என வாழ்த்தி நிற்கின்றேன்.

**அன்புடன்**
**மாவை. சோ. சேனாதிராசா**

# பொருளடக்கம்


1 வல்வையை வாழ்விக்கும் ஆலயங்கள்

அ) ஸ்ரீவாலாம்பிகா சமேத ஸ்ரீவைத்தீஸ்வரப்பெருமான் கோயில்

ஆ) முத்துமாரி அம்மன் கோயில்

இ) திருச்சிற்றம்பலம் பிள்ளையார் கோயில்

ஈ) தொண்டமானாறு செல்வசந்நிதி முருகன் கோயில்

உ) பொலிகண்டி கந்தவனக்கடவை கந்தசாமி கோயில்

ஊ) புனிதசெபஸ்தியார் றோமன்கத்தோலிக்க தேவாலயம்

எ) வல்வெட்டி வீரகத்தி விக்னேஸ்வரர் கோயில்

2 வல்வை பட்டினசபை நகரசபை

3 வல்வை வயித்தியலிங்கபிள்ளை 1843 - 1901

4 வல்வையின் பெருமை சாற்றும் கலிவெண்பா - 1892

5 வடமராட்சியும் வல்வையும் இடப்பெயர்கள்

6 கப்பல் கட்டும் தொழில்

7 வல்வைத் தமிழறிஞர்கள்

8 மூழ்கிய அத்திலாந்திக் அரசன் மீண்டான்

9 வல்வைக் கப்பலின் அமெரிக்கப் பயணம் - 1938

10 வல்வையும் பண்பாடும் சமயப்பற்றும் - தவத்திரு குன்றக்குடி அடிகளார்

11 இடத்துசாரித் தலைவர்கள் வல்வையில் தஞ்சம் அடைந்ததும் இந்தியா தப்பிச் சென்றதும் 1948

12 வைத்தியத்துறைக்கு உதவிய வள்ளல்களானவல்வையர்

13 வல்வையர் ஆற்றிய கல்விப் பணிகள்

14 அமிர்தலிங்கம் தம்பதிகள் கடற்பயணம் - 1958

15 வல்வையின் அறிவாலயங்கள்

16 வாரியாரின் சீடன் வல்வை இரா.சிவஅன்பு

17 இந்திரவிழா

18 நீச்சல் வீரன் திரு மு.நவரத்தினசாமி

19 அறப்போரில் வல்வை 1961

20 ஆழிக்குமரன் ஆனந்தன் 1963

21 கப்பல் அனுபவம் பற்றி பழம்பெரும் தண்டயல் துரைசாமி கூறுகிறார் - 1963

22 ஆனந்தன் தலைமையில் நடந்த உண்ணாவிரதம் - 1965

23 வர்த்தகப் பிரமுகர் சிவஞானசுந்தரம் படுகொலை - 1968

24 ஒரே மேடையில் தேர்தல் பிரச்சாரம் - 1965

25 வேலணை கறுப்புக்கொடி போராட்டத்தில் வல்வையர் பங்கு- 1973

26 வல்வை வாலிபர்களுக்கு வர்த்தகக் கப்பலில் வாய்ப்புக்கள் தந்த திரு தா.மணிவாசகர்

27 வல்வையில் கருவாகி உருவான தமிழர் கூட்டணி - 1972

28 யாழ்ப்பாணம் தமிழாராய்ச்சி மாநாட்டில் அன்னபூரணி- 1974

29 ஆனந்தா ஆச்சிரமம் மயில்வாகன சுவாமிஜி

30 மண்ணின் மைந்தன் - பொருளாதார சுதந்திரத்தை வலியுறுத்திய எம்.பி.துரைரத்தினம் பி.ஏ., சட்டத்தரணி

31 ஞானமூர்த்தி அப்பா தமிழினத்தின் சொத்து

32 பேராசிரியர் கலாநிதி கா.சிவத்தம்பி

33 தமிழர் விடுதலைக்கூட்டணியின் வெற்றி விழா -1977

34 தமிழீழத்தின் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களின் குடும்பப் பின்னணியும் சிறுபராயமும்

35 காலநதிக்கரையில் மீள நினைக்கின்றேன் - திரு வே.பிரபாகரன்

36 நாகரிகத்தின் சின்னங்கள்

37 கடலில் மிதந்து சாதனைபடைத்த யோகண்ணா - 1980

38 ஸ்ரீலங்கா இராணுவம் செய்த அட்டூழியம் -1985

39 இராணுவத்தினரால் தீ மூட்டப்பட்ட செல்வசந்நிதி சித்திரத்தேர்

40 வல்வையின் பாரம்பரிய விளையாட்டுக்கள்

41 உலகப்புகழ் பெற்ற நாட்டியத்தாரகை ரங்கா விவேகானந்தன்

42 வல்வை பெற்ற எழுத்தாளர்கள்

43 வல்வையும் ஈழவிடுதலைப் போராட்டமும்

44 சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு)

45 வல்வை விளையாட்டுக்கழகங்கள்

46 பேஸ் மென்ற் வீடுகள்

47 ஹெலியன்ஸ் நாடகமன்றம்

48 கடற்படையினருக்கு எதிரான முதலாவது பாரிய தாக்குதல்

49 இந்திய மைலாய் படுகொலை - 1989

50 பருத்தித்துறைத் தொகுதியும் வல்வைப் பாராளுமன்ற உறுப்பினர்களும்

51 பிரமுகர் வரிசையில்....

52 நாகர் கோவில் கப்பல் திருவிழாவில் வல்வைக்கப்பல்


53 பழக்க வழக்கங்கள்

நன்றியுரை

# வல்வையிலுள்ள ஆலயங்கள்

1 சிவன் கோயில்
2 முத்துமாரி அம்மன் கோயில்
3 திருச்சிற்றம்பலப்பிள்ளையார் கோயில்
4 செல்வசந்நிதி ஆலயம் (தொண்டமானாறு)
5 பொலிகண்டி கந்தசாமி கோயில்
6 வல்வெட்டி வேவில் பிள்ளையார் கோயில்
7 புனிதசெபஸ்தியார் றோமன் கத்தோலிக்க தேவாலயம்
8 புஷ்கரிணிப் பிள்ளையார் கோயில்
9 வைகுந்தப் பிள்ளையார் கோயில்
10 உலகுடைய பிள்ளையார் கோயில்
11 கப்பலுடைய பிள்ளையார் கோயில்
12 ரேவடி வைரவர் கோயில்
13 கொத்தியால் வைரவர் கோயில்
14 சடையாண்டி வைரவர் கோயில்
15 ஆதிகோயிலடி வைரவர் கோயில்
16 மீனாட்சி அம்மன் கோயில்
17 சுந்தரேசப் பெருமான் ஆலயம்
18 முருகையன் கோயில்
19 வன்னிச்சி அம்மன் கோயில்
20 பெரிய காத்தவராயர் கோயில்
21 சின்னக் காத்தவராயர் கோயில்
22 நெற்கொழு வயிரவர் கோயில்
23 தொட்டில் கந்தசுவாமி கோயில்
24 உப்பு தண்ணிப்பிள்ளையார் கோயில்
25 சரஸ்வதி ஆலயம்
26 நறுவிலடி பிள்ளையார் கோயில்
27 அன்னை வீரமாகாளி அம்மன் (தொண்டமானாறு) கோயில்
28 தச்சுகொல்லை விநாயகர் கோயில்
29 தெணி வயிரவர் கோயில்
30 கண்ணகை அம்மன் கோயில்

# வல்வை சிவன் கோயில்



யாழ்ப்பாணத்து வல்வெட்டித் துறை என்னும் பேரூரின் புகழை ஓங்கச் செய்து மிளிர்ந்து கொண்டிருப்பது அங்குள்ள சிவன் கோயிலாகும்.கோயில்களுடன் தம் பெயரைப் பிணைத்து புகழெய்தியவர் திருமேனியார் மகனார் பெரியதம்பியார் என்னும் காரணப் பெயர் பெற்ற வேங்கடாசலப் பிள்ளை. இப் பெரியதம்பியார் சித்திரபானு ஆண்டு மார்கழித்திங்கள் 6ம் நாள் (19.12.1822) வல்வையம் பதியில் பிறந்தார்.

இவர் தந்தையார் வேலாயுதர் திருமேனியார் வல்வையம்பதியின் திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயிலுக்குத் தருமகர்த்தாவாக இருந்து அதனை வேறு சில பெரியார்களிடம் ஒப்படைத்து, வல்வை முத்துமாரி அம்மன் கோயிலுக்கு தருமகர்த்தா வாக இருந்த புண்ணிய மணியக்காரனுக்கு அடுத்தபடியாக அக்கோயிற் தருமகர்த்தாவாக ஆயினார். இத்திருமேனியார் சிவபதமெய்தவே இவர் தமையன் மகன் சங்கரியார் தருமகர்த்தாவாயினர். இச்சங்கரியாரே அம்மன் கோயிலில் இப்போதுள்ள (பழமை வாய்ந்த) சப்பரத்தைச் செய்வித்தவர். திருமேனியார் பெரியதம்பியார் இப்போது உள்ள சுற்று மதிலையும் அமைத்தார்.

அம்மன் கோயில் நடாத்தி வருங்காலத்தில் ஒருநாள் திருமேனியார் தமது மகன் பெரிய தம்பியார் கனவில் தோன்றி சிவனுக்கு கோயிலெடுக்கும்படி பணித்தார். பெரியதம்பியார் இரவு பகல் இதே நினைவாயிருந்தார். பெரியதம்பியார் தமக்குப் பரம்பரையாக வந்த தோட்டங்கள் வயல் களைத் திருத்தி பயிரிட்டும் புதிய பல காணிகளை விலைக்கு வாங்கியும் செல்வத்தைப் பெருக்கினார். பன்னிரெண்டு கப்பல்கள் அமைத்து கடல் வணிகஞ் செய்து பெரு வணிகப்பிரபு ஆகினார். முதன் முதலாக பெரியவர் அம்மன் கோயிலுக்குத் தெற்கேயுள்ள 60 பரப்பு காணியை விலைக்கு

வாங்கினார். இக்காணி கல் நிரம்பியும், கரடு-முரடானதாயும், பற்றையும் செடிகளும் நிரம்பிய தாயும் இருந்தது. பெரியவர் அம்மன் கோயி லுக்கு தென்கிழக்கேயுள்ள மடத்தில் இருந்து கொண்டு மேற்படி காணியை துப்புரவு செய்து கொண்டு அருள்மிகு வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானுக்கும் கோயில் கட்டு வதற்காக 1867ம் ஆண்டு அத்திவாரம் இடுத லாகிய சங்கத்தாபனத்தை செய்வித்தார். சிறந்த சிற்பிகள் பலவகைக் கம்பியர் இந்தியாவிலி ருந்து வந்து கோயில் வேலைகளைக் கவின் பெறச் செய்தனர். அக்காலத்தில் பிரபுவாயி ருந்த விசுவநாதர் என்னும் பெரியார் காசிக்குச் சென்று அங்கிருந்து சிவலிங்கத்தைக் கொண்டு வந்து சேர்த்தார்.

கோயில் கட்டத் தொடங்கிய காலமாகிய 1867ம் ஆண்டு தொடக்கம் 1900ம் ஆண்டு வரை கோயில் எசமானர்களுக்கும் கோயில் கட்டு வதற்கும் பூசா கிரமங்களுக்கும் வேண்டிய அறிவுரைகளையும் சரீர உதவிகளையும் இப் புண்ணிய காரியத்திற்கு வல்வை பெரியாராகிய இயற்றமிழ்ப் போதகாசிரியர் சங்கரப்பிள்ளை வயித்தியலிங்கப்பிள்ளை அளித்து வந்தார்கள். இவ்வாறு கோயில் கட்டிடங்கள் ஒருவாறு உருவாக்கப்பட்ட பின் சுபானு வருடம் வைகாசி மாதம் 6, 8 1883ல் பிரதிட்டா கும்பாபிஷேகம் பிரமஸ்ரீ நா.குமாரசாமிக்குருக்கள் அவர்களால் மிகச்சிறப்பாக நடந்தேறியது. கோயில் தொட ங்கப் பெற்றதிலிருந்து ஆறு கால பூசைகளும் நடைபெறலாயின. முதன்முதலிலே புலோலி பிரம ஸ்ரீசண்முகக்குருக்கள் என்னும் பிராமணர் பூசகராயிருந்து வந்தார். பிரதிட்டாகும்பாபிஷே கம் நடந்த பின்னும் பெரியவர் கோயில் எஜமா னாகப் பத்து வருடங்கள் கோயிற் காரியங் களைப் பரிபாலித்து வந்தனர்.

பெரியவருக்குப் பின் அவருடைய தம்பியார் குழந்தைவேற்பிள்ளை கோயில் எஜமானாகி 1892 - 1905 வரை பரிபாலித்து வந்தார்கள். இவ ருடைய காலத்தில் வட்டுக்கோட்டை சித்தங் கேணி கா. வைத்தியலிங்கம்பிள்ளை அவர்கள் வசந்த மண்டபத்தை கருங்கற்களால் சமைப்பித் தார். இவர் தம்பியார் இராமசாமிப்பிள்ளை 1905 -1912வரை கோயில் மேற்பார்வையாளர் ஆனார். இவர் காலத்திலும் திருப்பணி வேலைகள் தொடர்ந்து நடை பெறலாயின.

திருமேனியார் குழந்தைவேற்பிள்ளை தம் பணத் தில் கொழும்பு நகரத்திலே முன் செக்கடித்தெரு என்று அழைக்கப்பட்டதும் தற்பொழுது கதிரேசன் வீதி என்று அழைக்கப் பெறுவதுமான வீதியில் கதிரேசன் கோயிலைத் தோற்றுவித்தார். 1970ம் ஆண்டு கதிரேசன் கோயில் கும்பாபிஷேக மல ரில் இது பற்றி சிறப்புக் கட்டுரை வெளி வந்தது. இன்றும் அதன் வருடாந்த உற்சவத்தின் 7வது திருவிழா வல்வைவாசி களால் நடாத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. இராமசாமிப்பிள்ளைக்குப் பின்பு பெரியவரின் மகன் திருமேனிப்பிள்ளை 1912 - 1921 வரை எஜமானானார். இவர் கால த்திலும் திருப்பணிகள் குறைவின்றி நடந்தன. கடல் கடந்த கப்பல் வாணிபத்தில் தொடர்பு கொண்டவரான இந்தியா தெலுங்கு தேச வாசி யான காரஞ்சேடு ஏர்லக்கட்டர் அரங்க நாயுடு காரு என்னும் தெலுங்குப்பிரபு முன் மண்டபத் தையும் இராஜ கோபுரத் தின் அடிப்பாகத்தையும் தோற்று வித்தார்கள். வல்வைப் பிரபுவாகிய விசுவநாதர் சரவணமுத்து நடராஜர் மண்ட பத்தையும் இயற்றுவித்தது மட்டுமின்றி கோயில் வாயில் பெருவீதிக்கும் தமக்கு சொந்தமான ஒருபகுதி நிலத்தையும் கொடுத்து உதவினார். கம்பர்மலை வள்ளல் வல்லியப்பர் வேலுப் பிள்ளையும் பெண் பாறுவதிப்பிள்ளையும் சில முக்கிய திருப்பணிகளைச் செய்தனர். கோப்பாய் பிரம்மஸ்ரீ கார்த்தி கேசுக்குருக்கள் கோயிலின் பிரதம பூசகரானார். அவரது பரம்பரையின ராகிய பிரம்மஸ்ரீ பரமேசுவரக்குருக்கள் 1954ம் ஆண்டு தொடக்கம் 1985ம் ஆண்டு இறை வனடி சேரும் வரை ஆசாரியராகயிருந்து கோயில் பூசா காரியங்களைப் பக்திசிரத்தை யோடு நடாத்தி வந்தார். அவரின் மூத்தமகன் மனோகரக்குருக்கள் இப்போது பூசை நடாத்தி வருகின்றார். 1919ம் ஆண்டு அமிர்தானந்த சுவாமிகள் என்னும் அந்தணப் பெருமகன் வல்வைக்கு வந்து இவ்வூரிலும், அயல் ஊர்களி லுள்ள பெரியவர்களின் பொருளுதவியோடு இரண்டாவது கும்பாபிஷேகத்தைச் சிறப்புற நிகழ்த்தினார்கள். வல்வை திரு ச.செல்வ விநாயகம், திரு ஆ.வேலுப்பிள்ளை முதலிய பெருமக்களும் இக்கும்பாபிஷேகத்திற்கு உறு துணையாக இருந்து பேருதவி புரிந்தார்கள்.

1921ல் அருணாசலத்தின் மூத்த மகன் திரு வெங்கடாசலம் சில ஆண்டுகள் எஜமானாக இருந்து தன் தம்பியராகிய அரு.சபாரத் தினம் அவர்களிடம் கோயில் நிர்வாகத்தை ஒப்படைத் தார். இவர் தன்னுடைய தமையனாரின் அனுசர ணையுடன் கோயிலை 1921-1956 வரையில் திறம்பட நிர்வகித்தார். இக்காலத்தில் நிகழ்ந்த சில முக்கிய திருப்பணிகள் இராஜகோபுரம் மேற்பகுதியை வல்வைப் பெரியார் சி.செல்லத் துரைப்பிள்ளை அவர்களும், தேவிவாசல் மண் டபத்தை ஆசிரியர் வே.வ.சிவப் பிரகாசம் அவர் களும், மணிக் கூட்டுக்கோபுரத்தையும் ச.துரை ராசா அவர்களும், வசந்த மண்டப பூச்சு வேலையை வல்வை சி.குமாரசாமி அவர்களும் நிறைவேற்றி முடித்தார்கள்.

இது இவ்வாறிருக்க கோயிலின் மேற்கேயுள்ள மடத்தையும் அதனோடு சேர்ந்தவைகளையும் நா.வேலுப்பிள்ளை என்ற கெச்சுத்தண்டயல்

அவர்களாலும், மற்ற பெரியமடம் அரு. தெட்சணாமூர்த்திச் செட்டியார் அவர்களாலும் அன்னதானமடம் பொ.தங்கவேலாயுதம் அவர்களாலும் சிறியமடம் சி.சந்திரசேகரம் அவர்களாலும் நிறுவப்பட்டது. இவற்றுள் மேற்குமடம் கருங்கல்லினால் செய்யப்பட்டதனால் இன்றும் அதுமட்டும் நிலைத்து நிற்கின்றது. மற்ற மடங்கள் காலத்தினாலும், யுத்த அழிவினாலும் அழிந்த நிலையில் இருக்கின்றன.



1956ம் ஆண்டு தொடக்கம் பெரியாரின் ஆண்வாரிசுகள் எண்மருக்காக அவரின் நான்காம் தலை முறையிலுள்ள திரு சபாரத்தினம் சின்னத்துரை 1987 மே 20வரை பரிபாலித்து வந்தார். அன்னார் வட மராட்சி 1987 வடமராட்சியில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பரேசன் லிபரேசன் தாக்குதலின் போது ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் அழிக்கப்பட்டு சிவனடி சேர்ந்தார்.

கோயிலின் கும்பாபிஷேகம் நடத்தக்காலம் தாழ்த்தியதால் கோயில் எஜமானும் வல்வை திரு சி.விஷ்ணு சுந்தரம், திரு அ.துரைராசா, திரு ச.ஞானமூர்த்தி ஜே.பி. இணைச்செயலாளர் உட்பட பல சிவநேய பிரபுகளும் கூடித் திருப்பணிக்குரிய ஆயத்தங்களை செய்து 25.4.66ல் பாலஸ்தாபனம் செய்யப் பெற்றது. இந்தியாவில் இருந்து இராஜகோபுரத்திற்கு தேவையான பூச்சுவர்ணங்கள் எடுக்கப் பட்டு வேலைகள் திறம்பட நடந்தது.

புனராவர்த்தன சம்புரோட்சண கும்பாபிஷேகம் பிலவங்க வருடம் வைகாசி மாதம் 28ம் திகதியான 11.06.1967ல் வெகுசிறப்பாக பக்தி சிரத்தையுடன் நடந்தேறியது. கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கோயில் முன்னால் பெரும் தெருவை இணைக்கும் "சிவபுர வீதி" திறக்கப்பட்டது. அதற்கு அதை அண்டிய மக்கள் தங்கள் நிலத்தை அன்பு உபகாரம் செய்தார்கள். வசந்தமண்டபம் வாசலுக்குத் தெற்கேயுள்ள பகுதியையும் அம்மன் வாசலையும் இணைத்து இரண்டாம் வீதியை பெரியார் வி.சுப்பிரமணியம், எஸ்.எஸ்.சண்முகம் இருவரும் நல்லமுறையில் மூடிக்கட்டிய திருப்பணியை 1970ம் ஆண்டில் நிறைவேற்றினார்கள். திரு மா.குமாரசாமி அவர்கள் ஆறுமுகசுவாமி விக்கிரகத்தையும் வள்ளி தெய்வானை விக்கிரகங்களையும் பஞ்ச லோகத்தில் அழகாக செய்வித்து நடராஜர் மண்டபத்தில் 1977ம் ஆண்டுத் தைப்பூசதினத்தில் ஆகமவிதிப்படி பிரதிட்டை செய்தலாகிய திருப்பணியை நிறைவேற்றினார். வல்வெட்டிப் பெருமக்கள் சிவனுக்கு அழகுற சித்திரத் தேரை செய்வித்தார்கள். அவர்கள் தான் தேர்த்திருவிழாவை வருடாவருடம் யாழ். குடாநாட்டின், தென்இந்தியாவின் பிரபல நாதஸ்வர இன்னிசை விற்பனர்களுடன் பெரும் செலவுடன் நடாத்துகிறார்கள். பெரியார் எஸ். வைரமுத்து எம்பெருமானுக்கு வெள்ளி இடபவாகனம் சிறந்த முறையில் அமைத்து உள்ளார். திரு கார்வண்ணசாமி அவர்கள் தனது உபயமாக ஐம்பொனிலான மகாவிஷ்ணு விக்கிரகத்தையும் திரு கே.இரத்தினசிங்கம் அவர்கள் சரஸ்வதியையும் பிரதிஷ்டை செய்து உள்ளார்கள்.

## சிவன் கோயிலில் நடைபெறும் நாளாந்த பூஜாக்கிரகம்

1 உஷத்காலம் (அதிகாலை பூஜை 5.45)
2 காலசந்தி (காலைப்பூஜை 9.30)
3 மத்தியானிகம் (மத்தியானப்பூஜை 11.45)
4 சாயரட்சை (மாலை முதற்காலம் 6.00)
5 சாயரட்சை (மாலை இரண்டாம் காலம் 7.30)
6 அர்த்தசாமம் (மாலை 8.30)

(அ) 1967ம் ஆண்டு சிவன் கோயில் குடகுழக்கு "விழாமலர்' பண்டிதர் சங்கர வைத்தியலிங்கம்
(ஆ) 1970 கொழும்பு செக்கடித்தெரு கதிரேசன் கும்பாபிஷேகமலர் பக்கம் 20,21

## வல்வை சிவன் கோயில் குரு பரம்பரை

முதலாவது கும்பாபிஷேகம் 1883ம் ஆண்டு சுபானுவருடம் வைகாசி 27ம் திகதி வெள்ளிக் கிழமை நடைபெற்றது. இதனை அக்காலத்தில் பிரசித்தி பெற்ற குமாரசாமிக்குருக்கள் நடாத்தி வைத்தார். அன்று தொடக்கம் பருத்தித்துறையைச் சேர்ந்த சண்முகக்குருக்கள் அவர்கள் பூசைகளை நடாத்தி வந்தார்கள்.

1908ம் ஆண்டு தொடக்கம் நீர்வேலியில் ஜனனமும், கோப்பாயில் வாசம் செய்தவரும் ஆரிய திராவிட மொழியில் திறமை உடையவரும் கிரியா விற்பன்னரும், குரு இலட்சணம் நிறைந்தவருமான கார்த்திகேசுக்குருக்கள் அவர்கள் அக்கால எஜமான் அவர்களால் நியமிக்கப்பட்டார். இவர் தொடர்ச்சியாக 24 ஆண்டுகள் பூசை உற்சவம் பிரதிஷ்டை முதலியவற்றைச் செய்து வந்தார். இவருடைய காலத்தில் 1919ம் ஆண்டு

புனராவர்த்தன கும்பாபிஷேகம் நடைபெற் றது. அதில் இவருடைய சிறிய தந்தையார் இராம லிங்க குருக்கள் (மாப்பிளைக்குருக்கள்) இவரு டைய விருப்பப்படி பிரதான ஆசாரியாராக இரு ந்து கும்பாபிஷேகம் செய்தார்.

அதன்மேல் இவருடைய மகன் நீலகண்டக்குருக் கள் (சின்னப்பாக்குருக்கள்) இவருடன் கூட இருந்து பூசைகளை நடாத்தி வந்தார்கள். 1930ல் கார்த்திகேசுக்குருக்கள் இறைவனடி சேர்ந்தார். அதன் மேல் நீலகண்டக்குருக்களே பிரதான ஆசாரியாக இருந்து கோயில் பூஜா கருமங்களை நடாத்தி வந்தார். இவருடன் இவரது மகன் பரமேசுவரக் குருக்கள் 1942ம் ஆண்டு உதவி யாக இருந்து பூஜைகளைச் செய்து வந்தார். 1954ம் ஆண்டு நீலகண்டக் குருக்கள் இறை வனடி சேர்ந்தார். அன்று தொடக்கம் பரமேசு-வரக்குருக்களே பிரதான ஆசாரியாராக இருந்து 1985ம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார். தற்போது அவரின் மூத்தமகன் மனோகரக்குருக்கள் நடா த்தி வருகின்றார்.

நன்றி - "குருபரம்பரை" இ.வல்லிபுரம் ஜே.பி.

# வல்வை சிவன் கோயில்
# நடராஜர்
# ஊஞ்சல் பாமாலை

## விநாயகர் காப்பு

*ஆகுவாகனனே எங்கள் அம்பிகை தனயா மூத்தோய்*
*போகமேயருளு மீசன் பொற்று மாதிரைத் திருநாள்*
*ஊக்கமாய் நட்டஞ் செய்கால் உகந்த நல்லூசலாட்டி*
*ஆகமமுதலை யேத்த ஐங்கர நீயே காப்பு*

## ஊஞ்சல்

*கற்பகதவின் கவின்கொள் கொம்பரில் அற்புதமாக*
*அமைந்த இடத்தினில்*
*பத்தரை மாற்றுப் பசும்பொற் கயிற்றினால் அத்தனை*
*கனகப் பலகையைப்பூட்டி*
*நித்திலமழுந்தப் பதித்து மிடைக்கிடை நவமணி தானு*
*மொழுங்கா யமைத்து*
*சண்பகம் மல்லிகை றோசாமுல்லை நீலோற்பலமு*
*மடுத்துத் தொடுத்து*
*நறுமணங் கமழத் திருவாதிரை நாள் நடராஜ*
*முகூர்த்தமாய் நாயகி காமியொடு*
*முயலவன்மீது வலப்பதம் படிய வாமபாதங் குஞ்சித*
*மாயெழில் வீச*
*நந்தி மத்தளங் கொட்டத்தும்புரு நாரதரிசை*
*பாடப்பிரமன் யாழ்மீட்ப*
*கற்பகம் பூமாரி பெய்ய பதஞ்சலி புலிப்பாதர் மெய்ம்*
*மறந்தானந்த வெள்ளமூழ்க*
*அடியே முங்கை கொட்டி யாடிப்பாடி அரிய 'நமசிவாய'*
*நாமமுள்ள*
*வையகத்தினிதயமா மீழத்து வாய்த்த நுதலனய*
*வல்வை நடராஜரே யாடீரூஞ்சல்!*

*எங்கும் நிறைந்தவரை எல்லா மாயானவரைச்*
*சிந்தையிலுறைபவரைச்*
*சிவபெருமான் தன்னை எங்ஙனுங்கான இயலாது*
*காசினியகத்தே*
*எங்ஙனுந் நீர் உண்டாயினுங் குளங்கிணறு*
*குட்டையிலது கிடைத்தல்*
*எளிதலவோ வதேபோல் தலங்களிலே யெழுந்தருளுந்*
*தம்பிரான் வடிவங்கள்*
*தகுதிபெறு மடியவர்க்குப் பெருவிருந்தா யருமருந்தா*
*யமையும் வகை*
*கயிலையிலே நடக்காட்சி யருளும் பெம்மான்*
*கருணையினாற்றில்லையிலே*
*காட்டி வைத்தார் ஈழத்து எம்மவர்க்கு இலேசாயாக்க*
*எங்கள் வல்வைப்*
*பதியினிலு மெழுந்தருளி ஆதிரையிலாருத்ரா*
*தரிசனமுமானி உத்தர*
*திருநாளுமதேபோல் ஆண்டிலிரு நாளாடிக்*
*காட்டியெமை யீடேற்றும்*
*நல்லவர்கள் நிறை வல்வை நடராஜரே*
*ஆடீரூஞ்சல்!*

*முத்துமாரி அம்மனை முதலிற் கண்ட வல்வை நகர்*
*மக்களுக் கரனின் கோயில் மாண்புடனமைக்குமாசை*
*அற்றைநாள் மணியகாரன் ஆயநற் திருமேனியார்க்(கு)*
*உற்ற அவ்வாவல் ஆகுமுன் அரன்தாள் சேர்ந்தார்*
*மறைந்தவர் தன் பேராசை மறந்திலர் கனவில் வந்து*
*மூத்தமகன் வேங்கடற்கு 'முதற்பணி நீ செய்' என்றார்*
*தந்தை சொல் என்றுந் தட்டாத் தனையனாம்*
*மைக்கண்மை*
*இடமொன்று தேர்ந்தாரப்போ இருடியாய்*
*முன்னேதோன்றி*
*'எது யோசனை? யான் அங்குள்ளேன்' எனக்*
*காட்டியுடன்மறைந்தீர்*
*எம் வாலாம்பிகா சமேத நடராஜரே ஆடீரூஞ்சல்!*

*திருவிளையாடல் கண்டு திகைத்தார் பெரியதம்பி*
*ஐயன் காட்டியது யாருங் காணொணாக் கலட்டிக்காடு*
*மஞ்சள்ப் பூச்செடி நிறைந்து மனிதனாற் புகஏலாத*
*அரவங்கள் மலிந்த அந்த அடவியின் நடுவே*
*கோசலமயமும் வற்றா நிலையினிற் குறியாய் வைத்து*
*வெண்பசு மறைந்த மாயம் பூதனென்னடியான் முன்னே*
*'சோதியைக்கண்டேன்' என்று சொன்ன அவ்விடமே*

கொழும்பு தமிழ்ச் சங்கம்

யாகும்
'பித்தன்' எனச் சொன்னார்கள் பெரும்பக்தன்
அவனன்றோ!
தக்க விளையாடலால் தான் தோன்றியீசனாகி
வற்றா அருள்நல்கு வல்வை நடராஜரே யாடீரூஞ்சல்!

கப்பலோட்டிய தமிழர்யாம் அன்று நல்ல காற்றையே
நம்பி வாழ்ந்தோம்
அன்னபூரணி நாவாயை அமெரிக்கா கொண்டு
சென்றோம்
பாய்க்கப்பல் மறைந்தபின்னர் பலஇன்ன லடைந்து
இன்று
சூத்திரக் கப்ப லெல்லாமெம் சுந்தரபுருஷரை
யுன்னருளால்
'வா' என்று வரவேற்று வகை வகையாய்ப்
பொன்தந்து
மிடியில்லா வாழ்வுபெற்றோ வல்வைக்கு நிகரிந்த
வையகத்தில் நகரமில்லை
ஈதெல்லா மிறைவா நின்திருவருளே தூயசிவகாமி
வாம பாகத்திலுற வண்ட சராசரமெலா மடைந்தாட
வாள்விழி மங்கையர்வாழ் வல்வை நடராஜரே
ஆடீரூஞ்சல்!

**வாழ்த்து**

கடல்வளங்கள் கொழித்து வாழ்க கைத்தொழில்கள்
வளர்ந்து வாழ்க
துறைமுகந் திறந்து சாலிக்கிடங்குகள் நிறைந்து
வாழ்க
சிவதர்மஞ் சீராயோங்கிச் செவ்வடியார் குலம் வாழ்க
வல்வை நடராஜர் கோயில் வைரமாளிகையாய் வாழ்க
ஆதிரைத் திருநாள் காணும் அற்புத நடனம் வாழ்க
ஆவினம் மகிழ்ந்து தாமாய் அமுர்தமாய்ப் பொலிந்து
வாழ்க
கற்புடைய மாதர் பொட்டும் பூவுடன் பொலிந்து வாழ்க
நித்திலஞ் சங்கு தங்கந்துப்புட னெண்ணெய்தானும்
மெத்தவுந் தந்து ஈழம் மெருகுடன் மிளிர்ந்து வாழ்க
நிருத்தனே வல்வை நடராஜா நீடுழி வாழ்க வாழ்கவே!

'நடராஜர் ஊஞ்சல்' நூலில் இருந்து
ஆக்கம் சங்கர வேலுப்பிள்ளை (சட்டத்தரணி)
07.12.1978


# புனித செபஸ்தியார் றோமன் கத்தோலிக்க தேவாலயம்



புனிதசெபஸ்தியார் றோமன் கத்தோலிக்க தேவாலயம் 1720ம் ஆண்டு ஸ்தாபிக்கப் பட்டதாக கூறப்படுகிறது. தென் இந்தியா வில் இருந்து இரண்டு சகோதரர்கள் (செட்டிமார்கள்) வல்வைக்கு வந்து குடி யேறி மூத்த சகோதரர் கத்தோலிக்க தேவா லயத்தையும் இளைய சகோதரர் தேவா லயத்தின் கிழக்கு எல்லையில் உலகுடைய பிள்ளையார் கோயிலையும் கட்டியதாகவும் அறியப்படுகிறது. இருசமய வழிபாட்டு தல ங்களும் அருகருகே அமைந்தது போல வல்வை மக்களும் ஒன்றுபட்டு ஒற்றுமை யாக வாழ்வதைக் காணக்கூடியதாக இருக் கிறது. (சம்பந்தப்பட்டவர்களால் வருங்கால த்தில் இதன் வரலாறு முழுமையாக எழுதப்பட வேண்டும்)

# வல்வை முத்துமாரி அம்மன் கோயில்

ஆரியசக்கரவர்த்திகள் யாழ்ப்பாணம் வந்த காலமாகிய 1048ம் ஆண்டுக்குப் பின்னும் பறங்கியர் யாழ்ப்பாணம் வந்த காலம் ஆகிய 1617ம் ஆண்டுக்கு முன்னும் இக் கோயில் உண்டாகியிருக்கலாம் என அபிப்பிராயப்படுகிறார்கள். முதலில் ஒரு கொட்டகையாய் இருந்து காலாகாலங்களில் சாந்துக் கட்டிடமாய் வளர்ந்திருக்க வேண்டும் எனவும் கூறுகிறார்கள். தற்போது ஈராக், ஈரான் என்று அழைக்கப்படும் பழைய சுமேதிய நாட்டில் பல்லாயிரம் வருடங்களுக்கு



1957ஆம் ஆண்டுக்கு முற்பட்ட முத்துமாரி அம்மன் கோயிலின் தோற்றம்

முன் வாழ்ந்த சுமேதிய மறவர்களென்ன இவர்களுக்குப் பல நூறு சந்ததிகளுக்குப் பின் வந்த ஆரியச் சக்கரவர்த்திகளாகிய மறவர்களென்ன இவர்களெல்லாம் தங்கள் பாதுகாவல் தெய்வமாய் பெண் தெய்வத்தையே வணங்கி வந்தார்கள். வள்ளுவப் பெருந்தகைக்கு உடன் பிறந்தாளாகக் கூறப்படும் ஔவையாரும் தாம் பாடிய ஆத்திசூடியில் "தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை' என்று தானே அருளினார். நல்லூர் வீரமாகாளி அம்மன், பருத்தித்துறை பத்திரகாளி அம்மன், தொண்டமானாறு வீரமாகாளி அம்மன், இடைக்காடு, மாதகல், அராலி, நயினாதீவு நாகபூஷணியம்மை ஈறாக எங்கும் அம்மன் கோயில்களே உண்டாகி இருக்கின்றன.

வல்வெட்டித்துறைக்கு கோடியாய் கரையில் இருந்து புறப்பட்ட தோணி ஒன்றில் உதவி கேட்டு வந்த வயோதிபமாது தன்னையும் வல்வையில் கொண்டு சென்று இறக்கும்படி கோர அவர்கள் அதன்படி ஏற்றி வந்து வல்வைக் கரையில் இறக்கியதும் வயோதிப மாது மறைந்து விட்டனராம். இது தான் முத்துமாரி அம்மன் கோயில் தோன்றிய வரலாறு எனக் கூறப்படுகின்றது. 1796ல் பெற்ற அரசினர் இடாப்பில் இக்கோயில் காட்டப் பெற்றிருக்கின்றது.

01.02.1846ல் பிரசித்த நொத்தாரிசு கதிர்காமர் சிதம்பர நாதர் முன்னிலையில் இராசிந்தான் முத்துமாரி அம்மன் கோயில் நெடியகாடு திருச்சிற்றம்பலப்பிள்ளையார் கோயில்களுக்கு மகமை எப்படி கொடுக்கப்பட வேண்டும் என முடிவு செய்து இருக்கின்றார்கள். 1864ல் எழுதப் பெற்ற அரசினர் அறிக்கையிலும் புண்ணிய மணிய



புதுப்பொலிவுடன் காணப்படும் முத்துமாரி அம்மன் கோயிலின் எழில்மிகு தோற்றம்

காரனால் அம்மன் கோயில் கல்லால் கட்டப் பெற்றதென்றும் சித்திரை மாதத் தில் 15 நாட்கள் திருவிழாக்கள் நடந்தது எனவும் குறிக்கப் பெற்றி ருக்கின்றது. சில ஆண்டுகள் திருமேனியார் வெங்கடாசலம் மணியமாயிருந்து திருப்பணி களும் செய்திருக்கின்றார்கள். அப்பால் பெ.கதிர் காமத்தம்பி அதன் பிறகு சு.க.தம்பிப்பிள்ளை மணியமாக இருக்கும் போது 1904ம் ஆண்டில் ஒரு தடவை புனராவர்த்தன கும்பாபிஷேகம் நடந்திருக்கின்றது. பின்னர் ஆ.நாகமுத்து சு.க. தம்பிப்பிள்ளை, நா.கனகசுந்தரம், ஆ.வேலுப் பிள்ளை ஆகியோர் மணியமாக இருந்துள்ளார் கள். ஆ.நாகமுத்து மணியமாக இருந்த காலத் தில் தான் எழுந்தருளி முத்துமாரி அம்மன் இந்தி யாவில் இருந்து தருவிக்கப்பட்டதாக கூறுகிறார் கள். வ.வ. இராமசாமிபிள்ளை 1933ம் ஆண்டு மணியமாக நியமனம் பெற்றவுடன் பழைய கட்டிடங்கள் யாவும் இடிக்கப்பெற்று கற்கட்டிடங் களாகவும் கட்டப் பெற்றன. இங்ஙனமாக பெரி யார் வ.வ.இராமசாமிபிள்ளை (வ.இ.அப்பா) காலத்தில் புதுப்பித்து கட்டப் பெற்றவற்றின் விப ரங்களாவன

கோயிற் பகுதிகள் - திருப்பணி செய்தவர்கள்

1கர்ப்பக்கிரகமும் அர்த்த மண்டபமும்- சி.செல்ல த்துரையும் பெண் வள்ளி அம்மாளும்

2 பிள்ளையார் - பொ.தங்கவேலா யுதமும் பெண் இராசரெத்தினமும்

3 முருகையா - சி.ஆனந்தமயிலும் பெண் விசா லாட்சியும்

4 காத்தலிங்கம் - வ.இ.வைத்திலிங்கமும் பெண் சௌந்தரி அம்மாளும்

5 சண்டிசுவரி - ஆ.செல்லத்துரையும் பெண் தங்கரெத்தினமும்

6 தீர்த்தக்கிணறு - தா.சின்னத் தம்பியும் பெண் தங்கசெண்ணும்

7 மின்வெளிச்ச அறை - சி.வேலும் மயிலும் ஐயர்

8 வசந்த மண்டபம் - வே.வ.சிவப்பிரகாசம், மு.விசுவலிங்கம்

9யாகசாலை - வி.செல்வவிநாயகமும் பெண் விசாலாட்சிப்பிள்ளையும்

10 திருச்சபை - வ.இராமசாமிப்பிள்ளையும் பெண் இராசம்மாளும்

11 மகாமண்டபம், தரிசன மண்டபம் - வல்வைப் பொதுமக்கள்

12 நந்திபலிபீடம் - மா.இராசா

இவ்வேலைகள் முடித்து 1935ம் ஆண்ட யுவ வருடம் ஆனி மாதம் 24ம் திகதி வேதாரணியம் சிவஸ்ரீ ச.சோமசுந்தரக்குருக்கள் அவர்களால் சம்புரோட்சனம் ஆகமவிதிப் படி செய்யப்பெற்றது. 1943ம் ஆண்டு மணிக்கோபுரமும் மணியும் வல்வைப் பொதுமக்களால் செய்யப்பெற்றன. தேர்முட்டி சேதமடைந்திருந்தமையால் அதை நல்லமுறையில் புதிதாக திரு சி.விஷ்ணுசுந்தரம் அவர்கள் கட்டுவித்தார்கள். பூங்காவன மண்ட பம் பொதுமக்களால் கட்டப்பெற்றது. 1957ம் ஆண் டில் 12ம் உற்சவக்காரர் கேள்விக்கிணங்க இராச கோபுரம் இடிக்கப்பெற்று கீழ்ப்பகுதி வைரக் கருங் கற்களினால் கட்டப்பெற்று இராஜகோபுர மேல் பகுதியும் நல்ல அலங்கார முறையில் கட்டி முடிக்கப் பெற்றது. முத்துமாரி அம்மனுக்கு சித்திரத்தேர் செய்ய வேண்டும் என்று முடிவு செய்ததில் ஊரவர்களே பணம் சேகரித்து 1979ம் ஆண்டு வரும் பெருந்திருவிழாவுக்கு முன் அம்ம னுக்கு தேர் செய்வித்து முடித்தார்கள். பின்பு பிள்ளையாருக்கும் முருகனுக்கும் 1981ம் ஆண்டு திருவிழாவுக்கு முன் செய்யப் பெற்று விட்டன. இக்கோயில் பூசைகள் திருவிழாக்கள் எல்லாம் மிகச் சிறப்பாகவும் அலங்காரமாகவும் நடை பெற்று வருகின்றன. தொன்று தொட்டே இக் கோயிலில் சைவக்குருக்கள்களே பிரதம குருக் களாக இருந்து வருகின்றார்கள். 16.01.1963 தொடக்கம் சிவஸ்ரீ சோ.தண்டபாணி தேசிகர் அவர்கள் (ஜே.பி.அகிலஇலங்கை) பிரதம குருக் களாக இருந்து சிறப்பாகவும் பக்தியுடனும் தொண்டாற்றி வருகிறார்கள்.

## வல்வை முத்துமாரி அம்மன் ஊஞ்சல் பாடல்

மா விலங்கை சூடும் மணி மாமதுர வல்வை
தேவி முத்துமாரி நீஆடு பொன்னூஞ்சல்
வல்வை முத்துமாரி நீஆடு பொன்னூஞ்சல்
(மாவிலங்கை)

**அநுபல்லவி**

பூவில் உயர் பங்கமே ஆடு பொன்னூஞ்சல்
பொன் மணிச்சரம் அசைய ஆடு பொன்னூஞ்சல்
(மாவிலங்கை)


**சரணம்**


கோடிக்கரை நீங்கி வல்வை வந்தவளே ஆடு
கயிலை மாதரசி என்றவளே ஆடு
தேடி யெமை ஆளவந்த தேவி நீஆடு
திகட்டாத செந்தேனே பொன்னூஞ்சல் ஆடு
(மாவிலங்கை)

கிண்கிணிச் சதங்கைகள் குலுங்கிடவே ஆடு
கங்கணங்கள் கலகலெனக் கவினூஞ்சல் ஆடு
தன்னிலவு ஒத்தநகை பொங்கிடவே ஆடு
தொழும் அடியார் பிணிதீர்க்க மணியூஞ்சல் ஆடு
(மாவிலங்கை)

மங்கையர்கள் மங்கலத்தைக் காப்பவளே தாயே
மனைதோறும் மணிவிளக்காய் ஒளிபவளும் நீயே
குங்குமச் சுடரே எங்கள் குலதெய்வம் நீயே
குலமகளிர் கோரும் வரம் தந்திடுவாய் தாயே
(மாவிலங்கை)

"நம் தாயர் தந்த தனம்" நூலில் இருந்து
ஆக்கியவர் - வல்வை கமலாபெரியதம்பி 05.04.1972







தாய் நாட்டிற்காக உயிர் தருகின்ற வீரர்களைத்
தந்த நற்தாயர்க்குத் தாயாகத் திகழ்பவளே
ஆய்ந்த நல்லறிவுவளர் ஆன்றோரைக் கலைஞரை
அருள்கின்ற வல்வை முத்துமாரி பதமலர் போற்றி


வாழ்வெனும் ஆழ்கடலில் அலைதுரும்பாய் அலையுமெனை
வாவென்று அழைத்தே உன் திருவடியில் சேர்த்திடுவாய்
பாழ்வினை தீராமல் இனிப் பிறந்தாலும் வல்வை மண்ணில்
வாழ்வளிப்பாய் வல்வை முத்துமாரி பதமலர் போற்றி

19ம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் பிள்ளையார், வயிரவர் என்று அழைக்கப் பெற்ற ஒரு சைவ ஆசாரசீலர் தற்போதைய கோயில் தெற்கு வீதியில் அமைக்கப் பெற்றிருந்த மடத்தில் பிள்ளையாரை எழுந்தருளச் செய்த சில காலத்திற்குள் வேதாரணியத்தில் இருந்து கணபதி ஐயர் என்ற பெயருடைய ஒரு சைவக் குருக்களை அழைத்து வந்து பூஜைகள் செய்வித்து வந்தாரெனத் தெரிய வருகிறது. பூஜைகள் சிவஸ்ரீ கணபதிஐயர் அவர்களாலும் அவர் காலத்தின் பின் அவருடைய மகன் சிவஸ்ரீ தியாகையர் அவர்களாலும் நடத்தப் பெற்று வந்தன.

அக்காலங்களில் கப்பல் வாணிபம் தொடங்கப் பெற்று செவ்வனே நடந்து வந்ததால் கப்பற்தொழில் சம்பந்தப் பட்ட எல்லோரிடமிருந்தும் மகமைகள் வசூலிக்கப் பெற்று கோயிலுக்கு சேர்க்கப் பெற்றுவந்தன. 01.02.1846 ல் பிரசித்த நொத்தாரிசு கே.கணபதிப்பிள்ளை முன்னிலையில் எழுதப் பெற்ற உறுதியாலும் மகமை தொகையில் என்ன விழுக்காடு நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயிலுக்கு கொடுக்கப்பட வேண்டும் என்கிற விபரம் தெளிவாக காட்டப்பட்டிருக்கிறது. இவ் வுறுதிகள் ஊரிலுள்ள பல பெரியார்கள் முடித்துக் கொடுத்திருக்கிறார்கள்.மகமைகள் வசூலிப்பதும் செலவு செய்வதும் பெரியவர் திருமேனியார் வெங்கடாசல பிள்ளை உட்பட ஐவர் கொண்ட ஒரு குழுவினரிடம் ஒப்படைக்கப் பெற்றது. அப்போது பிள்ளையார் கோயிலுக்கு ஆறுமுகம் முருகுப்பிள்ளை என்னும் பெரியார் மணியமாயிருந்தார்.

1867ம் ஆண்டு சிவன்கோயில் சங்குத்தாபனம் செய்யப் பெற்ற இரண்டு ஆண்டுகளில் திரு வெங்கடாசலம் பிள்ளை சிவன் கோயில் திருப்பணியோடு ஒன்றி விட்டமையால் அவர் பிற கோயில்களின் வேலைகளில் இருந்து விலகி விட்டார். இக்கால கட்டத்தில் கந்தக் குட்டியார் வேலுப்பிள்ளை என்னும் சைவஆசாரசீலர் பிள்ளையார் கோயில் மேற்பார்வையாளரானார். இவர் பிள்ளையாரை முடிந்த வரை ஆகமவிதிப்படி அமைவாகக் கட்டப்பெற்ற கோயிலில் எழுந்தருளச் செய்ய வேண்டுமென உறுதி பூண்டார். சிறிது சிறிதாக மூலஸ்தானம் தம்ப மண்டபம், மதில் முதலியவை கட்டி பிள்ளையாரை மூலஸ்தானத்தில் எழுந்தருளச் செய்து 1884ல் பிரதிட்டா அபிஷேகம் செய்வித்தார்கள். இவருக்கு ஆண் பிள்ளைகள் இல்லாமையால் தன் சகோதரி மகளின் கணவர் சண்முகம் பிள்ளையை தன்னுடைய திருப்பணி வேலைகளில் சேர்த்துக் கொண்டார்கள். கொடித்தம்பம் நிறுத்தித் தேரும் செய்வித்து 1892 - 1912ம் ஆண்டுக்கிடையில் வருடாந்த பெருந்திருவிழாவையும் தொடக்கி வைத்தார்கள்.

இவர்கள் 1912ம் ஆண்டளவில் கந்தக் குட்டியார் கதிரிப்பிள்ளை நடராசா என் னும் பெரியாரிடம் கோயில் மேற்பார்வையை ஒப்படைத்தார்கள். நடராசா அவர்கள் தம்ப மண்டபத்தையும் கோபுரத்தோடு ஒட்டிய மண்டபத்தையும் கட்டி முடித்தார்கள். திருச்சிற்றம்பலப்பிள்ளையார் ஊஞ்சல் பராக்கு பாக்களைக் கொண்ட ஒரு சிறு நூலையும் 1916ம் ஆண்டு மதுரையில் பதிப்பித்தார்கள். 1918ம் ஆண்டில் கோயில் பரிபாலனம் இவரின் தமையனார் க.க. அருளம்பலம் அவர்களிடம் சேர்ந்தது. 1930 - 1933ம் ஆண்டுகளில் செல்லையா தில்லையம்பலமும், ஆறுமுகம் விசுவலிங்கமும் ஒருவர் பின் ஒருவராக கோயிலை பரிபாலித்து வந்தார்கள். 1933 -1937ம் ஆண்டுகளில் ம.சாம் பசிவம்மணியம் ஆனார். இவர் காலத்தில் சுற்றுமதில் வேலை நடந்தது. அவர் விலகிக் கொள்ள பொ.தங்கவேலாயுதம் அவர்கள் மணியமானார். இவர் காலத்தில் கோபுரத்தின் கீழ் பகுதி திரு கார்த்திகேசு (ஓவசியர்) பெண் சகுந்தலையம்மாவாலும் கட்டி



# நெடியகாடு திருச்சிற்றம்பலம் பிள்ளையார் கோயில்

முடிக்கப்பட்டது.

1950ம் ஆண்டளவில் திரு நா.செல்வமாணிக்கம் அவர் களிடம் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது. அவர் கோயில் தொண்டில் தம்முடைய முழுச் செயலையும் சிந்தனையையும் அர்ப்பணித்தார் கள். 1950 - 1970ம் ஆண்டுகளில் வல்வை பொரு ளாதாரத்தில் சிறந்திருந்தது. இச்சிறப்பையும் வளர்ச்சியையும் நன்கு அவர் பயன்படுத்திக் கொண்டார். மூலஸ்தானத்தையும் திருச்சபையை யும் வள்ளி தெய்வானை சமேதரராக முருகக் கடவுளுக்கும் புதிய கோயில் கட்டப் பெற்றது. நாகதம்பிரான் கோயில் மேலுள்ள பதுமபீடம் விமான வேலையாய் முடிக்கப் பெற்றது. பொது மக்களையும் அப்போதைக்கப் போது கண்டு பேசி பணம் திரட்டும் வேலையில் அய ராது உழைத்த பணி திரு நா.செல்லமாணிக்கம் (அப்பா) அவர்களையே சாரும். இவை யாவும் கவினுறச் செய்யப் பெற்ற பின்பு கும்பாபிஷேகம் 07.06.1970 ல் சிறப்புற நடந்தேறியது. அதைச் சிறப்பிக்க திருமுருக கிருபானந்த வாரியார் சிறப்பு பிரசங் கம் செய்தார்.

## கோயிலின் பகுதி திருப்பணி செய்தவர்கள்

1 கர்ப்பக்கிரகம் -

ஆ.செல்லத்துரையும் பெண் தங்கரெத்தினமும்

2 திருச்சபை -

வ.வ.இராமசாமிப்பிள்ளையும் பிள்ளைகளும்

3 நிருத்த மண்டபம் -

வ.வ.இராமசாமிப்பிள்ளையும் பெண் இராசம்மா ளும், நா.செல்லமாணிக்கமும் பெண் வள்ளி நாயகியும்

4 நாகதம்பிரான் -

பொன்னம்பலமும் பெண் அன்னப்பிள்ளையும்

5 1970ல் புதிதாக கட்டப்பெற்ற முருகையா -

அ.துரைராசாவும் பெண் இராஜேஸ்வரியும், அ.சிற்றம்பலமும் பெண் பார்வதியும்

6 யாகசாலை -

ம.சாம்பசிவமும் பிள்ளைகளும்

7 வயிரவர் -

திரு சரவண பெருமாள்

8 வசந்தமண்டபம் -

10 ந.நகுலசிகாமணி

வே.இராமவேலுப்பிள்ளையும் பெண் இராசரத் தினம்

9 பூந்தோட்டக்கிணறு, தண்ணீர் தொட்டி -

செ.காஞ்சிமாவடிவேலும் பெண் சௌந்தரியும்

10 மணிக்கூட்டுக் கோபுரம் -

சு.வயிரமுத்து நாகபூஷணி அம்மாள்

11 தீர்த்தக்கிணறு -

அ.மாரி முத்துவும் நாகம்மாளும்

12 மடப்பள்ளிக்கிணறு -

மு.மா. பாலசிங்கம்

13 பூங்காவன மண்டபம் -

செ.வி. நடராசா, சி.பரம்சோதி, ஐ.காத்தாமுத்து

14 1978ல் கட்டப்பட்ட மோர்மடம் -

தியாகராசா தேவசிகாமணி

15 இராஜகோபுரம் அடிப்பாகம் -

கார்த்திகேசு ஓவசியர் அவர்களும் மேல்பாகம் செ.கந்தசாமி (கட்டி அப்பா) அவர்களும் வல்வை மக்களும் 16 பஞ்சமுகப்பிள்ளையார் - 1979ல் பூ.க.முத்துக் குமாரசாமி

17 தேர்முட்டி -

அ.சி.விஷ்ணு சுந்தரம்

18 வெளிக்கிணறு -

தா.சண்முகதாஸ்

19 கிழக்கு வீதிமடம் -

ஓவசியர் க.பொன்னம்பலம்

20 நவக்கிரகம் -

சவுதி அரேபியாவில் தொழில் புரிந்த வல்வை இளைஞர்கள்

21 வன்னிவிநாயகர் -

சண் முகம்பிள்ளை ஞானமூர்த்தி

**ஆலயத் திருப்பணி செய்தோர் தெய்வத்துள் உறைவர்**


இவ்ஆலயத்தின் வரலாற்றை நோக்கினால் இது அரசியல் பொருளாதார சமூக வரலாற்றுடன் மிகுந்த நெருங்கிய தொடர்புடையதாகவும் அத ற்கு அப்பால் பக்தி வரலாற்றுடன் தொடர்புடைய தாகவும் உள்ளது.

இங்கு ஓடும் தொண்டமானாறு "வல்லிநதி" என்ற பெயருடன் விளங்கியது. இந்நதியின் தொடு வாயிலை தொண்டான் என்னும் அரசன் வெட்டி கடலுடன் சங்கமிக்க விட்டான். அன்று முதல் இந் நதியின் பெயர் "தொண்டமானாறு" ஆகிவிட்டது.

கந்தப்பெருமானது அருளாட்சி நடை பெற்றுக் கொண்டிருக்கும் இவ்வாலயத்திற்கு பக்திமணம் கமழும் தெய்வீக வரலாறு உண்டு. திருச்செந் தூர் என்னும் பகுதியில் இருந்து கந்தப்பெருமான் வீரவாகுதேவரை மகேந்திரபுரிக்கு சூரனிடத்தில் தூது அனுப்பினார். தூதுவனாக வந்த வீரவாகு தேவர் முதன்முதலாக வட இலங்கையின் வல்லி நதிக் கரையில் உள்ள கல்லோடையில் காலடி எடுத்து வைத்தார். வீரவாகு தேவரது பாதச்சுவடு கள் இன்றும் ஆலயத்தின் வடக்குப் பக்கத்தில் பாதச்சுவடுகளாகக் காட்சி அளித்துக் கொண்டி ருக்கிறது. வீரவாகுதேவர் பெருமானது கட்டளைப் படி மகேந்திரபுரிக்கு சூரனிடத்திற் சென்று திரும்பி திருச்செந்தூர் செல்வதற்கு மீண்டும் இந்நதிக் கரைக்கு வந்தார். வந்தபொழுது கந்திக் கால மாகி விட்டது. எனவே அவருக்கு கந்தப்பெரு மானுக்குரிய சந்திப் பூஜையை செய் தார். இவ்வாறு வீர வாகுதேவரால் சந் திக் கடன் செய்யப் பட்ட இடம் சந்நிதி யாக மருவி செல் வச்சந்நிதி என்ற திருப்பெயரைப் பெற் றது.


19ம் நூற்றாண்டின் முதற்பகுதியில் இந்த ஆற்றங்கரை ஓரத்தில் வாழ்ந்து வந்த பரதகுலத்த வர்களுள் மூத்தவ ரும் பக்திமானு மாகிய மருதர் கதிர் காமர் என்பவர் நாள் தோறும் இவ் வாற்றில் மீன்பிடி த்து சீவியம் நடா த்தி வந்தார். இவர் மீன்பிடிக்கச் செல் லும் முன்னர் ஐவ ரச முனிவர் தியான வழிபாடு செய்து தவம் இயற்றிய இடமாகிய அவரது பூவரச சமாதி யில் வணங்கியே மீன்பிடிப்பது வழக்கம். பெரு மானார் தனது பூஜை செய்வதற்கு கதிர்காமரே ஏற்றவர் என எண்ண தனது தொண்டனாக கொள்ள விரும்பினார். அதனால் எம் பெருமான் ஆற்றங்கரையில் தன்னை நாள்தோறும் மீன்பிடிக் கும் கதிர்காமர் முன்பாக மனித உருவில் தோன்றி கதிர்காமா என்னிடம் இக் கரைக்கு வா என்று அழைத்தார். இதனைக் கேட்ட கதிர்காமர் ஆற்றின் மேல் இருந்து கரைக்கு வந்தார். இவ் வாறு வந்து சேர்ந்த வரை இறைவன் கூட்டிச் சென்று பூவரசமரத்தின் அடியையும் அதன் அரு கில் வீரவாகுதேவர் சந்தி கடன் செய்த இடத் தையும் சுட்டிக் காட்டி இதில் பூஜை வழிபாடு செய்ய நீயே எல்லா வகையிலும் ஏற்றவன் என்று கூறி மறைந்தருளினார். இதைக்கண்ட கதிர்காமர் கலக்கமுற்று "கந்தா என்ன சோதனை என்னை ஏன் சோதிக்கிறாய்? நானோ பரதகுலத்தவன் எனது தொழிலுக்கும் உனது பூஜை வழிபாட்டி ற்கும் இடையில் எவ்வளவு தூரம் உள்ளது. எங்களுக்கு இது ஒவ்வாது" எனக் கண்ணீர் மல்க கதறியழுது மறுத்து நின்றார். இதைக் கண்ட கந்தப்பெருமான் "யாம் இருக்கப் பயமேன்' எனக் கூறி பூஜை வழிபாடு செய்யும்படி கூறிய போதும் வழிபாட்டு முறை தெரியாது எனக் கூறி மறுத்தார். அப்போது எம்பெருமான் "நீ புனித வல்லிநதியில் மூழ்கி நான் அழைத்த போது நீ இக் கரைக்கு

## தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயம்



வந்தவுடன் உனது பாவங்கள் கழு வப்பட்டு விட்டன' என்று கூறி யான் காட்டும் முறையில் வாய் கட்டி மௌனபூஜை செய்வாய் எனக் கூறி அருளினார்.

மருதர் கதிர்காமர் நாள்தோறும் வாழையிலையில் உணவு படைத்து உண்பது வழக்கம். ஒரு நாள் இவர் அமுது செய்து உண்பதற்கு உட் கார்ந்த போது ஓர் அசரீரி வாக்கு இவர் காதில் விழுந்தது. "உனது அமுதை நீ உண்பதற்கு முன்னர் ஆற்றங் கரையில் உள்ள பூவரச மரத்தின் அருகாமையில் ஓர் அடி யார் மிகுந்த பசியால் களைப்புற்றி ருக்கின்றார். அவருக்கு திருவமுது செய்த பின் நீ உண்பாய் எனக் கூறி யது. இதைக் கேட்ட கதிர்காமர் தனது அமுதை அப்படியே பொங்கிய பானையுடன் கொண்டு வந்து பூவரச மரத்துக்குப் பக்கத்தில் பார்த்த பொழுது உண்பதற்குரிய ஆலம் இலைகள் போடப்பட்டு உண்பதற்கு எவரும் இல்லாதிருப்பதைக் கண் டார். அவர் இறைவனை நோக்கி மனம் நொந்து இரந்து பார்த்த போது கதிர்காமர் எனக்கு உனது திருவமு தைப்படை அதன் பின்னர் என்னை உண்ணும் படி கேள் யான் உண் பேன் என்று கூறக் கேட்ட கதிர்காமர் எம்பெருமானுக்கு ஆலம் இலை யில் அமுது படைத்தார். இன்றும் இவ்வாலயத்தில் அமுது ஏராளமா கப் பொங்கப்பட்டு கோயிலுக்குள் பொங்கும் பானையுடன் கொண்டு சென்று ஆலம் இலையில் படைக்கப் பட்டு வருகின்றது. இது வேறு எந்த



ஒரு ஆலயத்திலும் இல்லாத ஒரு நடைமுறையாகும். கதிர் காமர் ஆலம் இலையில் அமுது படைத்து எம்பெருமானை திருவமுது உண்ணும்படி பணிந்து வேண்டினார். உடனே எம் பெருமானது திருஅருளால் அவர் படைத்த ஆறு ஆலம் இலை



அமுதும் மறை ந்து போகவே அதைக் கண் ணுற்ற கதிர் காமர் "ஆறு முகா என்று கதறி இச்சிறி யேன் படைத்த அமுதை ஏற்றுக் கொண்டு என் னையும் ஆட் கொண்டாய் இனி (எனக்கு) உமது பாதார விந்தத்தைப் பணிவதும் திரு வமுது படைப்ப

துமே எனக்கு முதல் வேலை உமக்கு படைத்துப் பூசித்த பின்பே யான் உண்பேன் என்று கூறினார். சன்னதி வேலவன் அருட்செல்வம், பொருட் செல்வம், கல்விச் செல்வம் இவ்வாறு எண்ணற்ற செல்வங்களை வேண்டுவோர் வேண்டுவதை ஈய்ந்த வண்ணம் இருக்கின்றார். அன்ன தானக் கந்தனாகவும் காட்சி தருகின்றார். கோயிலைச் சுற்றி 45 மடங்கள் இருக்கின்றன. இதன் மூலம் அன்பர்கள் தம் நேர்த்தி மூலம் அன்ன தானத்தை கொடுக்கின்றார்கள். இவ்வாறாக சன்னதி வேலவனின் சிறப்பை எடுத்துக் கூறினால் முடிவில்லாது அமையும்.

## வல்வை ச.வயித்தியலிங்கம்பிள்ளை எழுதிய செல்வச்சந்நிதி முருகன் திருப்பள்ளியெழுச்சி

சீறுரு நினதருள் செறியடி யவர்தஞ்
சிந்தையி னிலமில கினவவரருள்மா
மேருறு கிரியெழு சிதமென வல்லோன்
இந்திர திசைவரை யினிலெழு கின்றான்
பேருறும் அரிமுதல் அமரர்கள் பரவப்
பேசரு மறைமிகும் ஒலியோடு பரவ
நேருறு தொண்டநன் நகருறு வளசந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே

ஆண்டலை கூவின வன்னிபுட்ட
மன்பொடு கூவின புள்ளொலி பரந்த
மாண்டகு சங்கமொ லித்தன வானின்
மருவிய தாரகை மறைந்தன கடன்மேல்
ஏண்டகு கதிரவன் றோன்றினன் அன்பர்க்
கெளிவரு மறுமுக விறையவ மிகவே
நீண்டிடு மரநிறை வனமுறு வளச்சந்
நிதியரசே பள்ளி யெழ்நதரு ளாயே

தோத்திர மிசைத்திடு மடியவ ரொருபால்
சுற்றியஞ் சலிசெயு மடியவ ரொருபால்
காத்திடு வெனவரு மடியவ ரொருபால்
கைகுவித் தேதொழு மடியவ ரொருபால்
பூத்திரள் சிந்திடு மடியவ ரொருபால்
பொற்புர வெங்கனு நிறையவந் தெடுத்தார்
நேத்திர மணியென குருபர வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே

மணிமயி லதன்மிசை நீயிருந் தாங்கு
மறிகடன் மிசையொடு கதிரவ னுதித்தான்
அணியுறு மரைமலர் நினதரு ளடைந்த
வன்பர்த முகமென விகசித மான
கணியுறு புனமதில் வருகிற மாது
காதலோ டணைதரு வாகுமுன் நான்கா
நிணதரு படைநிசி சரர்தமை யடுசந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே

அயனரி முதலிய வமரர்க ளறியா
வானந்த மெய்ப்பொரு ளேநின தடித்தொண்
டியன்முறை புரியடி யவர்தமக் கெளியாய்
இன்னமு தேகரும் பேமுடி மணியே
நயனம திடைநின்று களிதரு தேனே
நாயக னேகுக னேயறு முகனே
நியமமோ டுறுபவர்க் கருடரு வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே

ஒதரு மொளிவிடு முனதயில் கண்ட
வுறுமயில் புரியவஞ் சனிபடை யொப்பக்
கோதரு கதிரறி யெழுவது கண்ட
கூரிரு ளழிந்தது குலவிய மதிய
மூதொளி மழுங்கிய துனதமர்க் கழிந்த
மொய்யறு மவுணர்த முகமென வறுமார்
நீதரு மறிஞரும் வருதிரு வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே

திறற்புய னாதிய வீரர்கள் சூழத்
திண்டிறல் கெழுமிய பூதர்கள் சூழப்
பிறப்படு முனிவரொ டமரர்கள் சூழப்
பேரயில் முதலிய படைத்திறஞ் சூழ
வறற்படு குழற்ச்சசி மகள்குற மகளோ
டருடர வமர்தரு வறுமுக வர்த்த
நிறக்கடம் பணிபுய நிறைதரு வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே


பச்சிலை யொடுமலர் பரிவொடு கொணர்ந்தார்
பாலுறு காவடி பலப்பல கொணர்ந்தார்
வச்சிர நவமணி மாலைகள் கொணர்ந்தார்
மாமணி செறிநன் மகுடங்கள் கொணர்ந்தார்
இச்சையோ டிருவழி முதலிய கொணர்ந்தார்
ரெண்ணிய வரம்பெற வீண்டின ரிங்கண்
நிச்சய முறுதவர் தொழிதரு வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே

ஐந்தொழில் நடம்புரி கையனு முமையு
மன்பொடு தழுவுதற் சுகநினை வுற்றார்
சிந்துர வதனவைங் கரத்தலை வனுநற்
சிரமுகந் திடவிரும் பின்னரி முதலாஞ்
சுந்தர வமரர்கள் பணிசெய வந்தாய்
தூயதன் மறைமுதற் கலையுணர் புலவ
நிந்தையி லவர் துதி புரிநிறை வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே

தென்மலை முனிவனுக் கருளிய குருவே
தேவர்க ளிடர்களைந் திடவரு முருவே
அன்னையம் பிகைக்குமுன் னுறவிடு பாதா
வரன் செவி யினிற்பிர ணவமுரை நாதா
முன்னடு முடிவில தாகிய சோதீ
முத்தர்க டமதுள மேவிய வாதீ
நெல்மணி வயல்புடை சூழ்திரு வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தருளாயே

திருச்சிற்றம்பலம்

# பொலிகண்டி
# கந்தவனக் கடவை கந்தசாமி கோயில்



கந்தவனப் பதியில் சண்முகப்பெருமான்

சீரும் திருவும் பொலியும் ஈழ மணித் திருநாடு தேவாரம் பாடிய சிவஸ்தலங்களையும் திருப்புகழ் பாடிய குகன் தலங்களையும் உடையது. அதன் வடகடல் ஓரத்தில் வல்வெட்டித்துறைக்கு கிழக்கே மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்புக்களையும் கொண்ட கந்தவனப்பதியினில் சண்முகப் பெருமான் வீற்றிருந்து அருளபாலிக்கும் பதி தான் பொலிகண்டி கந்தவனப்பதியாகும். முருகனுடைய ஆலயங்களுள் கிரிப்பிராந்தம். வனப்பிராந்தம், சமுத்திரப்பிராந்தம் ஆகிய இவற்றுள் இரண்டு சிறப்புக்களையும் ஒருங்கே அமையப் பெற்ற இடம் பொலிகண்டிக் கந்தவனக் கடவையாகும். இவ்வாலயம் மிகவும் பழைமை வாய்ந்தது. கர்ண பரம்பரை வரலாற்றைக் கொண்டது. வெள்ளரித் தோட்டத்தில் வேலாயுதம் தான் தோன்றியதாக கூறப்படுகின்றது. தற்போதும் ஆலயத்தின் வடக்கு வீதியிலுள்ள நறுநீர்க்கேணியும் அதன் அருகேயுள்ள காலம் கணிக்க முடியாத மூன்று வன்னி மரங்களும் உள்ளது. இந்நறுநீர்க்கேணியின் நடுவிலே உள்ள கல்லில் ஆதி காலத்தில் கற்பூரம் விளைந்ததாக வரலாறு உண்டு. இக் காரணத்தால் இக்கந்தனை கற்பூரக் கந்தன் என்று கூறுவதும் உண்டு. காஞ்சிமாவடிவேலவன் என்று அழைப்பார்கள். இவ்ஆலயம் வேலவர் மீது அருணகிரிநாதசுவாமிகளால் திருப்புகழ் பாடப்பட்டது.

நவாலியூர் சோமசுந்தரப்புலவர் நாண்மணி மாலையும் பதிகமும் திருப்பள்ளி எழுச்சியும் பாடியுள்ளார். கண்பார்வை இல்லாத புலவரான உடுப்பிட்டி சிவசம்புபுலவர் முருகனின் அருளாணைப்படி நான்மணி மாலையும் பதிகமும் பாடி கண்பார்வை யைப் பெற்றார். இவ்வாலய வருடாந்த மகோற்சவம் ஆனிப்பூரணையை தீர்த்தமாகக் கொண்ட பதினைந்து நாட்கள் நடைபெறும். பதினைந்து திருவிழாக்களும் பதினைந்து கிராமமக்களால் நடாத்தப்படும்.

## வல்லையின் பண்பாடு

பல வருடங்களுக்கு முன்னர் இருந்தே மார்கழி மாதம் முழுமையும் வைகறையில் ஒரு வருடம் நெடியகாட்டு இளைஞர்களும் மறுவருடம் அம்மன் கோயிலடி இளைஞர்களும் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவெம்பாவை பாடிய வண்ணம் சங்கொலியும் மணியுமாக வல்வையின் ஒவ்வொரு வீதியுமாக சென்று ஊரை விழிக்க செய்கிறார்கள். திருவெம்பாவை காலங்களில் அநேகர் அந்நேரமே நித்திரை விட்டெழுந்து நீராடி தூயஆடை அணிந்து அவரவர் மனதிற்குகந்த கோயில்களுக்குச் செல்கிறார்கள். ஞாயிறு தோற்றத்தின் முன் ஆலயங்களில் கடவுளை தரிசித்து வணங்கி வீபூதியும் பொட்டும் அணிந்து வீதிகளிலெல்லாம் சாரிசாரியாகத் திரும்பிக் கொண்டிருப்பார்கள். இது வல்வையின் பண்பாடு.

இவ்ஆலயமானது 1845ம் ஆண்டு காலப்பகுதியில் இக் கிராமத்தில் சைவத்தையும் தமிழையும் வளர்த்து வந்த சிவஸ்ரீ ஆறுமுகக்குருக்கள் அவர்களால் தோற்றுவிக்கப் பட்ட ஒன்றாகும். குருக்கள் தமது கிராமத்தில் ஓர் ஆல யம் இல்லையே என்று பல நாட்களாக இறைவனை வேண்ட, இறைவன் ஐயாவின் கனவில் ஆனைமுகமும் அழகிய திருவுருவமும் கொண்டு மிகக் கம்பீரத்துடன் காட்சி கொடுத்து எனக்கு இந்த இடத்தில் ஓர் ஆலயம் அமைத்து வழிபடுக என்று ஆலயம் அமைக்க வேண்டிய இடத்தையும் குறிப்பிட்டு தெய்வீக வாக்கும் கொடுத்து மறைந்தருளினார்.



# வல்வெட்டி வேவில் வீரகத்தி விக்னேஸ்வரன் ஆலயம்

கண்விழித்த குருக்கள் குறிப்பிட்ட இடத்தில் சென்று பார்த்த போது அவ்விடத்தில் பல தரப்பட்ட மலர்கள் உதிர்ந்து கிடந்தன. குருக்கள் ஊர்மக்களை அழைத்து நடந் தவைகளை கூற மக்கள் மிக மகிழ்ச்சி அடைந்து அந்த இடத்தில் குருக்களுடன் சேர்ந்து ஒரு சிறிய ஆலயத்தை அமைத்தனர். குருக்கள் நித்திய பூஜையை செய்தார். இவ்வாலயமே இன்று வல்வெட்டி வேவில் வீரகத்தி விக்னேஸ்வரர் ஆலயமாகத் திகழ்கின்றது.

குருக்கள் ஐயாயைத் தொடர்ந்து அவரின் புத்திரராகிய சின்னையா குருக்கள் கர்ப்பக்கிரக மண்டபம், உள்வீதி, வெளிவீதி ஆகியவற்றை அமைத்து இரண்டு கால பூஜைகளைச் செய்து வந்தார். சின்னையா குருக்கள் சிவபதமடைய அவரின் மகன் சுவாமி நாதக்குருக்கள் தொடர்ந்து ஆலயத்தை பராமரித்து நித்தியபூஜைகளை யும் சிறப்பாகவும் நடாத்தி வந்தார்.

அவருக்குப் பின்னர் மைத்துனரான சுப்பிரமணியக் குருக் கள் காலத்தில் தரிசன மண்டபம், வசந்த மண்டபம், நிர்த்த மண்டபம், தம்ப மண்டபம், தேர், வாகனங்கள் என்பன பொது மக்களால் செய்யப்பட்டு 1959ம் ஆண்டு சித்திரை மாதம் மகாகும்பாபிஷேகத்தையும் நடாத்தி வைத்தார். ஆலயத்தின் அலங்கார உற்சவம் வைகாசி பூரணையை தீர்த்த உற்சவமாகக் கொண்டு பத்து நாட்கள் நடாத்தப்படு கின்றது. அன்னாரின் மருமகனான திருச் சிற்றம்பலம் ஐயா கோயிலை பொறுப் பேற்று பொதுமக்களின் உதவியுடன் மணிக்கூட்டு கோபுரம், அசையாமணி என் பனவற்றை செய்து ஓட்டால் வேயும் கொட்டகைகளாக மாற்றி அரிய திருப் பணிகளைச் செய்தார்.

1973ல் திருச்சிற்றம்பலம் ஐயா விநாயகப் பெருமானின் திருவடிகளினை அடைய அவரின் மகனாகிய கமலநாதன் ஐயா ஆலயத்தின் பொறுப்பை ஏற்றார்.

கமலநாதன் ஐயாவின் காலத்தில் பரிவார மூர்த்திகளுக்கு தனித்தனி பீடங்கள் அமைக்கப்பட்டு கர்ப்பக் கிரக ஸ்தூபி புதிதாக அமைக்கப்பட்டு 1980ம் ஆண்டு தைத்திங்கள் மிருகசீரிடம் நட்சத்திரத் தன்று சோ.தண்டபாணிதேசிகர் அவர்கள் குருவாக இருந்துகும் பாபிஷேகம் செய் யப்பட்டது. இக் கும்பாபிஷேகத்தினை தொடர்ந்து அழகிய பூங்காவன மண்ட பமும் பஞ்சமுக விநாயகர் எழுந்தருளியும் நவக்கிரகம் போன்றனவும் அமைக்கப் பட்டன.

அவர் பின்னர் சி.விக்னேஸ்வர ஐயா ஆலயத்தை ஊர் பெருமக்களின் ஒத்து ழைப்புடன் பரிபாலித்து வருகின்றார். விநா யகப் பெருமானுக்கும் சண்டேசுவர பெரு மானுக்கும் புதிய சித்திர தேர் நிர்மா னிக்கப்பட்டு 10.06.95 அன்று விநாயகப் பெருமான் ஆரோகணித்து அடியார்களின் பாவங்களைப் பொடி செய்து நல்லருள் பொழிந்தார்.

## வேவில் பிள்ளையார்

**வேவில் பிள்ளையாரே கோவில் கொண்ட**
**தேவா**
**வாழ்வில் வளம் தந்து சாவிலும் துணை**
**நிற்பாய்**
**இளமையிலே நாம் விளையாடும்**
**பொம்மையன்றோ**
**காளைப் பருவத்தில் வேளையோ**
**போதவில்லை**
**முதுமை வந்தடைந்தால் ஏக்கத்தால்**
**சாகின்றோம்**
**உன்னை நினைப்பதற்கு எங்கெமக்கு**
**நேரமையா (வேவில்)**

# வல்வை:

## பட்டினசபை

## நகரசபை

01.01.1947ல் பட்டினசபை ஏற்படுத்தப் பெற்றது. இச்சபையின் எல்லைகள் வகுக்கப் பெற்று இவைகளை ஐந்து வட்டாரங்களாகப் பிரித்து ஒவ்வொரு வட்டாரத்திலும் இருந்து ஒரு அங்கத் தவர் அவ்வட்டார மக்களால் வாக்காளர் பட்டி யல் மூலமாகத் தெரிவு செய்யப் பெற்று அவர் கள் பட்டினசபை வேலைகளைக் கவனித்து வந்தார்கள். இச்சபையின் முக்கிய பணிகளாக சுகாதாரம், சந்தை, தெருக்கள், ஒழுங்கைகளை பரிபாலித்தல், மின்சாரம் முதலியனவாகும். இச் சபையினர் தங்கள் சேவைகளை இலவசமாகவே செய்து வந்தனர். வல்வைக்கு ஆரம்ப காலத்தில் இருந்து மின்சாரம் பருத்தித்துறை நகரசபையின் இயந்திரம் மூலமாக வழங்கி வந்தனர். பின்னர் இரண்டு பெரிய இயந்திரங்களை சொந்தமாக சாங்கி நவீன சந்தையாக மாறிய பழைய சந்தையில் இயக்குவித்து மின்சாரத்தை வழங்கி னார்கள்.

பட்டினசபையின் தலைவராக இருந்து சேவை யாற்றியவர்களின் பெயர்களும் ஆண்டுகளும்

திரு ஐ.திருப்பதி 1947

திரு ச.நடனசிகாமணி 1953

திரு சோ.சுந்தரலிங்கம் 1956

திரு இ.அப்புக்குட்டியாபிள்ளை 1959

திரு க.சபாரத்தினம் 1960

திரு க.சு.கதிரிப்பிள்ளை (ஸ்ரீரங்கம்) 1965

திரு வி.இரத்தினவடிவேல் 1970

வல்வை சந்தியில் தரித்து நிற்கும் தனியார் வாகனங்களை அகற்றி அவர்களுக்கு வேறு இடம் வழங்கப்பட்டு சில எதிர்ப்புக்களுக்கு மத்தி யில் வல்வை சனசமூக சேவா நிலையத்தின் வேண்டுகோளுக்கு இணங்க வல்வை மத்திய பஸ்நிலையம் உருவாக் கப்பட்டு 1971ம் ஆண்டு ஜனவரி 1ம்திகதி பாராளுமன்ற உறுப்பி னர் திரு க.துரைரத்தினம் அவர்களைக் கொண்டு திறந்து வைத்த பெருமைக்குரியவர் திரு வி.இரத்தின வடிவேல் அவர்கள்.

01.01.1972ல் வல்வை பட்டினசபை திரு க.துரை ரத்தினம் அவர்களின் முயற்சியால் நகரசபை அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டது. நகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களின் எல்லைகளாவன

கிழக்கு - கந்தவனகடவை ஆலயத்திற்கு மேற் கேயுள்ள கற்பெரும் பாதை

மேற்கு - தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோயிலையும் உள்ளடக்கிய பகுதி

தெற்கு - பொலிகண்டி மேற்கு பகுதி வல்வெட்டி குறிச்சி ஊரிக் காடு மயிலியதனை குறிச்சி கெரு டாவில் குறிச்சி ஆக நீளம் கிட்டத்தட்ட மூன் றரை கல் தூரம் அடங்கும். இந்த எல்லையை நிர்ணயித்த போது பொலிகண்டி மேற்குக் குறிச்சியாரும், மயிலியதனை பக்கமுள்ள சில ரும் தாங்கள் வல்வையுடன் இணைய விருப்ப மில்லை என பிடிவாதமாக இருந்த போது திரு அ.அமிர்தலிங்கம், திரு மு.சிவசிதம்பரம் ஆகி யோர் அவர்களை அழைத்து இணைய வேண் டிய அவசியத்தையும் இதனால் உங்கள் பிரதேசமும் அபிவிருத்தி அடையும் என்பதையும் கூறி அவர்களைத் திருப்திப்படுத்தியதால் முன் நிர்ணயித்த எல்லைகளே உறுதிப்படுத்தப் பட் டன.

பட்டினசபை வட்டாரங்கள் சிறிய மாற்றங்களுடன் ஆறு வட்டாரங் களாகவும், புதிதாகச் சேர்க்கப் பட்ட பொலிகண்டி ஒரு வட்டாரமாகவும், தொண் டமானாறு ஒரு வட்டாரமாகவும், மயிலியதனை ஒரு வட்டாரமாகவும் ஒன்பது அங்கத்தவர்கள் கொண்ட சபையாயிற்று.

எல்லைகள் விஸ்தரிக்கப்பட்ட பின் முதலாவது நகரசபைத் தேர்தலில் திரு து.நவரத்தினம் அவர்கள் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு முதல் நகர முதல்வரானார்.

இவர் சிறந்த பேச்சாளரும், தமிழறிஞரும், பல காலம் ப.நோ.கூ. சங்கத்திற்கு சேவையாற்றிய வரும் இடதுசாரி கொள்கைகளை ஆதரித்த வரும், சமசமாஜக் கட்சித்தலைவர் என்.எம். பெரேராவின் நண்பருமாவார்.

1979ம் ஆண்டு நகரசபைத் தேர்தலில் கட்சி அடிப்படையில் முதல்முறையாக போட்டியிட் டார்கள். இதில் திரு ச.ஞானமூர்த்தி (சமாதான நீதிபதி) அவர்களைத் தலைவராகக் கொண்ட தமிழர் விடுதலைக்கூட்டணி நகரசபையைக் கைப்பற்றியது.

திரு ச.ஞானமூர்த்தி அவர்கள் பதவி ஏற்றதும் அவரது அயராத முயற்சியாலும், அப்போதைய எமது பாராளுமன்ற உறுப்பினர் திரு த. இரா ஜலிங்கம் அவர்களின் உதவியாலும் நவீன சந்தை, நகரசபை கட்டிடம், பொதுசனநூல் நிலையம், ஊறணி மயானத்திற்கு மதில் அமைத்தல், குழாய் நன்னீர்த் திட்டம், தொண்ட மானாறு, கம்பர்மலை, பொலிகண்டி ஆகிய கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குதல் ஆகிய வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

# வல்வை
# ச.வயித்தியலிங்கபிள்ளை
# (1843 - 1901)

இவர் 1843ம் ஆண்டு மாசித்திங் களில் சங்கர நாதருக்கு மூத்த புதல்வனாக வல்வையில் பிறந் தார். இவர் உடுப்பிட்டி திரு அ.சிவசம்பு புலவரி டம் இலக்கிய இலக்கணங்களையும் வடமொழி யையும் விரைந்து கற்று பண்டிதராரனர். சித்தா ந்த நூல்களையும் திருமுறைகளையும் கற்று சிவ மதத்தைப் பரப்பினார். 1876ம் ஆண்டு சிந்தா மணி நிகண்டு என்ற நூலை இயற்றி இவ்வுல கிற்கு ஈய்ந்தார். 1878ம் ஆண்டில் நம்பியகப் பொருள் என்ற இலக்கண நூலுக்கு விளக்க உரையினை வெளியிட்டார். கந்தரலங்காரத் திற்கு புதியதோர் உரை விளக்கம் தந்தார்.

கந்தபுராணம் தெய்வானை திருப் படலத்திற்கும் வள்ளியம்மை திருமண படலத்திற்கும் நல்ல சிறந்த ஆராய்ச்சி உரைகள் எழுதி வெளியிட் டார். சூரபத்மன் வதைப்படலத்திற்கும் உரை எழுதியுள்ளார். வல்வை வைத்தீஸ்வரர் பதிகம் அன்னவரின் இன்னோர் ஆக்கம் ஆகும். வேறு அண்டகோச படலங்கள் சிவராத்திரி புராணம், சீமந்தளிபுராணம், கஞ்சனமாலை முதலியனவும் அச்சிட்டு வெளியிட்டு வைத்தார்.

"கந்தமலர்ப் பொழில்புடை சூழ் தில்லைவனத்
தறிஞர் திருக்கடைக் கனோக்கி
முந்தவுரைத் தனர்பலரு மாயினும் யாகமநூன்
மொழிவ ழாமற்
பந்தமறுத் திடுசிவராத் திரிவிரத சரிதைதனைப்
பாடுகென்னச்
செந்தமிழி னுயர் விருத்தப் பாவதனாற் றிரட்டி
யொன்றாச் செப்ப லுற்றேன்'

என்பது சிவராத்திரி புராணத்தின் பாயிரச் செய் யுள். இப்புராணத்தினை வல்வை ச.வயித்திய லிங்கபிள்ளை சென்னை வித்தியாவர்த்தினி அச்சுக்கூடத்தில் விசு வருடம் ஆவணி (1885) பதிப்பித்து வெளியிட்டு வைத்துள்ளார் என "ஈழம் தந்த ஆறுமுக நாவலர்' சரிதத்தில் 159ம் பக்கத் தில் குறிப்பிடப்பட்டுள்ளது

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அதிகாரபீடத் தில் இருந்த அந்நியரின் அரசு கல்வி வளர்ச்சி க்கு ஒதுக்கிய தொகையை நேரடியாக கொடு த்திட மனம் வந்திலர். கிறிஸ்தவ மிசனரிகளிடம் கொடுக்கப்பட்டது. அவர்கள் தமிழ்பிரதேசங் களில் பாடசாலைகளை நிறுவி தங்கள் மதப்பிர சாரங்களை வேகமாக இடம் பெறச் செய்தார் கள்.

புரட்டஸ்தாந்து மதத்தவர்களுக்கும் நல்லை ஆறுமுகநாவலர் அவர்களுக்கும் இடையில் வாதப் பிரதிவாதங்களும் கண்டனங்களும் மறுப்பு களும் மும்மரமாக இடம் பெற்றன. பாதர் பிதி ற்றோ என்ற கத்தோலிக்க பாதிரியாரின் அறிக்கை க்கு ஆறுமுகநாவலர் அவர்களால் பதில் பகர முடிய வில்லை. காரணம் அவர் தர்க்க சாஸ்திரத் தில் வல்லவராக இருக்கவில்லை. நல்லை ஆறு முகநாவலர் அவர்கள் பிதிற்றோவின் அறிக் கையை தனது சமகாலத்தில் வாழ்ந்த வல்வை இயற்றமிழ் போதகாசிரியர் வயித்தியலிங்க பிள்ளை அவர்களிடம் அனுப்பி பாதர் பிதிற்றோ வுக்கு பதில் கொடுக்குமாறு கேட்டுக் கொண் டார். வயித்தியலிங்கபிள்ளையின் காத்திரமான வாதங்களை படித்த பாதிரியார் "**நான் யாழ்ப் பாணத்து பனங்காட்டில் நரிகளைத்தான் எதிர் பார்த்தேன். ஆனால் வயித்தியலிங்கபிள்ளை போன்ற சிங்கத்தை எதிர்பார்க்கவில்லை**' என்று வயித்தியலிங்கபிள்ளை அவர்களுக்கு பதில் எழுதி அனுப்பியதோடு நீண்ட காலமாக நல்லை தந்த நாவலர் பெருமானோடு தான் நிகழ்த்திக் கொண்டு இருந்த தர்க்கவாதங்களை தானாக கை விட்டிருந்தார்.

இவர் வல்வை சிவன் கோயில் மடத்தில் அச்சகம் நிறுவி சைவ அபிமானி என்ற பத்திரி கையைப் பல ஆண்டுகளாக நடாத்தி வந்துள் ளார். கிறிஸ்தவ மதம் பரவி வரும் நிலைக்கு எதிராக எழுந்த சைவ எழுச்சிக்கு வல்வெட்டித் துறையைச் சேர்ந்த வயித்தியலிங்கபிள்ளை வெளியிட்ட சைவ அபிமானி என்ற பத்திரிகை பெரும் பங்காற்றியதுடன் வல்வெட்டித்துறை வர்த்தகர்கள் இவருக்கு பின்னணியாக இரு ந்தார்கள் என "மகிமை" என்ற பெயரில் ஆறுமுக நாவலர் வெளியிட்ட சஞ்சிகையில் குறிப்பிட் டுள்ளார். பின்னர் யாழ்ப்பாணத்தில் வேளாளர் மேலாதிக்கம் இருந்த பகுதியில் கரையார்களின் கையோங்கியதற்கு எதிர்ப்பும் ஏற்பட்டது. ஆறுமுக நாவலர் பகிரங்கமாகவே வேளாளர் நலன்களை ஆதரித்தவர். இவர் எழுதிய "கரையார் வழக்கு" என்னும் நூலை எதிர்த்து வயித்தியலிங்கபிள்ளை "சாதிநிர்ணய புராணம்" என்ற நூலை எழுதி னார். அதில் கரையாரின் உயர்வினை உரைத் துள்ளார். இவர் பதினொரு நூல்களை இயற்றி யுள்ளார்.

பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் இவரின் நூல்களை ஆராய்ந்து கூறியதாவது வள்ளி

யம்மை தெய்வானையம்மை திருமண படலங்களுக்கு இவரது உரையினை நோக்கும் போது இவரது ஆழ்ந்த இலக்கிய ஞானம் நன்கு புலனாகிறது. சிறப்பாக வள்ளியம்மை திருமண படலத்திற்கான உரை அகப் பொருள் மரபை நுண்ணியதாக உணர்ந்து எழுதப் பெற்றது தெரிய வரும். 122ம் பாடலான "நாற்றமும் தோற்றமும்" எனத் தொடங்கும் பாடலுக்கும் எழுதிய உரைகள் வயித்தியலிங்கபிள்ளை அவரது ஆழ்ந்த தமிழிலக்கிய அறிவிற்கு ஒரு பதச் சோறு ஆக அமைந்துள்ளது எனலாம். நம்மியகப்பெருமாள் விளக்கவுரையும் இவராற் செய்யப்பட்டது என்பதை மனங்கொள்ளின் அகப்பொருள் மரபு பற்றி அவரிடமிருந்த ஆழ்ந்த இலக்கிய புலமை நன்கு தெரியும்.


இவர் தமிழ்நாடு சென்றும் விரி வுரைகள் நிகழ்த்தியுள்ளார். சென்னையில் சி.வை. தாமோதரம் பிள்ளை தலைமையில் நிகழ்ந்த பேரவை இவருக்கு இயற்தமிழ் போதாகாசிரியர் என்னும் பட்டத்தைச் சூட்டியது. இவரத நினைவையொட்டி வல்வையில் உள்ள நூல்நிலையங்களில் அவரது உருவப்படம் திறந்து வைக்கப்பட்டன. வல்வை சனசமூக சேவா நிலையத்தினர் கலாநிதி கா. சிவத்தம்பி அவர்களால் எழுதப் பெற்ற புலவர் வயித்தியலிங்கபிள்ளை என்ற சிறு நூலும் வெளியிடப்பட்டது.

(1) ஈழநாட்டுப்புலவர் சரித்திரம் -(1916) பக்கம் 168

(2)வயித்தியலிங்கபிள்ளை வரலாறு - பேராசிரியர் டாக்டர் கா.சிவத்தம்பி

(3) ஈழத்தமிழ் இலக்கிய வளரச்சி - டாக்டர் க.செ.நடராசா பக்கம் 38

(4) ஈழத்துக்கவிதைக்கனிகள் - டாக்டர் சிலோன் விஜேந்திரன் எம்.ஏ. பக்கம் 173



சுப்பிரமணியசுவாமி வரப்பிரசாதியாய்த்
திருவண்ணாமலையில் எழுந்தருளியிருந்த
அருணகிரிநாதர்
அருளிச்செய்த
கந்தரலங்கார மூலமும்,
வல்வை
இயற்றமிழ்ப் போதகாசிரியர்
ச. வயித்தியலிங்கபிள்ளை
அவர்கள் இயற்றிய
உரையும்.

இப் புத்தகம்
மேற்படியார் புத்திரர்
சிவப்பிரகாசம்பிள்ளையால்
ஜயசிறீ சாரதா பீடேத்திரசாலையில்
முத்திரிகாரஞ் செய்விக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.
1912.

1912ம் ஆண்டு இரண்டாவது பதிப்பாக வெளிவந்த அருணகிரிநாதர் அருளிய கந்தரலங்கார மூலமும் வல்வை இயற்றமிழ்ப் போதகாசிரியர் ச.வயித்தியலிங்கபிள்ளை அவர்கள் இயற்றிய உரையும் என்னும் புத்தகத்தின் முன் பக்கத்தின் மூலப்பிரதியையே மேலே காண்கின்றீர்கள்.

## வல்வையின் பெருமை சாற்றும் கலிவெண்பா

*செந்தமிழின் மங்கை சிறந்து குடிகொண்டு மகிழ்*
*வந்த வியாழ்பாணம் வடபுடையுள் — முந்துசிவ*
*புண்ணியமே யாசாரம் பூண்டு வழிவழியே*
*மண்ணில் விளங்கும் வளர் சைவநண்ணுகின்ற*
*வல்வைநகர்.....*

**நீர்வேலியை சேர்ந்த தமிழ் சமஸ்கிருதப் புலவரும் பாவலருமான ஸ்ரீமான் எஸ்.சிவப்பிரகாச பண்டிதர் 1892ம் ஆண்டு எழதிய கலிவெண்பாவில் வல்வை சிறப்பு பற்றி இவ்வாறு கூறியுள்ளார்.**

## வடமராட்சியும் வல்வையும் இடப் பெயர்கள்

வடமறவர் + ஆட்சி சோழநாட்டின் வடபகுதியிலிருந்து வந்த மறக்குடிகள். (தேவர் மீயர்) முதலில் குடியேறி நிலைத்த இடம் வடமராட்சி என்று கூறப்படுகின்றது. வல்வெட்டி என்னும் பெயரும் அவ்விடத்தில் இருந்த வல்லி (வல்லு)ச் செடிகளை வெட்டி குடியிருப்பு அமைத்த காரணத்தால் வல்லு + வெட்டி வல்வெட்டி ஆனது. இவ்வூரின் அருகே இருந்த கடற்துறை வல்வெட்டித்துறை ஆனது. துறை - கப்பற் போக்குவரத்துத் தொடர்பான ஊர். பருத்தித்துறை (பருத்தி ஏற்றுமதி செய்த இடம்) வல்வெட்டித்துறை அக்காலத்தில் வெளிநாடுகளுடன் கப்பல்மூலம் வணிகம் சிறப்பாக நடைபெற்ற இடம். வல்வெட்டி + துறை வல்வெட்டித்துறை ஆகியது. உயரமான இடமாகிய உடுப்பிட்டி இமையாணனிலிருந்து ஒருஓடை (அகழி வாய்க்கால்) தொடங்கி சமரபாகு ஊடாக வல்வெட்டியை அடைந்து வல்வெட்டித்துறை தீருவில் பக்கமாகச் சென்று சிவன் அம்மன் கோயில் முன்பாக இறங்கி உதய சூரியன் கடற்கரையில் அண்மித்த கடலோடு தொடுக்கின்றது. உடுப்பிட்டி, ஓடைப்பிட்டி என்பது சரியே.

இமையாணன் (குறிச்சி) இமையாள் + நன் (இமையவள் பார்வதி) நன்கொழுநன் கணவன் - சிவன்) இமைய தேவன் என்ற சங்கிலி மன்னனின் தளபதிகளில் ஒருவனது பெயரால் இக்குறிச்சிப் பெயர் உண்டானது. பொலிகண்டி பொழிலர் + கண்டி (பொழிலர் - மரம் வெட்டுவோர் பனை தறிப்போர்) கந்தவனக்கடவை என்றும் அழைப்பர். கொத்தாவத்தை - கொத்தர் + வத்தை கொத்தர் மரங்களைக் கொத்திப்பிளந்து வேலை செய்வோர். கரணவாய் கரை + அணை வைத்த + இடம் இடம் அற்றுப் போக கரை அணைவை கரணவாய் ஆகியது.

தொண்டமான் வரவு - கரணவாய், வெள்ளப் பரவை முதலிய இடங்களில் நல்ல உப்பு படுஞ் செய்தியை தொண்டைநாட்டை அரசாண்ட தொண்டமான் என்னும் அரசன் கேள்விப்பட்டு பரிவாரங்களுடன் கீரிமலைச்சாரலில் வந்திறங்கிச் சந்தித்து அந்நாட்டில் விளையும் உப்பிலே தனக்கு வேண்டியளவு வருடந்தோறும் விலைக்கு கொடுக்கவும் உப்பு படுமிடத்துக்குச் சமீபத்திலே மரக்கலங்களைக் கொண்டு போய் உப்பு ஏற்றவும் மாரிகாலங்களில் மரக்கலங்களை ஒதுக்கி விட்டு நிற்கவும் வசதியாக வடகடலில் ஓர் ஆறு வெட்டுவித்துக் கொள்ளவும் உத்தரவு கேட்டான். உக்கிரமசிங்க மகாராசன் உத்தரவு கொடுக்கத் தொண்டமான் அங்கிருந்த சிற்றாற்றை மரக்கலங்கள் ஓடத்தக்க ஆழமும் விசாலமும் உள்ளதாகவும் ஒதுக்கிடமுள்ளதாகவும் வெட்டுவித்துத் தன்னூருக்கு மீண்டான். அது முதல் இதுவரைக்கும் தொண்டமானாறு என்று அழைக்கப்படுகிறது.

1.1.1803 அரோசிமித் உத்தியோகபூர்வ படத்தின் பிரகாரம் உள்ள ஸ்தலங்களும் குளங்களும் சி.சுந்தரலிங்கம்

"யாழ்ப்பாண வைபவமாலை'- மயில்வாகனப் புலவர் பக்கம் 14

"தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயர்களும்" பக்கம் 198, 199, 213

இமையாணன் கதிர்.தணிகாசலம்

## *அல்வெட்டும் அரிய ஊர்*

கல்வெட்டி உருச்செய்து கடவுளெனப்
பாவித்துக் காதல் செய்தே


அல்வெட்டி அறிவுபெறும் அன்பர்கள்
நிறைந்துண் அரிய ஊராம்

வல்வெட்டித் துறையதனில் வளர்ந்த சனசமூக
நிலையத்தில் வந்தே

நல்வெற்றி வடிவேலன பேரழகின் திறம் சற்றே
நவின்றேனம்மா

இந்தியத் தமிழறிஞர் கி.வா.ஜகநாதன்

கலைமகள் ஸ்தாபகரும், முன்னாள் ஆசிரியரும் ஆவார். 08.09.1959ல் வல்வை சனசமூக நிலையத்துக்கு விஜயம் செய்த போது அங்குள்ள விருந்தினர் பதிவேட்டில் மேற் கண்டவாறு குறிப்பு எழுதியுள்ளார். இன்று இக்குறிப்பேடு உட்பட யாவும் இராணுவத்தால் தீயிட்டுக் கொழுத்தப்பட்டுள்ளது.



# கப்பல் கட்டும் தொழில்

இலங்கையின் வடக்கேயுள்ள கரையோர பட்டினங்களான பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, காங்கே சன்துறை, ஊர்காவற்றுறை, மாதகல் முதலாகிய பட்டினவாசிகள் பன்னெடுங்காலமாக கடலோடிகளாவும் கப்பல் கட்டுபவர்களாகவும் இருந்துள்ளார்கள். இற்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன்பு வல்வைவாசிகள் பல கப்பல்கள் தோணிகள் படகுகள் அமைத்தும் ஆழ்கடல் ஓடியும் வியாபாரிகள் பலருமாக இருந்தார்கள். இக்காரணங்களால் இந்நாட்டரசர்களும், இந்திய அரசர்களும், அதன் பின் போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும், பின்பு ஆங்கிலேயர்களும் எம்மவர்களைக் கௌரவித்து வந்ததுடன் பல இந்திய, பிரித்தானிய மாலுமிகளிடம் மாலுமி சாஸ்திரம் வான சாஸ்திரம் நாவாய் சாஸ்திரம் முதலிய கலைகளைக் கற்றார்கள்.

இவர்கள் பர்மா, இந்தியாவின் கரை பட்டினங்களாகிய முத்துப்பேட்டை, அதிராம்பேட்டை, நாகபட்டினம், கடலூர், புதுச்சேரி, காரைக்கால், கொல் லம், மங்களூர், முதலான இடங்களு டன் தொடர்பு வைத்து வியாபாரம் செய்துள்ளார்கள். மேலும் சங்க இலக்கியங்களிலிருந்தும் ஐம் பெரும் காப்பியங்களிலிருந்தும் ஈழத்துணவு காவிரிப்பூம் பட்டினத்தில் இறக்குமதி செய்யப்பட்டது பற்றி அறியக் கிடக்கின்றது. இவர்களின் தொடர்பெல்லாம் பண்டமாற்று முறையிலேயே நடந்திருக்கின்றன. இலங்கையில் இருந்து கிறாவல்கற்கள், பனைமரங்களுடன் பனம்பொருட்களுடன் வாசனைத்திரவியங்கள் முதலானவற்றை எடுத்துச் சென்று அங்கிருந்து மத்தாப்பு, மான்புள்ளி சேலைகள், வேட்டிகள் சால்வைகள் முண்டுகள் முதலான புடவைகளையும் சட்டி, பானை, குடம், தூதை, கூசா முதலான மட்பாண்டங்களையும் ஓடு வகைகளையும் கொண்டு வந்து அக்காலங்களுக்கு தகுந்த வியாபாரம் செய்து வந்துள்ளார்கள். இந்த வகை வாணிபம் எல்லாளன் காலத்திலிருந்தே தொடர்ந்து நடந்தும் சோழப் படையெடுப்புப் பின்பும் மிகுதி யாயும் நடந்துள்ளது.

இப்பொழுது வங்காளதேசம் என்று அழைக்கப்படும் நாட்டுக்கு அதற்கண்மையிலுள்ள அரக்கனில் இருந்து செட்டிகாமத்தார் கடல் வாணிபத்தை இந்தி தெற்கு கரையோர பட்டினங்களுடன் செய்து வந்திருக்கிறார்கள். அவர்களில் பலர் கரை காணாத நடுக்கடலில் தங்கள் கப்பல்கள் எந்த இடத்தில் இருக்கிறது என்பதை அறியும் திறமை உடையவர்களாக இருந்தார்கள். இப்படி அறிந்தவர்களை மாலின் என்று அழைப்பார்கள்.

இந்த மாலின் அறிவை வல்வை கப்பல் ஓட்டிகளும் அறிந் திருந்தார்கள். இவர்கள் செட்டிகா மத்தாரிடமிருந்து மாலின் அறிவைப் பெற்றதாகக் கூறுகிறார்கள்.

1860ம் ஆண்டளவில் கெச்சுக் கப்பல் கடல் கடந்த வாணிபத்தை தொடங்கியதும் அரக்கன் இறங்கூன் நெல்வியாபாரத்தில் நல்ல இலாபம் கிடைத்து வருகின்றது என்பதை அறிந்த வல்வை முதலாளிகளும் ஈடுபட்டார்கள். கெச்சுகப்பலுக்கு நா.வேலுப்பிள்ளை என்பவர் பெரியவரால் தண்டயலாக நியமிக்கப்பட்டார். அவர் பல வருடங்கள் அக்கப்பலில் தண்டயலாக இருந்த வகையில் அவருடைய இயற்பெயர் வழங்குவது குறைந்து கெச்சு தண்டயல் என்ற பெயர் அவருக்கு வழங்குவதாயிற்று.

வல்வையில் அதிகம் பெரிதாயும் அதிகம் சிறிதாயும் இல்லாமல் நடுத்தரமான கப்பல்களை கட்டி முடித்து வியாபாரத்தில் ஈடுபட்டார்கள். அந்தக் காலத்தில் இரு ந்து உலகின் எந்த ஒரு நாட்டிலாவது கட்டி முடிக்கப்பட்ட கப்பலை முழுநாடுகளாலும் அங்கீகரிக்கப்பட்ட லோயிட்ஸ் என்ற உலக ஸ்தாபனத்தில் தான் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும். வல்வெட்டித்துறைக் கப்பல்கள் யாவும் அந்தக் காலத்தில் அப்படிப் பதிவு செய்யப் பட்டவையே. இதனாற் போலும் வல்வெட்டித் துறையை ஒரு விசேடதுறைமுகமாகவும் கப்பல் கட்டும் தளமாகவும் கடலோடிகளின் வசிப்பிடமாகவும் வர்ணித்து "வே ஒவ் பெங்கோல்பைலட்" என்ற சரித்திரப்பிரசித்தி பெற்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நூலின் பிரதிகளைக் கொழும்பு சிப்பிங் அலுவலகத்திலும் துறைமுக அதிகார சபை அலுவலகத்திலும் சுங்க இலாகாத் தலைமைப் பீடத்திலும் இன்றும் காணலாம்.

இந்தக் குறிப்புக்களிலிருந்து இந்த வழிவழி வந்த வம்சத்து மக்களே ஜனத்தொகையில் அதிகமாகவும் நாகரிகத்திலும் மேம்பாட்டிலும் தனித்திறமையில் வல்லாளர்களாகவும் விளங்குவதுடன் கடலையும் கரையையும் ஆண்டு கொண்டு வந்தார்கள் என்ற பாங்கில் குறிப்பிட்டி ருப்பதையும் பார்க்கலாம். கப்பல் வாணிபத்தில் முதன்மையானவர்களாக திகழ்ந்தவர்கள் குமாரசாமி முருகுப் பிள்ளையவர்களும், கந்த குட்டியார் மக்களாகிய வேலுப் பிள்ளை பொன்னம்பலம், கதிரிப்பிள்ளை அவர்களும் ஆகும்.

1910க்குள் இவ்விதமாக முதலாளிமார்களாக வந்தவர்கள் பலர். அவர்களுள் அருளம்பலம் சகோதர்களும், வாரித்தம்பி குமாரசாமி மேஸ்திரியாரும் பிள்ளைகளும் கணபதிப்பிள்ளையும் தம்பையாவும் ஆவார்கள். அதற்கடுத்து திருமதி சரவணமுத்து சின்னத்தங்கம், திருமதி செல்லையா தெய்வானைப்பிள்ளை, கோ.வ. கந்தசாமி, கோ.வ.வடிவேல், தொண்டமானாறு சி.வீரகத்திப்பிள்ளை முதலியோராவார். முதலாவது உலக மகாயுத்தத்துடன் அநேகர் இந்த வியாபாரத்தில் ஈடுபட்டார்கள். யாழ்.குடாநாட்டிலுள்ள பல நாட்டுக்கோட்டை நகரத்தார்கள், தெலுங்கு நாட்டு முதலாளிமார்களும் இராமநாதபுரம் இரசா, நல்லூர் கந்தசாமி கோயில் முதலாளி மார்களும் ஈடுபட்டார்கள். முதலாம் உலக மகா யுத்தம் முடிவுற்ற பின்பு வல்வை முதலாளிமார் களும் வாணிபத்தைப் பெருக்கினார்கள்.


முதலாம் உலக மகா யுத்தத்திற்கு முன் கணிசமான 300 தொன்னுக்குட்பட்ட மரக்கலங்கள் நூறு வரை ஓடியன. பின்னர் இரண்டாம் உலக மகா யுத்தம் ஆரம்பிக்கச் சில காலங்களுக்கு முன் 300 தொன் நிறைக்கு மேற்பட்ட கப்பல்களும் அதற்குக் குறைந்தவைகளுமாக மொத்தம் 150 கப்பல்களில் எம்மவர்கள் பல நாடுகளுக்கு சென்று வந்துள்ளார்கள். இவர்கள் இந்தியாவில் உள்ள அதிராம் பட்டினம், நாக பட்டினம், மதராஸ், காக்கிநடா, கல்கத்தா, சிட்ட கொங், இரங்கூன், பினாங்கு இலங்கையிலுள்ள காலி, தொடந்துவை வேருவலை ஆகிய ஊரைச் சேர்ந்தவர்களுடைய கப்பல்களையும் செலுத்தியுள்ளனர்.

1925ம் ஆண்டு தொடக்கம் 1960 ஆண்டு வரை சிறிய கப்பல்களுக்கும் பெரிய கப்பல்களுக்கும் அதிபதியாக இருந்தவர் வ.இ.அப்பா என்று வல்வை மக்களால் அன்பாக அழைக்கப்பட்ட இராமசாமிப்பிள்ளை அவர்கள். இவர் சிலோன் மாஸ்டர் என்ற நற்சான்றிதழும் மெற்றியாஸ் இரண்டாவது காப்டனின் நற்சான்றிதழும் பெற்றுக் கப்பலோடியாக விளங்கியவர். சிவகாமசுந்தரி, ஆதிலட்சுமி, சண்முகசுந்தரலட்சுமி, திருநிலை நாயகி, ஸ்ரீமகாலட்சுமி, நரசிம்மசாமி என்கின்ற கப்பல்களை இவர் வைத்திருந்தார். வ.இ.வின் கப்பல் 1960ம் ஆண்டு அளவில் வல்வை ஆதி கோயிலடி கடற்கரையில் வைத்து உடைக்கப் பட்டது. வல்வையில் கடைசியாக கட்டப்பட்ட கப்பல் பர்வதாபத்தினி ஆகும். கப்பல் கட்டுவதில் கை தேர்ந்தவர்கள் பலர். அந்தவகையில் வேலுப் பிள்ளை மேஸ்திரியார், வடிவேலு மேஸ்திரியார், சின்னத்தம்பி மேஸ்திரியார் போன்றவர்கள் முக்கியமானவர்கள். புகழ்பெற்ற தண்டயல்களாக விளங்கியவர்களில் ராமசாமிதண்டயல், முருகுப் பிள்ளை, செல்வமாணிக்கத் தண்டயல், சின்னையாத்தண்டயல், வடிவேல் தண்டயல், மாணிக்கவாசகம் தண்டயல், சிவகுருமூர்த்தி தண்டயல், பொ.யோகமுத்துத் தண்டயல், ஆ.சுப்பிரமணியம் தண்டயல், செ.தில்லையம்பலம் தண்டயல், முத்துக் குமாருத்தண்டயல், சிவசுப்பிரமணியம் தண்டயல் ஆகியோர் முக்கியமானவர்கள்.

வ.இ.இராமசாமிப்பிள்ளையும் நடராசா வாத்தியாரும் இணைந்து கட்டி எழுப்பிய திருநிலை நாயகி என்ற கப்பலில் பலகாலம் பணியாற்றியவர் சிவ சுப்பிரமணியம் தண்டயல் ஆவார். பிரபல வர்த்தகர் செ.தங்கவடிவேல் இங்கிலாந்து சென்று

“பெரியரோலர் மீன்பிடிக் கப்பலை வாங்கி அதை காப்டன் குணசுந்தரம் அவர்களே அதைச் செலுத்தி வல்வைக்கு கொண்டு வந்து தொழில் செய்தார்கள். அந்த வெளிநாட்டு கப்பலிலும் சிவசுப்பிரமணியம் தண்டயல் ஆக கடமையாற்றியிருந்தார்.

இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவடைந்த பின்பு தொடர்ந்து வந்த அரசினர் வல்வெட்டித் துரையில் இருந்து வந்த கப்பல் கட்டும் தொழிலை ஊக்குவிக்காமல் தமிழ் இறக்குமதி ஏற்றுமதி வர்த்தகர்களை வீழ்த்திய அரசு கூட்டுத் தாபனங்களை ஆரம்பித்ததோடு அரசுக்கு ஆதரவான சிலரையும் வியாபாரத்தில் ஈடு படுத்தியது மட்டுமின்றி பிற நாட்டுக் கப்பல்களிலே ஈழத்துப் பொருட்களை ஏற்றி இறக்கியது. மாலைதீவு, தூத்துக்குடி, ஏமன் போன்ற இடங்களில் பாய்மரக் கப்பல்கள் இன்றும் ஏற்றுமதி இறக்குமதி செய்வதைக் காணலாம். திரைகடல் ஓடித்திரவியம் தேடிய வல்வை மக்கள் வாழ வழியின்றி தவித்தனர். ஓடிக்கொண்டிருந்த கப்பல்களும் அழிந்து போக இலங்கை சுதந்திரம் அடைந்த பின்பு ஏற்றுமதி இறக்குமதியை அரசு ஏற்றுக் கொண்டதாலும் சட்டவிரோத வியாபாரங்களில் ஈடுபடும் நிர்ப்பந்திக்கப்பட்ட நிலைக்கு ஆளானார்கள். இதன் பின்பு தான் பல ஆண்டுகளாக செய்த தொழில் கள்ளக்கடத்தல் பெயர் மாற்றம் பெற்றது. இக்காலங்களில் காலத்திற்கேற்பவும் தற்கால அரசியல் முறைக்கேற்பவும் படித்து உயர் அரசாங்க பதவிகளிலும் வெளி நாட்டு கப்பல்களிலும் தொழில் புரிகின்றனர்.



# 19ம், 20ம் நூற்றாண்டில் வல்வெட்டித்துறையில் தொழில் செய்த கப்பல்கள்

| கப்பல் பெயர் | முதலாளிமார் | தண்டையல் |
|---|---|---|
| அத்திலாந்திக் அரசன் | தி. வெங்கடாசலம் | நா. வேலுப்பிள்ளை |
| அன்னபூரணி | கு. முருகுப்பிள்ளை | மு. இளையபெருமாள் |
| ஆனந்தபூரணி | க. வேலுப்பிள்ளை | இ. கதிரிப்பிள்ளை |
| | க. பொன்னம்பலம் | க. தாமோதரம்பிள்ளை |
| ஜெயலட்சுமி | க. அருளம்பலம் | செ. இரத்தினவடிவேல் |
| | | ஆ. ஆறுமுகம்பிள்ளை |
| ஶ்ரீமகாலட்சுமி | க. அருளம்பலம் | மு. சபாபதிப்பிள்ளை |
| | | சின்னதுரை |
| | | பொ. துரைசாமி |
| முத்துலட்சுமி | வாரித்தம்பியார் | சி. சீனிமுத்து |
| சாரங்கபாணி | குமாரசாமி | சின்னதுரை |
| கதிரேசன் | செட்டியார் பிள்ளைகளும் | கு. மாணிக்கவாசகம் |
| | சி. குமாரசாமி பிள்ளைகளும் | கு. சின்னதுரை, கார்த்திலிங்கம் |
| ஆதிபூரணி | பொ. கணபதிப்பிள்ளை | க. தாமோதரம்பிள்ளை |
| | சி. வீரகத்திப்பிள்ளை | த. சண்முகம் |
| சிவகங்காபுரவி | குட்டிப்பிள்ளை | ஐ. அருணாசலம் |
| | கு. அப்பாதுரை | செ. சின்னமணி |
| | | த. செல்லதுரை(சிறாப்பர்) |
| தைரியலட்சுமி | கு. சோமசுந்தரம் | பொ. புண்ணியமூர்த்தி |
| | கு. வைத்தியலிங்கம் | |
| நாகரித்துல்லா | ச. சின்னத்தங்கம் | கு. சுப்பிரமணியம் |
| | | பொ. அண்ணாமலை |
| மீசைக்காரன் படகு | ச. செல்வவிநாயகம் | ஆ. காத்தாமுத்து |
| | ச. சோமசுந்தரம் | சு. சண்முகம் |
| திருப்பதிவெங்கிடாசலபதி | சி. வீரகத்திப்பிள்ளை | வீ. துரையப்பா |
| | வி. செல்வவிநாயகமும் தம்பியும் | சி. வேலுப்பிள்ளை |
| காசிவிசாலாட்சி | வி. செல்வவிநாயகம் தம்பந் தண்டையல் | சின்னர் |
| அலியார் | செட்டிவீடு | வீ. துரையப்பா |
| அமிது | கோ. வ. கந்தசாமி | ச. கந்தசாமி |
| | கோ. வ. வடிவேலு | இ. சிவகுரு |
| மதுரை மீனாட்சி | ச. சின்னத்தங்கம் | சி. சீனிமுத்து |
| | | ச. நரசிம்மசாமி |

| | | |
|---|---|---|
| காசி அன்னபூரணி | ச. சின்னத்தங்கம் | சி. ஆனந்தமயில் |
| | மு. பொ. பருத்தித்துறை | |
| பேரானந்தவல்லி | V.K. பொன்னுசாமி | வ. மாணிக்கவாசகம் |
| | | ஆ. மயில்வாகனம் |
| வினாயகசௌபாக்கிய லட்சுமி | கோ. க. வடிவேல் | செ. சுந்தரம் |
| | நா. செட்டியார் | மு. பொன்னம்பலம் |
| பிள்ளையார் புரவி | சி. கந்தசாமி | |
| ஐ. கந்தசாமிவாடா | ஐ. கந்தசாமி | மா. இராசா |
| பாம்புவாடா | அ. மாரிமுத்து | ச. பொன்னுதுரை |
| | | வே. சுப்பிரமணியம் |
| சீதாலட்சுமி | க. செல்லதுரை | செ. இரத்தினவடிவேல் |
| | க. பொன்னுதுரை | வே. சுப்பிரமணியம் |
| சத்அப்துல் புகாரி | ச. பொன்னுதுரை | ச. பொன்னுதுரை |
| | | நா. வேலும்மயிலும் |
| பர்வதி பத்தினி | சி. குமாரசாமி | தி. சிவசுப்பிரமணியம் |
| விஜயலட்சுமி | இ.வே. சுப்பிரமணியம் | அப்பாத்துரை |
| | சி. குமாரசாமி | க. காத்திலிங்கம் |
| வள்ளிபங்காளன் | த. சுப்பிரமணியம் | வடிவேலு |
| | | தம்பர் பொன்னுச்சாமி |
| கல்யாண சுந்தரி | த. சுப்பிரமணியம் | சி. மயில்வாகனம் |
| | | கு. தாமோதரம்பிள்ளை |
| வடிவேல் முருகன் | ஆ. நாகமுத்து | சி. மயில்வாகனம் |
| | | பொ. வடிவேலு |
| ஆதிலட்சுமி | ஞா. சண்முகம்பிள்ளை | பொ. புண்ணியமூர்த்தி |
| | ச. பாலசுப்பிரமணியம் | சாமி செல்லதுரை |
| | ச. ஞானமூர்த்தி | பொ. இரத்தினசாமி |
| மகாலட்சுமி | வ. இராமசாமிப்பிள்ளை | வ. இரத்தினசாமி |
| | | க. காத்திலிங்கம் |
| நரசிம்மசாமி | வ. இராமசாமிப்பிள்ளை | செ. சின்னமணி |
| | | ஆ. மயில்வாகனம் |
| திருநிலைநாயகி | வ. இராமசாமிப்பிள்ளை | தி. சிவசுப்பிரமணியம் |
| | ம. நடராசாஉபாத்தியார் | க. காத்திலிங்கம் |
| சண்முகசுந்தரி | வ. இராமசாமிப்பிள்ளை | க. செல்வம் |
| | | கா. மாணிக்கம் |
| | ஏரம்பமூர்த்தி | கு. தாமோரம்பிள்ளை |
| மதுரைசொர்க்கலிங்க புரவி | கு. சுப்பிரமணியம்வீடு | ச. நரசிம்மசாமி |
| | | கா. மாணிக்கம் |
| வத்திக்கப்பல் | V.K.பொன்னுச்சாமி | சி. அருணாசலம் |
| | | ஆ. அருளம்பலம் |

| | | |
|---|---|---|
| சிவசுப்பிரமணியம்புரவி | சா.வீரகத்திப்பிள்ளை | சரவணமுத்து |
| | | ம. சிவக்கொழுந்து |
| | | சுப்பிரமணியம் |
| | | த. பொன்னுசாமி |
| வள்ளிநாயகி | சி. வீரகத்திப்பிள்ளை | தா. மாணிக்கவாசகம் |
| | | ச. சரவணமுத்து |
| தெய்வநாயகி | சி. வீரகத்திப்பிள்ளை | ஆ. செல்லத்துரை |
| | | சிவசாமி |
| கோக்கநாடா | சி. வீரகத்திப்பிள்ளை | ச. ஐயாத்துரை |
| பேராந்தவல்லி | சி. வீரகத்திப்பிள்ளை | தா. மாணிக்கவாசகம் |
| | | செ. துரைசாமி |
| ஆனந்தவல்லி | அரு. அம்பலவாணர் | அரு. அம்பலவாணர் |
| | மா. மார்கண்டு | நடராசா |
| சிவசுப்பிரமணியபுரவி | ஏரம்பமூர்த்தி | ஆ. ஆறுமுகம் |
| | சிதம்பரப்பிள்ளை | கு. சரவணமுத்து |
| | ஆ. நாகமுத்து | |
| வடிவழகி | கு. சரவணமுத்து | கு. சரவணமுத்து |
| அன்னலட்சுமி | கு. சரவணமுத்து | கு. கிட்டிணசாமி |
| | | தி. சிவசுப்பிரமணியம் |
| வேல்புரவி | நல்லூர்கந்தசாமிகோயில் | |
| | நா. கனகசுந்தரம் | |
| ஜதிறோய் | ச. சின்னத்தங்கம் | ஆ. சிவசுந்தரம் |
| முசலபாத் | கோ. வ. வடிவேல் | இ. துரைசாமி |
| காட்டுன் | கோ. வ. வடிவேல் | ஐ. அருணாசலம் |
| | கோ.வ. கந்தசாமி | கு. சரவணமுத்து |
| மகாலட்சுமி | சிதம்பிரப்பிள்ளை | பெ. கந்தசாமி |
| கைலாசநாயகி | | ம. சிதம்பரநாதர் |
| தெண்டாயுதபாணி | கா. வைத்தியலிங்கம் | அ. சிவசுந்தரம் |
| | வ. மார்க்கண்டு | க. பொன்னுச்சாமி |
| தோற்சாய்ப்பு | வ. மார்க்கண்டு | ச. முத்துக்குமாரு |
| மதுரைமீனாட்சி No2 | வ. மார்க்கண்டு | க. பொன்னுசாமி |
| மரக்காயன் படகு | வ. மார்க்கண்டு | இ. சிவகுரு |
| | | ந. நல்லபிள்ளை |
| சிவகுருநாதபுரவி | த. வடிவேல் மேஸ்திரி | |
| சண்முகநாதன் | கா. வயித்தியலிங்கம் | க. நாராயணசாமி |
| | | பொ. ஐயாமுத்து |
| திருஞானசம்பந்தன் | | க. நாராயணசாமி |
| மகாலட்சுமி | | கு. சரவணமுத்து |
| | | தி. சிவசுப்பிரமணியம் |
| திருத்தங்கம் | | சிங்காரவேல் |
| | | பொ. இராமசாமி |

| | | |
|---|---|---|
| சின்னவெங்கடேசுரவ் | வேருவளை முதலாளி | கா. வல்லிபுரம் |
| | | தா. சின்னதம்பி |
| சண்முகவடிவு | கந்தசாமி பருத்தித்துறை | க. துரைசாமி |
| காங்கேசபுரவி | குமாரசாமி மேஸ்திரியார் | சி. சிங்காரவேல் |
| சாமிநாதபுரவி | மு. பொ. பருத்தித்துறை | ஆ. மயில்வாகனம் |
| சின்னப்பறுவதம் | மு.பொ. பருத்தித்துறை | நாகமுத்து |
| மா.த.தோணி | மு.பொ. பருத்தித்துறை | க.நடராசநாகமுத்து |

வர்த்தகச் செட்டியார் வீட்டுக் கப்பலகள்

| | | |
|---|---|---|
| கொழும்பியா | அரு.சோ.ம.வீடு | வே. இராமசாமி |
| சோபியா | அரு.சோ.ம.வீடு | பொ. சதாசிவம் |
| | | சின்னதம்பி |
| மகாறாணி | அரு.சோ.ம.வீடு | க. வடிவேல் |
| கனகதுர்கா | அரு.சோ.ம.வீடு | வ. செல்லையா |
| | | மு. சரவணமுத்து |
| குமரேசபுரவி | அரு.சோ.ம.வீடு | இரத்தினசாமி |
| நித்தியகல்யாணி | பழ சோ. ம | செ. துரைசாமி |
| சித்திவிநாயகர் | பழ சோ. ம | இ. கணபதிப்பிள்ளை |
| ஜெயலட்சுமி | பழ சோ. ம | த. செல்வமாணிக்கம் |
| | | கு. தாமோதரம்பிள்ளை |
| டில்லிக்கப்பல் | பழ சோ. ம | ஆ. அருளம்பலம் |
| | | ஆ. மயில்வாகனம் |
| வினாயகசௌபாக்கிய லட்சுமி | கு.நா. கடை | செ. சுந்தரம் |
| | | கு. பொன்னம்பலம் |
| ஆஞ்சநேயர் | கு.நா. கடை | மு. சரவணமுத்து |
| சாமிநாதபுரவி | கு.நா. கடை | மு. இளையபெருமாள் |
| | | சி. சீனிமுத்து |
| திருநடராசபுரவி | கு.நா. கடை | இ. கதிரிப்பிள்ளை |
| அன்னபூரணி | கு.நா. கடை | க. தம்பிப்பிள்ளை |
| பச்சைகப்பல் | கு.நா. கடை | கு. சுப்பிரமணியம் |
| மம்மி | கு.நா. கடை | மு. குமாரசாமி |
| தக்கியா | கு.நா. கடை | சி. குமாரசாமி |
| ஸ்ரீமகாலட்சுமி | கு.நா. கடை | வே. இராமசாமி |
| லட்சுமிகோவிந்தா | அந்தோனிப்பிள்ளை | நிக்கலாப்பிள்ளை |
| செல்வநாயகி | | கா. முத்துக்குமாரு |
| மயுரவிஜியன் | நல்லூர் கந்தசாமி கோயில் | சுப்பிரமணியம் |
| ஜோன்மேரி | வேளாங்கன்னி கப்பல் | தா. கந்தசாமி |
| பெரிய வெங்கடேசுவரர் | வேளாங்கன்னி கப்பல் | நா. துரைசாமி |

| | | |
|---|---|---|
| வெள்ளைப்பாக்கிய லட்சுமி | வேளாங்கன்னி கப்பல் | பொ. அண்ணாமலை |
| வீரலஷ்மி | பழையது ஏர்லக்கட்டு | |
| | இறங்கநாயுடு | க. நல்லதம்பி |
| வீரலஷ்மி | புதியது ஏர்லக்கட்டு | |
| | இறங்கநாயுடு | ஆ. சுப்பிரமணியம் |
| பாக்கியலஷ்மி | ஏர்லக்கட்டுஇறங்கநாயுடு | இ. சிவகுரு |
| இராஜலெஷ்மி | ஏர்லக்கட்டுஇறங்கநாயுடு | ஆ. சுப்பிரமணியம் |
| தனலெஷ்மி | ஏர்லக்கட்டுஇறங்கநாயுடு | சின்னமணி |
| தைரியலஷ்மி | இராமநாதபுரஇராசா | ஆ. மயில்வாகனம் |
| சீதாலஷ்மி | ஏர்லக்கட்டு | ச. மயில்வாகனம் |
| | | பொ. ஐயாத்துரை |
| மகாலெஷ்மி | ஏர்லக்கட்டு முதலாளி | இ. கதிரிப்பிள்ளை |
| நரசிம்மசாமி | ஏர்லக்கட்டு முதலாளி | இரத்தினசாமி |
| வெங்கடேஸ்வரராவ் | ஏர்லக்கட்டு முதலாளி | சித்திரவேல் |
| றாம்மூர்த்தி | ஏர்லக்கட்டு முதலாளி | வ. செல்லையா |
| சுனாத்தன் | இறங்கூன் பாய்முதலாளி | மு. சபாபதிபிள்ளை |
| மகாபீர் | இறங்கூன் பாய்முதலாளி | தா. மாணிக்கவாசகம் |
| ஆமடபாத் | இறங்கூன் பாய்முதலாளி | பொ. புண்ணியமூர்த்தி |
| ஐதராபாத் | இறங்கூன் பாய்முதலாளி | நா. மயில்வாகனம் |
| சப்பிகறாஸ் | இறங்கூன் பாய்முதலாளி | காத்தாமுத்து |
| கெயலஷ்மி | சட்டிகாமம் முதலாளி | செ. தில்லையம்பலம் |
| யூன்சிலின் | இறங்கூன் கப்பல் | சி. சேதுநாராயணசாமி |
| ஸ்ரார்ஓங்கல்கத்தா | செட்டிவீடு பர்மா | நா. வேலும்மயிலும் |
| | | P. அப்பாத்துரை |
| எலிஸ் | செட்டிவீடு | கா. சின்னத்துரை |
| வெள்ளைவாடா | தோப்புத்துறை முதலாளி | முத்துக்குமாரு |

மேலே கூறப்பட்ட கப்பல்களில் அறுபது பிற ஊர் முதலாளிமாருக்கு சொந்தமானவை. ஆனால் எல்லாக் கப்பல்களிலும் வல்வை வாசிகளே தண்டயல்களாகவும், சுக்கானிமார், பண்டாரிமார்களாக வும் கப்பற்றொழில் பழகுபவர்களாகவும் இருந்தார்கள்.

1. Early Settlements in Jaffna an Archaeolgical Survey. Ponnampalam Ragupathy. Page 155
2. வல்வெட்டித்துறை ஊரின்னிசை - பூ. க. முத்துக்குமாரசாமி BA
 செ. வைத்தியலிங்கம்பிள்ளை (F.M. S. Railway)

**நா.ஏகாம்பரம்:** இவர் 1844ம் ஆண்டு பிறந்தவர். இவர் தமிழ் பயின்றபின் வட்டுக்கோட்டையில் ஆங்கிலம் கற்றார். சென்னைக்குச் சென்று பிரவேச பரீட்சையிற் சித்தியெத்தினார். ஆங்கிலக் கற்றலை விடுத்துத் தமிழிலக்கண இலக்கியங்களைக் கற்க விரும்பி இந்தியாவில் வித்துவான்களாக இருந்த திருவாளர்கள் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, இராஜகோபாலபிள்ளை, இராமலிங்க பிள்ளை என்பவர்களிடம் சிலகாலம் கற்றார். இக்காலத்திலே இவர் அட்டாவதானமுஞ் செய்யப் பயின்று கொண்டார். இங்கும் பிற ஊர்களான கொழும்பு, கண்டி. மட்டக்களப்பிலும் அட்டாவதானஞ் செய்து காண்பித்துப் பரிசும் பெற்றார். இவரே இலங்கையில் முதலாவது அட்டாவதானஞ் செய்த பெரியார். இவர் அட்டாவதானத்திலன்றிப் பாடுவதிலும் வல்லுநர். தமது 33ம் வயதில் சிவபதமெய்தினார்.

**க.ஏகாம்பரம்:** இவர் இருபாலைச் சேனாதிராயரிடம் முதலில் கற்றார். பின் இந்தியாவிற்குச் சென்று திருத்தணிகைச் சரவணப்பெருமாள் ஐயரிடம் கற்றார். மிஷனரிமார்க்கும் ஆங்கிலேய துரைமாருக்கும் தமிழ் கற்பித்தவர். கந்தரந்தாதிக்கு உரையும் எழுதினார். பல தனிக்கவிகள் பாடியுள்ளார். ஏறக்குறைய 105 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்தவர் இப் பெரியார்.

**நா.பொன்னம்பலம் உபாத்தியாயர்:** இவரைப் பொன்னையா உபாத்தியாயர் என்றும் அழைப்பார்கள். இவர் வைத்தியலிங்கபிள்ளை அவர்களோடு திரு. சிவ சம்புப்புலவரிடம் கற்றுப் பண்டிதரானவர். நயங்கள் அமையப் பாடுவதில் வல்லவர். கந்தவனநாதர் பதிகம், குளத்தடி வைரவசுவாமி பதிகம் முதலியவை

# வல்வைத் தமிழறிஞர்கள்

களைப் பாடியவர். இவர் சமூக சேவையை மிகப் போற்றிச் செய்தவர். இவர் மகன் மயிலேறும் பெருமாள் கட்டிடக் கலைஞராய் விளங்கினார்.

**வி.அருணாசலம் உபாத்தியாயர்:** இவரும் வயித்திய லிங்கபிள்ளை அவர்களோடு திரு சிவசம்புப்புலவரிடம் கற்றுப் பண்டிதரானவர். இவர் ஆங்கில கலாசாலை இயற்றுவித்த கு.சிதம்பரபிள்ளைக்கு மாமனாராவர். மு.கந்தசாமி உபாத்தியாயர் முதலியோருக்கு ஆசிரியர். “நெடிய காட்டு ஊஞ்சல்” முதலிய தோத்திரப்பாக்களும் வேறு தனிப்பாக்களும் இயற்றியவர்.

**வை.கதிரவேற்பிள்ளை உபாத்தியாயர்:** இவர் மேலே குறிப்பிட்ட அறிஞரிடம் கற்றுப் பண்டிதரானவர். கவி பாடு வதிலும் கவி இயற்றுவதிலும் வல்ல வர். விரிவுரைகள் செய்தவர். “செல்வச்சந்நிதிப்பதிகம்” இயற்றியவர்.

**நா.சுப்பிரமணியம்:** இவர் (சிவலை) நாகமுத்துவுக்கு மகனாவர். இலக்கிய இலக்கணங்களையும் சித்தாந்தங்களையும் கற்றவர். கவிபாடும் திறமையுடையவர். இவர் துறவறத்தை மேற் கொண்டவர். இவரால் பாடப்பட்ட நூல் நெடியகாட்டுப் பிள்ளையார் பஞ்சரதம்.

**ஞா.கணேசபண்டிதர்:** இவர் எழுதுவினைஞர் ஆறுமுகத்துக்குச் சகோதரர். இலக்கணம், சோதிடம், வைத்தியம் கற்றவர். இவர் திருக்குறள் தாலாட்டு என்னும் நூல் இயற்றியவர் ஆவார்.

**மு.கந்தசாமி உபாத்தியாயர்:** இவர் வி.அருணாசலம் உபாத்தியாருக்கு மாணவர். இலக்கியம், இலக்கணம், சித்தாந்தம் கற்றவர். பிற்காலத்தில் வயித்திய லிங்கம் முதலிய வேறு புலவர்களிடம் தருக்கம் சமயம் முதலிய கற்றுப் பண்டிதராக திகழ்ந்தவர். இவர் இயற்றிய தனிப்பாடல்கள் சிலவுள. இவரிடத்தில் கற்ற மாணவர் பலர். இவரிடம் கற்று பண்டிதரானவருள் வல்வை வைத்தீஸ்வரர் பதிகமும், நெடிய காட்டு நான்மணி மாலையும் பாடிய இவர் மூத்த மகனார் மீனாட்சிசுந்தரமும் ஒருவர்.

**கு.சிதம்பரப்பிள்ளை:** இவர் 1861ல் பிறந்தார். இவர் இலக்கிய, இலக்கணங்களைக் கற்றுத் தேறியதோடு ஆங்கிலம் கற்று அரசாங்க சேவையில் இருந்தவர். வல்வையில் ஆங்கிலப் பாடசாலை இல்லாமல் மாணவர் படுந்துன்பங்களை அறிந்து 1886ஆம் ஆண்டு (ஆங்கில பாடசாலை) சிதம்பராக் கல்லூரியை நிறுவியவர். இவரால் ஊர் செழிப்புற்றது. சந்நிதி முருகன் மீது பதிகம் பாடியவர். இவர் 1903ம் ஆண்டு சிவபதமெய்தினார். இவர் சிதம்பராக் கல்லூரியை அறுபது ஆண்டுகள் பாதுகாத்து வளர வைத்த ஞா.தையல்பாகர் அவர்களுக்கு மைத்துனர் ஆவர்.

**சாமிநாத யோகியார்:** இவர் சோதிடரான வா.ஆறுமுகம் சூத்திரப் பொன்னுச்சாமி அவர்கள் இனத்தவரான பொன்னம்மாள் என்பவருக்கு மகனாவர். வ.வ.இராமசாமிப்பிள்ளையின் மாமியாரின் தம்பியாவர். இவர் சிறு வயதில் திருவாவடுதுறை ஆதினத்துக்குச் சென்று இலக்கிய இலக்கணம் சித்தாந்தம் கற்றுத் திருக்காணப்பேரூர் நடராசபுரம் முதலிய தலங்களிலிருந்து பலருக்கு சித்தாந்தம் போதித்தார். இந்தியாவிலே சிவபதமெய்தினார்.

**கந்தசாமி யோகியார்:** இவர் சுப்பிரமணியம் இராமசாமியின் மகனாவர். இலக்கிய இலக்கண சித்தாந்தம் கற்று, சிறந்த நடிகராக திகழ்ந்தவர். தமிழகத்தில் இருந்த எம்.ஆர்.கோவிந்தசாமியுடன் பல நாடகங்களில் நடித்து அவர் பாராட்டைப் பெற்றவர்.

### வல்வை பண்பாடு

**கோயில்களை மிகவும் தப்பரவாகவும், தூய்மையாகவும் வைத்திருந்து பூசைக்காலங்களிலோ திருவிழாக்காலங்களிலோ ஓர் ஒழுங்கு முறையைக் கடைப்பிடித்து ஆண்கள் ஒருபுறமும், பெண்கள் ஒருபுறமும் நின்று சுவாமி தரிசனம் செய்யச் சில நியதிகளை முற்காலம் தொட்டு ஏற்படுத்தியுள்ளார்கள். அத்தோடு ஆண்கள் மேலங்கியுடனோ காற்சட்டையுடனோ செல்வதில்லை இது பண்பாடு**

# கிணற்றில் தண்ணீர் இறைக்கும் சூத்திரம்

தண்ணீர் இறைப்பதற்கு 19ம் நூற்றாண்டில் ஆழமான கிணற்றில் சிறிய கருவிகளைப் பொருத்தி தொடர் வாளிகளை பயன்படுத்தி அதை சுற்றுவதற்கு எருதுமாட்டை உபயோகித்து ஒரு சூத்திரத்தைக் கண்டு பிடித்தவர் திரு ஆறுமுகம் வாரித்தம்பி மகன் சூத்திரப் பொன்னுச்சாமியாவார். இதை அப்போது இவரே யாழ்.குடாநாட்டிற்கும், தென் இந்தியாவிற்கும் அறிமுகப்படுத்தியிருந்தார்.

திரு சூத்திரப் பொன்னுச்சாமியின் பிள்ளைகள் கந்தசாமி, தில்லையம்பலம், ஆகிய இருவரும் வல்வை சிவன் கோயிலில் திருவாதிரை, ஆனி உத்தரம் ஆகிய இருநாட்களிலும் நடராஜப்பெருமான் நடனம் ஆடுவதற்குரிய கையால் இயக்கும் கருவியை உருவாக்கியவர்கள். நடராஜப் பெருமானின் நடனத்தை பார்ப்பதற்கு வடபகுதி மக்கள் பலரும் வல்வை சிவன் கோயிலை நாடி வருவார்கள்.

மாதங்களில் சிறந்த மார்கழித்திங்களிலே
திருவாதிரை நாளில் வல்வையில் நடராஜன்
திருநடனஞ் செப்புதற்கு வார்த்தையுண்டோ
வேறெங்கும் காணா திவ்விய தரிசனம் வல்வையிலே

**அன்னையர் பாமலர் - பக்கம் 8 சிவ ஆறுமுகம்**

# தரைமட்டமான சுங்க அலுவலகம் 1956

1956ம் ஆண்டு யூன் மாதம் 5ம் திகதி தனிச் சிங்களச்சட்டம் அறிமுகம் செய்யப்பட்ட போது தமிழ்த்தலைவர்கள் காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம் செய்த போது கன்னித் தமிழர்களின் இரத்தம் ஓடியது. இதன் பின்பு இலங்கை எங்கனும் இனக்கலவரம் மூண்டது. 1958ல் தமிழர்கள் முதல்முறையாக கப்பலில் ஏற்றப்பட்டு பருத்தித்துறைத் துறைமுகம் கொண்டு வரப்பட்டு இறக்கப்பட்டனர். இதனால் ஆத்திரம் கொண்ட வல்வை இளைஞர்கள் ரேவடி கடற்கரையில் உள்ள சுங்க இலாகா கட்டிடத்தை தகர்த்தும், எரித்தும் அதில் உள்ள தொலைத் தொடர்புக் கோபுர சிவப்பு விளக்கை உடைத்தும் தமது எதிர்ப்பை அரசுக்கு தெரிவித்தனர். சுங்க அலுவலகத்தில் கடமைபுரியும் பௌத்தர்களால் தங்களின் வழிபாட்டுக்கு ஏற்படுத்தப்பட்டிருந்த சிறிய விகாரையையும் இல்லாது செய்தனர்.

# வல்வை துறைமுகம் பற்றி சேர்.கென்றி பிளேக் -1905

1905ம் ஆண்டு இலங்கை தேசாதிபதியாக இருந்த சேர்.கென்றி பிளேக் வடபகுதித்துறைமுகங்களைப் பார்க்க வந்தவர். அந்த வருடச் சித்ரா பௌர்ணமி தினத்தில் வல்வெட்டித்துறை துறைமுகத்தில் 30 கப்பல்களுக்கு மேலாக நிறைய கொடிகள் பறந்தாடிக் கொண்டிருந்த காட்சியைப் பார்த்து கொழும்பு, திருகோணமலையைத் தவிர இவ்வளவு பெருந்தொகையான கப்பல்களைப் பார்க்கவில்லையே என ரேவில் நடந்த கூட்டத்தில் வாயாரப் புகழ்ந்தாரென்றும் தகவலை வல்வையிலுள்ள பெரியவர்கள் இன்றும் சொல்கிறார்கள்.


# மூழ்கிய அத்திலாந்திக் அரசன் மீண்டான்

கிட்டத்தட்ட 100 வருடங்களுக்கு முன்பு 12000 தொன் நிறையுடைய "பிறி அத்திலாந்திக் அரசன்' என்ற கப்பல் இங்கிலாந்தில் செய்யப்பட்டது. இது ஆங்கிலேய வர்த்தக நிறுவனத்திற்கு சொந்தமாகும்.

இக்கப்பல் திருகோணமலைக்கு அருகாமையில் மூழ்கிவிட்டது. அதை மீண்டும் மிதக்க விடுவதற்கு ஆங்கிலேய உரிமையாளர்கள் தம்மால் இயன்ற மட்டும் எவ்வளவோ முயன்றும் கப்பலை மீட்பதில் தோல்வி கண்டனர். மனம் தளர்ந்து போய் இருந்த நிலையில் அவர்களுக்கு உதவ முன்வந்தார் ஒரு கனவான். வல்வெட்டித்துறையில் உள்ள கப்பல் சொந்தக்காரர்களில் ஒருவரான திரு தி.வெங்கடாகலம் என்பவர் அக்கப்பல் மூழ்கிய நிலையிலே அவர்களிடம் வாங்குவதாக உறுதியளித்தார். அந்த நிறுவனமும் பெருமகிழ்வுடன் அவருக்கு அக்கப்பலை விற்றது.

திரு தி.வெங்கிடாசலம் தன் முயற்சியால் மீண்டும் மிதக்க விட்டுத் அக்கப்பலை திருத்தி புதுப்பித்து ஓடவிட்டார். அவற்றின் மூலம் கிடைத்த வருமானத்தையும் பொதுமக்களின் அன்பளிப்புக்களையும் கொண்டு சிவன் கோயிலை கட்டுவித்தார். அது தான் இன்றுள்ள வைத்தீஸ்வரர் கோயில் ஆகும்.

நன்மைகள் விளைய நன்மைகள்
செய்வோம்
நமக்கென உளதைப் பிறர்க்கும்
கொடுப்போம்





வல்வை மக்கள் "திரைகடலோடியும் திர வியம் தேடு' என்பதற் கிணங்க சிறந்த கடலோடிகளாகவும் கப்பற் சொந்தக்காரர் களாகவும் கப்பல் கட்டுபவர்களாகவும்

# வல்வைக் கப்பலின் அமெரிக்கப் பயணம்

இருந்தார்கள். இதை இலங்கையின் முதலாவது பிரதமர் திரு டீ.எஸ். சேனநாயக்காவும் குறிப்பிட்டுள் ளதை மறக்க முடியாது. அன்ன பூரணி அம்மாள் வல்வை சுந்தர மேஸ்திரியார் அவர்களால் 1930ம் ஆண்டு கட்டப்பட்டது. இக்கப்பல் இந்தியாவின் கரையொரப் பட்டினங் களுக்கும், பர்மா, பாகிஸ்தான், இந் தோனேசியா போன்ற நாடுகளுடன் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தது. உலகத்தை ஒரு சின்ன வள்ளத்தில் உல்லாசப் பிரயாணத்தை மேற் கொண்டு வந்த திரு றொபின்சன் என்ற அமெரிக்க செல்வந்தப்பிரபு அன்னபூரணியைப் பார்க்க நேர்ந்தது. இவர் பிரபல நாவலாசிரியரும். ஆராச்சியாளரும், கடலோடியுமா வார். அன்னபூரணி உள்ளூர் வேப்ப மரத்தைக் கொண்டு அழகுற அமை க்கப்பட்டது. இந்த பாய்மரக்கப்பலின் அழகிய அமைப்பையும் அதன் உறுதியையும் எந்த நீரோட்டத்திலும் இலகுவாகப் பயணம் செய்யும் தன்மையையும் கண்ட திரு றொபின் சன் இதை அமெரிக்காவுக்குக் கொண்டு சென்றால் அது காட்சிப் பொருளாகவும் நூதனமாகவும் இருக்கு மென விரும்பினார்.

1936ம் ஆண்டு அன்னபூரணியை விலை கொடுத்து வாங்கினார். அவர் இக்கப்பலை வல்வையைச் சேர்ந்த திரு கே.தம்பிப்பிள்ளை என்பவரின் தலைமையில் திரு தா.சபாரத்தினம், திரு ஐ.இரத்தினசாமி திரு சி.சிதம் பரப்பிள்ளை, திரு பூ.சுப்பிரமணியம் ஆகியோரின் உதவி யுடன் அமெரிக்காவுக்குக் கொண்டு செல்லத் தீர்மானித் தார். அமெரிக்கா புறப்படு முன்பு திரு டபிள்யு.ஏ. றொபின்சன் கொழும்பு வாக்கர்ஸ் ஸ்தாபனத்தாரிடம் பெற்றுக்கொண்ட டீசல் இயந்திரமொன்றை முன்னேற் பாடாக கப்பலுக்குப் பொருத்தினார். அன்னபூரணி என்ற அக்கப்பலுக்கு திரு றொபின்சன் தன் மனைவியின் பெயரான "பிறிகன் ரைன்புளோரெனஸ் சி றொபின்சன் என்னும் பெயரைச் சூட்டினார். இதைத் தொடர்ந்து அவர்களுடைய வரலாறு படைத்த அந்த நீண்ட பயணம் ஆரம்பமாகியது. திரு டபிள்யு.ஏ.றொபின்சன் அமெரிக்கா வில் தங்கி நின்ற பொழுது பிரபல கப்பல் தலைவரான டொனால்ட் எ.மக்குயிஸ் என்பவரைச் சந்தித்து அன்ன பூரணி அம்மாள் என்ற கப்பல் கிரேக்கத்திற்கு வரும் போது அதைச் சந்திக்கும்படி கூறினார்.

கொந்தளிப்பும், புயலும் நிறைந்த பயங்கரமான மத்திய தரைக்கடலையும், அத்திலாந்திக் சமுத்திரத்தையும் தாண்டும்வரை அக்கப்பலை வழி நடத்துமாறு கூறினார்.



கப்பல் ஏடனில் இருந்து கிறிக் துறைமுகத்தை வந்தடைந்ததும் கப்டன் திரு மக்குயிஷ் அக்கப்பலில் ஏறிக் கொண்டார்.

கப்டன் மக்குயிஷ் நீராவிக்கப்பலில் 42 வருட அனுபவமுடைய சிறந்த கடலோடியும். குளோசெஸ்ரரின் அதிசிறந்த தலை-

வர்களில் ஒருவருமாவார். ஆனால் இவர் பாய்க் கப்பலைச் செலுத்துவதில் அனுபவமில்லாதவ ராகவும் காலநிலை சீராக இருக்கும் பொழுதே எல்லாப் பாய்களையும் விரித்துக் கப்பலைச் செலுத்திய இலங்கை மாலுமிகளைப் பொறுத்த வரையில் பதட்டப்பட்டவராகவும் காணப்பட்டார்.

கப்பல் ஜிபிறேல்ரரில் இருந்து புறப்பட்டதும் அத ற்கு அருகாமையில் ஓர் பயங்கரப்புயல் காற்று பெரும் இரைச்சலுடன் கப்பலை அதன் வழியில் இருந்து 250 மைல்களுக்கு அப்பால் இழுத்துச் சென்றது. வல்வையின் ஆறு மாலுமிகளும் ஆண்டவனைத் தொழுது கொண்டிருந்தனர். அவர்கள் மீண்டும் ஜிபிறோல்ரரை அடைந்த பொழுது திரும்பவும் பயணத்தைத் தொடர அனுகூலமான காற்றெதுவும் இல்லை. கப்பலில் பொருத்தப்பட்ட இயந்திரம் பழுதடைந்ததனால் அவர்கள் முழுக்க முழுக்க காற்றின் உதவி யையே நாட வேண்டியதாயிற்று. ஓர் அமெரிக்க சரக்கு கப்பலில் இருந்த மாலுமிகள் அன்னபூரணி அம்மாளில் இருந்த கறுப்பரான இலங்கை மாலுமி களைக் கண்டவுடன் இனத்துவேஷ வார்த்தை களால் கொட்டி ஆர்ப்பாட்டம் செய்தனர். இப்படி ஒருநிலை இருந்தும் இழுவைக்காக அன்னபூரணி அம்மாளை அந்த அமெரிக்க கப்பலுடன் தொடு த்து விட்டனர். ஆனால் அவர்கள் ஜிபிறோல்ரர் துறைமுகத்தை விட்டு அதிகதூரம் நீங்க முன் னரே சரக்கு கப்பலின் பின்தளத்திற்கு அண்மை யில் உள்ள கயிறு துண்டாயிற்று. இரண்டையும் இணைத்திருந்த தொடுவைக் கயிறு வேண்டும் என்றே வெட்டப்பட்டு இருந்தது. அதைத் தொட ர்ந்து "புளோரன் சி றோபின்சன்' என்ற இரட்டைப் பாய்மரக்கப்பல் அங்கு வீசிய வர்த்தகக் காற்றின் உதவியுடன் அத்திலாந்திக் சமுத்திரத்தில் சிறிது காலம் ஓடியது. இதே கால நிலை அவர்களுக்கு எவ்வளவு காலம் தான் இருக்க முடியும்?

திரும்பவும் நடுச்சமுத்திரத்தில் காற்று அவர் களை கைவிட்டதனால் எத்தனையோ நாட்களை அவர்கள் வீணே கழிக்க வேண்டியிருந்தது. கப்பலில் வைக்கப்பட்டிருந்த உலோக பீப்பாக் களில் சேமித்து வைத்த நீர் கெட்டு குடிப்பதற்கு கூடாததாக இருந்தது. உணவு முடிந்து அங்கே பற்றாக்குறை நிலவத் தொடங்கியது. ஓரளவு காற்றின் வேகம் குறைய ஆரம்பித்தது. நாற்பத்தி யொரு நாட்களின் பின் புளோரன்சி றொபின்சன் என்னும் கப்பல் கெமில்ரனை வந்தடைந்த பொழுது அவர்களுக்கு அங்கு என்றுமே பார்க்க முடியாத வரவேற்பு காத்து இருந்தது. ஒன்பது நாட்களின் பின் அவர்கள் குளோசெஸ்ரர் நோக்கி பயணமானார்கள். அப்பொழுது இதமான காற்று வீசிக் கொண்டிருந்தது. இக்காற்று முன்பு அச மந்த நிலையில் கழித்த நாட்களை ஈடுசெய்தது. ஆனால் கடல் மட்டம் வரைக்கும் கீழே தொங்கிக் கொண்டிருந்த மூடுபுகார் படலம் ஒரு மாபெரும் ஆபத்தைக் கொண்டு வந்தது. இப்புகார் மண்ட லத்தின் காரணமாக பிரிகன்ரைன் விரைந்து வந்து கொண்டிருந்த போது வேறு ஒரு பாரிய கப்பலுடன் மோதுண்டு நொருங்கக் கூடிய நிலை ஏற்பட்டது. காப்டன் மாக்குயிஷ் தனது ஊது குழலினால் உரத்த சத்தமாக ஊளையிட்டார். கப்பலின் தளத்தில் நின்ற குழுவினர் தம்மால் இயன்றவரைக்கும் தமது பலம் அனைத்தையும் ஒன்று சேர்த்துக் கத்தினார்கள். ஆனால் எதை யுமே உணராதது போல் அப்பாரிய கப்பல் விரை ந்து வந்து கொண்டிருந்தது. அவர்களால் வேக மாக வந்து கொண்டிருக்கும் அப்பாரிய கப்பலின் உயரமான பாய்மரங்களையும் அதன் பக்கங் கை-ளயும் அவதானிக்க முடிந்தது. அப்படி இருந்தும் அந்தவேளையில் அவர்கள் ஒன்றும் புரியாத அவலநிலையில் தவித்தனர். இரண்டாவது தடவையாக மீண்டும் இலங்கைக் குழுவினர் ஆண்டவனைப் பிரார்த்தித்தனர். கண் இமைக் கும் நேரத்தில் சில அங்குல இடைவெளியில் அக்கப்பல் விலகிச் சென்றதால் தெய்வாதீனமாக பிறிகன்ரைன் மயிரிழையில் தப்பியது. இப்படிக் கடல் கொந்தளிப்பு இருந்தும் எத்தனையோ அபா யங்களில் இருந்தும் தப்பிய பிரிகன்ரைன் புளோர ன்ஸ்சி றொபின்சன் அமெரிக்காவின் பிரசித்தி வாய்ந்த குளோசெஸ்ரர் துறைமுகத்தை அடைந் தது.

திரு வில்லியம் அல்பேட் றொபின்சன் கப்பலில் வந்த இக்குழுவை அமெரிக்காவின் மிகப்பெரிய நகரங்களில் ஒன்றான நியூயோர்க் நகருக்கு அழைத்துச் சென்றார். அங்கு அவர்களை மிக உயர்ந்த கட்டிடத்தில் அமைந்துள்ள சென் மொறிஸ் ஒன்தி பார்க் என்ற நவீன வசதிகள் படைத்த ஹோட்டல் ஒன்றில் தங்குவதற்கு வசதிகள் செய்து கொடுத்தார். அங்கு அவர்கள் அரச விருந்தினர்களாகவே கௌரவிக்கப்பட்ட னர்.

உள்ளூர் மரமான வேப்பமரத்தில் செய்யப்பட்ட அக்கப்பல் பலரின் கவனத்தை ஈர்த்தது. ஆயிரக் கணக்கான அமெரிக்கர்கள் இரவென்றும் பகலெ ன்றும் பாராது அதில் ஏறிப் பார்வையிட்ட வண் ணமே இருந்தனர். சில சமயங்களில் வேட்டி யுடுத்த மாலுமிகள் தியானத்திலும் ஆழ்ந்திருப் பதை அவதானித்த மக்கள் ஆச்சரியமடைந் தனர். சில நாட்களின் பின்னர் வல்வை மாலுமி கள் அங்கிருந்து நீராவிக்கப்பலில் சிங்கப்பூர் வழி யாக இலங்கை திரும்பினார்கள்.

1938 ஆகஸ்ட் 2ம் திகதி வெளியாகிய அமெரிக்க தினசரியான போஸ்ரன் குளோப் பத்திரிகையின் முற்பக்கச் செய்தியாக அதன் நிருபர் ஏ.பரோஸ் பின்வருமாறு எழுதியுள்ளார்


"ஆர்வம்மிக்க மாலுமிகள் 89அடி நீளமுள்ள புளோறன் சி .றொபின்சன் என்னும் கப்பலில் இன்று வந்து பொஸ்ரன் துறைமுகத்தை அடைந் தனர். இந்த ரகக்கப்பலில் பாய்களின் உதவி

யுடன் மாத்திரம் மேற்கு சமுத்திரத்தை கடப்பது இதுவே முதற்தடவையாகவும் கடைசி தடவை யாகவும் இருக்கும். ஐந்து இந்துக்களான இலங் கையரையும் தாடி வளர்த்த இளம் அமெரிக்க கடலோடி ஒருவரையும் கொண்ட பிறிகன் ரைன் ஆனது ஜி.பி.றோல்ரரில் இருந்து போர் முடா வழியாகப் புறப்பட்டு இத்துறைமுகத்தை அடைந் தது. பெருமை வாய்ந்த பல வருகைகளைக் கண்ட பிரசித்தி பெற்ற இத்துறைமுகமானது நூறு வருடங்களாகக் கண்டிராத அளவுக்குப் பெருந் தொகையான கப்பற்தலைவர்களையும் பட கோட்டிகளையும் உல்லாசப் பிரயாணிகள் முதலானோரையும் கண்டு களிப்பதற்கென தன் பால் கவர்ந்தது அக்கப்பல். வெறுங்காலுடன் பாய்மரங்களில் விரைவுடன் ஏறிடும் இந்துக்களை அங்கு குழுமியிருந்த மக்கள் வியப்புடன் அவதா னித்தனர். உள்துறைமுகத்தை வந்தடைந்ததும் வாழ்த்து தெரிவிப்பதற்காக சுமார் இருபது படகுகள் அப்புதிய கப்பலின் மருங்குகளைச் சென்றடைந்தன. 1840ம் வருடத்து பிரித்தானிய சண்டைக்கப்பலையொத்த இக்கப்பல் எட்டு வருட ங்களுக்கு முன் இலங்கையில் செய்யப்பட்டு அங்கிருந்து புறப்பட்டு இத்துறைமுகத்தை வந்த டைந்திருக்கிறது. கடலோடிகளின் நகரான வல் வெட்டித்துறையில் இருந்து இக்கப்பலில் புறப் பட்ட ஆறு மாலுமிகளுள் ஒருவர் மாத்திரமே இடை நடுவில் வீடு திரும்பினார்.

**1 Reopening of a north ceylon port, page 8 t0 20**

**2 The boston daily Globe August 2, 1938**

**3 Daily times August 2, 1938**



The Boston Daily Globe

BOSTON, TUESDAY MORNING, AUGUST 2, 1938—TWENTY PAGES (2) TWO CENT

SOVIET ATTAC
50 Warpla
Troops
In Ba
DEPOT CLO
TAKEN TO

VOYAGE ENDED BY BRIGANTINE

Rare Spectacle Provided by Arrival From Ceylon

By NAT A. BARROWS

GLOUCESTER, Aug. 1—Like a chapter straight from one of the Malay sea stories of Joseph Conrad, a picturesque crew of square-rigger sailors came reaching into port before a quartering breeze today aboard the 89-foot brigantine Florence C. Robinson—last windship of her kind, in all probability, that will ever cross the Western Ocean under canvas alone.

Bringing a tale of storms, doldrums, thirst, short rations and near collision, the trim little brigantine's company of seven—a grizzled old Gloucesterman, five turbaned, beskirted Ceylonese Hindus and a youthful, bearded American adventurer—tied up alongside a waterfront dock at noon, 50 days out of Gibraltar via Bermuda.

This famous old fishing port, which has seen many a colorful

...

a British brig of war of the 1840 period. Robinson himself took her leisurely through the Indian Ocean and the Red Sea as far as Crete.

Six Ceylonese, from the seafaring town of Valvettiurai, in Northern Ceylon, came out with her and only one has returned home.

In March, Capt. Donald A. McCuish of 5 Lookout st, one of Gloucester's saltiest and best-known skippers, went over to Crete to bring her across the Atlantic.

# வல்வையும் பண்பாடும் சமயப் பற்றும்

### தவத்திரு குன்றக்குடி அடிகளார்

குன்றக்குடி அடிகள் வல்வெட்டித்துறைக்கு 21.03.1957 இல் வருகை தந்த பொழுது வல்வை சனசமூக நிலையத்திற்கும் விஜயம் செய்தார். அப்போது அங்குள்ள விருந்தினர் செய்திக் குறிப்பில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"இன்று இந்நகர சனசமூக நிலையத்திற்கு வருகை தரும் சந்தர்ப்பம் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி இளையோரும் முதியோரும் உற்சாக மாகக் காணப்படுகின்றனர். நல்ல பண்பாடும் சமயப்பற்றும் இருக்கின்றன. சமயச்சடங்குகளை பழமை பிறழாது செய்து வருகின்றனர்.

இந்நிலையம் வாழ்க இந்நகர் வளர்க

# இடதுசாரித் தலைவர்கள்

## வல்வையில் தஞ்சம் அடைந்ததும் இந்தியா தப்பிச் சென்றதும் - 1948

1948ல் இலங்கை சுதந்திரம் அடைந்த பொழுது பிரிட்டிஷ் அரசிடம் இருந்து பூரணசுதந்திரம் வேண்டி இடதுசாரித் தலைவர்கள் கிளர்ச்சி செய்தனர். திரு என்.எம்.பெரேரா, திரு பிலிப் குணவர்த்தனா, திரு கொல்வின் ஆர்.டி.சில்வா ஆகியோர் கைது செய்யப்பட்டு கண்டிச் சிறை யில் அடைக்கப்பட்டனர்.

பின்னர் அதிலிருந்து தப்பி வல்வெட்டித்துறைக்கு வந்து உதவி கோரிய போது சிலநாட்கள் பாதுகாப்பாக தங்க வைத்து இந்தியா கொண்டு சென்று தப்ப வைத்தனர்.

இந்த உதவியை அன்று முன்னின்று செய்தவர் கள் செல் கம்பனி அந்நாள் அதிபர் திரு முருகுப் பிள்ளை, திரு செந்திவேல், கம்யூனிஸ்ட் கொள் கையில் நாட்டம் கொண்டு சிங்கப்பூர் அரசால் நாடு கடத்தப்பட்ட சிங்கப்பூர் திரு சிறி என்பவரும், திரு எஸ்.புவனேஸ்வரராசா ஆசிரியர், திரு ஏ.என்.வேலாயுதம் (சட்டத்தரணி) ஆகியோர் ஆவார்.

திரு பிலிப்குணவர்த்தனா அவர்கள் 1968ம் ஆண்டு தேசிய அரசில் கைத்தொழில் அமைச்ச ராக இருந்தவேளையில் வல்வெட்டித் துறைக்கு விஜயம் செய்தபோது வல்வை சனசமூக சேவா நிலையத்தில் நடந்த கூட்டத்தில் அதை நினைவு கூர்ந்து நன்றி தெரிவித்தார்.

# வைத்தியத்துறைக்கு உதவிய வள்ளல்களான வல்வையர்

19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியளவில் வல்வைக் கடற்கரைப் பகுதியில் ரேவுக்குப் பக்கத்தில் ஒரு மத்திய மருந்தகம் அரசாங்கத் தினரால் நிறுவப் பெற்றது. இது நோயாளரைப் பார்வையிட்டு மருந்து மட்டும் கொடுக்கும் இடம். இங்கு நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெறவோ அன்றி இரவு நேரங்களில் வைத்திய வசதி பெறவோ முடியாது. இந்நிலையே 20ம் நூற்றாண்டு முற்பகுதி வரை நீடித்தது.

இந்த வசதியையும் பெற்றுக் கொள்ள முடியாத வர்கள் தமக்குத் தெரிந்த கை மருந்து மூலிகை களாலும் உள்ளூர் அயல் கிராமங்களிலுள்ள சித்த வைத்தியர்களிடமும் மருந்துகளை வாங்கி உபயோகித்து வந்தார்கள். பின்பு வல்வைப் பெரி யாராகிய முகாந்திரம் அப்புக்குட்டியாபிள்ளை தமது சொந்த செலவிலே ஊறணியில் ஒரு மருத்துவநிலையத்தை கட்டி அரசாங்கத்திடம் ஒப்படைத்தார். அரசு இவருக்கு முகாந்திரம் என் னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. இங்கே நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெற ஆண்களுக் கும் பெண்களுக்கும் வேறு வேறாகவும் பெண் களின் பிரசவத்திற்கென ஒரு பகுதியும் கட்டப் பெற்றிருந்தன. அரசாங்கமும் ஒரு வைத்திய கலா நிதி, ஒரு உதவிவைத்தியர், ஒரு மருந்து கலப் போர், காயங்களைக் கவனிப்போர் முதலான மற்றும் ஊழியர்களை ஏற்படுத்திக் கொடுத்தது.

சிலவருடங்களின் பின் அரசாங்கம் கட்டிய ஒரு நிர்வாகக் கட்டிடம் தற்போது நோயாளர் காத்திருக்கும் இடம், வைத்தியர் நோயாளியைப் பார்வையிடும் இடம், பல்வைத்திய நிலையம் இப்படி பல வசதிகளைக் கொண்டதாய் அமைந் திருக்கின்றது. இரவில் வரும் நோயாளியை கவ னிப்பதற்காக உள்ள வைத்தியருக்கு ஒரு குடி யிருப்பு வசதிக்கட்டிடமும் கட்டிக் கொடுக்கப் பட்டது.

வல்வைப் பெரியார் திரு அ.சி.விஷ்ணுசுந்தரம் அவர்கள் தமது தாயாரின் ஞாபகார்த்தமாக (சிற்றம்பலம் பார்வதிப்பிள்ளை பிரசவவிடுதி) என்ற பெயரில் பெரும் பொருட்செலவில் ஒரு இருமாடிக்கட்டிடப் பிரசவ விடுதியை கட்டிக் கொடுத்தார். அது 40 படுக்கைகள் கொண்டதாக வும் அதை அப்போதைய சுகாதார அமைச்சர் திறந்து வைக்க வடபகுதி பாராளுமன்ற உறுப்பி னர்கள் யாவரும் கலந்து கொண்டு சிறப்பித்து பெருவிழாவாக நடந்தது. அயல் கிராமங்களில் இருந்தும் பெரும் தொகையினர் தற்போது இந்த மருத்துவ நிலையத்தை நாடி வந்து பயன் பெற்று செல்கின்றனர்.

இருபதாம் நூற்றாண்டு தொடக்கம் வரையில் முறையான பாடசாலைகள் இருக்கவில்லை. செல்லம் உபாத்தியார் என்ற வைத்தியலிங்கனார் மூத்த மகன் சங்கர நமச்சிவாயம் வேதவனம் உபாத்தியாயர் முதலியவர்கள் திண்ணைப்பள்ளிக் கூடம் வைத்து தமிழ்மொழியையும் ஆரம்ப கணிதத்தையும் கற்பித்து வந்தார்கள்.

**அமெரிக்கன் மிஷன் கலவன் பாடசாலை**

இப்பாடசாலை 1880ம் ஆண்டளவில் தற்போது இருக்கும் கொன்றைக்கட்டை பெரிய வீதிக்கருகில் நிறுவப் பெற்றது. முன்னர் அது கொட்டகையாய் இருந்தது. சில காலத்தில் உடுப்பிட்டியிலிருந்து அரியகுட்டி என்னும் ஒருவர் தலைமையாசிரியராக இருந்து பல வருடங்கள் சேவை செய்தார். அவர் பாடசாலையை வளர்த்த கதை பற்றி இப்பொழுதும் சொல்வார்கள். காலையில் வந்தவுடன் பாடசாலைக்கு வராத பிள்ளைகளின் வீடு தேடிச் சென்று பிள்ளைகளைக் கூட்டி வந்து பாடசாலையை வளர்த்தார். கல்வியும் வளர்ந்தது. தற்போது கற் கட்டிடமாகவும் ஐந்தாம் வகுப்பு வரையுள்ள பாடசாலையாகவும் இருக்கின்றது. இதை அரியகுட்டி பாடசாலை எனவும் அழைப்பர்.

# வல்வையர் ஆற்றிய கல்விப் பணிகள்

## றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை

இப்பாடசாலை 1889ம் ஆண்டு நிறுவப் பெற்றது. 1720ம் ஆண்டளவில் வல்வையில் ஸ்தாபிக்கப்பட்ட புனித செபஸ்தியார் றோமன் கத்தோலிக்க தேவாலயத்தில் திண்ணைப்பள்ளிக்கூடமாகச் சில காலம் இருந்தது. பின்னர் கோயில் வளவிலே ஒரு சிறு கட்டிடத்தில் நடைபெற்று வந்தது. பின்னர் அரசினர் மருந்தகமாயிருந்த பழைய வைத்தியசாலை அரசினர் காணியில் மாற்றப்பட்டது. தற்போது இப்பாடசாலை மேலும் வளர்ந்துள்ளது.

**சிதம்பராக்கல்லூரி**

இவ் ஆங்கில வித்தியாசாலை வல்வைப் பெரியாராகிய கு.சிதம்பரப்பிள்ளையவர்களால் 1896ல் தொடங்கப் பெற்று ஆலடியில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பாடசாலை தொடங்குவதற்கு முதல்நாள் மாலை சிதம்பரப்பிள்ளை அவர்கள் வல்வையில் உள்ள பெற்றோர்களை நெடிய காட்டு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயில் வீதியில் ஒரு கூட்டத்திற்கு அழைத்து உருக்கமான சொற்பொழிவாற்றினார். அதில் அவர் "தான் ஒரு சிறிய குடும்பத்தைச் சேர்ந்தவரென்றும் ஆங்கிலம் படிக்க ஆசைப்பட்டும் இவ் ஊரில் அந்த வசதி இல்லாததால் பருத்தித்துறைக்கு ஒவ்வொரு நாளும் காலையில் நடந்து சென்று மதிய உணவிற்கு சந்தையில் கிடைக்கும் மரவள்ளிக் கிழக்கை இரண்டு சதத்திற்கு வாங்கி சாப்பிட்டு மாலையிலும் நடந்து வந்து மிகவும் கஷ்டத்தோடு ஆங்கிலம் கற்று அரசாங்க வேலையில் சேர்ந்ததாகவும் தான் பட்ட கஷ்டம் மற்றவர்களுக்கு ஏற்படக்கூடாது என்பதற்காக இவ்வூரில் ஆங்கில வித்தியாசாலையை ஆரம்பிப்பதாகவும் அதற்கு ஊரவர்கள் ஆதரிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்" இப்போது அப்பாடசாலை அவர் நினைவாக சிதம்பராக் கல்லூரியாக வளர்ந்திருக்கின்றது.

1912ம் ஆண்டு பள்ளிக்கூட வளர்ச்சியினால் இடம்போதாமை காரணமாக ஆலடியிலிருந்து ஊரிக்காட்டுக்கு மாற்றப்பட்டது. சிதம்பரப்பிள்ளை அமரராகி விடவே பாடசாலையின் முகாமைத்துவம் திரு ஞானசேகரம்பிள்ளை தையல்பாகர் அவர்களிடம் வந்து சேர்ந்தது. இவர்களின் மேற்பார்வையில் 1925ம் ஆண்டளவில் திரு வானமலை ஐயங்கார் அவர்கள் (பி.ஏ.சென்னை) அதிபராக நியமிக்கப்பட்டார். பின்பு திரு கிருஷ்ண ஐயர்(பி.ஏ) அவர்களும் ஆசிரியராகச் சேர்ந்து கொண்டார். பாடசாலை அதிதுரிதமாக வளரத் தொடங்கியதும் வருடம் ஒரு வகுப்பாக உயர்ந்தது. திரு சிவசைலம்ஐயர் (பி.ஏ.சென்னை) திரு பூ.க.முத்துக்குமாரசாமி (பி.ஏ.இரங்கூன்) அவர்களும் திரு அரியரத்தினம் உடுப்பிட்டி, திரு இரத்தினம் உடுப்பிட்டி, திரு நடராசா (பி.ஏ) பொலிகண்டி, திரு நடராசா ஊரிக்காடு, திரு ச.சத்தியமூர்த்தி (பி.எஸ்.சி.) திரு ச.வல்லிபுரம் (பி.எஸ்.சி.) இவர்களின் சேவையால் பாடசாலையும் வல்வை மக்களும் வளர்ந்தனர். 1948 தொடக்கம் 1960 வரையில் கல்விப் பொதுத்தராதர சாதாரண வகுப்பில் சித்தியடைந்த சகல மாணவர்களும் உடனுக்குடன் அரசசேவையில் சேர்ந்தனர். திரு தையல்பாகர் அவர்களின் மகன் திரு அருள்சுந்தரம் அதிபராக பலகாலம் கடமையாற்றினார். பின்னர் திரு ச.சத்தியமூர்த்தி அவர்களும் அதன்பின்னர் பலகாலம் திரு கோ.செல்வவிநாயகம் கடமையாற்றி இளைப்பாறியதும் திரு யோகச்சந்திரன் அதிபராக இருக்கின்றார்.

இக்கல்லூரியில் தொண்டமானாறு பொலிகண்டி, திக்கம், கம்பர்மலை, வல்வெட்டி போன்ற அயல் கிராமங்களில் இருந்தும் மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். வல்வையைப் பிறப்பிடமாகவும் யாழ்.நகரில் பிரபல வர்த்தகருமான திரு செ.கந்தசாமிதுரை (கட்டிஅப்பா) தனது தந்தையார் நினைவாக (டாக்டர் வி.கே.செல்லையா) ரூபா 50,000 வைப்புநிதியில் வைத்து அதனால் வரும்

வருட வட்டி இரசாயன பாடத்தில் முதன்மையாக வந்து (உயர்தரம்) பல்கலைக்கழகம் புகும் மாணவர்களுக்கு அளிக்கும்படி கொடுத்துள்ளார். 1967ம் ஆண்டு இருமாடிக்கட்டிடம் அமைக்கப்பட்டது. இதற்கு சிதம்பராக்கல்லூரி கொழும்பு பழைய மாணவர் சங்கமும், திருகோணமலை பழைய மாணவர் சங்கமும் வல்வை பொதுமக்களின் சங்கமும் முன்னின்று உதவி புரிந்தன.

பாடசாலையில் உயர்கல்வியைத் தொடர முடியாது விலகிய மாணவர்களுக்கு வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றைப் பழுதுபார்த்தல் பயிற்சியினை நடாத்துகின்றார்கள். வல்வை கல்வி அபிவிருத்திச்சங்கம் என்ற பெயரில் டாக்டர் எஸ்.ராசேந்திரன் அவர்களின் முயற்சியால் பல திட்டங்களை செயற்படுத்துகின்றார்கள். இத்திட்டத்திற்கு திரு எஸ்.ராஜேந்திரன் அவர்களும் திரு ரி.யோகசபாபதிப்பிள்ளை அவர்களும் ஒரு லட்சம் ரூபா வரை நன்கொடை அளித்திருந்தனர். கனடா வல்வை நலன்புரிச் சங்கமும் வருடா வருடம் தமது பங்களிப்பைச் செலுத்தி வருகின்றது.

### சிவகுரு வித்தியாசாலை

1896ம் ஆண்டில் கு.சிதம்பரப்பிள்ளை அவர்கள் ஆலடியில் வைத்தீஸ்வரன் கோயிலுக்கு உரிய காணியில் தொடங்கிய ஆங்கிலப்பாடசாலை சிதம்பராக்கல்லூரி என்ற பெயரில் ஊரிக்காட்டிற்கு மாற்றப்பட்ட பொழுது அதே இடத்தில் திரு ஞா.தையல்பாகர் அவர்களால் "சிவகுரு வித்தியாசாலை" என்ற பெயருடன் தமிழ்ப்பாடசாலை தொடங்கப் பெற்றது. 1926ம் ஆண்டு வரை ஆரம்பப் பாடசாலையாக இயங்கி வந்த பாடசாலை ஆறாம் வகுப்புக்கு மேல் கல்விப் பொதுத்தராதர சாதாரண வகுப்ப வரை கற்பிக்கும் பாடசாலையாகவும் தற்போது இயங்கி வருகின்றது.

ஆலடியில் நடைபெற்ற பாடசாலை சில வருடங்களுக்குப் பின் இடம் போதாமை காரணமான தற்போதிருக்கும் இடத்தில் திரு தையல்பாகர் அவர்களது முயற்சியால் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டது. 1942ம் ஆண்டு விஜயதசமித் தினத்தில் புதிய கட்டிடத்தில் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. 1961ம் ஆண்டு வீசிய புயலால் பாடசாலைக்கட்டிடம் சேதமுற்ற பின்னர் அவற்றை ஓட்டுக் கூரையாக மாற்றி அமைத்தார்கள். இவ்வித்தியாசாலை கடற்கரையோரமாய் நல்ல சூழலில் இயங்கி வருகின்றது. வல்வைப் பெற்றோர்களின் பொருளாதார உதவியுடன் ஆசிரியர்களின் அயரா முயற்சியாலும் நன்கு வளர்ந்து வருகின்றது. இங்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் படிக்கும் பாடசாலையாக திகழ்கின்றது.

### வல்வை மகளிர் மகாவித்தியாலயம்

வல்வையிலே நான்கு பாடசாலைகள் இருந்தாலும் பெண்பிள்ளைகளுக்கு தனியான பாடசாலை இருக்க வேண்டும் என்று சில பெரியார்கள் விரும்பினார்கள். நெடியகாட்டு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயிலுக்கும் இடுகாட்டிற்கும் இடையில் உள்ள துரை வாத்தியாருக்கு சொந்தமான காணியை பட்டினசபை விலைக்கு வாங்கி இருந்தது. அதில் நகரசபைக்கு சொந்தமாக நிர்வாக கட்டிடம் கட்ட மக்கள் அனுமதி கேட்க அம்மன் கோயில் வீதியில் நகரசபைத் தலைவர் திரு மு.இரத்தினவடிவேல் தலைமையில் கூட்டம் கூடிய போது ஒரு சாரார் எதிர்ப்பு காரணமாக கைவிடப்பட்டது. பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் திரு க.துரைரெத்தினம் அதை கல்வி இலாகாவிற்கு மாற்றி அதில் தெற்கு திசையில் ஒரு மண்டபத்தை அரச செலவில் கட்ட உதவி புரிந்ததும், அதற்கு சமாந்திரமாக வடக்கு திசையில் திரு செ.யோககுரு, செ.மௌனகுரு இருவரும் சேர்ந்து ஒரு மண்டபத்தை தமது தாயார் நினைவாக கட்டி முடித்தார்கள். அதில் அதிபர் காரியாலயமும் சேர்ந்து இருந்தது. அதன் திறப்புவிழா 1972ம் ஆண்டு தை மாதம் வெகு சிறப்பாக நடந்தேறியது.

வல்வையைச் சேர்ந்த திருமதி கோ.அரியரத்தினம் (பி.ஏ.லண்டன்) முதல் தலைமையாசிரியையாகவும், 334 பிள்ளைகளையும் மூன்று தொண்டர் ஆசிரியர்களையும் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இரண்டு, மூன்று ஆண்டுகளுக்குள் இப்பாடசாலை அதிக வளர்ச்சி அடைந்து திருமதி அரியரத்தினம் மாற்றம் பெற்று வேறு பாடசாலைக்கு செல்ல உடுப்பிட்டியைச் சேர்ந்த திருமதி எம்.இராஜரத்தினம் சில ஆண்டுகள் பணியாற்றினார்.

வல்வை வர்த்தகர்களான திரு சி.விஷ்ணுசுந்தரம், திரு அ.துரைராசா, திரு ஐ.காத்தாமுத்து, திரு மு.மா.பாலசிங்கம் முதலானவர்கள் பாடசாலையின் நாற்சுற்று மதில்களையும், முந்திய இரு கட்டிடங்களையும் இணைக்கும் மாடிக் கட்டிடங்களையும் பூர்த்தி செய்து கொடுத்தார்கள். இப்பாடசாலையின் வளர்ச்சியில் நெடியகாட்டு இளைஞர்களின் பங்களிப்பு அதிகமானது. தற்போது வெளிநாட்டில் வாழும் பழைய மாணவர்களின் உதவியோடு விளையாட்டு மைதானத்தையும் அமைத்துள்ளனர்.

### தொண்டமானாறு வீரகத்தி பாடசாலை

இப்பாடசாலை 1899ம் ஆண்டளவில் பல கப்பல்களை வைத்து தொழில் நடத்திய வர்த்தகர் திரு சி.வீரகத்திப்பிள்ளை அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இடம் போதாமையால் பிள்ளையார் கோயில் வடபுறம் மேலும் வகுப்புக்களை ஆரம்பித்து இரு பாடசாலைகளும் ஒரே நிர்வாகத்தில் நடைபெறு

கின்றது. தற்போது விஞ்ஞானகூடம், பிரார்த்தனை மண்டபம், அடங்கிய இருமாடிக் கட்டிடங்களை தன்னகத்தேயுடைய பாடசாலையாகத் திகழ்கி ன்றது. திரு சி.நடேசன் அவர்களினால் மரவேலை அறையும் திரு நவரத்தினத்தின் மகள் தனது கணவரின் நினைவாக மனையியற் கூடமும் திரு துரைரெத்தினம் பா.உ.வின் முயற்சியால் அரசி னர் நிதியிலிருந்து மேலும் வகுப்பறைகள், மீன் வளர்ப்புத்தொட்டி ஆகியன அமைக்கப்பட்டனவா கும்.


### வல்வை கல்வி மன்றம்

வல்வையில் எழுச்சிமிக்க ஒரு கல்வி பரம் பரையை உருவாக்க வேண்டும் என்ற குறிக் கோளுடன் 1979ம் ஆண்டு பெப்ரவரி மாதம் திரு சு.இராஜேந்திரா, திரு ந.அனந்தராஜ், திரு ச.பால சுப்பிரமணியம் ஆகியோர் முன்னின்று வல்வை கல்வி மன்றம் என்ற பெயரில் இந்த நிறுவனத்தை ஆரம்பித்தனர். இச்சேவையில் திரு ஆ.அதிரூப சிங்கம், காலஞ்சென்ற திரு தவபுத்திரன், திரு சு.சக்திவடிவேல், திரு ஜெயசேகரம்பிள்ளை (லண்டன்) திரு ஆர்.எல்.தேவராஜா, திருமதி பத்மலோஜினி சிதம்பரநாதன், திரு காந்தரூபன் ஆகியோர் முழுமனதுடன் பணியாற்றினார்கள். இம்மன்றம் 1994ம் ஆண்டு பதினைந்தாவது ஆண்டு நிறைவு விழாவை வெகுவிமரிசையாகக் கொண்டாடியது குறிப்பிடத்தக்கது. பெற்றோர் இல்லாத மாணவர்களுக்கும் வசதி இல்லாத மாணவர்களுக்கும் இலவசமாக பணிபுரியும் நிறு வனமாகும்.

இன்றும் இக்கல்விக்கூடம் இலங்கை இந்திய இராணுவத்தினரால் பெரும் அழிவுக்குட்பட்ட போதும் தனித்துவமான கல்வி கலாச்சார சமூக மேம்பாட்டு அபிவிருத்தி நிறுவனமாக இயங்கி வருகின்றது.

## அமிர்தலிங்கம் தம்பதிகள் வல்வை வழியாக மட்டுநகருக்கு கடற்பயணம்

1958ல் சிங்கள சிறி எதிர்ப்பு போராட்டம் தீவிரமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைபெற்ற போது இலங்கை முழுவதும் இனக்கலவரம் வெடி த்து நாடு தழுவிய ஊரடங்குச் சட்டம் பிறப்பிக் கப்பட்டது. அன்று கிழக்கில் தனி ஒரு தமிழரசுக் கட்சிப் பிரதிநிதியாக இருந்த திரு செ.இராச துரைக்கு உதவியாக இருப்பதற்காகவும் அங்கு ள்ள நிலவரங்களை அறிந்து பாராளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கவும் மீன்பாடும் தேனாடாம் மட்டுநகருக்கு திரு அமிர்தலிங்கம் போகவிழைந் தார். ஆனால் அன்றுள்ள சூழ்நிலைகள் தரை



மார்க்கமாக பயணம் செய்வதற்கு ஏற்றனவாக இருக்காத காரணத்தால் கடல் மார்க்கமாக மட்டக்களப்பைச் சென்றடையும் முடிவை எடுத் தார் அமிர். துணிவுடமையைத் தன் அணிகல னாகக் கொண்டிருந்த அமிர் தன் துணைவியார் மங்கயற்கரசி அவர்களோடும் சில இளைஞர் களோடும் கொந்தளிக்கும் கடலூடே உயிர் உடமைகளை இழந்து நின்ற சொந்த இரத்தங் களை சந்திப்பதற்கு வல்வெட்டித்துறையில் இருந்து வள்ளம் (தோணி) ஒன்றில் பயணமா னார்.

அதிகாரிகள், மகாதேசாதிபதிக்கு மட்டக்களப்பு பகுதியை ஆக்கிரமித்து தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நோக்கோடு இளைஞர் படை ஒன்றோடு அமிர்தலிங்கம் மட்டுநகரை முற்றுகை யிட்டுள்ளார் என்று தெரிவிக்க அவர்களை உடன் கைது செய்ய சேர்.ஒலிவர் குணதிலகா உத்தர விட்டார். திரு அமிர்தலிங்கம் பொலிஸ்நிலையத் தில் இருந்தபடி மகாதேசாதிபதியோடு தொடர்பு கொண்டு தன் கைதுக்கு விளக்கம் கோரி எதிர் வாதம் செய்து உண்மையை உணர்ந்த மகா தேசாதிபதி தன் மனவருத்தைத் தெரிவித்து கொழும்பு போவதற்கு விமானமும் ஒழுங்கு செய்தார். மட்டுநகர் செல்வதற்கு திரு அமிர்த லிங்கம் தம்பதியினருக்கு வள்ளம் கொடுத்து உதவியவர் பிரபல வர்த்தகரும் வைரமாளிகை ஸ்தாபகருமாகிய திருமதி இளையாச்சி ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

(1) இலட்சிய இதயங்களோடு அமிர் எழுதிய தொடர்கட்டுரை பக்கம் 102

(2) என்று முடியும் எங்கள் போட்டிகள் எஸ்.கே. மகேந்திரன் பக்கம் 207

# வல்வையின் அறிவாலயங்கள்

வல்வையின் கலங்கரை விளக்காய் நடுநாயக மாய் அமைந்து ஊர்மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து ஒருமித்த சேவையை வழங்கி வரும் சனசமூகசேவா நிலையம் 30.12.1993ல் தனது பொன்விழாவை கொண்டாடியிருக்கின்றது

ஐம்பது வருடங்களுக்கு முன் இந்நாடு ஆங்கி லேயருக்கு அடிமையாக இருந்தபோது வல்வை பொருளாதாரத்தில் இன்றைய நிலையை விட மிகத் தாழ்ந்த நிலையில் இருந்தது. அந்நிலை யில் அறிவுப்பசியைத் தீர்த்து அவர்களை முன் னேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் தனது முற் போக்கான சிந்தனையால் "வாசிகசாலை' ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற அவாவுடன் முன்னின்று உழைத்தவர் ஆனந்தபாகவதர் என்று அழைக்கப்பட்ட திரு க.ஆனந்தமயில் என்ற கனவான்.

இவ்வாசிகசாலை முதலில் நவீனசந்தைக்கு நேர் வடக்கில் விஸ்வநாதர் கிட்டங்கி என்று சொல்லப்படும் கிட்டங்கியின் மேற்கு அறையி லும் பின்னர் திருச்சிற்றம்பலம் கடை அமைந்தி ருந்த கிட்டங்கியின் மேற்கு அறையிலும் பின்னர் தற்போது சொந்தமாக கட்டப்பட்டுள்ள கட்டிடத் திலும் அமைந்து ஊர் மக்களுக்கும் அயல் கிராமவாசிகளுக்கும் தனது சேவையை ஆற்றிக் கொண்டிருக்கின்றது. அடுத்துக் குறிப்பிட வேண் டியவர் பருத்தித்துறையில் வாழும் ஆசிரியர் பண்டிதர் மு.ஏரம்பமூர்த்தி அவர்கள் அன்பளிப்புச் செய்த 200 புத்தகங்களைக் கொண்டு ஆரம்ப நூல்நிலையம் தொடங்கி வைக்கப் பட்டது. 1945ம் ஆண்டளவில் கண் ணகி என்ற நாடகத்தை நடாத்தி ஆயிரம் ரூபா சேர்ப்பதற்கு உதவிய தோடு செயலாளராக இருந்தும் செயலாற்றிய திரு கா.மரிசிலின் பிள்ளை (ஆசிரியர்) திரு க.குமரகுரு (பாரதியார்,ஆசிரியர்) திரு சி.சிவ குமாரசாமி, திரு க.வேதநாயகம் (ஆசிரியர்) திரு பொ.வேலும்மயிலும் (சிவபெருமான்) திரு ச.சித்திரவேல், அப்போதைய பட்டினசபைத் தலை-வர் திரு ஐ.திருப்பதி, திருச. நடன சிகாமணி, திரு ச.சதாசிவம், திரு எஸ்.சண்முகசுந்தரம்ஆகியோர் புதிய கட்டிடம் கட்ட முன்னின்று சேவை யாற்றியவர்கள். 1950ம் ஆண்டு இப் போது இருக்கும் கட்டிடம் அப்போது இருந்த உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு ஜோசப் அவர் களால் திறந்து வைக்கப்பட்ட போது வல்வை மக்கள் அதனை ஒரு பெருவிழாவாக கொண்டா டினார்கள்.


இந்நிலையம் தமிழகப் பேரறிஞர்கள் திரு முருக கிருபானந்தவாரியார், திரு கி.வா.ஜகநாதன், திரு தவத்திரு குன்றக்குடி அடிகளார், திரு சுத்தா னந்த பாரதியார் போன்றோரையும் வரவழைத்து சொற்பொழிவுகளை நடாத்தியுள்ளது.

அரசியற் பிரமுகர்களான திரு மஹாநாமசமரவீர, திரு பிலிப்.குணவர்த்தனா, திரு ஆர்.பிரேமதாசா (தேசிய அரசில் உதவி உள்ளூராட்சி அமைச்ச ராக இருந்த போது வல்வை ஊறணி குடி யேற்றத்திட்டத்தை ஆரம்பிக்க வந்தபோது) வர வேற்பு அளித்தும் உள்ளது. அமரர்களான பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் தோழர் பொன்.கந்தையா, கோப்பாய் கோமான் திரு கு.வன்னியசிங்கம், தந்தை செல்வா, தியாகி பொன்.சிவகுமாரன், நீச்சல் வீரன் மு.நவரத்தின சாமி ஆழிக்குமரன் ஆனந்தன் போன்றோரின் படங்களைத் திறந்து நினைவு கூர்ந்தும் உள் ளது. 1968ம் ஆண்டு திரு ச.ஞானமூர்த்தி (சமா தான நீதிபதி) அவர்கள் தலைமையின் கீழ் இயங்கிய நிர்வாகசபையால் நிலையத்தின் வெள்ளிவிழாவை சிறப்பாகக் கொண்டாடியது. கவியரங்கு, விவாத அரங்கு, விளையாட்டுப் போட்டி இடம்பெற்ற இவ்வி ழா இரண்டு நாட்கள் நடந்தன. வெள்ளிவிழா மலர் ஒன் றையும் வெளியிட்டு வைத்தனர்.

இராணுவ நடவடிக்கையால் நிலையம் 1978, 1983, 1987, 1991 ஆகிய ஆண்டுக் காலங்களில் சேதமாக்கப்பட்டும் எரிக்கப் பட்டும் நூல் நிலையத்தின் அனைத்து நூல்களும் நிலைய ஆவணங்களும் இல்லாது போய்விட்டன. 1992ல் பதவி ஏற்ற

## பொன்விழாக் கண்ட சனசமூகநிலையம்

**தோற்றம் 10.03.1943**



நிர்வாகசபை உடைந்த கதவுகளைத் திருத்தி புதுப்பொலிவு பெறச் செய்தார்கள். தற்போது எழுநூறு புத்தகங்களைக் கொண்டு இயங்குகின்றது. நிலையத்தின் சார்பாக "அலைஒளி' கையெழுத்துப் பத்திரிகை பல காலமாக வெளி வருகின்றது. இச்சஞ்சிகையின் முதலாவது ஆசிரியர் திரு சு.சத்திவடிவேல் ஆவார். 1993ல் தெரிவான பொன்விழா நிர்வாக சபையினர் நிலையத்தின் பழைய பொலிவை மீண்டும் கொண்டு வந்தனர். வெளிநாட்டில் உள்ள ஊரவர்களிடமும் பணம் சேகரித்து ஒரு லட்சம் ரூபாவை வங்கியில் இட்டு வருடாந்தம் கிடைக் கும் வட்டி மூலம் நிரந்தர வருமானத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர். பொன்விழாவையொட்டி தைப்பொங்கல் தினத்தன்று பட்டம் ஏற்றும் போட்டி, சித்திரை புது வருடத்தில் போர் தேங்காய் உடைத்தல், கயிறு இழுத்தல் போட்டி என்பவற்றையும் பின்னர் யாழ். மாவட்டக் கழகங்களுக்கான உதைப்பந்தாட்ட, கரப்பந்தாட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகளையும் நடாத்தியது. மேலும் கதை, கட்டுரை, கவிதை, பேச்சு, நாடகப் போட்டிகளையும் வைத்தனர்.

பொன்.விழாவில் சிறந்த கல்விப் பெறுபேற்றைப் பெற்ற மாணவர்கள் தங்கப் பதக்கம் சூட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். அத்தோடு முன்னாள் தலைவர்கள் செயலாளர்கள் பொருளாளர்கள் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர். இந்நிலையத்தின் சேவையால் ஊரில் தியாகிகள், அறிஞர்கள், அரசியல் தலைவர்கள் சட்டஅறிஞர்கள், பொறியியல் மேதைகள், வைத்திய கலாநிதிகள், விளையாட்டு வீரர்கள் சமூக தொண்டர்கள் வல்வையில் உருவாகி அகில இலங்கைக்கும் சேவை புரிகின்றார்கள். இந்நிலையம் பொன்விழாவை மட்டும் அல்ல இன்னும் பல விழாக்களையும் கண்டு பலநூறு வருடங்கள் சிறந்து விளங்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

நன்றி - **யாழ்ப்பாணம் "உதயன்' பத்திரிகை 30.12.1993 வல்வை சனசமூக சேவா நிலையத்தின் பொன்விழா சிறப்புமலர்.**


## மக்கள் சேவையில் வெள்ளிவிழா நிறைவு செய்த
# கணபதி படிப்பகம்

இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன்பு வாசனைத்திரவியங்களை ஏற்றி அனுப்புகின்ற துறைமுகமாய் விளங்கி வந்த கொத்தியால் துறையில் வேலை புரிகின்ற தொழிலாளர்களினால் அவர்களது காரியாலயம் போல் பாவிக்கப்பட்ட கடை அத்தொழிலாளர்களின் செலவிலேயே முதலில் சிறிய படிப்பகமாக ஆரம்பிக்கப்பட்டது. அது வேம்படி வாசிகசாலை என்றும் வழங்கப்பட்டது. இதற்கு வாடகையும் கொடுக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் புதிய கட்டிடத்தில் படிப்பகம் அமைய வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் கொத்தியால் யூனியனின் தொழிலாளர்களின் அருமையான பங்களிப்போடு அவர்களது படிப்பகத்தினரின் சிரமதான தூக்குகூலி வேலைகளினால் கிடைத்த வசூலின் மூலமும் கலைவாணி நாடக மன்றத்தினரால் மேடையேற்றப்பட்ட 'தீர்ப்புக்கு முன்' நாடகத்தினால் கிடைத்த நிதியினாலும் ஹெலியன்ஸ் நாடகமன்ற உதவியாலும் இன்றைய படிப்பகம் தோற்றம் பெற்றது.

இப்படிப்பகம் அமைவதற்கான காணியை நெடிய காட்டு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயில் பரிபாலன சபையினர் மனமுவந்து அளித்தமையும் குறிப்பிடத்தக்கது. 14.09.67 அன்று கணபதிப் படிப்பகம் அன்றைய பட்டினசபைத்தலைவர் திரு மு.வி.இரத்தினவடிவேல் அவர்களினால் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இதன்பின் இன்று வரையிலும் நூல்கள் இரவல் கொடுக்கும் பகுதியையும் ஆரம்பித்து நடாத்தி வருகின்றது. தற்போது கல்வி சம்பந்தமான நூல்களும் இணைந்துள்ளமை மகிழ்வுடன் கூறத்தக்கது. 1972ம் ஆண்டு தைப்பூச நன்னாளில் பாலகர்களின் ஆரம்பக்கல்வியை அழகுற போதிக்க வேண்டும் என்ற நோக்கில் படிப்பகத்தின் மற்றும் ஓர் பிரிவாக கணபதி பாலர் பாடசாலை தோற்றம் கொண்டது. மூன்று இடங்களில் வாசம் செய்த கணபதி பாலர் பாடசாலை 1981ம் ஆண்டு முதல் தனக்கென ஒரு அழகான கட்டிடத்தில் நிமிர்ந்து நிற்கின்றது.



இதன் அமைவிற்கு அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் திரு த.இராசலிங்கம் அவர்கள் ஒதுக்கித் தந்த பதினைந்தாயிரம் ரூபா நிதியும் சிறப்பான காரணங்களாகின்றன. பாலர்தின விழாக்கள்,

பாலர் விளை யாட்டுப் போட்டி என்பன வருடாந்தம் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றுக்கு வட இலங்கை புகழ் கணபதி மின்அமைப்பாளர்களும், நெடியகாட்டு இளைஞர்களும் சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்தவர்கள். சென்.ஜோன்ஸ் முதலுதவி பயிற்சி வகுப்பு தையல் பயிற்சிவகுப்பு ஆங்கில வகுப்புகளும் மாணவ சமூகத்திற்கு அருஞ்சேவையாற்றியுள்ளது.

எழுத்து திறமை களை வளர்க்கும் நோக்கில் 'கவிஞன்' என்னும் பெயரில் ஒரு கையெழுத்துச் சஞ்சிகையும் 1985ம் ஆண்டின் பிற்பகுதியில் இருந்து இன்றுவரை வெளிவருகின்றது.

அக்காலம் முதல் வல்வையில் இயல், இசை, நாடகத்துறையில் சிறந்து விளங்கிய மேதைகளை சிறப்புடன் வரவேற்று இயல்துறையில் பூ.க.முத்துக்குமாரசாமி அவர்களையும் இசைத் துறையில் திரு ஏ.நடராசா அவர்களையும், நாடகத்துறையில் திரு சா.மருசிலீன்பிள்ளை (செல்வராசா) அவர்களையும் மாஅறிஞர் சங்கீதமாமணி நாடகமாமணி என 1986ம் ஆண்டு விழாவின் போது பட்டமளித்துப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தது சிறப்பெனக் கொள்ளலாம்.

வெள்ளி விழாக் காணும் வரை படிப்பகத்தின் சேவைகளில் பங்கேற்ற நிர்வாகிகள் அபிமானிகள் பலர் மாவீரர்களாகவும், இயற்கை எய்தியவர்களாகவும் உள்ளனர்.

14.09.1967 படிப்பகத் திறப்புவிழாவின் போது இருந்த செயற்குழுவினர்

தலைவர் - திரு வே.ஆதிஅருணாசலம்

உபதலைவர் - திரு எஸ்.பேரின்பராஜா

செயலாளர் - தெ.லெட்சுமிகாந்தன்

உபசெயலாளர் - பூ.அகமணிதேவர்

பொருளாளர் - வே.பாலசுப்பிரமணியம்

செயற்குழு உறுப்பினர்கள் திரு சே.ஏகாம்பரம், திரு வே.கதிர்காமலிங்கம், திரு எஸ்.இராமசாமி, திரு செ.கணேசமூர்த்தி, திரு ஆர்.பத்மநாதன்

போஷகர்கள் - திரு க.துரைரத்தினம் பா.உ., திரு எம்.வி.இரத்தினவடிவேல் (நகரசபைத்தலைவர்)

வெள்ளிவிழாத் தலைவர் திரு க.ந.தேவதாஸ் தலைமையிலான செயற்குழுவினரால் திறம்பட நடாத்தப்பட்டது.

நன்றி - 05.11.1992 யாழ்.ஈழநாதம் பத்திரிகை வெள்ளிவிழா சிறப்புமலரில் இருந்து

# ஆதிசக்தி படிப்பகம்




வல்வையின் ஆதிகோயிலடி கிராமம் பெரும்பாலும் மீன்பிடித் தொழிலாளர்களை அடக்கியது. முற்காலத்தில் இவர்கள் காற்றின் உதவியை மட்டும் கொண்டு தொழில் செய்து வந்தனர். பின்பு இயந்திரம் பொருத்தப்பட்ட வள்ளங்களிலும், கட்டுமரங்களிலும் ஜப்பானிய வலைகளை உபயோகித்து தமது தொழிலைத் திறம்படச் செய்து வருகின்றனர். இவர்கள் அரசியலில் தமிழரசுக் கோட்டையாகவும் பின்பு கூட்டணியிலும் இன்று தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரிப்பவர்களாகவும் உள்ளனர். ஆதிசக்தி படிப்பகத்தை தமிழரசுக் கட்சியின் சார்பில் பதவி வகித்த திரு மு.திருச்செல்வம் கியூ.சி. (உள்ளூராட்சி அமைச்சர்) 1967ம் ஆண்டு நிதி அன்பளிப்புச் செய்த தோடு வல்வைக்கு விஜயம் செய்து அதனைத் திறந்து வைத்தார்.

1987ம் ஆண்டில் 'ஒப்பரேஷன் லிபரேஷன்' இராணுவ நடவடிக்கையின் போது அக்கிராமத்தில் ஒரு வீட்டைத் தானும் இராணுவம் தகர்க்காது விடவில்லை.

அத்தோடு இன்று பலர் பிரதான உழைப்பாளியை இழந்து அகதிகளாகவும் பொலிவிழந்தும் காணப்படுகின்றனர். தற்போது இந்த நூல் நிலையம் விமானத் தாக்குதல்களாலும் ஷெல் தாக்குதல்களாலும் அழிவுற்று காணப்படுகின்றது. வல்வையின் முதுகெலும்பான இந்த மக்களுக்கு வெளிநாட்டில் உள்ள வல்வை நலன்புரிச் சங்கங்கள் யாவும் ஒன்று சேர்ந்து பெரிய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

## கலைவாணி படிப்பகம்

கலைவாணி படிப்பகம் வல்வை சைனிங் விளையாட்டுக்கழக உறுப்பினர்களாலும் வல்வைப் பொதுமக்கள் நன்கொடைப் பணத்தாலும் உருவாக்கப்பட்டது. இந்த படிப்பகத்தை திரு வயித்தியலிங்கம்பிள்ளை வேலும்மயிலும் S.L.A.S. அவர்கள் திறந்து வைத்தார். நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தப் பாடுபடும் வல்வை குச்சம், கொத்தியால் தொழிலாளர்களுக்காக அமைக்கப்பட்டது இந்நூல் நிலையம்.

## விக்னேஸ்வரா சனசமூக நிலையம்

இந்நூல் நிலையம் வல்வையில் அமைக்கப்பட்ட இரண்டாவது நூல் நிலையமாகும். இது உதய சூரியன் கடற்கரை ஓரத்தில் அமைந்து, அங்கு வருபவர்களுக்கு அறிவுப் பசியை தீர்க்கும் நிலையமாக விளங்குகின்றது. இந்நூல் நிலையத்தை வல்வை ஆசிரியர் திரு வே.வ.சிவப்பிரகாசம் அவர்கள் நன்கொடையாக அமைத்துக் கொடுத்திருந்தார். கட்டுரைப்போட்டி, சிறுகதைப் போட்டிகள் இந்த நிலையத்தால் நடாத்தப் பெற்று உதயசூரியன் கழக ஆண்டு பெரு விழாவில் அதற்கான பரிசுகள் வழங்கி கௌரவிப்பது நடைமுறையாக உள்ளது.

## வல்வையின் பண்பாடு

பல வருடங்களுக்கு முன்னர் இருந்தே மார்கழி மாதம் முழுமையும் வைகறையில் ஒருவருடம் நெடியகாட்டு இளைஞர்களும் மறுவருடம் அம்மன் கோயிலடி இளைஞர்களும் மாணிக்கவாசகசுவாமிகள் அருளிய திருவெம்பாவை பாடிய வண்ணம் சங்கொலியும் மணியுமாக வல்வையின் ஒவ்வொரு வீதியுமாக சென்று ஊரை விழிக்க செய்கிறார்கள். திருவெம்பாவை காலங்களில் அநேகர் அந்நேரமே நித்திரை விட்டெழுந்து நீராடி தூயஆடை அணிந்து அவரவர் மனதிற்குகந்த கோயில்களுக்குச் செல்கிறார்கள். ஞாயிறு தோற்றத்தின் முன் ஆலயங்களில் கடவுளை தரிசித்து வணங்கி வீபூதியும் பொட்டும் அணிந்து வீதிகளிலெல்லாம் சாரிசாரியாகத் திரும்பிக் கொண்டிருப்பார்கள். இது பண்பாடு

## வாரியாரின் சீடர் வல்வை இரா.சிவஅன்பு

திரு இரா.சிவஅன்பு அவர்கள் சிறந்த சிற்ப வேலைகள் செய்யும் கட்டிடக் கலைஞர். திரு இராசாங்கம் அவர்களின் புதல்வராவர். வல்வை சிவன் கோயிலுக்கு அந்தக் காலத்தில் திரு முருக கிருபானந்தவாரியார் அவர்களை வருடா வருடம் திருவிழாவிற்கு பிரசங்கம் செய்ய அழைபபார்கள். அவர் கோயில் மடத்திலேயே தங்கி இருந்து திருவிழா பதினாறு நாளும் தொடர்ச்சியாகப் பிரசங்கம் செய்வார். சிதம்பராக் கல்லூரியில் கல்வி கற்றுக் கொண்டிருந்த சிவஅன்பு அவர்கள் வாரியாரின் பிரசங்கங்களில் சிறுவயதிலேயே ஈர்க்கப்பட்டு அவருக்குப் பணிகள் செய்து அவரிடம் பயில்வதற்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. கடவுள் அருளாலும் மனோதிடத்தாலும் இவர் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களின் பாணியிலே இளவயதில் பிரசங்கம் செய்யத் தொடங்கினார். டாக்டர் சிவஅன்பு அவர்கள் ஒரு தடவை மயிலிட்டி காசரோக நோயாளர்களுக்கு அபிமன்யு கதாப்பிரசங்கத்தை நடாத்தினார். இதனையடுத்து வல்வை முத்துமாரிஅம்மன் ஆலயத்தில் பட்டினத்தார் கதாப்பிரசங்கத்தை நடாத்தினார் வாரியார் முன்னிலையில். இந்தியாவிற்குப் பலதடவை சென்று வாரியாருடன் தங்கி குரு - சிஷ்யமுறையில் பயின்றுள்ளார். வாரியார் கடிதம் எழுதும் போது சீடன் என்றே எழுதுவார். தம் வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்திய பெருந்தகையாக வாரியாரை இவர் கருதுகிறார். இலங்கையில் 1983ல் இந்து கலாச்சார அமைச்சு இந்து மதத்திற்கு ஆற்றிய பணிக்காக ஒரே மேடையில் வாரியாருக்கும் இவருக்கும் பட்டம் வழங்கி கௌரவித்தது. அருட்கலைத் திலகம் என்ற பட்டமும் வழங்கப்பட்டது. அந்த பெரும் சபையில் திருமுருக கிருபானந்தவாரியாரே ஒலி பெருக்கியை வாங்கி தனது சீடர் இரா.சிவஅன்பு என அறிவித்தார்.

திரு இராசாங்கம் அவர்கள் தொண்டமானாறு சந்நிதி ஆலயத்தின் கோபுரத்தில் உள்ள சிற்ப வேலைகளைச் செய்த கட்டிடக் கலைஞராவார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வல்வையின் பண்பாடு

வல்வை மத்தியிலே அரை நூற்றாண்டுகளுக்கு முன் சனசமூக சேவா நிலையம் சேவை செய்து வந்ததால் இந்த முன்மாதிரியைப் பின்பற்றி வல்வையின் நாலாபக்கங்களிலும் வாசிகசாலைகளும் நூல் நிலையங்களும் தொடங்கப் பெற்று ஊர் முழுமைக்குமே சேவை செய்து வருகின்றன. நல்லதொரு காரியத்தை நாமும் பின்பற்ற வேண்டும் நாலா பக்கமும் பரப்ப வேண்டும் என நினைப்பதும் பண்பாடு.

வல்வை முத்துமாரி அம்மன் கோயில் திருவிழா ஆரம்பமாகி விட்டால் வல்வெட்டித்துறை முழுமையும் திருவிழாக் கோலம் பூண்டு விடும். ஊரில் உள்ள சகல தெருக்களுமே கூட்டித் துப்பரவு செய்து தண்ணீர் தெளித்து அழகாக்கப்பட்டு விடும். ஏன் வீடுகள் கூட அழகாக்கப்பட்டு விடும். வயோதிபர்கள், உடல்நலம் குறைந்தவர்களை விட மற்றைய எல்லோரும் விரதம் இருப்பர். ஆகக் குறைந்த பட்சம் மாமிச உணவை நீக்கி விடுவார்கள். பல ஆண்டுகளாக பகல் திருவிழாவில் விபூதி, தீர்த்தம், சந்தனம், குங்குமம் மலர்கள் பிரசாதத்துடன் தயிர் சாதம், வெண் சாதம் புளிச்சாதம் சக்கரைச்சாதம் முதலியவைகளும் வழங்கப்படும்.

அம்மையின் பெரும் திருவிழாவும் வசந்தகாலத்தில் நடந்து சித்திரை மாத முழுமதி நாளன்று முடிவுறுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டு நடுப்பகுதியில் இருந்து அம்மன் கோயில் தீர்த்தத்திருவிழா பிரபல்யம் அடைந்து விட்டது. வங்காள விரிகுடாவின் வடக்கு கிழக்குப் பகுதியாகிய சட்டிகாமம் அரக்கன் பகுதியில் வட கிழக்கு பெயர்ச்சிக்காற்று தொடங்கும் காலமாகிய ஐப்பசி பிற்பகுதி கார்த்திகை மார்கழி முற்பகுதிக் காலங்களில் பெரும் சூறாவளிகள் ஏற்படும் இச்சூறாவளிகள் பாய்மரக்கப்பல்களுக்கு பெரும் அபாயங்களை ஏற்படுத்தும். இவைகளையெல்லாம் கடந்து இரண்டு அரக்கன் சவர்களையும் முடித்துக் கொண்டு சித்திரை வருடப்பிறப்பை அண்டிவரும் அம்மன் தீர்த்தத்தை பக்தி சிரத்தையுடன் கொண்டாடுவார்கள். இன்று வெளிநாட்டு வர்த்தகக் கப்பல்களில் வேலை செய்பவர்களும் வெளிநாட்டில் தொழில் புரிபவர்களும் புலம் பெயர்ந்தவர்களும் அம்மன் திருவிழாவோடு ஊர் திரும்புவது வழமையாகப் போய்விட்டது. பலர்

தீர்த்தத்தன்று காலையில் இந்திர விமானத்தில் அம்பாள் முன்னும் பிள்ளையாரும் முருகனும் பின்னுமாக கோயிலிருந்து புறப்பட்டு நெடிய காட்டு மோர் மடத்தில் சிறிது தங்கிய பின்னரே நேரே ஊறணி தீர்த்த கடற்கரைக்குச் செல்வார்கள். அங்க அம்பாள் சமுத்திர தீர்த்தம் அத்தர தேவி மூலம் ஆடிய பின்பு அழகாக அமைக்கப்பட்ட தங்கு மண்டபத்தில் தங்கியிருந்து அருள் பாலிப்பார். அப்போது கடலில் கட்டுமரங்களும், கப்பல்களும் பல வர்ணகப்பல் கொடிகளுடன் கூடி விளையாட்டுக்கள் நடந்து கொண்டிருக்கும். சிறிதும் பெரிதுமான பல வர்ண புகைக்குண்டுகள் ஆகாயத்தில் பறக்க விடுவார்கள்.

இலங்கையில் புகைக்குண்டு செய்யும் கலைஞர்கள் வல்வையில் மட்டுமேயுள்ளனர். இங்கு இருந்து கொழும்பு, திருமலை ஆகிய பல இடங்களுக்கும் எடுத்துச் செல்வார்கள். பதினொரு மணியளவில் சுவாமிகளுக்கு பூஜைகள் முடிந்து நெடியகாட்டு பிள்ளையார் கோவிலில் தங்குவார்கள். அதன்பின்பு மாலை எட்டு மணியளவில் சுவாமிகளுக்கு பூஜைகள் நடந்து பிரசாதம் வழங்கிய பின்பு அம்பாள் மின் விளக்குகளால் அலங்காரம் செய்யப்பெற்ற இந்திர விமானத்தில் எழுந்தருளி அழகான பந்தலின் கீழ் தங்குவார்கள். அதன்பின்பு மோர்மட முன்றலில் கச்சேரிகளும் கேளிக்கைகளும் ஆரம்பமாகி விடும். முதலில் நாதஸ்சுரக் கச்சேரி தொடங்கும். அதன்பிறகு பாட்டுக்கச்சேரி, வில்லுப்பாட்டு, பரதநாட்டிய கச்சேரிகள் முதலியன மாறி மாறி நடந்து கொண்டு இருக்கும் வருடாவருடம் எல்.ஆர்.ஈஸ்வரி போன்ற தென்இந்திய கலை-

## இந்திரவிழா

அம்மன் நேர்த்தியை முடித்து கரகங்கள் எடுப்பார்கள். கரகத்துடன் பெண்கள், சிறுமிகள் தலையில் பால் செம்பு சுமந்து சென்று அம்மனுக்கு விசேட அபிஷேகங்களும் செய்விப்பார்கள். அன்று மாலை ஏழு, எட்டு மணியளவில் கரகம் எடுத்தால் அதிகாலை மூன்று, நான்கு மணியளவில் அம்பாள் விமானம் கோயில் வந்து சேரும் வரை கரகம் எடுத்தாடும் வழக்கம் தலைமுறை தலை-முறையாக நடந்து வருகின்றது.

இக்கரகத் தீர்த்தத் திருவிழா இன்று இந்திர விழாவாக விளங்குகின்றது.




ஞர்களையும் இலங்கையின் பிரபலமான கலைஞர்களையும் அழைத்து மகிழ்விப்பார். வடமாகாண மக்களில் பலரும் இந்திரவிழாவில் கலந்து கொள்ள வல்வைக்கு வருவார்கள். பலவிதமான அவிட்டுக்கள் பூப்பொழிவு மத்தாப்பு மற்றும் ஆகாய வாணங்கள், எலிவாணங்கள் குருவி வாணங்கள் இடையீடில்லாமல் கொழுத்திக் கொண்டே இருப்பார்கள்.

அருகில் உள்ள பழமை வாய்ந்த தாமரைக் குளத்தில் உள்ள நீர் இயந்திர சாதனங்கள் மூலம் சுழன்றும் சீறியும் வர்ண ஜாலங்களை காட்டிக் கொண்டேயிருக்கும். இதற்கிடையில் கரக ஆட்டங்கள் பழனி கரக ஆட்டங்கள் கிட்டத்தட்ட ஒரு கட்டைக்கு மேல் பல அலங்கார வளைவுகள், சித்திர வளைவுகள் வெளிச்ச வீடு இப்படி ஒன்றை ஒன்று அழகை மிஞ்சும் வண்ணம் இளைஞர்கள் தங்கள் கலைத்திறனை காட்டியிருப்பார்கள். இதற்கு வல்வையில் சித்திரக் கலைஞர் திரு பாலாமாஸ்ரர், லிப்டன் சிவானந்தசுந்தரம் வழிகாட்டியாக இருந்துள்ளார்கள். இப்படியான நுழைவாயில்களை யாழ்.குடாவின் கோயில்கள் அரசியல் நிகழ்ச்சிகளுக்கு இங்கிருந்து எடுத்துச் செல்வார்கள். திரு பசுபதி, திரு த.குழந்தைவேல் ஆகிய இருவரது கைவண்ணத்தில் உருவான திருத்தொங்கல்களும் சுவாமிகள் எழுந்தருளி வரும் விமானத்தை அலங்கரித்த வண்ணம் இருக்கும்.

இடையிடை வீடியோ வர்ண தொலைக்காட்சி ஆங்காங்கே நடந்து கொண்டு இருக்கும். குச்சம் வீதி வாயலில் தொங்குபாலம் ஒன்றில் மேல்பாட்டுக்கச்சேரி நடந்து கொண்டேயிருக்கும். பல நாடுகளில் இருந்து இளைஞர்கள் கொண்டு வந்த பல்பொருட்காட்சிகள் இடைக்கிடையே வைக்கப்பட்டிருக்கும். தெருவெல்லாம் தென் பகுதியில் இருந்தும் நீர்வேலிப்பகுதிகளிலும் தருவிக்கப்பட்ட வாழைகளும் செந்நிற வாழைகளும் மூங்கில் மரங்களும் பிள்ளையார் கோயிலில் இருந்து ஊரிக்காடு வரை இடையீறின்றி வரிசையாக கட்டப்பட்டு இருக்கும். அம்பாள் எழுந்தருளி வரும் இந்திர விமானத்திற்கு மின்சார கலைஞர் திரு சி.இளையபெருமாள் அவர்களின் ஜெயா மின்சார யந்திரமும் வேறு அயல் கிராமங்களின் மின்சார இயந்திரங்களும் இரவை பகலாக்கி அயோத்தி மாநகரம் அழகு வர்ணனை போல் காட்சி அளிக்கச் செய்திருப்பார்கள்.

தெருவெல்லாம் போவோரும் வருவோரும் நிறைந்திருப்பார்கள் இப்பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்கள் கூடுமிடத்தில் காவற்துறையினரோ சாரணர்களோ கடமை புரிவதில்லை, வரவழைப்பதும் இல்லை. குற்ற சம்பவங்கள் நடப்பதும் இல்லை. பக்தர்கள் களைப்புறா வண்ணம் பல இடங்களில் சுடச்சுட தேனீர் வழங்குவோரும் நெஸ்கபே வழங்குவோரும் சோர்விலாது கொடுத்துக் கொண்டேயிருப்பார்கள். காலமோ மல்லிகை பூக்காலம் பெண்களின் கூந்தலை அலங்கரித்து கூடவே வீதி எங்கனும் மல்லிகை வாசனை மனம் கமழும். இப்பெருவிழாவில் பங்கு கொள்வோர் உடையலங்காரம் சொல்லி அடங்கா. வண்ண வண்ண சேலைகள் பல வர்ண பட்டுக்கள் பருத்திகள் நூதனமான புதுப்பாணியில் புதுபுதுவிதமான நூல்களால் நெய்யப் பெற்றவை.



எத்தனை விதம் விதமான சட்டைகள் பாவாடைகள் தாவணிகள் கண் கொளாக் காட்சி ஜாலங்கள் காண்பவைகளெல்லாம் இன்பம் இவ்இந்திரவிழா காதலர்கள் கண்களால் பேசும் விழாவாகவும் திருமணம் நிச்சயப்படுத்தும் விழாவாகவும் அமைந்து விடுகின்றது.

அதிகாலை இரண்டு மணியளவில் சுவாமிகள் புறப்பட்டால் வீதிகளிலெல்லாம் நிறைகுடங்கள் வைத்து பட்டுச்சாத்தி அர்ச்சனைகள் நடைபெறும். தேங்காய் குவியல்களாக வைத்து சிதறி அடித்து பாக்கு வெற்றிலை கடலை அவல் விநியோகம் செய்வார்கள். இப்படி தாமதித்து சுவாமி செல்வதால் அம்பாள் கோயிலை அடைய நான்கு மணிக்கு மேல் அதிகாலை நான்கு மணிக்கு மேலாகும்.

**எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்**

**மங்காத தமிழென்று சங்கே முழங்கு**

**எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்**

**இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே**


**- பாவேந்தர் பாரதிதாசன்**

கொழும்பு தமிழ்ச் சங்கம்

# நீச்சல் வீரன்
# திரு மு.நவரத்தினசாமி

தொண்டமானாறு பகுதியை சேர்ந்த திரு முருகுப்பிள்ளை நவரத்தினசாமி 32 மைல் நீளமான பாக்குநீரிணையை வல்வெட்டித்துறையில் இருந்து தென்இந்தியாவின் கோடிக்கரைக்கு முதன்முதலாக 1954ம் ஆண்டு நீந்திக் கடந்தார். அப்போது வயது 45 ஆகும். 26.30 மணி நேரம் தொடர்ந்து நீந்தி 26.3.1954 மாலை 7.00 மணிக்கு இந்தியக்கரையை அடைந்தார்.

அப்போது இலங்கைக்கு வருகை தந்த எலிசபெத் மகாராணி திரு மு.நவரத்தினசாமி அவர்களுக்கு தங்கப் பதக்கம் அளித்து கௌரவித்தார்.



## மறப்புகழ் நீச்சல் மன்னன்

உன்னத இமயம் என்ற
உச்சியில் ஊர்ந்து ஏறி
மண்ணவர் எவர்கு மில்லா
மறப்புகழ் கொண்டான் 'டென்சிங்'
அன்னவற்கிணையாப் பாக்கு
அலைகடல் அகழி நீந்தி
எண்ணரும் புகழடைந்தான்
எம் நவரத்தின சாமி!

எண்ணிய எண்ணியாங்கு
எய்துப எண்ணியார்கள்
திண்ணிய ராகின் என்ற
திருக்குறள் வினைத்திட்பத்தின்
உண்மை நல்லெடுத்துக் காட்டாய்
உலகிடை நீச்சல் மன்னன்
எண்ணுமோர் பேரெடுத்தான்
எம் நவரத்தினசாமி!

இலட்சியம் வாழ்வு என்ற
இருதலை விலாங்கு ஆகி
அலட்சியப் போக்கிற் செல்லும்
அவனியின் அஞ்ஞானத்தை
விலக்கிட வந்த ஞான
மேதை போல நீச்சலுக்கோர்
இலட்சிய விளக்கமானான்
எம் நவரத்தினசாமி!

பாண்டிய சோழ சேரர்
பாரர சாண்ட நாளில்
தோன்றிய வீரசக்தி
தொண்டமானாற்றில் இன்று
ஈட்டியதென்ன வந்த
எம் நவரத்தினசாமி
மாண்புடன் நாட்டினுக்கும்
மறப்புகழ் தந்தான் வாழி

**யாழ்ப்பாணம் 'இதயஒலி' (28.03.1954) சஞ்சிகையில் உரும்பிராய் க.இ.சரவணமுத்து)**

# ஆனந்தன் பற்றி
# தோழர் வி.பி.



அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் நீச்சல் வீரன் ஆனந்தனுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் பேசிய தோழர் வி.பொன்னம்பலம் பக்கத்தில் நின்ற தென்னைமரம் ஒன்றைக் காட்டி "இந்த மரத்தில் இரண்டு குலை மாங்காய் காத்திருப்பதாக யாரும் சொன்னால் "ஆகா! அது ஆண்டவனின் அற்புதமே" என்று அப்படியே நம்பிவிடும் பாமர மக்கள் எத்தனையோ கால இடைவிடாப் பயிற்சியின், முயற்சியின் பின் பாக்குநீரிணையை ஆனந்தன் நீந்திக் கடந்ததை உண்மை தானா? என்று கேட்கிறார்களே. இதுவும் தமிழனின் தலைவிதி தான் என்றார்.

"பொன்மலர்" தோழர்வி.பி நினைவுநூலில் இருந்து பக்கம் 74

1960ம் ஆண்டு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பிரதமரானார். அவர் தனது கணவர் கொண்டு வந்த தனிச்சிங்கள சட்டத்தை அமுல் நடாத்த ஆவன செய்தார். அரசாங்க திணைக்களங்களில் இருந்து கடிதங்கள் சிங்களத்தில் வந்தன. யாழ்.கச்சேரிக்கும் சிங்கள உத்தியோகத்தர்கள் அனுப்பப்பட்டனர். சிங்கள ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டனர். இதை எதிர்த்து தமிழரசுக்கட்சி தந்தை செல்வா தலைமையில் அறவழியில் போராட்டம் நடத்தினார்கள். 1961ம் ஆண்டு 20ம்திகதி பெப்ரவரி மாதத்தில் யாழ்ப்பாணம் கச்சேரி முன்மறியல் ஆரம்பமானது. அரசஅதிபர் உட்பட சகல உத்தியோகத்தர்களும் உட்செல்லாதவாறு தடுக்கப்பட்டனர்.

முதல்நாள் நடந்த சத்தியாக்கிரக போராட்டத்தில் தலைவர்களும் தொண்டர்களும் தாக்கப்பட்டனர். தமிழரசுக் கட்சியால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் வடகிழக்கு முழுவதும் தமிழர் முஸ்லிம் உட்பட சகலரும் பங்கு கொண்ட தமிழ்மக்களின் ஏகோபித்த போராட்டமாக மாறியது. வடகிழக்கு அரசு நிர்வாகம் நடைபெறாது ஸ்தம்பித்தது. இரண்டரை மாதங்களின் பின்பு இராணுவத்தை வடகிழக்கு மாகாணம் அனுப்பி ஊரடங்கு சட்டத்தை பிறப்பித்து தலைவர்களை கைது செய்து அறப்போராட்டத்தை அடக்கினார்.

அப்போது எமது பாராளுமன்ற உறுப்பினர் திரு க.துரைரத்தினம் அப்போதைய பட்டினசபைத் தலைவர் திரு க.சபாரத்தினம் ஆகியோரும் வேறு சில வல்வையைச் சேர்ந்த வர்த்தகர்களும் கைது செய்யப்பட்டு பனாகொடை இராணுவமுகாமில் வைக்கப்பட்டனர். அன்று வடபகுதிக்கு வந்த இராணுவத்தினர் வல்வையில் அமெரிக்கன் மிசன் சபையினருக்கு உரிமையான காணியில் இராணுவ முகாம் அமைத்தனர். வல்வைக்கு அன்று வந்த இராணுவத்தினரை திரு ஆர்.பிரேமதாசா ஜனாதிபதியாக வந்தபின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடாத்திய பேச்சு வார்த்தையின் போது தான் வெளியேற்ற முடிந்தது. முப்பது வருடங்களுக்கு மேல் வல்வை மக்களுக்கும் இராணுவத்தினருக்கும் அடிக்கடி மோதல்கள் இடம்பெற்றன.

படத்தில் - திரு கந்தசாமி அத்தண்ணா, திரு வ.இ.மணிஅண்ணா, திரு க.துரைரெத்தினம் பா.உ. திரு க.சபாரெத்தினம் பட்டினசபைத் தலைவர்





# அறப்போரில் வல்வை 1961



# ஆழிக்குமரன் ஆனந்தன்

திரு ஆனந்தன் அவர்கள் திரு விவேகானந்தன் இராசரெத்தினம் தம்பதிகளுக்கு சிரேஷ்ட புதல்வனாக 1943ம் ஆண்டு மே மாதம் 25ம் திகதி தீருவிலில் உள்ள அவர்களது வீட்டில் பிறந்தார். அவர் சிவ குரு வித்தியாசாலை, வல்வை சிதம்பராக் கல்லூரி, பின்னர் யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரிகளில் கல்வி பயின்று பின்னர் ஹாட்லி கல்லூரியில் கல்விப் பொதுத் தராதர உயர்வகுப்பு படித்துச் சித்தி பெற்று பல்கலைக்கழகத்தில் சட்டப்பிரிவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு வழக்கறிஞர் ஆனார். ஈ,ழத்திற்கு வல்வைக்கு சர்வதேச ரீதியில் புகழ் தேடித்தந்த வீரனாவார்.

ஆனந்தன் அவர்கள் ஈட்டிய கின்னஸ் உலக சாதனைகளை ஓரே பார்வையில்......

1963ம் ஆண்டு மார்ச் மாதம் 20ம்திகதி பாக்குநீரிணையை நீந்தியது அப்போது வயது 18

1) இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் பாக்குநீரிணையை அங்குமிங்குமாக ஒரேமுறையில் நீந்திக் கடந்து உலக சாதனையை நிலை நாட்டினார் 1976ல்.

2) 187 மணி நேரம் இடைவிடாது தொடர்ந்து 1487 மைல்கள் சைக்கிள் ஒட்டி உலகசாதனையை மே மாதம் 1979ம் ஆண்டு கொழும்பில் நிகழ்த்தினார்.

3) கொழும்பில் 136 மணிநேரம் போல் பஞ்சிங் உலகசாதனை டிசம்பர் 1979ம் ஆண்டில்

4) ஒற்றைக்காலில் 33 மணி நேரம் நின்று உலக சாதனையை மே 1980ல் கொழும்பில் நிகழ்த்தினார்

5) இரு நிமிடத்தில் 165 தடவை இருந்து எழும்பிய மற்றொரு சாதனையை ஒற்றைக்கால் சாதனைக்கு முன் பாகச் செய்தார்.

6) **High Hicks** என்ற உலக சாதனையை 9100 தடவை டிசம்பர் 1980ல் கொழும்பில்

7) சென்னை அண்ணா நீச்சல் தடாகத்தில் தொடர்ந்து எண்பது மணிநேரம் தவளை போல் வாழ்ந்து தமிழக மண்ணிலும் ஒரு உலகசாதனையை 1981ம் ஆண்டு யூலை மாதம் நிகழ்த்தினார்.

மேலேயுள்ள ஏழு உலக சாதனைகளும் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன.

## மக்கள் இதயங்களில் இடம் பெற்ற அவரது சாதனைகள் சில

1) டிசம்பர் 1978ல் டுவிஸ்ட் நடனம் 128 மணி நேரம்

2) 70 இறாத்தல் எடையுள்ள இரும்பை 2000 தடவை கீழேயிருந்து மேலே தூக்கியது.

3) சென்னை அண்ணா நீச்சல் தடாகத்தில் நிகழ்த்திய உலக சாதனையை அடுத்து 1981 ஆகஸ்ட் மாதத்தில் தமிழக மண்ணில் ஆனந்தன் மற்றொரு உலக சாதனையை நிகழ்த்த முயன்றார். சென்னை வீதிகளில் 149 மணி நேரம் தொடர்ந்து நடந்த ஆழிக்குமரன் மயக்கமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

4) யாழ்ப்பாண மண்ணில் 1983ம் ஆண்டு ஜனவரி 1ம் திகதி 22 அவுன்ஸ் பிலியட் தடியை 2520 தடவைகள் உயர்த்திய மயிர்க்கூச்செறியும் சாதனையை நிகழ்த்தினார்.

5) 130 இறாத்தல் எடையுள்ள இரும்பை தோளில் காவிக்கொண்டு ஒற்றைக் காலில் நின்ற சாதனை.

ஆனந்தனுக்கு வல்வையில் விளையாட்டுக்கழகங்கள் பின்பு அவர் படித்த பாடசாலைகள், அதனைத் தொடர்ந்து நாடு பூராகவும் வரவேற்பளித்தும் பரிசுகள் வழங்கியும் கௌரவித்தனர். வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் புகழாராம் சூட்டி மகிழ்ந்தது.

வீரகேசரி பத்திரிகை ஆழிக்குமரன் ஆனந்தன் சிறப்பிதழ் என பல பக்கங்களில் வெளியிட்டிருந்தது. யாழ்.முஸ்லிம்கள் பிரமாண்டமான ஊர்வலத்தையும் ஜின்னா மைதானத்தில் பெரும் வரவேற்புக் கூட்டத்தையும் அளித்து கௌரவித்தனர்.

# ஆழியில் காவியம் படைத்தவன்
# ஆழியில் கதை முடித்தவன்



1963ம் ஆண்டு வல்வை ரேவடி மைதானத்தில் பாக்குநீரிணையை ஆனந்தன் நீந்திய போது நடந்த வீர வரவேற்பில் தந்தை செல்வா **ஆனந்தன்** தொடர்ந்து பல சாதனைகளைச் செய்ய வேண்டுமென வாழ்த்திய வரலாற்று நிகழ்ச்சி.


*ஆழிக்குமரன் என்று அழை பெயர் பெற்றவன்!*
*அருஞ்செயல் முடித்துப் பெரும் புகழ் உற்றவன்!*
*ஆழிக்கரை அமை வல்வையின் வித்தவன்!*
*அன்னை எம் தமிழிற்கு அணி செய் முத்தவன்!*
*ஆழிசூழ் அகிலம் தனை அறிந்திட வைத்தவன்!*
*அழியாப் புகழையும் அந்த ஆழியில் பெற்றவன்!*
*ஆழியில் தனது இனிய ஆவியும் விட்டவன்!*
*அழிவு கடந்து ஆனந்தன் நிலை பெற்றவன்!*

*வல்வை தாய்மணி வயிற்றில் தலைமகனாய் வாய்த்தவன்!*
*வையகத்தில் நாம் தலைநிமிர வந்து தமிழனாய் பூத்தவன்!*
*வல்வைக்கடலை திடலெனக் கொண்டே அவன் வாழ்ந்தவன்!*
*வளரும் பொழுதில் அனுதினமும் கடலில் தோய்ந்தவன்!*
*பல்கலை பயில சட்டத்திலே முதல்பட்டம் கொடுத்தனர்!*
*படிப்பினைத் தொடர்ந்து பொருளியலிலும் ஒரு பட்டம் எடுத்தனன்!*
*கல்விக் கடலினைக் கடக்க மட்டுமா காவிய நாயகன் நினைந்தான்!*
*வல்வை கடலின் நீளம் அளக்கவும் தூயவன் முனைந்தனன்!*

*சாதனை ஏட்டினில் ஏழுசாதனை பொறித்தவன்! - பல*
*சாதனை பதித்த பெருஞ்சாதனை படைத்தனன்!*
*சாதனை இரண்டினை ஒருதினம் புரிந்தனன்! - அகில*
*சாதனை குழுவினர் இவன்திறம் வியந்தனர்!*
*சாத முடிப்பதில் வீரசாகசம் புரிந்தனன்! - தான்*
*சாதனை படைப்பதைத்தன் (சாவு) வரை தொடர்ந்தனன்!*
*சாதனைப் பயிரைப் பலர் சகத்திலே விதைத்தனர்! இவரோ*
*சாதனைக் கின்னுயிர் அதனையும் அளித்தனர்!*

*சட்டத்தரணி கனக.மனோகரன் அவர்களால் 31.07.94 அன்று கனடாவில் தமிழ் வானொலிகளில் ஒன்றான "கீதவாணி'யில் வாசிக்கப்பட்ட கவிதைகளிற் சில*

# கப்பல் அனுபவம் பற்றி



பாக்குநீரிணையா அது ஒரு பெட்டைக்கடல். கடுவன் கடல் எனப் பெயர் எடுத்த அராபிக்கடலையெல்லாம் கட்டியாண்ட எங்களுக்கு இந்த சிறுகடல் எம் மாத்திரம்! என்று இறுமாப்புக் கொள்கிறார் தண்டையல் துரைசாமி. பாய்க் கப்பலின் ஆதிக்கம் தலைதூக்கி இருந்த காலத்தில் 40 வருடகாலம் துணிகரம் மிக்க கடல் வாழ்வை மேற்கொண்டு இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் வர்த்தகக்கப்பல் போக்குவரத்தை நடத்திய தண்டையல் இன்று 82 வயதை எட்டிப் பிடித்து விட்டாலும் வச்சிரம் பாய்ந்த அவரது உடற்கட்டு பழைய அனுபவங்களையெல்லாம் சொல்லும் போது இளமை முறுக்கு பெறுகிறது.

இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் ஜப்பான் குண்டுக்கும் அஞ்சாமல் அரக்கனில் இருந்து கப்பலைக் கொண்டு வந்த அஞ்சாநெஞ்சன் இன்று வல்வெட்டித்துறை சந்தைக் கருகில் சிறுகடையொன்றை நடத்துவதன் மூலம் வாழ்க்கைப் படகை செலுத்திக் கொண்டிருக்கிறார்.

## பழம்பெரும் தண்டயல் துரைசாமி கூறுகிறார்.

பழைய கலகலப்பையெல்லாம் இழந்து மௌன நிலையில் கிடக்கும் துறைமுகத்திற்கு நேர் எதிரே வசித்து வரும் திரு துரைசாமி கடைசியாக நின்ற பாய்க்கப்பலையும் கடந்த வருடம் உடைத்து விட்டார்களேயெனப் பெருமூச்சு விட்ட வண்ணம் தன் கடந்தகால அனுபவங்களைச் சுவைபடக் கூறுகிறார்.

பாய்கப்பல் ஒன்றில் எடுபிடி வேலை செய்யும் பொடியனாக என் கடல் வாழ்வு ஆரம்பமானது. கப்பல் சமையல்காரனாக, மாலுமியாக, பின் சுக்கான் பிடிப்பவனாகப் பதவி உயர்ந்து பின் தண்டையல் ஸ்தானத்தைப் பெற்றேன். செல்வநாயகம் தண்டையலும், வீரகத்திப்பிள்ளையுமே என் குருநாதன்களாவர். பின்பு கொழும்புக்குப் போய் கப்பல் மாஸ்ரர் பரீட்சையில் சித்தியடைந்து கடலில் கைக்கொள்ளும் பல தொழில் நுணுக்கங்களையும் கற்றுக் கொண்டேன்.

வெளிச்சம் மூலமாகவும் விசில் ஊதுவது மூலமாகவும் சிக்னல்களைக் கையாளுவோம். வைன மோறா டவாமோறா என்ற அந்த சிக்னல்கள் மேல்நாட்டு சிக்னல் முறைகளை விட சிறந்தவை. மேல்நாட்டார் கையாளும் சிக்னல்கள் பனிகாலத்தில் பயன்படக்கூடியவையல்ல.

வல்வெட்டித்துறையில் தூசி படிந்து உறங்கிக் கிடக்கும் கிட்டங்கிகளும் ஆழ்ந்த மௌனத்தில் இருக்கும் துறைமுகமும் அங்கு மிங்குமாகச் சிதறிக் கிடக்கும் பாய்க்கப்பல்கள் துண்டுகளும் பழைய கதைகளை நினைவூட்டுகின்றன. "நித்தியகல்யாணி" "சித்தி விநாயகர்' ஆகிய கப்பலகளில் தண்டயல் ஆக பதவி வகித்துள்ளேன். சுமார் 40 வருடகால இந்த கடல் வாழ்வில் பயங்கரமான பல அனுபவங்கள் கிடை த்தன. அவையாவற்றையும் வெற்றிகரமாகச் சமாளித்து என் கப்பலை ஏதாவது ஒரு துறை முகத்திற்குக் கொண்டு போய்ச் சேர்ந்திருக்கின்றேனே தவிர அபாயத்திற்குப் பலியானது கிடை யாது.

தேங்காய், புகையிலை, ஓடு, அரிசி, நெல் முதலான சிறு தானியங்கள், சட்டிபானை, ஆகியவற்றை ஏற்றுமதி இறக்குமதி செய்வதில் எங்கள் கப்பல்கள் ஈடுபட்டிருந்தன. அரக்கன், ரங்கூன், கொல்லம் கொச்சி, மலபார், முதலான இடங்களுக்கு அடிக்கடி போவதுண்டு. ஒருமுறை பம்பாயிலுள்ள போர்பந்தர் என்ற இடத்துக்கு ஓடு ஏற்றிச் சென்றிருந்தேன். போர்பந்தர் தான் காந்தி மகாத்மாவின் ஊர் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா! எங்கள் ஏற்றுமதி இறக்குமதி வேலை இந்தியா இலங்கைக்குமிடையில் மட்டும் நடக்கவில்லை. இந்தியாவில் ஒரு துறையில் ஏற்றி அங்குள்ள மற்றொரு துறைக்கு கொண்டு போய் இறக்கும் வேலையையும் செய்து வந்திருக்கின்றோம்.

நாங்கள் பாக்குநீரிணை அராபிக்கடல் ஆகியவற்றில் ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்தோம். இந்தப் பாக்குநீரிணை இருக்கின்றதே அதில் நீந்துவது கொஞ்சம் கஷ்டம் தான். ஆனால் கப்பலில் பிரயாணம் செய்வது மிகச் சுலபமானது. அதைப் பெட்டைக்கடல் என்றும் அராபிக் கடலைக் கடுவன் கடல் என்றும் சொல்வார்கள் மாலுமிகள். குறுக்கும் மறுக்கும் நீரோட்டம் தட்டுப்பாடோ காலக்கிரமமோ இன்றி ஓடுவதால் நீந்துவது கஷ்டம் என்றேன்.

ஒரு தடவை அரக்கனில் இருந்து பத்து கப்பல்கள் கூட்டமாகப் புறப்பட்டு வந்தன. அவற்றில் எனது கப்பலும் ஒன்று. நடுக்கடலில் வரும்போதே பயங் கரமான புயல் எழுந்தது. பாய் பறந்து விட்டது. சமாளிக்க முடியவில்லை. உடனே கப்பலில் இருந்த மூடைகளையெல்லாம் கடலில் வீசிவிட்டு ரங்கூனுக்குத் திரும்பிப் போய்ச் சேர்ந்தோம்.

கடல் கொந்தளிக்கத் தொடங்கினால் அலை கடல் மட்டத்தில் இருந்து ஐந்து ஆறு முழ உயரத்துக்கு மேலெழும்பும். ஆயினும் கப்பலுக் குள் தண்ணீர் வந்து சேர விட மாட்டோம். புயலினால் பாய்பறந்தால் அரை மைலுக்கு அப் பால் கூட அது போய்ச் சேர்ந்து விடும். அபாயம் தலைக்கு மிஞ்சி விட்டால் தான் கப்பலை கட்டுப் படுத்துவதற்காக பாய் மரத்தைத் தறிப்போம். அப்படித் தறிக்க வேண்டிய துரதிர்ஷ்டம் என் அனுபவத்தில் ஒருபோதும் ஏற்பட்டதில்லை. மிக வும் கஷ்டமான ஒரு அனுபவம் 1917ம் ஆண்டில் எனக்கு ஏற்பட்டது. தெய்வாதீனமாக அதனைச் சமாளித்து விட்டேன்.

1945ல் ஜப்பான் குண்டு என்னை மிரட்டிய சம்பவ மும் நினைவுக்கு வருகின்றது. அரக்கனில் இரு ந்து புறப்படும் போதே ஜப்பானிய கப்பல்களின் நடமாட்டம் பற்றி எச்சரித்தார்கள். நான் துணிச்ச லுடன் கப்பலைக் கொண்டு கிளம்பி வழக்கமான பாதைக்கு பதில் வேறு பாதையால் அந்த 1150 மைல் தூரத்தையும் 11 நாள் பிரயாணம் செய்து வல்வெட்டித்துறைக்கு வந்து விட்டேன். நான் புறப்பட்ட மறுநாள் கிளம்பிய மகாலட்சுமி ஜப்பான் குண்டுக்கு பலியானது. மிகச் சிலரே பலகை-யொன்றின் உதவியால் தப்பி ஆங்கிலேயரின் இயந்திரப்படகு மூலம் கரை சேர்ந்தனர்.

பாய்க் கப்பலின் கதை பழங்கதை - பாய்க் கப்பலின் கதையெல்லாம் இப்போது பழங்கதை யாகி விட்டது. மூன்று மணி நேரத்தில் பாக்கு நீரிணையைத் தாண்டிய எங்கள் கடல் பிரயாணம் இப்போதும் மனக் கண்முன் நிற்கிறது. அரசாங் கம் தானிய இறக்குமதியைப் பொறுப்பேற்று வீண் கட்டுப்பாடுகளை புகுத்தியதால் பாய்க்கப்பல்கள் இருந்த இடத்தில் இப்போது ஒன்றைக் கூடக் காணோம். கடைசியாக நின்ற வ.வ. இராமசாமிப் பிள்ளையின் கப்பலும் மூன்று வருடத்துக்கு முன் உடைக்கப்பட்டு விட்டது.


கப்பல் கட்டும் தொழில் - பாய்க் கப்பல்களுக்கு மீண்டும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் அவற்றைக் கட்டு வது ஒரு கஷ்டமான காரியமல்ல. அதற்கு தேவையான அளவு மரங்கள் இலங்கையிலே இருக்கி ன்றன. தேக்குமரம் மட்டும் ரங்கூனில் இருந்து வரவேண்டும். கப்பல் கட்டும் தொழிலில் பயிற்சி பெற்ற பலர் இன்றும் இருக்கிறார்கள். கொழும்பி லும் திருகோணமலையிலும் போய் இருக்கும் அவர்களை மீண்டும் அழைத்துத் தொழிலை சுலபமாக ஆரம்பித்து விடலாம். ஆனால் உற்பத் திச் செலவு தான் அதிகரிக்கும். முன்பு ஒரு லட்சம் ரூபாவுடன் ஒரு கப்பலை முடித்து விட லாம். இப்போது பல லட்சம் ரூபா தானும் போதாது. வல்வெட்டித்துறையில் ஆகக் கடைசி யாகக் கட்டிய கப்பல் "பருவதபத்தினி) அத்துடன் கப்பல் கட்டும் தொழில் தடைப்பட்டு நிற்கிறது.

(நன்றி - 30.03.1963 வீரகேசரியில் வெளிவந்த இக்கட்டுரை இரா.கனகரெத்தினம் (குரும்பசிட்டி) அவர்களினால் உருவாக்கப்பட்டுள்ள உலகத் தமிழர் ஆவண காப்பகத்தில் இருந்து எடுக்கப் பட்டது)

# ஆனந்தன் தலைமையில் நடந்த உண்ணாவிரதம்

1965ம் ஆண்டு வல்வை வேம்படி அருகே சாலை-யோரமாக நடந்து கொண்டிருந்த திரு வேலும் மயிலும் என்ற ஒரு வர்த்தகரை இராணுவ வாக னம் அடித்துக் கொன்றது. அதன் சாரதியோ அதில் இருந்த சிப்பாய்களோ அதைப் பற்றி அக்கறைப்படாது அலட்சியம் செய்து நில்லாது சென்று விட்டார்கள். மறுநாள் திரு வேலும் மயிலும் அவர்களது இறுதிக்கிரியை நடந்த போது மக்கள் பெரும் திரளாக அஞ்சலி செலுத் தினர். கிரியைகள் முடிந்த பின்பு மக்கள் அனை-வரும் இராணுவத்தினருக்கு எதிராக அமைதி யான முறையில் கோஷங்கள் எழுதப்பட்ட அட்டைகளைத் தாங்கி ஊர்வலமாகச் சனசமூக சேவா நிலையம் வரை சென்று தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்து நீச்சல் வீரன் ஆனந்தன் தலைமையில் காலஞ்சென்ற வேலும் மயிலும் குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் இதுபோல் மீண்டும் நடக்கக்கூடாது என்றும் அரசு உத்தரவாதம் அளி க்க வேண்டும் என்று கோரி பத்து இளைஞர்கள் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தனர். பின்னர் அரச குழுவொன்று உண்ணாவிரதம் இருந்தவர் களைச் சந்தித்துப் பேசியது. யாழ்.அரசஅதிபர், பருத்தித்துறை டி.ஆர்.ஓ., வல்வை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி, வல்வை பொலிஸ்அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர். வல்வை மக்கள் சார்பில் பருத்தித்துறை பா.உ. அவர்களும் கல ந்து கொண்டனர். பின்னர் தாம் அரசுடன் பேசி நடவடிக்கை எடுப்பதாகவும் உண்ணாவிரதத்தை கைவிடும்படி கேட்டனர். அதற்குப் பின்னர் மூன்று நாளின் பின் உண்ணாவிரதம் நிறுத்தப்பட்டது. ஆனந்தன் ஒரு வெறும் விளையாட்டு வீரன் மட்டு மல்ல தமது மக்களின் உரிமைப் போராட்டத் திலும் கலந்து கொண்ட போராளியும் ஆவார்.

வல்வையின் நடுநாயகமாக அமைந் திருக்கும் சனசமூக சேவா நிலையம் வல்வையின் பாராளுமன்றம் போல் விளங்குகின்றது. எமது கலாச்சாரத்தின் ஏற்றத்திற்கும் உழைக்கும் அதே வேளையில் பல அரசியல் நடவடிக்கை களிலும் இந்த நிலையம் ஈடுபட்டு வருகிறது. வல்வை மக்கள் அடிக்கடி இராணுவத்தினராலும் பொலிசாராலும் துன்புறுத்தப்பட்டு வந்தனர். ஒருமுறை தனது மகனை கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டு துன்புறுத்தப்படுவதை கேள்வியுற்ற தாய் நீதி கேட்க பொலிஸ் நிலையம் சென்ற போது தாக்கப்பட்டார். மக்களின் வேண்டுகோளுக்கிணங்க ஊர் மக்கள் ஆளாகி வரும் கொடுமை-களைக் கண்டித்தும், சுமுகமான தீர்வு காண வேண்டும் என்ற நன் நோக்குடன் நிலைய மண்டபவாயிலில் 1968 சித் திரை 8ம் திகதி மாலை ஆறு மணியள வில் பொதுக்கூட்டம் ஆரம்பமாகியது. நிலையத்தின் தலைவர் ச.ஞானமூர்த்தி (சமாதான நீதிவான்) தலைமை தாங்க எங்கள் அந்நாள் பாராளுமன்ற உறுப்பி னர் திரு.க.துரைரெத்தினம், வல்வை நகரசபைத் தலைவர் திரு மு.இரத்தின வடிவேல் ஆகியோரும் அன்று



## வர்த்தகப் பிரமுகர் சிவஞானசுந்தரம் படுகொலை

உட்பட யாவரும் கடைகளில் இருந்த வெற்றுப் போத்தல் களாலும் கற்களாலும் திருப்பித் தாக்கினார்கள். பாராளு மன்ற உறுப்பினர் உட்பட நூற்றுக்கு மேற்பட்டவர்கள் நிலைய மண்டபத்தினுள் அகப்பட்டிருந்தனர். வீதியால் வந்து கொண்டிருந்த தொழில்அதிபர் ஆர்.வி.ஜி.சிங்கம் பீடி உரிமையாளர் திரு இ.சிவஞானசுந்தரம் அவ்விடத்திலேயே



நிர்வாகசபையில் இருந்த திரு கனக.மனோகரன், நான் உட்பட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். பொலிசாருக்கு எதிரான கூட்டம் ஆகையால் பொலிசா ரின் அனுமதிக்கு விண்ணப்பிக்க முற்படவில்லை.

ஏழரை மணியளவில் இராணுவத்தினரும் பொலிசாரும் ஆயுத பாணியாக வந்து பொதுமக்களை தாக்கினார்கள். அன்று ஈழப்போராட்டம், ஏன்? ஆயுத போராட்டமே ஆரம் பிக்காத காலம். பெரியவர்கள், இளைஞர்கள் பெண்கள்

துப்பாக்கிக் குண்டுக்குப் பலியானார். பல பொதுமக்களும் காயமடைந்தனர்.

ஆத்திரம் அடைந்த இளைஞரில் சிலர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சார்ஜன்ட் இராஜரெத்தினமும் பல பொலி சாரும் காயம் அடைந்தனர். இராணுவத் தினரால் கடைகள் தீமூட்டப்பட்டன. நூற்றுக்கணக்கான துவிச்சக்கர வண்டி கள் சேதமாக்கப்பட்டன. சம்பவம் நடந்த வுடன் உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பி னர் திரு மு.சிவசிதம்பரம் அவர்களுக்கு செய்தி அறிவிக்கப்பட்டது. சம்பவம் நட ந்த இடத்திற்கு விரைந்து வந்து நிலை யத்தில் அகப்பட்ட யாவரையும் விடுவித் தார். மறுநாள் அதே இடத்தில் பிரேத பரிசோதனைகள் நடக்கும் போது பொது மக்கள் மீது இராணுவத்தினர் பதட்டமான நிலையில் துப்பாக்கி பிரயோகம் செய்ய முற்பட்ட வேளையில் தனது சிம்மக் குரலில் (**Put all your guns down**) ஆங்கி லத்தில் சிங்கம் போல் கர்ஷித்து சுட முற்பட்ட பொலிசாரை நடுநடுங்க வைத் ததோடு அவ்விடத்தில் பிரசன்னமாகியி ருந்த எஸ்.பி.சுந்தரலிங்கத்தைப் பார்த்து நீர் பொலிசாரைக் கட்டுப்பாட்டில் வைத் திருக்காவிடில் பின்னர் பதில் சொல்ல வேண்டி வரும் என்று எச்சரித்து நிலை

மையைக் கட்டுப்படுத்திய சம்பவத்தை இன்றும் வல்வை மக்கள் நன்றியுடன் நினைவு கொள்வர்.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பத்திரனா அவர்கள் மீதும் இராணுவத்தினர் மீதும் யாழ். நீதிமன்றத்தில் நடந்த வழக்கில் காலஞ்சென்ற வ.இ. சிவஞானசுந்தரம் சார்பாகவும், வல்வை மக்கள் சார்பாகவும் ஆரம்பத்தில் சட்டமேதை ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆஜராகியிருந்தார். திரு மு.சிவசிதம்பரம் இலவசமாக வழக்குரைஞராக வாதாடினார். சித்திரை 8, 1968ல் நடந்த இந்த பயங்கரமான பழைய நிகழ்வைநினைவூட்ட இன்றும் வல்வை சந்தியில் திரு வ.வ.இ. அப்பா அவர்களால் கட்டப்பட்ட நினைவு இளைப்பாறு மண்டபம் நிமிர்ந்து நிற்கின்றது.

## ஒரே மேடையில் தேர்தல் பிரச்சாரம்

1965ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் எமது பருத்தித்துறை தொகுதிக்கு தமிழ்காங்கிரஸ் கட்சி சார்பில் பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு ந.நடராசா அவர்களும், கம்யூனிஸ்கட்சி சார்பில் திரு கு.மோதிலால்நேருவும், தமிழரசுக் கட்சி சார்பில் திரு க.துரைரெத்தினம் அவர்களும் போட்டியிட்டனர்.

தொண்டமானாறு மக்களால் பெரிய கடற்கரை மைதானத்தில் ஒரே மேடையில் தமது கொள்கைகளை விளக்குமாறு ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் மூவரும் அரை மணித்தியாலம் தனித்தனியே பேசி முடிந்த பின்பு பதில் உரையாக ஐந்து ஐந்து நிமிடங்களும் பேசினர். பெரும் திரளாக மக்கள் கலந்து கொண்டு இப்படியான பொதுமேடைப் பிரச்சாரம் எங்கும் நடந்தது இல்லையென மக்களும் பத்திரிகைகளும் அன்று பாராட்டின.

## வல்வையின் பண்பாடு

வல்வையின் மத்திய மஹா வித்தியாலயமாய் விளங்கும் சிதம்பராக்கல்லூரியில் ஆண்டு தோறும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். இது ஒரு நூதனமல்ல. எல்லா ஊர்களிலும் எல்லாக் கல்லூரிகளிலும் நடைபெறுகின்றன. ஆனால் வல்வையிலுள்ள சிறப்பு என்னவென்றால் இந்த போட்டிகள் கல்லூரியுடன் முற்றுப் பெறாது. குறிச்சிக்கு ஒரு விளையாட்டுப் போட்டி, தெருவுக்கு ஒரு விளையாட்டுப் போட்டியென்று தொடர்ந்து வாரக்கணக்காய் நடந்து கொண்டே போகும். உடலை வளர்க்கவும் ஒற்றுமையை உயர்த்தவும் ஊர் முழுமையும் ஒன்று சேரும். இளையோரும் முதியோரும் ஊக்கத்துடன் இப்போட்டிகளில் பங்கு பெறுவர். - இது பண்பாடு

## வேலணை கறுப்புக்கொடி போராட்டத்தில் வல்வையர் பங்கு

தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகளும் பறிக்கப்பட்ட நிலையில் இலங்கை குடியரசான பின்னர் வடபகுதிக்கு வரும் அமைச்சர்களுக்கு கறுப்புக்கொடி காட்டி எதிர்ப்பு தெரிவிக்கும் போராட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட தொண்டர்களே பங்கு பற்றக்கூடியதாக இருந்தது. தீவுப்பகுதியான வேலணையில் அமைந்த பாடசாலையில் புதிய கட்டிடத்தை அப்போதைய தபால்மந்திரி செல்லையா குமாரசூரியர் திறந்து வைக்க விருந்தார். வல்வை இளைஞர்களுக்கு தீவுப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர் கா.பொ.இரத்தினம் அவர்களிடமிருந்து அழைப்பு வந்தது. 1973 தை முதலாம் திகதி எமது பாராளுமன்ற உறுப்பினர் தி[illegible]ரைரத்தினம், திரு ச.ஞானமூர்த்தி அப்பா, மூன்றாவது சகாப்தமாக தமிழீ னத்தின் தலைமையை ஏற்றிருக்கும் (தம்பி என்று நாம் அப்போது செல்லமாக அழைக்கும்) தலைவர் பிரபா கரன் உட்பட 75 இளைஞர்கள் இரண்டு தட்டி வானில் வேலணையில் அமைந்த பா.உ. கா.பொ.இரத்தினம் அவர்கள் வீடு சென்றோம். எங்களைக் கண்டவுடன் அங்கு இருந்த தலைவர்களுக்கு சந்தோஷம் பொங்கியது. எங்களுடைய பெயர்கள் முகவரிகள் யாவும் எடுக்கப்பட்டன. கறுப்புக்கொடிகள் தரப்பட்டன.


தலைவர்களான திரு அ.அமிர்தலிங்கம், திரு மு.சிவசிதம்பரம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களும், அங்கு கூடிய யாவரும் அணிவகுத்து ஒரு பனங்கூடல் வழியாக சென்று கொண்டிருந்தோம். பாடசாலையை அண்மித்ததும் பாடசாலை திறப்புவிழாவை ஒழுங்கு செய்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களான அரச கையாட்களும், அப்போதைய யாழ்.பொலிஸ் அதிபர் திரு அரியசிங்கா அவர்களும் அவரது பொலிசாரும் துப்பாக்கி சகிதம் வழிமறித்தனர். பொலிசார் துப்பாக்கி ரவைகளை நிரப்பி சுடுவதற்கு ஆயத்தம் செய்தனர்.

தமது பெல்ட்டுக்களை கழற்றி கையில் எடுத்தும் தாக்குவதற்கும் ஆயத்தம் செய்தனர்.

அன்றைய யாழ்.பொலிஸ்அதிபர் திரு ஆரியசிங்கா அவர்கள் திரு அ.அமிர்தலிங்கம் அவர்களிடம் தயவு செய்து விழா மண்டபத்தினுள் வரவேண்டாம் எனக் கேட்டுக் கொண்டார். நீங்கள் மந்திரி வரும் பாதையில் வேலணை பழைய பேருந்து வண்டி நிலையத்தில் நின்று உங்கள் எதிர்ப்பைக் காட்டுங்கள் என்றும் கூறினார். பின்பு அவர் எதிரே நின்று குமாரசூரியர் வரும்போது குமாரசூரியரே திரும்பிப் போ! என கோஷமிட்டு கறுப்புக் கொடி காட்டி விட்டுத் திரும்பினோம். வேலணை கறுப்புக் கொடிப் போராட்டமே திரு வே.பிரபாகரன் அவர்கள் அறவழியில் கலந்து கொண்ட முதல் போராட்டமாக அமைந்திருந்தது. அன்று நடந்த சம்பவங்கள் தம்பி பிரபாகரன் அவர்களை அறவழியில் நம்பிக்கை இழக்கக் காரணமாகவும் இருந்தது.

(கனடா லான்ஸ்டவுன் தமிழர் கூட்டுறவு மண்டபத்தில் திரு ஞானமூர்த்தி அவர்கள் மறைவையொட்டி வல்வை நலன்புரிச் சங்கம் நடாத்திய இரங்கல் கூட்டத்தில் என்னால் வெளியிடப்பட்ட நீங்காத நினைவுகள் துண்டுப்பிரசுரத்தில் இருந்து)

வ
·
ல்
லை
வ
லி
ப
ர்





## வர்த்தகக் கப்பலில் வாய்ப்புக்கள் தந்த

# திரு மணிவாசகர்

அரசியல் மாற்றம் காரணமாகவும் இராணுவ கடற்படை நடவடிக்கைகளாலும் எம் இளைஞர்கள் பலர் வெளிநாட்டு வர்த்தகக் கப்பலில் வேலைக்கு சேர முற்பட்டனர். தொழில்அதிபர் திரு வி.பி.ஞானக்கோன் அவர்களின் உதவியோடு திரு தாமோதரம் மணிவாசகர் (மணிஅண்ணா) அவர்கள் பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை கப்பலுக்கு அனுப்பி வல்வையின் பொருளாதாரத்தை உயர்த்திய பெருமைக்கு உரியவரானார். இன்று பல கப்பல் உத்தியோகத்தர்கள் உருவாகி இருப்பதற்கும் இவர்களுடைய சேவையேயாகும். 1972ம் ஆண்டு வல்வை மாலுமிகள் நலன்புரிச் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கி அவர்களுக்கு ஆரம்பப் பயிற்சி அளித்து கப்பல் ஏற கொழும்பு அனுப்பியும் சேவை புரிந்தவர் கப்டன் திரு அரு.அம்பலவாணர் ஆவார்.



திரு காத்தாமுத்து மோனகதாஸ் அவர்கள் எமது ஊரின் கப்பலோட்டிகளின் கனவுகளை நனவாக்க வேண்டுமென்ற இலட்சியத்தோடு காங்கேசன் துறை முகத்தில் **Pilot**ஆக பதவி ஏற்று கடமையாற்றியுள்ளார். இளைஞர்களுக்கு கப்பல் தொழில் பயிற்சி வகுப்புக்களையும் நடத்திக் கொண்டிருந்தார்.
அன்னாரை 01.09.1984 அன்று பருத்தித்துறை நகரில் காரில் சென்று கொண்டிருந்த வேளையில் ஸ்ரீலங்கா இராணுவம் சுட்டுக் கொன்றது.

ஈழத்தமிழரிடையே பிரிவினைகளை வளர்க்க அவர்களின் கட்சி அரசியல்களும் காரணங்கள் ஆகின. காலத்துக்குக் காலம் வாழ்ந்த அரசியல் தலைவர்களின் ஆளுமை கவர்ச்சிகளும் அவர்களிடையே பிரிவினையை வளர்த்தன. முதலில் இளைஞர் காங்கிரஸ், அதன்பின்பு இலங்கை தமிழ்க் காங்கிரஸ், இலங்கை தமிழரசுக்கட்சி, திரு செ.சுந்தரலிங்கத்தின் ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணி, காவலூர் திரு வ.நவரத்தினம் அவர்களின் தமிழர் சுயாட்சிக்கழகம், மலைநாட்டு தமிழர்களுக்காக இலங்கை இந்திய காங்கிரசு என்பன இருந்தன.

இதனால் தமிழினம் இழந்தவை எத்தனையோ! 1956ம் ஆண்டு தனிச்சிங்களச்சட்டம் அமுல்ப் படுத்தப்பட்ட வேளையில் தமிழ்க்கட்சிகளையும், அவர்களின் தலைவர்களையும் ஒன்றுபடுத்துவதற்காக பிரதம நீதியரசராகவும் இடைக்கால மகாதேசாதிபதியாகவும் பதவி வகித்த திரு செ.நாகலிங்கம் (கி.யூசி) அவர்கள் பெரும் பாடுபட்டார். அவரது முயற்சிகள் பலனளிக்காத நிலையில் கட்சிகள் தொடர்ந்தும் பிளவுபட்டு மோதிக் கொண்டன.

1972ம் ஆண்டில் சில அடிப்படை உரிமைகளும் பறிக்கப்பட்ட நிலையில் புதிய குடியரசு யாப்பு அமுலுக்கு வர இருந்தது. அப்போது பிளவுபட்டு இருந்த தமிழ்காங்கிரஸ்கட்சி, தமிழரசுக்கட்சி, ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணி, தமிழர் சுயாட்சிக்கழகம் ஆகிய நான்கு கட்சிகளையும் இணைக்கும் முயற்சியில் வல்வைப் பெரியார்களும் இளைஞர்களும் ஈடுபட்டு அதற்கான திகதியையும் குறித்தாயிற்று. அந்த வாரப் பத்திரிகைகள் எல்லாம் ஒற்றுமைக்கூட்டம் பற்றியதாகவே இருந்தது. அன்று பத்திரிகை ஆசிரியர்களும் பெருந்திரளான மக்களும் வல்வையில் கூடினார்கள். வல்வை வீதிகள் எங்கணும் தலைவர்களை வரவேற்று வாசகங்களும் ஒற்றுமையை வலியுறுத்தி சுவரொட்டிகளும், பாதாதைகளும் காணப்பட்டன. பிரபல வர்த்தகர் திரு செல்லத்துரை தங்கவடிவேல் அவர்களின் மாடி வீட்டில் இதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டும் இருந்தது.

07.02.1972 பிற்பகல் இரண்டு மணியளவில் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் வரத் தொடங்கினார்கள். மக்கள் ஒவ்வொரு தலைவர்கள் வரும்போதும் கைதட்டி ஒற்றுமையை வலியுறுத்தி கோஷம் எழுப்பினார்கள். திரு அ.அமிர்தலிங்கம், திரு மு.சிவசிதம்பரம், அடங்காத்தமிழர் திரு செ.சுந்தரலிங்கம், சுயாட்சிக்கழகத் தலைவர் திரு வ.நவரத்தினம் மற்றும் பல பாராளுமன்ற உறுப்பினர்களும், யாழ்.மேயர் திரு நாகராசா, பருத்தித்துறை நகரசபைத்தலைவர் திரு ந.நடராசா, எமது பாராளுமன்ற உறுப்பினர் திரு க.துரைரத்தினம் உட்பட யாவரும் வருகை தந்தார்கள். நீண்ட நேரக் கலந்துரையாடலின் பின்பு யாவரும் ஒன்று சேர்ந்து தமிழ்மக்களின் ஆகக் குறைந்த பட்ச கோரிக்கையாக ஆறு அம்சக் கோரிக்கைகள் தயாரிக்கப்பட்டன. அதில் யாவரும் கையொப்பம்



**மேலேயுள்ள படத்தில் வவுனியா முன்னாள் பா.உ. அடங்காத் தமிழர் சுந்தரலிங்கம், திரு ஞானமூர்த்தி, திரு துரைரத்தினம், திரு நடராசா, திரு வேற்பிள்ளை, திரு அரு.சுபாரெத்தினம் , திரு நாகராசா உட்பட பல வல்வை இளைஞர்களையும் காணலாம்.**

# வல்வையில் கருவாகி உருவான தமிழர் கூட்டணி

இட்டனர். பின்னர் திரு செ.தங்கவடிவேல் அவர்கள் அளித்த இனிய இராப்போசனத்துடன் இனிது முடிவடைந்தது. தந்தை செல்வா மூலம் ஆறு அம்சக் கோரிக்கை அரசிற்கு அனுப்பப்பட்டது. அப்போது பிரதமராக இருந்த திருமதி

பண்டாரநாயக்காவிடமிருந்து அதற்கான பதில் வராத நிலையில் திரு சா.ஜே.வி.செல்வநாயகம் (தந்தை செல்வா) பாராளுமன்றத்தில் தமிழ் மக்கள் இந்த அரசியல் அமைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் தனது காங்கேசன் துறை பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதாகவும் நடைபெற இருக்கும் இடைத்தேர்தலில் அரசு தன்னுடன் போட்டியிட வாய்ப்பு தருவதாக கூறி வெளியேறினார். இரண்டரை வருடங்கள் கழித்து 06.02.75இல் நடந்த இடைத்தேர்தலில் தமிழீழம் தான் தமிழ் மக்களின் இறுதிமுடிவு என அரசுக்கும் வெளி உலகத்திற்கும் அறிவித்து தேர்தலில் நின்று வெற்றி பெற்றார்.

அன்று ஏற்படுத்திய ஒற்றுமையால் 1977ல் தமிழர் விடுதலைக்கூட்டணி மன்னார் தொடக்கம் பொத்துவில் வரை வடகிழக்கின் 18 தொகுதிகளை அறவழியில் வென்று இளைஞர்கள் போராடும் வரை பணியாற்றியது. ஒரே கொடிக் கீழ் இணைத்து இச்சாதனை படைத்தவர்கள் அமரர்களான திரு ச.ஞானமூர்த்தி, திரு அரு.சபாரத்தினம், திரு வேற்பிள்ளை ஆகிய மூவரும் ஆவார்கள்.


**1 S.J.V.CHEVANAYAKAM AND SRILANKAN TAMIL NATIONALISM (1947 - 1977) A.JAYARATNAM WIL SON -PAGE 124**

2) “தமிழ் அரசுக்கட்சி வெள்ளி விழா மலர்' (1975) புதுப்பாதை அமைத்த வல்வெட்டித்துறை பக்கம் 52, பக்கம் 54

3) இலட்சிய இதயங்களோடு - அமிர்தலிங்கம் எழுதியது பக்கம் 106

# யாழ்ப்பாணம் தமிழாராய்ச்சி மாநாட்டில்

# அன்னபூரணி



1.1.74ல் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போது மாநாட்டு வல்வைக்குழுவால் எம் முன்னோர்களால் அமெரிக்கா கொண்டு செல்லப்பட்ட அன்னபூரணி என்ற பாய்மரக்கப்பலின் மாதிரி உருவொன்றை அமைத்து அலங்கார ஊர்திப் பவனியில் பங்கு கொண்டதோடு சிலம்படி விளையாட்டுக்களையும் காண்பித்தனர். பின்னர் மாநாட்டில் பங்குபற்றிய உலகத் தமிழ் அறிஞர்களை வல்வைக்கு வரவழைத்து விருந்து கொடுத்து வல்வை பற்றி சிறு நூலையும் கையளித்தார்.

நூல் வெளியிடும் வைபவத்தில் சுவிஸ்சலாந்தைச் சேர்ந்த மொழியியல் அறிஞர் கார் ஏகெல்லர் என்பவர் ஆற்றிய தமிழ் சொற்பொழிவில் ஒரு பகுதியில் இருந்து

“வல்வெட்டித்துறை மக்கள் சிரித்த முகத்துடன் விருந்தினரை வரவேற்கின்றனர். இப்படிக் கப்பல் கட்டித் துணிவுடன் பல நாடுகளுக்கும் சென்று புகழ் பரப்பிய மக்களின் ஊருக்கு வருவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

## வல்வையின் பண்பாடு எம் மூதாதையர்கள்

கோயில்களை மிகவும் துப்பரவாகவும், தூய்மையாகவும் வைத்திருந்து பூசைக் காலங்களிலோ திருவிழாக்காலங்களிலோ ஓர் ஒழுங்கு முறையைக் கடைப்பிடித்து ஆண்கள் ஒருபுறமும், பெண்கள் ஒருபுறமும் நின்று சுவாமி தரிசனம் செய்யச் சில நியதிகளை முற்காலம் தொட்டு ஏற்படுத்தியுள்ளார்கள். அத்தோடு ஆண்கள் மேலங்கியுடனோ காற்சட்டையுடனோ செல்லை இது பண்பாடு.

---

பொங்கு மாவளம் தங்கு மாநிலம்
பொன்எழில் கொஞ்சும் புகழ் ஞாலம்
எங்கள் தாயகம் எங்கள் தாயகம்
தங்க மாமணித் தமிழீழம்
இனிய வானிலே இனிய காற்றிலே
எழுபரி திக்கொடி திகழ்நாடு
மணிவிழி யாகும் தமிழ்மொழி காக்கும்
மாமற வர்வாழ் தமிழ்நாடு

மெய்யடியார்களை இறைவனாகக் கொண்டு அவர்களுக்கு அன்னம் அளித்து அவர்களை உபசரனை செய்வது மகேசுரபூஜையாகும். இந்தப் பணியை ஆற்றங்கரையில் சந்நிதி முருகனை தரிசிக்க வரும் அடியார்களுக்கு உள்ளன் போடு தன் இறுதிக்காலம் வரை ஆற்றி சிவ பதம் அடைந்த ஒரு பெரியார் திரு மயில்வாகன சுவாமி அவர்களாவார்.

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி என்னும் அழகுமிகு சிற்றூரில் முத்துக்குமாரு சின்னம்மா தம்பதி களுக்கு அருமை மகனாக 1913ஆம் ஆண்டு புரட்டாதி திங்கள் 26ம் நாள் முருகன் அடியான் மயில்வாகன சுவாமிஜி அவர்கள் இம்மண்ணில் உதித்தார். இளம் பராயத்தில் இந்தியா சென்று திருவண்ணாமலை என்னுமிடத்தில் ரமணமகரி ஷியின் சிஷ்யனாக வாழ்ந்தபின் செல்வசந்நிதி முருகனிடத்தில் வந்து பூசகர் ஒருவரின் உதவி யுடன் தென்னஞ்சோலை சூழ்ந்த சூழலில் மன அமைதி தரும் ஓர் இடத்தில் சிறு குடிசை அமைத்து முருகனின் பிரசாதத்தை உணவாக உட்கொண்டு வாழ்ந்து வந்தார். பசித்துவரும் அடியார்களுக்கு உணவளித்து முருகனை தரி சிக்கவரும் அடியார்களுக்கு அடியவனாக தொண்டாற்ற சித்தம் கொண்டு 1940ம் ஆண்டு ஒரு மடத்தை உருவாக்கித் தனது பணியைப் படிப்படியாக விரிவுபடுத்திச் சென்றார். அதற்கு ஆனந்தா ஆச்சிரமம் என்ற பெயரை சூட்டி சுவாமி 1985ஆம் ஆண்டு இறைவனடி சேரும்வரை சிறப்பாக மேற்கொண்டு வந்தது குறிப்பிடத்தக் கது.

1987ம் ஆண்டு ஒப்பரேசன் லிபரேசன் என்ற இரா ணுவ நடவடிக்கையினால் சீரழிக்கப்பட்ட சந் நிதி கோயில் சூழல் திரும்பவும் ஓரளவு புனரமைக்கப் பட்ட வேளையில் மயில்வாகன சுவாமியின் சீடனாக இறுதிக்காலம் வரை அவருடன் பணி யாற்றி அவரின் அன்பிற்கும் அருளிற்கும் பாத்திர மான திரு செ.மோகனதாஸ் அவர்கள் சுவாமி விட்டுச் சென்ற பணியை சிறப்பாக தொடர்கின்றார். 1993ம் ஆண்டிலிருந்து சுவாமியாரின் குருபூசை தொடர்பாக வடமராட்சி பாடசாலை மாணவர்களி டையே பேச்சுப்போட்டி, பண்ணிசைப்போட்டி நடா த்தி வருகின்றனர்.

மேலும் சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்ற விரும்பி சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண் பாட்டுப்பேரவை என்ற அமைப்பை இந்த ஆச்சிர மம் உருவாக்கியுள்ளது. எமது பாரம்பரிய கலை களான மிருதங்கம், ஆர்மோனியம் ஆகியவற்றை இலவசமாக நடாத்தி வருகின்றது.

இந்த சபைக்கு மறைந்த பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ.துரைராஜா அவர் கள் தனது இறுதிக்காலம் வரை தலைவராக இரு ந்து இதனை வழி நடாத்தி வந்தமை குறிப்பிடத் தக்கது.

# ஆனந்தா ஆச்சிரமம் மயில்வாகன சுவாமிஜி



அடியார்களுக்கு உணவு அளித்துத் தங்குமிட வசதி களையும் செய்து கொடுத்து அவர்களை திருப்திப்படுத் துவதையே தனது வாழ்க்கையின் பணியாக வாழ்ந்தவர்.

திரு மயில்வாகனசுவாமி அவர்களுடைய ஆச்சிரமத்தின் அன்னதானச் சிறப்பை அன்பர்கள் பலர் இன்றும் போற் றுகின்றனர். பலநூற்றுக்கணக்கான அடியார்களை ஒரே நேரத்தில் அமர்த்தி சுத்தமான உணவை சுவையாக அடியார்களுக்கு வழங்குவதில் அவர் தனிச்சிறப்பு பெற்ற வராக விளங்கினார். மேலும் வாழையிலையில் சாதம் இட்டபின் எல்லோரும் சேர்ந்து கூட்டாக முருகன் புகழைப் பாடிய பின்னரே சாதத்தை உட்கொள்ளும் அருள் நோக்கு அவரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு நல்ல பண்பாகும். அநியாயங்களும் அதர்மங்களும் மக்களிடையே பெருகி வரும் இக்காலத்தில் சமய சிந்தனைகளும் சமயத்துடன் இணைந்த தர்மநெறிகளுமே மனிதனை நெறிப் படுத்தி வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவனாக மாற்ற முடியும்.

வேறு எந்த தானங்கள் செய்தாலும் போதும் என்ற வார்த்தை வருவதில்லை. அன்னதானத்தை வழங்கும் பொழுது இதயசுத்தியுடன் போதும் என்ற வார்த்தை வருவதைக் காண்கின்றோம். இத்தகைய ஒரு சிறந்த பணியை

## முருகன் பாமாலை

*சிவ சிவ சிவ ஜெய முருகா செல்வச்*
*சன்னதி நடனே திருமாலின் — மருகா*
*தீராத விளையாட்டுப்பிள்ளை — முரகன்*
*தீராத விளையாட்டுப்பிள்ளை*

*1 மௌன பூசையை மகிழ்வுடன் ஏற்பான் — மெய்யன்*
*தவன மூன்றுடையாரைப் பிரியாமற் காப்பான் — தீராத*

*2 இமயங்கள் நியமங்கள் தவறி — பக்தி*
*பயமற்றுத் திரிவாரைப் பசியாலே வதைப்பான் — தீராத*

*3 நாலு நாளைக்கு நாவறளச் செய்வான் — ஐயன்*
*நாலாம் நாள் அன்னத்தை வாரியிறைப்பான் — தீராத*

*4 அன்னத்தை குறையாது கொடுப்பான் — அப்பா*
*சொன்னதை மீறினால் மீண்டும் நோய் விடிப்பான் — தீராத*

*5 தீராத நோயெல்லாம் தீர்ப்பான்— தேவன்*
*தீர்த்தம் திருநீறு பிரசாதம் பணிப்பான் — தீராத*

*6 பூசைக்கு மணியோசை பறையோசை கேட்டால் — பித்துப்*
*பேய் பிடித்தார்க்கெல்லாம் ஓயாத தொல்லை — தீராத*

*7 என்னப்பா முருகா என்றே கும்பிட்டழுதால் — முருகன்*
*தோன்றாத் துணையாகி வினைகளை தொலைப்பான் — தீராத*

*8 வெற்றி வேலுடன் மயிலுடன் வருவான் —வேந்தன்*
*வேண்டும் வரங்களை விரைவினில் தருவான் — தீராத*

*9 கண்முன்னே உருவாகி வருவான் — சற்று*
*எண்ணிப் பார்க்கு முன்னே மின்னல்போல் மறைவான் — தீராத*

*10 ஆறறிவார் அப்பன் பெருமை — முருகன்*
*ஆற்றங்கரை யோரம் அமர்ந்திட்ட புதுமை — தீராத*

**மயில்வாகனசுவாமிஜி**

---


**சூரர் குலம் மடிய வந்த சண்முகா - உன்**
**சொந்த இனம் அழிய முன்னே ஓடி வா**

---

## மண்ணின் மைந்தன் ஈழத்தமிழரின் பொருளாதார சுதந்திரத்தை வலியுறுத்திய

# துரைரத்தினம்

**(முன்னாள் பா.உ.)**



ஆற்றங்கரையான் சந்நிதியான் அருள் கொண்ட தொண்டமானாற்றில் திரு கதிரிப் பிள்ளை செல்ல முத்து தம்பதிகளுக்கு மகனாக திரு துரைரத்தினம் அவர்கள் 10.08.1930ல் பிறந்தார். பொருளாதாரத் துறையில் பட்டம் பெற்ற அவர் வல்வையில் திரு வைத்திலிங்கம் அவர்களின் சிரேஷ்டபுத்திரி இந்திராணி அவர்களை திருமணம் புரிந்து தனது இல்லற வாழ்வை ஆரம்பித்து இருந்தார். அன்று தொண்டமானாற்றைத் தன்னகத்தே கொண்டிருந்த உடுப்பிட்டிக் கிராமசபைத் துணைத் தலைவராகச் செயலாற்றியதன் மூலம் தனது பொதுப்பணியை ஆரம்பித்தார். இதனை 1956 இல் தந்தை செல்வாவின் வேண்டுகோளுக்கிணங்க பருத்தித்துறை வேலாயுதம் பாடசாலை ஆசிரியராக இருப்பதைத் துறந்து பருத்தித்துறையில் தொகுதியில் தமிழரசுக்கட்சி வேட்பாளராக கம்யூனிஸ்ட்கட்சி வேட்பாளர் திரு பொன். கந்தையாவுடன் போட்டியிட்டு தோல்வியைத் தழுவினார். பின்னர் 1960 பங்குனி, 1960 ஆடி, 1965 வைகாசி. 1970, 1977 ஆகிய ஐந்து தேர்தல்களிலும் வெற்றி பெற்று 1983ம் ஆண்டு புதிய அரசியல மைப்பை ஏற்காது பதவி துறக்கும் வரை தந்தை செல்வாவின் சீடராக அண்ணன் அமிரின் தோழனாக தம்பி பிரபாகரனின் மதிப்பைப் பெற்றவராக விளங்கினார்.

1961ல் யாழ். அரசாங்க செயலக வாயிலில் சத்தியாக்கிரகம் நடந்தவேளையில் விரைந்து வந்த யாழ்.அரசஅதிபர் ஸ்ரீகாந்தா அவர்களின் வாகனத்தின் முன்னால் தலையைக் கொடுத்து தமிழன் வீரம் காட்டிய தமிழ்மறவன் இவர். பின்னர் பனாகொடை தடுப்புக்காவலில் தடுத்து வைக்கப்பட்டவர். 1956ம் ஆண்டு தனது இல்லத்

தில் வெள்ளையினக் கோழி வளர்ப்புப் பண்ணையை ஆரம்பித்து அபிவிருத்தி செய்தார். திரு துரை அவர்கள் 1963ம் ஆண்டு அரச பிரதிநிதியாக இஸ்ரேல் நாட்டுக்குச் செல்லும் வாய்ப்பைப் பயன்படுத்தி அங்கிருந்து சிலரக முந்திரிகைச் செடிகளைக் கொண்டு வந்து யாழ். குடா முழுவதும் அறிமுகப்படுத்தி யாழ்வாசிகள் கோடான கோடி ரூபாக்களை உழைக்க வழி கோலினார். இது இலங்கை அரசின் கமத்தொழில் விளக்கம் நூலிலும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. 1964 மார்கழியில் வீசிய சூறாவளி ஏறக்குறைய நூறு உழைக்கும் குடும்ப அங்கத்தவர்களைப் பலிகொடுத்த மயிலிட்டி மீனவ மக்களுக்காக உயிரை பயணம் வைத்து படகேறி பாரத கரைக்குப் போய் பரிகாரம் தேடியவர்.

பனை அபிவிருத்தி, தேக்குமரம், வெங்காயம், உருளைக்கிழங்கு இப்படி பலவற்றுக்கும் ஆலோசனை வழங்கி தானும் பயிர் செய்கையில் ஈடுபட்டார். தனது தொகுதியான வல்வையில் இளைஞர்கள் இராணுவத்தினரால் தாக்கபபடுவதை கேள்வியுற்று அதை விசாரிக்கச் சென்ற போது இராணுவத்தினராலே தாக்கபபட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்.

இவர் சார்ந்த தொகுதி தொண்டமானாறு தொடக்கம் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, நாகர்கோயில், வெற்றிலைக்கேணி, முள்ளியான், செம்பியன்பற்று இப்படி போக்குவரத்து கஷ்டமான மணல் பிரதேசமான கடற்தொழிலாளர் சமூகங்களை உள்ளடக்கியதாகும். அவர்களுக்குச் சேவையாற்றி மீனவ நண்பன் என மதிப்பைப் பெற்றவர். தலைவர்கள் இந்தியா சென்று தமது பங்களிப்பைச் செய்த வேளையில் அன்னார் மட்டும் தமது மக்களுடன் மக்களாக வாழ்ந்தவர். தொடர்ச்சியாக 23 ஆண்டுகள் எமது இனத்திற்கும் தொகுதிக்கும் சேவை யாற்றிய பெருமைக்குரியவர்.

1 தமிழரசுக்கட்சி வெள்ளிவிழா மலர் பக்கம் 170

2 துரைரத்தினம் நினைவுக்கட்டுரை செந்தாமரையில் கனக.மனோகரன்

3 பாராளுமன்றத்தில் துரைரத்தினம் பா.உ. அவர்களின் சேவை பற்றி வீரசேகரி 19.9.96


4 துரைரத்தினம் நினைவுக்கட்டுரை "உதயன்' கனடா பத்திரிகை ந.ந.மணி

---

நாடு உனக்கு என்ன செய்தது என்று
கேளாதே
நாடுக்கு நீ என்ன செய்தாய் என்று கேள்

---

# தமிழினத்தின் சொத்து ஞானமூர்த்தி அப்பா



வசாவிளானைச் சேர்ந்த திரு க.வேலுப்பிள்ளை என்பவரால் எழுதப்பட்ட "யாழ்ப்பாண வைபக கௌமுதி" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ள வேலாயுதர் ஞானமூர்த்தி வழித்தோன்றலாய் 01.10.1905 ம் ஆண்டில் திரு ஞா.சண்முகம்பிள்ளை அன்னப்பிள்ளை தம்பதிகளுக்கு மகனாக ஞானமூர்த்தி பிறந்தார்.

இவரின் தந்தையின் பேரன் திரு சங்கரப்பிள்ளை ஏழு பாரிய கப்பல்களுக்குச் சொந்தக்காரராகவும் விளங்கினார். ஞா.சங்கரப்பிள்ளையின் தந்தையாரது சகோதரர்களில் ஒருவரான திரு புண்ணியம் என்பவர் மணியகாரராக இருந்து வல்வை முத்துமாரி அம்மன் கோயிலைக் கட்டியவர். மற்றச் சகோதரர் திரு திருமேனியார் அவர்களின் மகனான திரு வெங்கிடாசலம் (பெரிய தம்பியார்) என்பவர் வல்வை சிவன் கோயிலையும் வைகுண்டப் பிள்ளையார் கோயிலையும் கட்ட இன்னொரு மகன் திரு குழந்தைவேற்பிள்ளை அவர்கள் கொழும்பில் யாழ்ப்பாணத்தார் (செக்கடித்தெருவில் அமைந்துள்ள) கதிர்வேலாயுதசுவாமி கோயிலையும் பர்மாவிலுள்ள ரங்கூனில் ஒரு முருகன் கோயிலையும் கட்டினார்.

தந்தையார் சண்முகம்பிள்ளை அவர்கள் நாவாய் சாஸ்திரம் பயின்று கப்பல் கட்டும் மேஸ்திரியாக இருந்தவர். பர்வதவர்த்தினி என்னும் பாரிய மரக் கப்பல் இவர் கட்டியவற்றுள் ஒன்று. இக்கப்பலைப் பற்றி தென்னிந்தியாவைச் சேர்ந்த சாத்தான்குளம் அ.இராகவன் என்பவர் 1968ல் தான் எழுதிய "நம் நாட்டு கப்பற் கலை' என்னும் நூலில் 170ம் பக்கத்

தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார் "முற் காலத்தில் தமிழர் கட்டிய கப்பல் ஒன்றைக்கூட இன்று காணமுடியவில்லை. பெரிய கப்பல்களைக் கட்டும் கம்மியர் ஒடாவிமரபில் தோன்றிய யாழ்ப பாணத் தமிழர் திரு ஜி.சண்முகம்பிள்ளை மேத்திரியார் 1936ம் ஆண்டு கட்டிய பர்வதவர்த்தினி என்னும் கப்பல் நமக்கு நல்ல எடுத்துக்காட டாகும்.

திரு அ.சண்முகதாஸ் அவர்கள் தனது ஆற்றங் கரையான் நூலில் திரு சண்முகம்பிள்ளையைப் பற்றி பின்வருமாறு கூறுகிறார். செல்வச்சந்நிதி கோயிலின் ஆரம்ப தேர்த்திருவிழா 1925ம் ஆண்டு வல்வை ஞானமூர்த்தி சண்முகம் பிள்ளையவர்கள் கட்டுத் தேரொன்றை அமைத்துக் கொடுத்ததுடன் ஆரம்பமாகியுள்ளது. இதுபற்றி செல்வசந்நிதி சித்திரத்தேர் வெள்ளோட்ட சிறப்பு மலரிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகைய புகழ்கொண்ட குடும்பத்தில் தோன்றி ஆரம்பக் கல்வியை வல்வை அ.மி.த.க.பாட சாலையிலும் உயர்கல்வியைச் சிதம்பராக் கல்லூரியிலும் பெற்றார். 1924ல் அஞ்சல் திணைக்களத்தில் உதவி அஞ்சல் சேவையாளராகச் சேர்ந்து 1951ல் பரிசோதகராக பதவி உயர்வினைப் பெற்று 1963ல் தபால் திணைக்கள உதவி அத்தியட்சகராக நியமனம் பெற்றார். 1965ல் அரசசேவையில் இருந்து ஓய்வு பெற்று அதன்பின்னர் வல்லை நூற்றல் நெய்தல் ஆலையில் செயலாளராக நியமனம் பெற்றார். இவரது திறமையாலும் நேர்மையான உழைப்பினாலும் அப்போது நட்டத்தில் இயங்கிக் கொண்டிருந்த தொழிற்சாலை பங்காளிகளுக்கு லாபப் பணத்தை வழங்கக்கூடிய நிலைக்கு உயர்ந்தது.

இவரது தொண்டு வல்வையிலிருந்து பரந்து யாழ் வரை சென்று யாழ்.அரசினர் வைத்திய சாலை மேற்பார்வைக் குழு அங்கத்தவராக இவரை 1966ல் தெரிவு செய்தது. வல்வை சன சமூக சேவா நிலையத்தின் வெள்ளிவிழா கொண்டாடவிருக்கும் விசேட நிர்வாகசபைக்கு தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார். சமாதான நீதிபதியாகக் கடமையாற்றி மக்களின் அன்பைப் பெற்றவர். தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கியும் வல்வை நகர முதல்வராகவும் பணிபுரிந்தவர்.

1அமரர் சண்முகம்பிள்ளை ஞானமூர்த்தி அவர்களின் சிவபதம் குறித்த நினைவுமலர் 10.06.94

2சித்திரப் பெருந்தேர் வெள்ளோட்ட சிறப்புமலர் தொண்டமானாறு செல்வச்சந்நிதி பக்கம் 11, பக்கம் 19

3 நம் நாட்டுக் கப்பற்கலை பக்கம் 170 அ.இராகவன்

# பேராசிரியர் கலாநிதி கா.சிவத்தம்பி

திரு கா.சிவத்தம்பி அவர்கள் 1930ம் ஆண்டு கரவெட்டி சைவப்புலவர், தமிழ்ப்பண்டிதர் கார்த்திகேசு அவர்களுக்கு மகனாகப் பிறந்தார். ஆரம்பக் கல்வியை கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரியில் பயின்று பின்னர் பேராதனை பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. பட்டதாரியானார். சாஹிராக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டே ஏராளமான வானொலி நாடகங்களில் நடித்தார். திரு சிவத்தம்பி அவர்களுக்கு சிறு வயதிலேயே தமிழ்க் கலை, பத்திரிகை, இலக்கியம் போன்ற துறைகளிலும் ஆர்வம் இருந்தது. பாராளுமன்ற மொழி பெயர்ப்பாளராகக் கடமையாற்றிய வேளையில் வல்வையில் பிரபல வர்த்தகரும் சமூகப்பணிகள் ஆற்றியவருமான திரு எஸ்.வி.நடராசாவின் சிரேஷ்ட புதல்வியை திருமணம் புரிந்து வல்வையைப் புகுந்த இடமாக மாற்றி எமக்கும் பெருமை சேர்த்து எமது மக்களுக்கும் சேவையாற்றியவர். பின்பு வித்தியோதயப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தார். 1970ல் லண்டன் பேர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் நாடகத்துறையில் ஆய்வு நடாத்தி கலாநிதி பட்டம் பெற்று நாடு திரும்பினார். இவருக்கு முற்போக்குச் சிந்தனையிலும் குறிப்பாகச் சொன்னால் மார்க்ஸிசத்திலும் ஈடுபாடு இருந்தது. அதனால் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் அங்கத்தவராகி பல கட்டுரைகளையும் எழுதியிருந்தார். 1971ம் ஆண்டு மலேசியாவில் நடைபெற்ற முதலாவது உலகத்தமிழராய்ச்சி மாநாட்டில் பங்குபற்றியதோடு



அதன்பின்னர் நடைபெற்ற மாநாடுகளிலும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்ப்பித்தவர்.

வல்வை தமிழறிஞர் இயற்றமிழ் போதகாசிரியர் திரு வயித்தியலிங்கபிள்ளை எழுதிய நூல் களை ஆராய்ந்து அவர் பற்றிய நூல் ஒன்றையும் வெளியிட்டு இருந்தார். உலகின் பல பாகங்களிலும் பல்கலைக்கழகங்களில் சிறப்புரையாற்ற வேண்டி

அழைக்கப்படுபவர். இவர் "யாழ்ப்பாண சமூகத்தை விளங்கிக் கொள்ளல்", மலையகத் தமிழரின் பண்பாடும் கருத்துரிமையும் என்ற ஆராய்வு தொகுப்பு நூலையும்எழுதியிருந்தார்.

வல்வை பிரஜைகள் குழுத் தலைவராகவும், யாழ்.மாவட்ட புனருத்தான நடவடிக்கையிலும் பங்கு கொண்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். யாழ்ப்பாண பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத்தலைவர் ஆக பணியாற்றிக் கொண்டிருபபவர். கனடாவில் 1996ல் நடந்த உலகத்தமிழ் பண்பாட்டு மாநாட்டை ஆரம்பித்து வைக்கும் சிறப்புப் பெற்றவர். இவரோடு சற்றுப் பேசக் கிடைத்தால் கலைக் களஞ்சியத்தின் பக்கங்களை புரட்டிப் படிக்கும் அனுபவம் தான் ஏற்படும்.

1 காலம் சஞ்சிகை - செல்வம் பக்கம் 17 -27

2 சிவத்தம்பி பற்றி வீரகேசரி சிறப்புக் கட்டுரை 30.06.96

# வல்வையில் சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம்

07.04.1969 உடுவிலில் நடைபெற்ற இலங்கை தமிழரசுக்கட்சியின் மாநாட்டுக்கு சிறப்பு விருந்தினராக ஈழம் வந்த போது எமது வல்வைக்கும் விஜயம் செய்து இருந்தார். அப்போது வர்த்தகரான திரு சி.விஷ்ணுசுந்தரம் அவர்களின் இல்லத்தில் நடந்த விருந்து உபசாரத்தின் போது அருமையானதோர் இலக்கிய சொற்பொழிவும் நிகழ்த்திச்சென்றார்.





வல்வை முத்துமாரி அம்மன் திருவூஞ்சல் காட்சி

# தமிழர் விடுதலைக்கூட்டணியின் வெற்றி விழா

1977ம் ஆண்டு இலங்கை பொதுத்தேர்தல் நடைபெற்ற போது தமிழர் விடுதலைக் கூட் டணி வடகிழக்கின் 18 தொகுதிகளை மன்னார் தொடக்கம் பொத்துவில் வரை வெற்றி பெற்று பாராளு மன்றத்தில் இரண்டாவது பலமுள்ள உறுப்பினர்களைக் கொண்ட கட்சியாகத் தெரிவு செய்யப்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டு முன்னணியை உருவாக்க முன்னின்று உழைத்த வல்வைப் பெரியவர்களும் வாலிபர் களும் வல்வை ரேவடி கடற்கரை மைதானத் தில் கூட்டணியின் வெற்றிவிழாவைக் கொண் டாட அதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர். விழா நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் கள் வவுனியா பா. உ. திரு. தா. சிவசிதம் பரத்தின் இல்லத்தில்கூடியிருந்த வேளையில் திரு. கனக. மனோகரனும் நானும் நேரில் சென்று எமது அழைப்பை உறுதி செய்து திரு ம்பியிருந்தோம்.

30.7.1977 ரேவடி மைதானம் அன்று வரவேற்பு வளைவுகள், வாழைத் தோரணங்கள் மின்சார அலங்காரம் செய்யப்பட்டு வல்வை மாநகரம் விழாக்கோலம் பூண்டு காட்சியளித்தது. சிறப் பாக அலங்காரம் செய்யப்பட்ட மேடையில் திரு. ச. ஞானமூர்த்தி அவர்கள் தலைமையில் விழா ஆரம்பமாகியது. திரு. கனக. மனோகரன் சட்டத்தரணி அவர்கள் வவுனியா நகரில் கூடிய பாராளுமன்ற உறுப்பினர்களால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்களையும், மற்றும் பாராளு மன்ற உறுப்பினர்களையும் ரேவடி கடற்கரை மைதானம் முழுவதும் நிரம்பி வழிந்த பெருந் திர ளான மக்களையும் கவிபாடி வரவேற்றார்.

பின்னர் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப் பினர்கள் அனைவரும் உரையாற்றிய பின்பு திரு. அமிர்தலிங்கம் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவ-ராக அடைந்த பின்பு உரையாற்றிய முதலாவது கூட்டமாகவும் அமைந்திருந்தது. அவர் தனது உரையில் போராட்டத்தில் வல்வை மக்களின் பங்களிப்பைக் கூறியதோடு தனது அணியில் 1000 இளைஞர்களைத் தாருங்கள் நாம் தமிழ் ஈழம் காண்போம் எனப் பகிரங்க அழைப்பு விடுத்தார். அன்று பல இளைஞர்கள் இன்று மாவீரரான திரு.பண்டிதர் உட;பட இரத்த திலகம் திரு. அமிருக்கு இட்டனர். விழா மறுநாள் அதிகாலை வரை நீடித்தது. தலைவர்களுக்கும் வெளியூர் களில் இருந்து வந்த மக்களுக்கும் பிரபல வர்த்த கர் திரு. சி. சிவகணேசன் அவர்கள் இல்லத்தில் வல்வை மக்களால் இரவு விருந்து வழங்கி உப சரிக்கப்பட்டது.

# தமிழ்ஈழத்தின் தேசியத் தலைவர்

## *பிரபாகரன் அவர்களின் குடும்பப் பின்னணியும் சிறுபராயமும்*

யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட மன்னர் காலத்திலும் அதற்குப் பின்னரும் வட தமிழீ ழத்தின் முக்கிய துறைமுகப் பட்டிணங்களில் ஒன்றாகவும் தமிழக கோடிக் கரைக்கும் வட தமிழீழத்திற்கும் பாலமாகவும் அமைத்து திரை கடல் ஓடி திரவியம் குவித்தமறவர்கள் வாழும் பூமிதான் வல்வெட்டித்துறை. தமிழீழச்சரித்தி ரத்தில் இவ்வூர் அழியாப் புகழைப் பெறுகிறது. காரணம் இங்குதான் தமிழீழ தேசிய விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆரம்பித்த வரும் தமிழீழத்தின் தேசிய தலைவராக மதித்து போற்றிப் புகழப்படுபவருமான திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் 1954ம் ஆண்டு கார்த்திகை மாதம் 26ம் திகதி பிறந தார்.

வல்வையில் பிரபலமான குடும்பம் திரு மேனி யார் குடும்பமாகும். இக் குடும்பத்தின் மூதா தையரான திரு. மேனியார் வெங்கடாசலம் என்பவர் ஊரில் உள்ள வைத்தீஸ்வரன் கோயி-லைக் கட்டியும், முத்துமாரியம்மன் கோயில், நெடிய காட்டுப் பிள்ளையார் கோயில் இரண்டை யும் கட்ட உதவியும் செய்தார். வேலாயுதர் திரு மேனியார் பற்றி வசாவிளானைச் சேர்ந்த திரு. க. வேலுப்பிள்ளை என்பவரால் எழுதப்பட்ட "யாழ்ப் பாண வைபவ கௌமுதி" நூலில் யாழ்ப்பாண முன்னணிக் குடும்பம் எனத் தெரிவிக்கப்பிட்டு ள்ளது. ஊரின் அருகிலுள்ள பருத்தித்துறையில் மெத்தை வீட்டு நாகலிங்கம் என்பவரின் குடும்ப மும் பல கோயில்களைக் கட்டிய குடும்பமாகும் இரு குடும்பமும் திருமண உறவின் மூலம் இணைந்தனர். திருவேங்கடம்வேலுப்பிள்ளையும், நாகலிங்கம் பார்வதிப்பிள்ளையும் திருமணத்தில் இணைந்து கொண்டனர். இவர்களுக்குப் பிறந்த கடைசிக் குழந்தையே பிரபாகரன் அவர்கள். இவருக்கு ஒரு அண்ணரும், இரு அக்காமாரும் உள்ளனர். தந்தை இலங்கை அரசாங்கத்தின் மாவட்ட காணிஅதிகாரியாகக் கடமை புரிந்தவர். பிரபாகரன் அவர்கள் சிவகுரு வித்தி யாசாலை



யிலும், சிதம்பராக் கல்லூரியிலும் கல்வி கற்றார். அந் நாட்களில் செல்வம் மிகுந்த குடும்பங்களில் பிறந்த பிள்ளைகள் ஆங்கிலம் கற்பதும் வெளிநாடுகளில் வேலைக்குப் போவதும் அரச பணிகளில் அமர்வதுமே நடைமுறையாக இருந்து வந்தது. ஆனால் பிரபாகரன் அவர்களின் சிந்தனையோட்டம் சிறு வயதிலே வேறு விதமாக இருந்தது. தந்தையுடன் வெளியிடங்களுக்கு செல்லும் போது காவற்துறையினர் அப்பாவி தமிழர்களை அடித்து இம்சிப்பதையும் கண்டதனால் சிறுவனாக இருந்த பிரபாகரன் அவர்களின் பிஞ்சு உள்ளம் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தது. அதிலும் குறிப்பாக சிறுவனாக இருந்தபோது 1958ம் ஆண்டில் முதலாவது தமிழின அழிப்பில் நிகழ்ந்த பயங்கர சம்பவங்கள் அவர் மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்திவிட்டன. குறிப்பாக பாணந்துறையில் இந்துகுருமார் உயிரோடு எரிக்கப்பட்ட சம்பவங்கள் தனது மக்கள் மீது ஆழ்ந்த அனுதாபமும் அன்பும் ஏற்பட்டது. பெரும்பான்மை இன மக்களில் இருந்து தமிழ் மக்களை மீட்டெடுக்க வேண்டும் என்ற ஆர்வம் அவர் மனதில் உருவாகியது.

ஒருமுறை பிரபாகரன் அவர்களைத் தேடி காவற்துறையினர் வந்தனர். அதிகாலை மூன்று மணிக்குக் காவற்துறையினர் அவரின் வீட்டு கதவைத் தட்டும் சத்தம் கேட்டவுடனேயே தன்னைத் தேடித்தான் என உணர்ந்து அவர்கள் யாரும் அறியாமல் தப்பிவிட்டார். தாய் கதவைத் திறந்த போது ஏராளமான காவற்துறையினர் நிற்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போனார். ஏனென்றால் பிரபாகரன் அவர்கள் இரகசிய இயக்கத்தில் இருக்கின்றார் என்ற செய்தியை அவர் அறிந்திருக்கவில்லை. இறுதியில் காவற்துறையினர் வீடு முழுவதும் சோதனையிட்டு ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர். இந் நிகழ்ச்சிக்குப் பின் பிரபாகரன் அவர்கள் வீட்டிற்குத் திரும் பவேயில்லை.



அவரது தந்தையார் தங்கியிருந்த இடத்திற்கு சென்று அவரை அழைத்து வந்தார். வீட்டிற்கு வந்தவர் தன் பெற்றோரிடம் பின்வருமாறு கூறினார்.

"உங்களுக்கோ குடும்பத்திற்கோ நான் ஒரு போதும் பயன்படமாட்டேன் என்னால் உங்களுக்கு ஒரு தொல்லையும் வேண்டாம் என்னை என் போக்கில் விடுங்கள். இனி எதற்கும் என்னை எதிர்பார்க்காதீர்கள்" என்று சொல்லிவிட்டு வீட்டை விட்டு வெறியேறிப்போய் இரகசிய இயக்க வேலையில் முழுமையாக ஈடுபடத்தொடங்கினார்.



முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆருடன்
தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன்

# காலநதிக் கரையில் மீள நினைக்கின்றேன்

கேள்வி: உங்கள் சிறுபராய வாழ்க்கை இன்றைய இளம் சந்ததியின் வாழ்வு நிலைக்கு முற்றிலும் மாறுபட்டதாகவே இருந்திருக்கும். அந்த இளம்பராய வாழ்க்கை பற்றி விபரிப்பீர்களா?

சின்ன வயதில் என் வீட்டிற்கு நான் செல்லப் பிள்ளை. அதனால் எனக்கு வீட்டில் கட்டுப்பாடு இருந்தது. பெற்றோர்கள் என்னை வீட்டிற்கு வெளியே விடுவது அபூர்வம். அயல் வீட்டுப் பிள்ளைகள் மட்டுமே என்வீட்டுத் தோழர்கள். என் வீடு அயல்வீடு என்று இவற்றை சுற்றியே இருந்தது. இப்படி என் சின்ன வயதின் வாழ்க்கை கழிந்தது. 'இரவுப் பாடசாலை' என்ற கல்வி நிலையம் இயங்கிக் கொண்டிருந்தது. உயர்கல்வி கற்ற இளைஞர்கள் சிலர் தங்கள் ஊரை முன்னேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் என் வீட்டிற்கு அயலில் இருந்த சிவகுரு வித்தியாசாலை (ஆலடி பாடசாலையில்) இந்த கல்வி நிலையத்தை நடத்திக் கொண்டிருந்தனர்.

இரவில் கீழ்வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு ரியுசன் சொல்லிக் கொடுப்பதும் இக் கல்வி நிறுவனத்தின் பணியாக இருந்தது. எனது ஊரைச் சேர்ந்த தமிழ் ஆசிரியரான திரு. பொ. வேணுகோபால் அவர்கள் தமிழர்கள் ஆயுதம் ஏந்தி போராட வேண்டும் என்ற கருத்தை எமக்குப் போதிப்பார். இவர் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளராக இருந்து பின்னர் அக்கட்சியின் போராட்டம் தீவிரம் போதாது என்று திரு. வி. நவரத்தினத்துடன் இணைந்து சுயாட்சி கழகத்தை உருவாக்கியவர்களில் இவரும் ஒருவர். இவரே எனக்கு ஆயுத போராட்டத்தின் தேவையையும் அதன் மீது நம்பிக்கையையும் ஏற்படுத்தியவர் ஆவார். எனது ஊர் இராணுவ அடக்குமுறையை தினசரி சந்திக்கும். இதனால் இராணுவத்தின்மீது சின்ன வயதிலேயே எனக்கு வெறுப்பு அதிகமானது. இத்துடன் சேர்ந்து ஆசிரியர் திரு. பொ. வேணுகோபால் அவர்கள் ஊட்டிய ஆயுத போராட்ட உணர்வும் விடுதலை தாகமும் என்னுள் ஏற்படுத்தின. நானும் எனது வயதொத்த நண்பர்களும் இவருக்குப் பின்னால் திரிந்தோம்

இப்படியெழுந்த விடுதலை தாகத்தால் எனது 14 வயதில் எனது பாடசாலையில் (சிதம்பரா கல்லூரி) விடுதலைக்காக போராட வேண்டும் இராணுவத்தினரை தாக்க வேண்டும் என்று நானும் என் உணர்வொத்த ஏழு இளைஞர்களும் சேர்ந்து பெயரில்லாத இயக்கத்தை ஆரம்பித்தோம் நானே அவ்வியக்கத்திற்குத் தலைவராக இருந்தேன். எங்களுக்கு அப்போதெல்லாம் ஆயுதமொன்று வாங்க வேண்டும் வெடிகுண்டு செய்ய வேண்டும் என்ற உணர்வே மேலோங்கியிருந்தது. வீட்டில் கிடைக்கும் பணத்தில் வாரத்திற்கு இருபத்தைந்து சதத்தை என்னிடம் தருவார்கள். நான் சேகரித்துக் கொள்வேன் இப்படியாக நாற்பது ரூபா எங்களிடம் சேர்ந்து விட்டது. இந்த நேரத்தில் எமது பக்கத்து ஊரில் இருந்த சண்டியன் ஒருவரிடம் நூற்றியம்பது ரூபாவிற்கு ரிவோல்வர் ஒன்று விற்பனைக்கு இருப்பதாக அறிந்தோம் எப்படியும் அந்த ரிவோல்வரை வாங்கிவிட வேண்டும் என்ற துடிப்பில் என் சகோதரியின் திருமணத்தின்போது எனக்கு அன்பளிப்பாக கிடைத்த மோதிரத்தை விற்று எழுபது ரூபா பெற்றுக் கொண்டோம். எல்லாமாக சேர்த்து எம்மிடம் நூற்றிப்பத்து ரூபா இருந்த போது மிகுதிப் பணம் இல்லாத காரணத்தால் இந்த ரிவோல்வர் வாங்கும் திட்டத்தைக் கைவிட நேர்ந்தது. இப்படியாக இளம்பராயம் போராட்டம், விடுதலை, இனத்திற்காக எதையாவது செய்ய வேண்டும் என்ற துடிப்பு என்ற எண்ணங்களுடனேயே கழிந்தது. கழிந்தது என்று சொல்வதிலும் பார்க்க வளர்ந்தது என்று சொல்வதே பொருத்தமானது என்று நினைக்கின்றேன். நான் படிக்கும் காலத்தில் என்னொத்த மற்றவர்கள் எல்லாம் விளையாடிக் கொண்டிருப்பார்கள். நான் மட்டும் அகப்பட்ட மூலப்பொருட்களைக் கொண்டு வெடிகுண்டு செய்வதிலும் அதை வெடிக்க செய்வதிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன். நிச்சயமாக பதின்நான்கு வயதில் போராட வேண்டுமென்று நான் துடித்த துடிப்பு இருக்கிறதே. அது அன்றைய என் வயதொத்த சிறுவர்களின் வாழ்க்கையிலிருந்து மாறுபட்டதாகவே இருந்தது.

நன்றி: உலகத் தமிழர் பத்திரிகையிலிருந்து, (வெளிச்சம் பத்திரிகைக்கு தேசிய தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் அளித்த பேட்டியின் ஒரு பகுதி).

**வேல் பிடித்து வாழ்ந்த கூட்டம்**
**கால் பிடிக்குமா?**
**வீழ்ந்த வாழ்வு மீள இன்னும்**
**நாள் பிடிக்குமா?**
**தோள் நிமிர்த்தித் தமிழர் தானை**
**போர் தொடுக்குமா? - எங்கள்**
**சோழர் சேரர் பாண்டியர் போல்**
**பேர் எடுக்குமா?**

# பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே

பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே
மழை பொழிந்திடும் கார்த்திகை மாதத்திலே
மங்களம் தங்கிடும் நேரத்திலே
எம்மன்னவன் பிறந்தான் ஈழத்திலே
பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே.......

பாசத்தின் எங்களின் தாயானான்
கவிபாடிடும் மாபெரும் பேரானான்
தேசத்தின் எங்கணும் நிலையானான்
நிலைதேடியே வந்திடும் தலையானான்
பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே........

இன்னல்கள் கண்டுமே தான் கொதித்தான்
பல இளைஞரை சேர்த்துமே களம்குதித்தான்
தன்னின மானத்தை தான் மதித்தான்
பகை காவியே வந்திட கால் மிதித்தான்
பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே.......

இங்கொரு தாயகம் மூச்சென்றான்
தமிழ் ஈழமே எங்களின் பேச்சு என்றான்
வந்திடும் படைகளை வீசு என்றான்
புலி பாய்ந்திடும் வரையிலும் தூசு என்றான்
பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே.......

விடுதலைப் புலிகளின் பலமானான்
தமிழ் வீடுகள் யாவிலும் மலரானான்
படுகளம் மீதிலும் புலியானான்
பிரபாகரன் எங்கணும் உயிரானான்
பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே.........

நன்றி: களத்தில் கேட்கும் கானங்கள்

"ஊர்ப்பற்றும் வேர்ப்பற்றும்
இல்லையானால் நாம் பேரற்ற
பிறவிகள் ஆவோம்"

கனடா வல்வை நலன்புரி சங்கத்தால்
நடத்தப்பட்ட வல்வை நெய்தல் விழாவில் -
புலவர் ஈழத்து சிவானந்தன்

# வெற்றித் திருமகன் வென்றெடுப்பார் தமிழீழம்

சீரோடு சிறப்பு மொருங்கே திகழ்ந்திட்ட
திருநாடாம் தமிழீழத்தின் வடபாலின் கண்ணே,
ஆரவா ரிக்குமலை வாயிலில் அமைந்திட்ட
அளப்பரிய செல்வமிகு ஆனந்த புரியது,
வாரியே வழங்கிடும் வள்ளல் நிறைபதியாம்
வல்வெட்டித்துறைதனிலே விளைந்ததொரு முத்து
பாரிலுள்ள தமிழரெல்லாம் பகிர்ந்தே மகிழ்ந்திடப்
பகவானின் திருவருளால் கிடைத்த பெருஞ் சொத்து

கதிரவனும் கலைமதியும் களிப்புடனே வாழ்ந்த
கார்மேகம் நிலைமறந்து கனிந்தநீர் சொரிய
அதிருமொலிச் சிரிப்புடனே அலைகடல் ஆர்ப்பரிக்க
அருள் கூறும் அந்தணர்கள் வேதங்கள் ஓத
பதியுறை மாந்தரெல்லாம் பக்கத்தே சூழ்ந்திருக்க
பாவலர் பண்ணுடனே செந்தமிழில் பாட்டிசைக்க
மதிநிறை மன்னவன் எங்கள் பிரபாகரன்
மலர்ந்தனன் வீரமிகு மண்ணதில் தவழ்ந்தனன்;

வளர்பிறை போலும் வளர்ந்திட்ட வீரன்
வணங்கா முடியவன் வஞ்சகர் தீங்கினால்
களிறென வெகுண்டுதன் கரந்தனில் ஆயுதம்
கடிதென எடுத்தனன் களம்வென்று குவித்தனன்
தளராத நெஞ்சுடன் சதிகாரர்க் கெதிராய்த்
தம்பியவன் திட்டங்கள் பலவாகத் தீட்டினன்
தெளிவுடன் உணர்ந்தனன், தமிழர்க்கொரு நாடு
தப்பாமல் வேண்டும்! தனித் தமிழீழம்!

கலையினை வளர்ப்பவர்; கடமையை உணர்ந்தவர்
கண்ணியம் கட்டுப்பாடு கருத்தாய் கொண்டவர்
தலைமைத்துவம் மிக்கவர் சாணக்கியம் தெரிந்தவர்
தமிழுக்காய் இனத்திற்காய் தன்னுயிர் மறந்தவர்
நிலையினில் உயர்ந்தவர் நீதியிற் சிறந்தவர்
நேர்கொண்டு போரிடும் நெஞ்சுரம் பெற்றவர்
மலைபோற் சோதனைகள் வேதனை தந்தாலும்
மண்டியிட மறுக்கின்ற தன்மானத் தமிழன்

இராணுவ தலைவர் இராஜ தந்திரி
இரும்பினை யொத்த நல்லுறுதி மிக்கவர்
தார்மீக யுத்தமே கொள்கையாகக் கொண்டவர்
தானைத் தளபதி ஆளுமையில் வல்லவர்
போரினிற் சிறந்த 'கொரில்லா' யுத்தம்
புரிந்துமே பாரினில் புதுமை படைத்தவர்

வீரம் மிக்கவர் வேங்கையின் மைந்தன்
வெற்றித் திருமகன்; வென்றெடுப்பார் தமிழீழம்

அரை நூற்றாண்டு காலமாக ஆட்சிக்கு வந்து சென்ற
அத்தனை தலைவரெல்லாம் தீர்த்திட முடியாத
புரையோடிப் போயிருக்கும் தமிழீழப் பிரச்சனையை
புறநானூற்றுச் செல்வன் புரட்சித் தலைவன்
விரைந்து நின்றே வென்றிடுவார்! வீரகாவியம் படைத்திடுவார்
விண்ணவரும் மண்ணவரும் வாழ்த்திநின்று போற்றிடவே
கரைகாணாப் புகழடைவார் எங்கள் கரிகாலன்!
காவற் தெய்வமவர்! காத்திடுவார் தமிழீழம்!

பவித்திரா
உலக தமிழர் பத்திரிகை - 15.11.1996

# நாகரிகத்தின் சின்னங்கள்

“நான் இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்றிருக்கின்றேன். ஆனால் மற்றைய இடத்து மக்களை விட வல்வட்டித்துறை மக்கள் நாகரிகத்தில் மேம்பட்டவர்களாகவே விளங்குகின்றனர். வல்வெட்டித்துறைப் பெண்கள் பளபளக்கும் குடங்களில் நீர் கொண்டு அடக்கமாகவும் அழகாகவும் செல்வதைப் பார்த்தால் இவர்கள் நாகரிகத்தின் சின்னங்கள் என்று தான் சொல்ல வேண்டும்....

சேர் றொபேட் நொக்ஸ் என்னும் ஆங்கிலேயத் தேசாதிபதியின் குறிப்பேட்டில் இருந்து...

# கடலில் மிதந்து சாதனை படைத்த யோகண்ணா


வல்வை இளைஞரான திரு. துரைராசா யோகரத்தினராசா அவர்கள் கை கால்கள் கட்டப்பட்ட வண்ணம் வல்வை ரேகுத் துறைமுகத்தில் 200 யார் தூரத்தில் கடலில், 20 அடி ஆழமான இடத்தில் 28. 3. 1980 மாலை 4.46 தொடக்கம் 31.3. 80 அதிகாலை 2.15 வரை மொத்தம் 57 மணித்தியாலங்கள் 27 நிமிடங்கள் முகம் தெரியக்கூடிய விதமாய் கடலில் மிதந்து கிடந்து ஒரு சாதனையை நிலைநாட்டினார். அப்போது அவருக்கு வயது 36.

# ஸ்ரீலங்கை இராணுவம் செய்த அட்டூழியம் 1985



9.5.85 அன்று நடுச் சாமத்தில் பருத்தித்துறை வழியாக ஆயிரக்கணக்கான சிங்களப் படைகள் ஊருக்குள் இறக்கப்பட்டிருந்தார்கள். இதைவிட பலாலி, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை முகாம்களிலிருந்தெல்லாம் புறப்பட்ட இராணுவத்தினர் நாலு பக்கத்தாலும் நகர்ந்து ஊர்க்குடிமனைகளச் சுற்றி வளைத்து விட்டனர். உடுப்பிட்டி சந்தை அருகே இராணுவ வண்டி மீது ஒரு எச்சரிக்கைக் குண்டு ஒன்றை எறிந்து ஆழ்ந்த உறக்கித்திலிருந்த மக்களுக்கு இந்தத் தகவலைத் தெரிவித்தான். வண்டியிலிருந்த கேணல் அல்கம அந்த இடத்திலேயே மரணமானார். தன்னுடைய உயிரைப் பலிகொடுத்து ஜெயம் என்ற வீரன் அந்த மகத்தான காரியத்தை செய்திருந்தான். தமது கபட நோக்கம் சிதறடிக்கப்பட்டதால் கலவரப்பட்ட இராணுவம் கணப்பொழுதும் தாமதியாது மனம்போனபடியெல்லாம் துப்பாக்கிப் பிரயோகம் செய்து மனித வேட்டையை நடத்த ஆரம்பித்தனர்.

இச்சம்பவம் அதிகாலை 5 மணிதொடக்கம் மாலை 5 மணிவரை நீடித்தது. மக்கள் தமது இல்லங்களில் அடைபட்டு இருந்தனர். தெரு நாய்கள் கூட பயந்து சத்தம் போடாது அமைதியாக எங்கோ மறைந்து கொண்டது. அயல் வீட்டு சுவர் மணிக்கூடு மட்டும் வேலைசெய்யும் சத்தம் கேட்கும் அளவுக்கு மயான அமைதியாக இருந்தது. இராணுவத்தினர் தமது வேலையை முடித்து திரும்பிய பின்பு வதந்திகள் பரவலாக உலாவின. எனது மனைவிக்கு என் தாயார் வீடு செல்வதாகக் கூறி இராணுவ அட்டூழியங்களைப் பார்க்கச்சென்றேன்.



அயல் கிராமமான உடுப்பிட்டி இமையானண் ஆகிய இடங்களில் உள்ள இளம் குடும்ப தலைவர்களை அவர்கள் மனைவி பிள்ளைகள் கதறி அழ பணயக் கைதிகளாகக் கட்டியிழுத்துக் கொண்டு போயிருந்தனர். அதில் முன்னுக்கு வந்த இருபத்திமூன்று பேரை பொலிகண்டி குடியேற்றத் திட்ட மக்களுக்காக இயங்கிக் கொண்டிருந்த நூல் நிலைய மண்டபத்தினுள் வைத்து பூட்டி பின் அவர்களை உயிரோடு குண்டு வைத்துத் தகர்த்திருந்தார்கள்.

இளைஞர்கள் உயிரற்ற உடல்களையும் தலையில்லாத உடல்களையும் வரிசையாக எடுத்து அடுக்கிக் கொண்டிருந்தார்கள். ஊறணித் தீர்த்தக் கடற்கரை மண்டபத்தில் பன்னிரெண்டு பேரை வரிசையாக நிற்பாட்டி எம்-16 ரகத் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தியிருந்தார்கள். அதில் ஒருவர் உயிர் பிரிந்த தறுவாயில் முழங்காலில் நின்று கொண்டிருந்தார். மனதை உருக்கும் வல்வையின் துயர சம்பவங்களில் இதுவும் ஒன்றாக அமைந்து விட்டது.

இலங்கை தமிழர் போராட்ட வரலாறு -
பக்கம் 160, 168, பாவை சந்திரன்

# இராணுவத்தால் தீ மூட்டப்பட்ட செல்வ சந்நிதி சித்திரத்தேர்

செல்வ சந்நிதி முருகன் ஆலயம் இந்து மக்கள் அனைவராலும் எங்கள் சந்நிதி முருகன் என உரிமையோடு அழைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இலங்கையின் பெரும் எண்ணிக்கையில் பக்தர்கள் கூடுகின்ற எளிமையான ஆலயமாக தொண்டமானாறு செல்வ சந்நிதி விளங்குகின்றது. வேலனுக்கு சித்திர தேர் செய்து அதில் முருகனைக் காண அடியார்கள் விரும்பி 1979ம் ஆண்டு அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. தென்னிந்தியாவிலுள்ள சிற்பாசிரியர்களும், ஈழத்தின் சிற்பாசிரியர்களும் இணைந்து 1983ம் ஆண்டு பூர்த்தியாக்கப்பட்டது. இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவிலுள்ள தேர்களுடன் ஒப்பிடக்கூடிய வகையில் சித்திர வேலைப்பாடுகள் கொண்ட 45அடி உயரமானதும் சுமார் 50 லட்சம் ரூபாய் செலவுடன் அமைக்கப்பட்டதுமான சித்திரத்தேர் திருப்பணியில் தமிழ் மக்கள் எல்லோரும் பங்கு கொன்டமை தமிழ் மக்களின் பக்திக்கும் ஒற்றுமைக்கும் கலையார்வத்திற்கும் எடுத்துக்காட்டாகும். 6.9.1984ம் ஆண்டு முதலாவது சித்திரத்தேர் திருவிழா நடைபெற்றது.

வரலாற்று நிகழ்வுகளைச் சித்தரிக்கின்ற 500க்கும் மேற்பட்ட சிற்பங்களை தமிழ் நாட்டின் மிகச் சிறந்த சிற்பாசிரியர்கள் சுமார் நாலு வருடங்கள் செதுக்கினர். 1008 வெண்கல மணிகளையும் 500க்கும் மேற்பட்ட பித்தளைக் குமிழ்களையும் கொண்ட எத்தனையோ தமிழ் அன்பர்களின் உழைப்பு தேரில் அடங்கியிருந்தது. தேரினது சிறப்பையும் திரண்ட பக்தர்களின் கூட்டத்தையும் சகிக்காத தொண்டமானாறு இராணுவ முகாம் இராணுவத்தினரால் தீ மூட்டப்பட்டது. சர்வாதிகாரி ஹிட்லர் தனது இராணுவத்தினருக்கு எக்காரணம் கொண்டும் வழிபாட்டுத் தலங்களையும் நூல் நிலையங்களையும் தாக்கக் கூடாது என கட்டளையிட்டு இருந்தார். ஆனால் இங்கு திட்டமிட்டு நள்ளிரவில் பத்து இராணுவத்தினர் தேருக்கு தீ வைத்தனர். நூறு அடிக்கு மேல் பல நிறங்களைக் கொண்ட தீச் சுவாலைகள் அடங்கு முன்பே ஐவரைத் தாயகம் காக்கும் எமது விடுதலைப் புலிகள் சுட்டுக் கொன்றனர். இன்னும் நால்வர் வேறு சண்டைகளில் மாண்டனர்.

ஒருவர் மாத்திரம் உயிர் தப்பி கதிர்காமம் சென்று காவடி எடுத்தார். அவர் இதுபற்றி பத்திரிகைகளுக்கு தெரிவிக்கையில் தன் செய்கைக்காக வருந்துவதாகவும், தான் உயிர் தப்பினால் காவடி எடுப்பதாக வேண்டிக் கொண்டதாகவும் மற்றையோர் இறந்தது பற்றியும் தெரிவித்தார்.

அப்போது பாதுகாப்பு அமைச்சராக இருந்த திரு. லலித் அத்துலத் முதலி தனது மனச்சாட்சி அச்சுறுத்தியதன் பேரில் சிறு தொகையை நஷ்ட ஈடாக வழங்குவதாக மட்டும் அறிவித்தார்.

போரினால் பல ஆண்டுகளாக அயல் கிராமங்களுக்குக் கேட்கக் கூடியதான அசையா மணியும் தகர்க்கப்பட்டு பொலிவிழந்த நிலையில் காட்சி தருகின்றது.

நன்றி: தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் சித்திரப் பெருந்தேர் வெள்ளோட்ட சிறப்பு மலர். தந்துதவியவர் திரு. துரைசிங்கம் துரைரத்தினம் ஜி.பி தேர் திருப்பணிச்சபை செயலாளர்.

# வல்வையின் பாரம் பரிய விளையாட்டுக்கள்

## போர்த் தேங்காய்ப் போட்டி

முற்காலத்தில் இருந்து தற்காலம் வரை நடந்து ஈழப்போர் காலத்தில் மறைந்து போன போர்த்தேங்காய்ப் போட்டி. இப்போட்டி பங்குனி மாதமெல்லாம் நடந்து வருடப்பிறப்பன்று கடைசியாட்டமாக நடைபெறும். தற்போது நவீன சந்தையாக மாறிய சந்தை மைதானத்தில் நடக்கும். இதற்காக ஒரு மாதம் இரண்டு மாதங்களுக்கு முன்பிருந்தே காலி, மட்டக் களப்பு பகுதிகளிலிருந்து வைர ஓடுள்ள தேங் காய்களைத் தேடி சேர்ப்பார்கள். இது ஒருவர் தேங்காயை நிலத்தில் வைத்தால் மற்றவர் சப்பாணி போட்டிருந்து தன் தேங்காயால் ஓங்கி குத்தி அதை உடைக்க வேண்டும். வாலிபர் கள் இவ்விதமாக ஆடுவார்கள் பெரியவர்கள் சிறிது தூரம் இருந்து தேங்காயை உருட்ட ஒருவர் குறிபார்த்து தன்வசமுள்ள தேங்காயால் அடித்து உடைக்க வேண்டும். இவ் வண்ணம் உடைத்தால் உடையல் அடித்தவருக்கு சேரும் உடையாவிட்டால் அவர் ஒரு தேங்காய் கொடுக்க வேண்டும் 1993ம் ஆண்டு பொன் விழாக் கொண்டாடிய வல்வை சனசமூக சேவா நிலையத்தினர் மறைந்து போன எமது பாரம் பரிய பொழுது போக்கான போர்த்தேங்காய்ப் போட்டியை மீண்டும் அறிமுகம் செய்தனர்.

## பட்டம் விடும் போட்டி

பட்டங்களில் கட்டுக்கொடி கொக்கு, பருந்து, பாம்பு, வெளவால் பெட்டிக்கொடி, நட்சத்திரம் இப்படிப் பல வகைகள் உண்டு. இவைகளைக் கட்டுவதற்கு வல்வை மூதாதையர்கள் கப்பல் தொழில் மூலம் அரக்கன், பர்மா, இந்தியா போன்ற நாடுகளில் தருவித்த திறமையான தோல் மூங்கிலில் கட்டுவார்கள். தற்போது மூங்கில் இல்லாத காரணத்தால் வீடுகளின் கூரைகளில் உள்ள மூங்கிலை எடுத்து பட்டம் கட்டுவார்கள் பட்டங்களை பல வர்ணங்களில் அழகுபடுத்தியிருப்பார்கள். வாடைக்காற்று கால த்தில்தான் பட்டம் விடுவார்கள். சிலர் பெரிய கட்டுக்கொடி கட்டுவதில் விற்பன்னராகத் திகழ் வார்கள். அதில் விண் பூட்டி (பனைமட்டையில் செய்யப்பட்ட) இராக் கொடியாக இரவு முழு மையும் பறந்து தை மாதத்தோடு எல்லாம் முடிந்து விடும். பின் நாட்களில் மின்சார குமிழ் கட்டி கயிற்றுடன் மின்சார வயர்களுடன் சேர்த்து ஏற்றி விடுவார்கள். ஆகாயத்தில் செய ற்கை நட்சத்திரங்களாக ஆடி அசைந்து கொண்டேயிருக்கும்.

## சிலம்படி விளையாட்டு

இதில் வல்வை இளைஞர்களுக்கு குருவாக திகழ்ந்தவர்கள் கொத்தியால் ஒழுங்கை வாசியும் பிரபல கடல் ஓடியுமான திரு. பொன்னுச்சாமி வையாபுரி அவர்களும் நாடக இயக்குனரும் நடிகருமான திரு. மீனாட்சி சுந்தரம் சோதி சிவம் ஆகியோர் ஆவர். இருவரும் பல இளைஞர் களுக்குத் தங்கள் திறமைகளை பயிற்றுவித்தார் கள். யாழ்ப்பாணத்தில் நடந்த நாலாவது தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு ஊர்தி பவனியின்போது வல்வையின் சார்பில் சிலம்படி விளையாட்டு திறம்பட நடத்தியிருந்து பலரது பாராட்டைப் பெற்றனர்.

## தலையணைச் சண்டை

இவ் விளையாட்டு வல்வையில் உள்ள கழகங் களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகளில் நடைபெறும் குறுக்கே அந்தரத்தில் கட்டப்பட்ட கம்பு ஒன்றின்மீது எதிர் எதிரேயிருந்து இருவர் கையில் தலையணை கொடுக்கப்பட்டு விளை-யாட்டு ஆரம்பமாகியதும் தலையணையால் அடி த்து வீழ்த்துவது. யார் நிலத்தில் வீழ்கின்றாரோ அவர் தோல்வியைத் தழுவியவராவார்.

## பாண்டிக் குண்டு விளையாடுதல்

இவ் விளையாட்டு வல்வையின் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்று. மரத்தினால் செய்யப் பட்ட பதினாறு குழிகளைக் கொண்ட விளையாட் டாகும் இன்றும் பல வீடுகளில் பாதுகாத்து தலை முறை தலைமுறையாக வழங்கி வருகின்றார்கள். கிந்தி அடித்தல், கிட்டி அடித்தல், பந்தடித்தல், கிளித்தட்டு விளையாடுதல், குடுகுடு விளை-யாட்டு, சில்லு விளையாட்டு, கொக்கான் வெட்டு தல், ஓடிப்பிடித்தல், கயங்குண்டு சுண்டுதல், ஓரங்கோடு போடுதல் போன்ற விளையாட்டுக் களும் விளையாடுவார்கள்.

# உலகப் புகழ் பெற்ற நாட்டிய தாரகை ரங்கா விவேகானந்தன்

இவர் ஆழிக்குமரன் ஆனந்தன் அவர்களின் சகோதரியாவார். தனது எட்டு வயதில் நடனத் துறைக்குத் தன்னை அர்ப்பணித்தவர். தமிழக குச்சுப்பிடி மேதை வேம்படி சத்தியத்திடம் குச்சுப்பிடி நடனத்தைப் பயின்றவர் ரங்கா. தமிழக முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா வுக்கு குச்சுப்பிடி நாட்டியம் சொல்லிக் கொடுத் தவர். அப்போது ஜெயலலிதா சினிமா நட்சத்திர மாக ஜொலித்துக் கொண்டிருந்தார். இந்தியாவி லும் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளிலும் பெய ரும் புகழும் பெற்றவர். ரங்கா ஜேர்மன் தூதரக அதிகாரியைத் திருமணம் செய்து ஜேர்மனியைப் புகுந்த இடமாகக் கொண்டவர். ஜனாதிபதி, கலைஞர் விருதை ஜே. ஆர். ஜெயவர்த்தனா விடம் பெற்றவர். ஜேர்மனியிலுள்ள Bonu நகரிலே நடைபெற்ற InternationalBonu Festival of Dance இல் கிழக்கு ஆசியாவால் தெரிவு செய்யப்பட்டு அங்கு வந்த வேற்று நாட்டு லளித கலையினரோடு சரிசமமாக நடனங்கள் ஆடி தனது தனித்தன்மையை நிறுவியவர். பல தடவை இவரது நடனம் இலங்கைத் தொலைக் காட்சி ரூபவாஹினியில் இன்றும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

ஆழிக்குமரன்- பாமா ராஜகோபால்
பக்கம் 50, 51, 65

# வல்வை பெற்ற எழுத்தாளர்கள்


## முத்துக்குமாரசாமி- BA

பூ. க. முத்துக்குமாரசாமி அவர்கள் பட்டதாரி ஆசிரியராக வல்வை சிதம்பரக் கல்லூரியில் பலகாலம் கடமையாற்றியவர். பர்மா நாட்டில் அரசினர் நிறுவனத்தில் கடமை புரிந்து ஓய்வூ தியம் பெற்றவர். 1959ம் ஆண்டு நடைபெற்ற வல்வை பட்டினசபைத் தேர்தலில் பஜார் வட்டாரத்தில் வெற்றி பெற்று நகரசபை அங்கத் தவராகவும் செயல்பட்டவர்.

திரு. முத்துக்குமாரசாமி ஆசிரியர் அவர்களும், திரு. செ. வைத்தியலிங்கம்பிள்ளை (F.M.S. Railway) இருவரும் "வல்வெட்டித்துறை ஊரின் னிசை" என்னும் நூலை எமக்குத் தந்த பெரிய வர்களாவார்கள். திரு. முத்துக்குமாரசாமி ஆசிரியர் சைவசித்தாந்த கட்டுரைகளையும் எழு தியிருக்கின்றார். ஊரின்னிசை மூலம் வல்வை மக்களின் மனதில் நீங்காத இடம்பெற்றவர்.

## பண்டிதர் சங்கர வைத்தியலிங்கம்

இவர் நூறு வருடங்களுக்கு முன் வாழ்ந்த வல்வை வயித்தியலிங்கபிள்ளை அவர்களின் பேரனாவார். வல்வை சிவன்கோயில் மடத்தில் சைவமகாசபை என்ற நிறுவனத்தை ஏற்படுத்தி வெள்ளிக்கிழமை தோறும் பல சைவ சொற் பொழிவுகளை நடத்தியவர். வல்வையில் பல ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழ் அறிஞர் களின் சுருக்க வரலாற்றை எமக்கு அளித்தவர். பிற்காலத்தில் ஊறணியில் வாழ்ந்து, இளைஞர் களுக்குத் தமிழ் கற்றுக் கொடுத்து 1986இல் சிவன் அடி சேர்ந்தவர். வாழ்த்துப் பா, மற்றும் பெரியார்களின் நினைவு (கல்வெட்டு) நூல்களை



யும், பலகாலம் எமக்கு வழங்கி வந்தவர் திரு. சங்கர வைத்தியலிங்கம் அவர்களேயாகும்.

## ஈ. கே. பாமா ராஜகோபால்

திரு. இளையதம்பி குமாரசாமியின் புதல்வர். இவர் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி, ஸ்கந்தவரோதய கல்லூரிகளில் தமது கல்வியை கற்றவர். இவர் வல்வெட்டித்துறை வல்வெட்டி யில் பிறந்து இளம் பராயத்திலேயே பத்திரிகை யாளரானவர். விவேகி என்ற மாத சஞ்சிகையின்

ஆசிரியராக பத்திரிகைத்துறையில் பிரவேசித்த வர். பின்னர் திரு. ராஜகோபால் ஈழநாடு நாளிதலின் ஆசிரிய பீடத்தை அலங்கரித்தவர். இவரது திறமை வாய்ந்த பேனா பல கலைஞர்களை மிகவும் ஊக்குவித்து உயர்நிலை பெறுவதற்குப் பெரிதும் உதவியது.

பாமா ராஜகோபால் என்றால் தெரியாதவர்களே இல்லை எனும் அளவிற்கு இவர் பிரபல்யமடைந்திருந்தார். ஈழநாடு நிறுவனத்தில் கருத்து வேறுபாடு காரணமாக அதிலிருந்து விலகி கொழும்பு ஏரிக்கரை பத்திரிகை நிறுவனத்தின் தினகரன் பத்திரிகையில் திரு. ஆர். சிவகுருநாதனின் கீழ் துணை ஆசிரியராக சேர்ந்து பணியாற்றினார். அன் பின்னர் இலங்கை முழுவதிலும் உள்ள கலைஞர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் அனைவரும் இவரது அரவணைப்பிற்கு பாத்திரமாகத் தவறவில்லை.

மக்கள் பிரதமர் ஸ்ரீமா என்னும் நூலை எழுதி இருந்தவர். "வல்வை கப்பல் அமெரிக்க பயணம்" என்னும் தொடரை ஈழநாடு வார மலரில் தொடராக எழுதியவற்றையும், "ஆழிக்குமரன் ஆனந்தன்" ஆகிய இரு வரலாற்று சம்பவ நூல்களையும் தனித்தனியாகத் திரட்டி பலருக்கு விருந்தாக்கினார். அவற்றை லண்டனில் வெளியிட்டு வைத்து பலரது பாராட்டையும் பெற்றவர்.

திரு. பாமா ராஜகோபால் அவர்கள் நடன தாரகையான ராகினியை மணமுடித்து இளைய தாரகை ஷார்மினி, சியாம்ராஜ் என்ற இரு பிள்ளைகளுடன் லண்டனில் வாழ்ந்து வருகின்றார். தற்போது லண்டனிலும் ஈழகேசரி பத்திரிகையை நடத்தி கொண்டிருக்கின்றார். பத்திரிகைத்துறை ராஜகோபாலுக்கு கைவந்த கலை.

அன்ன பூரணியையும் ஆனந்தனையும் அகில உலகிற்கும் கொடுத்தவரே - எங்கள்

எண்ணமதை செயற்படுத்தி எழுத்துருவில்
வடித்தவரே

அன்னை வல்வையின் புகழ் உயர
அலைகடல்

கடந்தும் நிற்பரே

இன்னும் எம்மண்ணை நீஎழுத இதனால்
விண்ணப்பம்

விடுக்கின்றோம்


திரு. பாமா ராஜகோபாலுக்கு வழங்கப்பட்ட பாராட்டு கவிதையின் ஓர் பகுதி.

வல்வை மக்களின் சார்பாக
திரு. பொன். சிவகுமாரன்- கிப்ளிங்
திரு.வே. இராமச்சந்திரன் (ராம்)

**கனகமனோகரன்** இவர் செல்லத்துரை (தண்டயல்) மகன் கனகராசா தையல்நாயகி அம்பாள் அவர்களின் புதல்வராவார். திரு. கனக மனோகரன் அவர்கள் சிறந்த குற்றவியல் சட்டத்தரணி, பேச்சாளர், கவிஞர், எழுத்தாளர், கூடவே சமூக சேவையாளர்.

1963ம் ஆண்டு வல்வை சனசமூக சேவா நிலையத்தால் "வல்வை இன்றையநிலை" என்ற தலைப்பில் (18 வயதுக்குட்பட்டோர்) நடந்த கட்டுரைப் போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்றவர். சட்டக் கல்லூரி விவாத குழுவின் தலைவராக விளங்கியதோடு ஆயத்தமின்றிப் பேசும் போட்டியில் அடுத்து நான்கு தங்கப் பதக்கங்களை பெற்று ஒரு சாதனை ஏற்படுத்தியவர்.

1972ம் ஆண்டு இலங்கை குடியரசான போது வல்வை ஊரிக்காடு அரச ஆதரவாளர் ஒருவர் தனது வீட்டில் இலங்கை தேசிய கொடியை பறக்க விட்டிருந தார். சில இளைஞர்கள் அதை பிடுங்கி எரித்து சென்றுவிட்டனர். அதன் பின்பு ஆதரவாளர் முறையீட்டின் பேரில்திரு. கனக மனோகரன், திரு. சபா பால சுப்பிரமணியம் (லண்டன்), திரு. சிவகுரு மனோகரன், திரு. ராமண்ணா (கம்பர் மலை) ஆகியோர் மீது தேசி யகொடி அழிப்பு, தேசதுரோகம் ஆகிய இரு குற்றசாட்டுகள் மீது வழக்கு பதிவாகி பருத்தித்துறை நீதி மன்றத்தில் விசாரணை நடந்த போது திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் இவர்களுக்காக நீதிமன்றத்தில் வழக்கறிஞராக செயல்பட்டு விடுதலை பெற்றுக்கொடுத் தார்.



தற்போது குடிபெயர்ந்த கனடாவில் குடிவரவு ஆலோசகராக பணியாற்றி வரும் கனக மனோகரன் ரொறன்ரோ நகரில் பல அமைப்புக்களில் அங்கம் வகிக்கின்றார். இங்கும் தனது தமிழ் இலக்கிய சமய பணிகளை தொடர்ந்து செய்து வருகின்றார். மேலும் இவர் வல்வை நலன் புரிச் சங்கத்தை உருவாக்குவதிலும் முக்கிய பங்கு வகித்ததோடு அதன் செயலாளர் தலைவர் பதவிகளை வகித்து அதன் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியவர்.

## கே. எஸ். துரை

திரு. கே. செல்லத்துரை அவர்கள் தாயகத் தினை விட்டு இடம்பெயர்ந்து டென்மார்க் நகரில் வாழும் வல்வை எழுத்தாளர். துரை அவர்கள் திறமை மிக்க நாடக ஆசிரியர், நாடக இயக்குனர், நாடக நடிகர், வல்வையில் பல நாடகங்களை அரங்கேற்றி மக்களின் மனதில் இடம்பெற்றவர்.

வல்வையின் கலை கலாசாரம், தொழில், பண்பு ஆகியவற்றை மையமாக வைத்து "சுயம் வரம்" என்னும் நாவலை எழுதி இருந் தார். அந்த நாவலை டென்மார்க்கில் வெளி யிட்டு வைத்ததோடு அதை மாவீரர்களுக்கு சமர்ப்பணமாக செய்திருந்தார். அவரின் இரண டாவது "ஒரு பூ" என்ற நாவல் தொண்ட மானாறு செல்வச் சந்நிதி திருவிழா, விஞ் ஞானவெளிக்கள செயற்பாடுகள், விடுதலைப் போராட்டம், இலங்கை, இந்திய இராணுவ அநியாயங்கள் யாவும் அழகாக பதிவு பெற்றி ருக்கின்றன. இந்த நாவலை அன்னை பூபதி யின் பாதங்களுக்கு சமர்ப்பணமாக வெளியிட்டி ருந்தார்.இடம்பெயர்ந்து வாழ்ந்தாலும் வல்வை, இனம், நாடு என செயலாற்றிக் கொண்டிருக் கும் எழுத்தாளர் என்னும் பெருமைக்குரியவர்.

## க. சிவானந்தசுந்தரம்

வித்துவான் கனகசுந்தரம் சிவகாமசுந்தரி அவர் களின் புதல்வராவார். அரசாங்க உத்தியோகம் புரிந்து கொண்டு இனவிடு தலைப்பணிகளை ஆற்றிய பிரமுகராவார். இவர் தமிழரசு கட்சி யின் நிர்வாக செயலாளராக தெரிவு செய்யப் பட்ட பாராளுமன்ற உறுப்பினர் அல்லாத முதல் பிரமுகர் ஆவார். அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தை ஆரம்பித்து, பிரபல்ய மான கோடீஸ்வரன் வழக்கில் முக்கிய பங்கை ஆற்றியவர். பின் நாட்களில் காவலூர் திரு. வ. நவரெத்தினம் அவர்களினால் ஆரம்பிக்கப் பட்ட தமிழர் சுயாட்சி கழகத்தை ஆரம்பித்த ஸ்தாப கர்களில் ஒருவராக திரு. சிவானந்த சுந்தரம் அவர்கள் இருந்தார். அதற்குப் பின்னரான கால கட்டத்தில் TAMIL PEOPLES'S FROM என்ற நிறு வனத்தை நடத்திக் கொண்டிருந்த போது SRI-LANKA ETHNIC CONFLICT என்னும் ஆங்கில நூலை 02.04.88 இல் எழுதி வெளி யிட்டிருந் தார். இறுதி காலங்களில் விடுதலைப் புலி களின் முக்கிய பிரமுகராக மேடைகளில் சொற் பொழிவு ஆற்றியவர். தமிழ் மக்கள் மன்றத் தலைவராக இருந்த திரு. சிவானந்த சுந்தரம் அவர்கள் இந்திய இராணுவம் இருந்த வேளை-ளயில் யாழ்நகர் செல்லும் வழியில் வல்லை வெளி சந்கியில் மாற்று இயக்கத்தினரால் கொலை செய்யப்பட்ட பெரியாராவர்.

## வல்வை கமலா பெரியதம்பி

இவர் தபால் அதிபராக பதவி வகித்த திரு. நாகமுத்து சிவகாமி தம்பதிகளின் புதல்வியாவார். இவர் கொழும்பு, மட்டக்களப்பு, சிதம்பராக் கல்லூரிகளில் கல்வி கற்றவர். இவர் பதினெட்டு வயதில் இசை ஆசிரியரானார். சென்னை வானொலி வித்துவான் எஸ்.பாலசுப்பிரமணியம் அவர் களிடம் சங்கீதம் கற்று சென்னை அரசாங்க இசைப் பரீட்சை டிப்ளோமாப் பட்டம் பெற்றவர். இலங்கை வானொலியில் கச்சேரி வைத்ததுடன் 12 வானொலி நாடகங்களை எழுதி தானே நடித்தும் இருக்கிறார். இள வயதிலிருந்தே தனது திறமையை வீரகேசரி, தினகரன், சுதந்திரன் போன்ற பத்திரிகைகளில் காட்டியுள்ளார். 1988ம் ஆண்டில் தனது குடும்பத்துடன் கனடா வந்த பின்பு பல கனடிய பத்திரிகைகள், வானொலிகள் இவரது ஆக்கங்களை வெளியிடுகின்றன.



இதுவரை இவரால் எழுதப்பட்ட 68 சிறு கதைகளில் 19 சிறு கதைகள் 'மாங்கல் யம்' என்ற அழகிய தொகுப்பு நூலாக வெளி வந்தது. 'நீதிக் கதைகளில் ஆத்தி சூடி' என்ற நூலும் வெளிவந்தது.

'நம் தாயார் தந்த தனம்' என்னும் பெருநூல் இவரது நான்கு பாக நாவல். வல்வை நகர் மக்களின் பாரம்பரியம், பண்பாடு முதலியவற்றை வெளி உலகத்திற்கு பறைசாற்றும் வகையில் இது புனையப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. கமலா பெரியதம்பி அவர்களு டைய மற்றுமோர் அரிய படைப்பு 'தமிழ் கவிக் காவினிலே' என்பது இது 21 கவிநயக் கட்டுரை களைக் கொண்டது. கடந்த மாதத்தில் தமிழ் நாட்டில் வெளியான நூலின் பெயர் 'அருளும் ஒளியும்' என்பது பாமலர்கள் பலவற்றைக் கொண்ட ஓர் இந்து சமயக் கதம்ப நூல் இது. 'கானக் குயில்', செந்தமிழ் சொற்செல்வி', 'இரு கலை வல்லபி' என்ற பட்டங்களைப் பெற்றவர். 1997இல் தமிழர் தகவல் பத்திரிகை இலக்கிய சேவை விருதுடன், தங்கப் பதக்கங்களும் பெற்றவர். வெளியார் யாருடைய உதவியில்லா மல் நூல்களை அழகுற அச்சேற்றி புலம் பெயர் ந்த கனடா நாட்டில் வல்வையின் பெயரை நிலைநாட்டிக் கொண்டிருப்பவர்.

தமிழர் தகவல்(கனடா) -

திரு. எஸ். திருச்செல்வம் 1997ஆண்டுமலர் பக்கம் - 26.

திரு. நடராசா அனந்தராஜ் அவர்கள் பட்டதாரி ஆசிரியர். சிறு வயதிலே எழுத்தாளர் ஆனார். இவருடைய ஆக்கங்களான சிறு கதைகள், தொடர்கதைகள் கவிகள், அரசியல் கட்டுரைகள் தினகரன், சுதந்திரன்,



வீரகேசரி, ஈழநாடு ஆகிய பத்திரிகைகளில் அவ்வப்போது வெளிவந்தன.

## வல்வை. ந. அனந்தராஜ்

1974ம் ஆண்டு யாழ்ப்பாணம் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் போது வல்வை அமெரிக்க கப்பலின் பயணம் பற்றி சிறு நூலையும், இந்திய இராணுவம் வல்வையில் செய்த படுகொலை பற்றி தமிழில் ஒரு நூலையும், இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு படு காயமுற்று படகில் இந்தியா சென்றிருந்த வேளையில் அங்கேயே அச்சிட்டு வெளியிட்டார். 'அறிவியல் உண்மைகள்' என்ற விஞ்ஞான நூலையும் பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் அணிந்துரையுடன் 1.11.1992இல் வெளியிட்டிருந்தார். வல்வைக் கல்வி மன்றம் என்ற தனியார் பாடசாலையை பதினைந்து வருடங்களுக்கு மேல் நடத்திக் கொண்டிருந்தவர் தற்போது முல்லைத்தீவு உதவி கல்வி அதிகாரியாக பணிபுரிபவர். தொடர்ந்து தாய் மண்ணில் இருந்து எழுதிக் கொண்டிருக்கும் பெருமைக்குரியவர்.

## பொன் சிவகுமாரன்

திரு. சிவகுமாரன் பொன்னம்பலம் தம்பதிகளின் புதல்வர். இவரின் தந்தை திரு. பொன்னம்பலம் தமிழர் விடுதலைக்காக உழைக்கும் அரசியற் கட்சியில் இருந்தவர். வல்வை முத்துமாரி அம்மன் கோயில் நிர்வாக சபையிலும் பலகாலம் பதவி வகித்து, பின்பு அம்மன் கோயில் மணியகாரராகவும் தொண்டாற்றியவர். திரு. சிவகுமாரன் வளர்ந்து வரும் இளம் கவிஞர். அரசியல் சார்ந்த கட்டுரைகளும் எழுதிக் கொண்டிருப்பவர். ஓய்வு நேரங்களை சமூக, இலக்கிய பணிகள் புரிந்து, அதன் மூலம் கனடா அரசு வழங்கிய "தொண்டர் சேவை" விருதினைப் பெற்றவர்.


## சைராபானு ரவீன்குமார்

திருமதி சைராபானு ரவீன்குமார் வல்வை நெடிய காட்டுப் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் பல கவிதைகளையும் நாடகங்களையும் எழுதி வருபவர். இவரது ஆக்கங்கள் கனேடிய தமிழ் ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்திலும் பத்திரிகைகளிலும் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. 1996இல் நடைபெற்ற வல்வை "நெய்தல் நிலவு" தமது கவிதாவாற்றலை வெளிப்படுத்தியவர்.



1996இல் கனடாவில் நடைபெற்ற உலகத் தமிழர் பண்பாட்டு மாநாட்டு ஊர்திப் பவனியின் போது எம்மவரின் சிலம்பு விளையாட்டி திரு க.செல்வகுமார், திரு வே.பத்மகுமார், திரு க.நிர்மலகுமார், திரு அ.ரகுராம்

# வல்வையும் ஈழவிடுலைப் போராட்டமும்



திரு ந.தங்கத்துரை

அன்று தொட்டு இன்று வரை இலங்கையில் கலவரங்கள் நடந்துகொண்டே வருகின்றன. 1279 இல் கலவரம் நடந்தது. இந்த கலவரத்தில் பௌத்தர்கள் திரண்டு தமிழர்களை கொன்றனர். இதற்காக யாழ்ப்பாணத்தை ஆட்சி புரிந்த தமிழ் மன்னன் விக்கிரமசிங்கன் கலக காரர்களின் தலைவன் பஞ்சிவண்ட என்பவனையும் எதிர்ப்பட்ட பதினேழு சிங்களவர்களையும் கொன்று முடித்ததற்கான ஆதாரம் வரலாற்றில் உண்டு. 1519இல் நல்லூரை ஆண்ட சங்கிலி செகராச சேகரன் ஆட்சி காலத்தில்சிங்களவர் வகுப்பு மோதல் ஒன்றில் ஈடுபட்டதால் அவர்களைக் கண்டிக்கு அடித்துத் துரத்தினான். 1505இல் போர்த்துக்கேயர் இலங்கையில் அடி வைத்த பின்பு ஒல்லாந்தர் ஆங்கிலேயர் என்று ஆட்சியாளர்கள் மாறி தமிழ் மண் சிங்களவர்க்கு அடிமைப்பட்டு விட்டது. ஆண்ட இனம் அடிமைப்படாது என்பதற்காக 1918ம் ஆண்டு இலங்கை தேசிய காங்கிரசை ஆரம்பித்த சேர் பொன்னம்பலம் அருணாசலம் 1924ம் ஆண்டில் இலங்கை தமிழ் லீக்கை ஆரம்பித்து டொனமூர் அரசியல்திட்டத்தை "சிறுபான்மையோரின் மரண வோலை" என்று கூறி எதிர்த்தார்.

ஆண்ட இனம் மீண்டும் ஆள தலைவர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களால் 1944 இல் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையும் பின்னர் தந்தை செல்வா அவர்களால் 1949இல் சமஷ்டி கோரிக்கையும் முன்வைக்கப்பட்டு , பின்னர் தமிழ் ஈழமே ஈழத் தமிழினத்தின் முடிவான முடிவு என 1977இல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் முடிவுகள் மூலம் தமிழ் மக்கள் நிரூபித்தனர். 1972 மே மாதம் 22ம் நாள் தமிழ் மக்களுடைய உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் இலங்கை பிரித்தானிய அரசின் பிடியிலிருந்து விடுபட்டு குடியரசானது. அன்றிலிருந்து இளைஞர்கள் தமது வழியில் போராட ஆரம்பித்தனர். வல்வையில் குட்டிமணி தங்கத்துரை, நடேசுதாஸன், பிரபாகரன் ஆகியோர் ஒரு குழுவாக இயங்கினர். சத்தியசீலன், பொன் சிவகுமாரன் (உரும்பிராய்) இப்படியான சிலரும் இவர்களுடன் தொடர்பு கொண்டு இயங்கலாயினர்.


1971 சித்திரை 5 ஜே.வி.பி கிளர்ச்சி ஆரம்பித்த பின்பு வெடிமருந்துகள், துப்பாக்கிகள் யாரும் வைத்திருக்க முடியாது. வடபகுதியில் கிணறு வெட்ட உபயோகப்படும் வெடிமருந்துகளை விற்பனை செய்யும் வியாபார நிலையங்களுக்கு வழங்கப்பட்டிருந்த விற்பனை அங்கீகாரத்தையும் அரசு நீக்கிவிட்டது. குட்டிமணி இவற்றை தென்னிந்தியாவிருந்து தங்கள் தேவைகட்கு எடுத்து வந்தார். வைத்தியசாலையில் பொலிசார் உத்தரவுடன் தான் விபத்து சிகிச்சை பெறமுடியும். துப்பறியும் பொலிசார் தனித்தனியாக நடந்து திரியும் காலம் அது.

1973இல் ஒரு தடவை திரு. து. சோதிரெட்ணராஜா (சின்னசோதி) இன்னும் சிலருடன் இணைந்து தொண்டமானாறு வீரகத்தி பாடசாலையில் குண்டு தயாரிக்கும்போது தவறுதலாக குண்டு வெடிப்பு ஏற்பட சின்னசோதிக்கு பலத்த காயம் ஏற்பட்டு விட்டது. இரவு 8 மணி. ஊரடங்குச் சட்டம் நிலவியதால் அவரை நடு வீதியில் கிடத்தி விட்டு பொலிஸ் வாகனம் வர மற்றவர்கள் மறைந்து விட்டார்கள். சின்ன சோதியை பொலிசார் யாழ் மருத்துவமனை எடுத்து சென்று அங்கு இரு மாதகாலம் சிகிச்சை நடந்தது. ஓரளவு உடல் நலம் தேறிய நிலையில் அவரை கண்காணித்த பொலிசார் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு தலைமறைவாகி விட்டார்.

1975இல் நெற்கொழுவைரவர் கோயிலடியில் அமைந்த கோழிவளர்ப்பு பண்ணையில் தம்பி பிரபாகன் அவர்களால் வெடிமருந்து பரீட்சிக்கப்பட்ட பொழுது தவறுதலாக அவர்களுக்கு மத்தியில் வெடித்து விட்டது. அப்போது யாரும் வாடகைக்கார் அவர்களுக்கு விட முன்வரவில்லை. அவர்கள் நடவடிக்கையை ஆதரித்த நண்பர் காரைக் கொடுத்து உதவ உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. தி. தர்மலிங்கம் அவர்கள் உதவியுடன் தனியார் மருத்துவரிடம் சிகிச்சை பெற்ற

னர். திரு. க. நடேசதாஸன் அவர்கள் மேற்சிகிச்சைக்காக தென்னிந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார். சம்பவத்தின் போது தம்பி பிரபாகரனுக்கு வலது காலில் ஓர் பகுதி கருகி விட்டது. எனவே தான் கரிகாற் பெருவளத்தான் கிடைத்தது போன்ற ஒரு காரணப் பெயர் திரு பிரபாகரனுக்கும் கிடைத்தது. ஆரம்ப காலப் பொலிஸ் விளம்பரங்களில் இடம் பெற்ற தேடப்படும் பட்டியலில் பிரபா அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த பெயர்களில் கரிகாலனும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

1974ம் ஆண்டில் திரு. சி. ஞானலிங்கம் அவர்களை பல அரச விரோத சம்பவங்களையிட்டு தேடிவந்தனர். தனது தெணியம்பை தெரு வீட்டில் உறங்கிய நேரம் பொலிசார் வீட்டை சுற்றி வளைத்து அவரைக் கைது செய்து கைவிலங்கு இட்டு அக்காலத்தில் நல்லூரில் இயங்கிக் கொண்டிருந்த பொலிஸ் நிலையத்தை நோக்கிக் கொண்டு சென்றனர். போகும் வழியிலும் தொடர்ந்து தாக்கப்பட்டதால் ஞானலிங்கம் ஆத்திரம் அடைந்தார். ஜீப் வல்வை பாலத்தில் ஏற முற்பட்ட வேளையில் முன் ஆசனத்தில் தன் இரு புறங்களிலும் இருந்த சாரதியையும், பொலிஸ் குழுவின் பொறுப்பாகவிருந்த உரும்பிராய் சாஜன் ராஜமுத்தையாவையும் தாக்கியதோடு ஜீப்பை பிரட்டி விட்டு தப்பி சென்று விட்டார். இச்



குட்டிமணி ஜெகன் ஆகியோரை ஸ்ரீலங்கா நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லும் போது



தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி திரு தங்கத்துரை, குட்டிமணி குடும்பத்தினரின் துயரத்தில் பங்கு கொள்ளுகின்றார்

சம்பவம் அந்த நாட்களில் மிகப்பெரிய வீரசாகசமாக வியந்து பாராட்டப்பட்ட சம்பவமாகும். பொலிஸ் சாஜன் தன் காலையும் இழந்து பதவியை இழந்தது வருத்தத்திற்குரிய நிகழ்வாகும்.

ஒரு தடவை இரு வல்வை இளைஞர்களை இராணுவத்தினர் கைது செய்து ஊரிக் காட்டில் அமைந்த இராணுவ முகாமிற்கு கால்நடையாகக் கூட்டிச் சென்றனர். தகவல் குட்டிமணி அவர்களுக்கு எட்டியது. உடன் கைத்துப்பாக்கி சகிதம் தன்னந் தனியாக ஓடி வந்து ஆலடியில் இராணுவத்தினரை வழிமறித்து ஆகாயத்தை நோக்கி சுட்டு இராணுவத்தினரை வெலவெலக்கவும் விழுந்து படுக்கவும் வைத்துகைதிகளை விடுவித்ததோடு தானும் தப்பிச் சென்ற சம்பவம் வல்வையர் பலரும் அறிந்த ஒன்றாகும். மேற்படி சம்பவம் வல்வை இராணுவ முகாமிலிருந்து இருநூறு யார் தொலைவில் நடைபெற்றதாகும்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் அமைப்பாளர் திரு. அல்பிரட் துரையப்பா அவர்களை பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோயில் வாயிலில் தமிழ்த் தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றனர். சந்தேக நபர்கள் என இரு வல்வை இளைஞர்களை கைது செய்து வெலிகடை சிறையில் வைத்தனர். ஆனால் பிரதான குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட பிரபா அவர்களை கைது செய்ய முடியவில்லை. ஏனெனில் அவர் சிறு வயது முதற்கொண்டு தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டிருந்தவர். அரசின் பிடியிலிருந்து தப்பி இன்று தமிழ் மக்களின் நம்பிக்கை

நட்சத்திரமாக இருப்பதற்கு ஆரம்ப காலத்தில் உதவியாக இருந்தவர்கள் அவரின் உறவினரான திரு. ச. ஞானமூர்த்தி குடும்பத்தவர்களாவர். அவர்களுள் விசேடமாக குறிப்பிட வேண்டியவர் திரு. ஞா. ஆனந்தகுமரேசன் (பட்டு) ஆவர். அவர் தமிழின விடுதலைக்காகவும் தீண்டாமை ஒழிப்புக்காகவும் தனது வாழ்வினை அர்ப்பணித்தவர்.

தொடர்ச்சியான அரச பயங்கரவாதம், ஆயுத போராட்டமே தமிழினத்தின் விடிவிற்கு ஒரே வழி என்ற நம்பிக்கைக்கு உரமிட்டது. இதன் விளைவாக அறவழியில் மட்டும் நம்பிக்கை கொண்டிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் சில முன்னணி தலைவர்கட்கும் இளைஞர் சிலருக்கும் விரிசல்கள் ஆரம்பமாகின. காலக் கிரமத்தில் ஒன்றாக இயங்கிவந்த திரு. வே. பிரபாகரன், திரு. க. உமாமகேஸ்வரன் இருவரும் பிரச்சனைகள் ஏற்பட தமிழ் ஈழ விடுதலைப் புலிகள், தமிழீழ மக்கள் கழகம் என்ற பெயர்களில் தனித்தனியாக இயங்க ஆரம்பித்தனர்.

எப்போதும் பிரபாவும், குட்டிமணி தங்கத்துரை குழுவினரும் வெவ்வேறு இயக்கங்களாக இயங்கினாலும் அவர்களுக்கிடையே வேற்றுமையில் ஒற்றுமை இருந்து வந்தது. இதர வங்கிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட பணத்துடன் நீர்வேலி வங்கியிலும் சேகரிக்கப்பட்ட பின்பு புறப்படத் தயாராக இருக்கும் வேளையில் அபகரிக்கும் திட்டத்தை முன்வைத்தார் திரு. தங்கத்துரை அவர்கள். பிரபாகரன், குட்டிமணி தங்கத்துரை போன்ற முக்கியமானவர்களே களத்தில் இறங்கினார்கள். வாகனங்கள் ஆயுத பொலிஸ் துணையோடு வந்தன. பாதுகாப்புக்கு வந்த பொலிசார் கொல்லப்பட்டனர். பணம் போராளிகளின் கைக்கு வந்தன. 1981 பங்குனியில் நடந்த இச் சம்பவம் இலங்கை அரசை திகைக்க வைத்தது. யாழ் எங்கும் தேடுதல் வேட்டைகள் நடந்தன. தேடுதல் தீவிரமானதால் தமிழ் நாட்டில் சென்று தங்கியிருக்கலாமென குட்டிமணி தங்கத்துரை முடிவு செய்தனர். கடற்கரையில் படகு தயாராக இருந்தது. வல்லிபுரக் கடற்கரை வீதியில் குட்டிமணி தங்கத்துரை ஜெகன் மூவரும் நின்றனர். திடீரென கடற்படை அங்கு வருகின்றது. அப்போது அந்த தமிழ் மறவர்கள் போராடும் சூழ்நிலையில் இருக்கவில்லை. எதிர்பாராத சம்பவம் மூவரும் கைது செய்யப்பட்டனர். கைதான வேளையில் குட்டிமணி தன்னைத்தானே சுட தங்கத்துரை தடுக்க முற்பட குண்டு திசை திரும்பியது. குட்டிமணி உயிர்பிழைத்தார். படுகாயத்திற்கு ஆளானார்.

தலைக்கு ஐந்து லட்சம் விலை வைத்து தேடப்பட்டவர்களையே கைது செய்து இருக்கிறோம் என்பது கடற்படையினருக்கோ பொலிசாருக்கோ தெரியாது. இன்ஸ்பெக்டர் நவரெத்தினராசா தலைமையிலான பொலிஸ் கோஷ்டி பருத்தித்துறை பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். அங்கிருந்த பொலிஸ்காரர் ஒருவர் தான் குட்டிமணியை அடையாளம் கண்டு கொண்டார். அப்போதுதான் தம்மால் அடையாளம் காணப்பட்டவர்கள் எவ்வளவு முக்கியமானவர்கள் என கைது செய்தவர்கட்குத் தெரிய வந்தது. பொலிஸ் நிலையம் முழுவதும் உஷாரானது. தகவல்கள் பல பாகங்களுக்கும் பறந்தன. மூவரும் கொழும்பு கொண்டு செல்லப்பட்டனர். நிச்சயமாக தகவல் கிடைத்தே கடற்படையினர் வந்திருக்கிறார்கள். அந்தத் தகவலை யார் கொடுத்தார்கள்? நோக்கம் என்ன? இவ் வினாக்கள் இன்றுவரை விடை காணப்படாதவையாகவே உள்ளது.

பொலிஸ் கான்ஸ்டபிள் சிவநேசன் கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட நிலையில் குட்டிமணி அவர்கள் தடுப்புக் காவலிலே இருந்தது குறிப்பிடத்தக்கது. அந்நிலையிலும் குட்டிமணியை தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் திரு. த. திருநாவுக்கரசு அவர்கள் இறந்ததால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு நியமனம் செய்தது. சிறையில் இருந்த காரணத்தால் ஜே. ஆர். அரசு அவரை பதவிப் பிரமாணம் செய்ய விடவில்லை. இதன் காரணமாக திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் கண்டனங்களுக்கு மட்டும் அல்ல நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வருவதற்கும் ஆளானார்.

1983 ஆடி 23ம் திகதி விதி விளையாடியது. இராணுவத்தினர் திருநெல்வேலியில் செல்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு ஆளாக 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இராணுவத்தினரின் சடலங்களை கொழும்பு கொண்டு வரப்பட்டு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படுகையில் இனக் கலவரம் அரசின் பின்னணியுடன் ஆரம்பிக்கப்பட்டது. 3000 தமிழர்கள் வரையில் கொல்லப்பட்டனர். அரச பயங்கரவாதம் வெளிப்படையாக வெலிகடை சிறையில் இடம்பெற்றன. உலகில் எந்த போராட்ட வரலாற்றிலும் இடம்பெறாத வரிகள் சிறையில் 25.7.83 பிற்பகல் 2.30 மணியளவில் நடந்தன.

குட்டிமணி தங்கத்துரை தேவன் ஜெகன் ஆகி-யோருடன் நடேசதாசன் சிவபாதம் மாஸ்டர் உட்பட 35 பேர் கோரமான முறையில் கொல்லப்பட்டனர். சிங்கள கைதிகள் ஆயுதபாணிகளாக்கப்பட்டனர். தமிழ்க் கைதிகளின் கதவு பூட்டுக்கள் திறக்கப்பட்டு கொத்தப்பட்டும் வெட்டப்பட்டும் தமிழ் இரத்தம் ஆறாக ஓடியது. இக் கொடூர கொலைகள் நடக்கையில் இராணுவம் வெலிகடையை சுற்றி தமிழீழ போராளிகள் தப்பி ஓடாமல்

காவல் புரிந்து கொண்டு இருந்தது.

குற்றுயிரான உடல்கள் இழுத்து வரப்பட்டு அங்கிருந்து புத்த விகாரையின் முன்பு இருந்த புத்தரின் சிலைக்கு முன் போடப்பட்டன. ஜீவ காருண்யமே என்னுடைய மதம் என்று சொன்னவர் புத்தமகான். மரண ஓலங்கள் கத்தி, கோடரி, கம்பியால் நிறுத்தப்பட்டன. இந்த தமிழ் மறவர்கள் தண்டனை வரட்டும் அனுப விப்போம். சாவே தண்டனையாக இருந்தாலும் சிரித்துக் கொண்டே சாவோம். தூக்குக் கயிறு துணிந்தவனுக்கு பஞ்சு மெத்தை. இப்படி வீர மரணம் எய்துவது எமக்குப் புகழ். எமது போராட்டத்திற்கு வலு. தமது கண்களைப் பார்வையற்ற தமிழர்களுக்கு வழங்குவதன் மூலம் மலரும் தமிழீழத்தை தமது கண்கள் காணட்டும். தமது உடல்களை யாழ் பல்கலைக் கழகத்திற்கு வழங்குங்கள், என்று தமது இலட்சியக் கனவுகளை நீதிமன்றத்திலும் சொல்லியிருந்தார்கள். அந்தோ பரிதாபம் உயிருடன் அவர்களின் கண்களைத் தோண்டி எடுத்தனர். கண்களை பூட்ஸ் காலினால் போட்டு மிதித்தனர். குட்டிமணியின் நாக்கை பிடித்து இழுத்து ஒருவன் அறுத்து எடுத்தான். பின்னர் ஆடி 27 அன்று கொட்டியோ மறண்ட ஒன, புலிகளைக் கொல்ல வேண்டும் என வெறிக் கூச்சல் போட்டு மேலும் 18 கைதிகளை அடித்து கொன்றனர். இந்த கொலைக் குற்றங்களுக்கு இதுவரை விசாரணை எதுவும் நடைபெறவில்லை.

(1) இலங்கை தமிழர் போராட்ட வரலாறு - பாவை சந்திரன்

# சதாசிவம் கிருஷ்ணகுமார்

1960ம் ஆண்டு ஜனவரி மாதம் 2ம் நாள் திரு. சதாசிவம் இராசலட்சுமி தம்பதிகளுக்கு அருமை மகனாக கிருஸ்ணகுமார் பிறந்தார். இயக்க தோழர்கள் வெங்கிட்டு என அழைத்தனர். பின்னர் நாளடைவில் "கிட்டு' என வழங்கலாயிற்று. கிட்டுவின் தந்தை வல்வை சனசமூகசேவா நிலையம் உருவாகவும் வளர்க்கவும் உழைத்தவர். 1958ம் ஆண்டிலிருந்து திரு. சதாசிவம் இராசலட்சுமி தம்பதிகள் தமிழர் உரிமைக்காக நடத்திய அகிம்சைப் போராட்டங்களிலெல்லாம் பங்கெடுத்துள்ளார்கள். கிட்டு ஒரு வயதுக் குழந்தையாக இருக்கும் போதே அவரைத் தூக்கிக் கொண்டு தந்தை செல்வா தலைமையில் நடந்த சத்தியாக்கிரக போராட்டத்தில் இவரது தாயார் கலந்து கொண்டவர். ஒவ்வொரு தேர்தல் காலத்திலும் அவர்கள் வீடு, கட்சிக் காரியாலய மாக இயங்கும். தமிழரசுத் தலைவர்களும் தொண்டர்களும் கூடும் இடமாகவும் இருக்கும். கிட்டுவின் தந்தை குமார் அச்சகம் என்னும் பெயரில் அச்சுக்கூடத்தை நிறுவினார். கிட்டுவின் குடும்பத்தில் நிலவிய அரசியல் சூழ்நிலை அவரின் பிற்கால அரசியல் வாழ்வுக்கு ஏற்றதோர் அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தது.

கிட்டு அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை வல்வை மிஷன் பாடசாலையிலும் மேற்கல்வியை வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும் கற்று இருந்தார். க.பொ.த. உயர்தர தேர்வில் ஒருபாடம் எழுதிய நிலையில் பொலிசார் அவரைத் தேடி அவர் இல்லம் சென்ற வேளையில் மதில் மேல் ஏறி தப்பிச் சென்றார். அதன் பின்பு முழுமையாகத் தன்னை தமிழீழ விடுதலைபுலிகள் இயக்கத்தில் சேர்த்துக் கொண்டார்.

# கிட்டு FRONT LINE இந்திய பத்திரிகைக்கு அளித்த பேட்டியின் ஒரு பகுதி

கேள்வி: சில பிரிவினர் மத்தியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வல்வெட்டித் துறையைச் சேர்ந்தவர்களால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளது என்று கூறுகிறார்களே!

ஆம்! சிலர் அவ்வாறு கூறுகிறார்கள். சிலர் அதற்கு மேலாகவும் சென்று இயக்கத்தில் குறிப்பிட்ட சாதியினரே ஆதிக்கம் செலுத்துவதாக கூறுகிறார்கள் அது பிழையான அபிப்பிராயம். சிலர் வேண்டுமென்றே தமிழ் சமுதாயம் முழுவதும் எம்மோடு இணையாமல் தடுக்க இவ்வாறு பொய்ப் பிரசாரம் செய்கின்றனர். ஆனால் நடந்தது என்ன என்பதை உணர வேண்டும். திரு. பிரபாகரன் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆரம்பித்த பொழுது தொடக்கத்தில் அவரோடு இணைந்தவர்கள் யார்? அவருடைய நண்பர்கள் அவருடன் படித்த சக மாணவர்கள் அவருடைய உறவினர்கள் அயலவர்கள் இப்படி அவரது ஊரவர்களே முதலில் சேர்ந்தனர். ஆகவே இயல் பாகவே ஆரம்பமாகியது. நாங்கள் படிப்படியாக வளர்ந்தோம். காலம் செல்லச் செலல தமிழீழத்தைச் சேர்ந்த

பலரும் எம்முடன் இணைந்தனர். எமது இயக்கத்தில் மூத்தோருக்கே முதலிடம் என்ற அடிப்படையில் தளபதிகளை நியமனம் செய்கின்றோம். ஆரம்பத்தில் இணைந்த முதல் முகாமைச் சேர்ந்தவர்களே தலைவர்களாகவும், தளபதிகளாகவும் செயல்படுகின்றனர். விரைவில் சேவை, மூப்பு தகுதி போன்றவற்றின் அடிப்படையில் இயக்க பொறுப்புக்களை எம்மிடமிருந்து கையேற்பார்கள். அதன் பின்பு இந்த வல்வெட்டித்துறை மாயை மறைந்து விடும் ஆனால் சாதி அடிப்படையில் இயங்குவதாகக் கூறப்படுவது சுத்தப் பொய்.

1. காவிய நாயகன் கிட்டு - பழநெடுமாறன் பக்கம் 3
2. FRONT LINE - இந்திய பத்திரிகை

# வல்வை விளையாட்டுக் கழகங்கள்

## றெயின்போஸ் விளையாட்டுக் கழகம்

1950ம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டது. இக் கழகம் விளையாட்டுடன் வீரத் தமிழின், இலட்சிய வீரன் போன்ற வரலாற்று நாடகங்களையும், மல்யுத்த போட்டிகளையும் நடத்தியிருக்கின்றது. வல்வெட்டித்துறையில் 1956ம் ஆண்டு முதன் முதலாக மின்னொளியில் விளையாட்டுப் போட்டி, கரப்பந்தாட்டம் இரண்டையும் நடத்தி வைத்த கழகமாகும். இதன் ஆரம்ப அங்கத்தவர் திரு. ஆ. திருச்சிற்றம்பலம், திரு. அழகசுந்தரம், திரு. சி. தனபாலசிங்கம், திரு. சர்வானந்தவேல், ஆகியோர் ஆவர்.

தற்போது திரு. க. உருத்திராபதி அவர்கள் நன்கொடையாக வழங்கிய காணியில் றெயின்போஸ் கழக இளைஞர்கள் ஓர் படிப்பகத்தை உருவாக்கி மக்கள் படிப்பதற்கு வசதிகள் ஏற்படுத்தியுள்ளனர்.

## வல்வை நெடியகாட்டு இளைஞர் விளையாட்டுக் கழகம்

இதுவும் 1950ம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டது. இக் கழகம் 1961ம் ஆண்டளவில் சிதம்பராக் கல்லூரி மைதானத்தில் "களியாட்ட விழாவை நடத்தி, அதன் மூலம் கிடைத்த பணத்தையும், திரு. செ. தங்கவடிவேல் சகோதரர்கள், மற்றும் பொதுமக்கள் பணத்திலும் சொந்தமாக ஒரு மைதானத்தை வாங்கியது.

வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் வைத்து பிரதம விருந்தினராக நாடு தழுவிய விளையாட்டு வீரர்களை அழைத்துக் கௌரவிப்பார்கள்.

## உதய சூரியன் விளையாட்டுக் கழகம்

உதய சூரியன் விளையாட்டுக் கழகம் வருடாந்தம் தனது ஆண்டு விழாவை நடத்தியதன் மூலம் மக்கள் மனதில் இடம்பிடித்துக் கொண் டது. உதய சூரியன் ஆண்டு விழா என்றால் வல்வை மக்கள் எப்போ வருமென எதிர்பார்த்த வண்ணம் இருப்பார்கள். அன்று அதிகாலை 6.00 மணியளவில் தமது வீட்டை விட்டு வல்வை வீதிகள் இருமருங்கும் கூடிவிடுவார்கள். சைக்கிள் ஓட்டப் போட்டி, மரதன் ஓட்டப்போட்டி தடையோட்டம், வினோத உடைப்போட்டி என்பன ஒன்றன் பின் ஒன்றாக நெடிய காட்டுப் பிள்ளையார் வீதியில் இருந்து ஆரம்பமாகும். நீண்ட தூர சைக்கிள் ஓட்டப் போட்டி முடிவில் அவர்கள் திரும்பி வரும்போது உற்சாகப்படுத்தும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இரு நாட்களாக நடைபெறும் நிகழ்ச்சியின் முடிவாக நாடகப் போட்டி நடைபெறும். நாட்டின் பல பாகங்களிலிருந்தும் 25 நாடகங்களுக்கு மேல் பங்குபற்றி தெரிவு செய்யப்பட்ட 6,7 நாடகங்கள் மாத்திரம் மேடை ஏற்றப்படும். பிரதம விருந்தினராக தென்னிலங்கை அரசியல் பிரமுகர்களையும், நடிகர் வி. வைரமுத்து, கலையரசு சொர்ணலிங்கம், கலாநிதி. க. சிவத்தம்பி போன்ற கலைஞர்களை அழைத்து கௌரவித்துள்ளது. இதன் காப்பாளர்களாக திரு.வே. பரம்சோதி, திரு. பி. கனகராஜா, திரு. க. சபாரத்தினம், திரு. தி. வேலுப்பிள்ளை ஜி.பி, திரு. தி. ஸ்ரீஸ்கந்தராஜா, து. நவரெத்தினம் ஆகியோர் இருந்தனர்.

முத்துமாரி அம்மன் கோயில் இந்திர விழாவுக்கு அடுத்து அதிக மக்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சியாக அமைந்துவிட்டது. ஈழப்போராட்டத்தின் காரணமாக இவை யாவும் நிறுத்தப்பட்டுள்ளன.

## வல்வை புளூஸ் விளையாட்டுக் கழகம்

வல்வையில் உள்ள கழகங்களைசெயல்லாம் ஒருங்கு படுத்தி அதில் தெரிவு செய்யப்பட்ட வீரர்களை அடக்கியதே புளூஸ் விளையாட்டுக் கழகமாகும். வெளியூர்களில் நடக்கும் போட்டிகளி

லெல்லாம் கழகம் பல வெற்றிகளைப் பெற்று வல்வையின் பெயரை விளையாட்டுத் துறையில் நிலைநாட்டிக் கொண்டிருந்தனர் பல ஆண்டுகளாக. திரு. ஆ. வி. அருணாசலம், திரு. ஆ. சி. ராமநாதன், திரு. ஆ.சி. இராஜேந்திரம், திரு. கி. தேவசிகாமணி, திரு. கார்த்திகேயன், திரு. ஆ. இரத்தினசிங்கம் ஆகியோர் முன்னணி வீரர்களாகத் திகழ்ந்தனர். வல்வை நகரசபையாக மாறிய பின்பு, கம்பர்மலை, தொண்டமனாறு, வல்வெட்டி, பொலிகண்டி ஆகிய இடங்களைச் சேர்ந்த கழகங்களும் இடம்பெற்று வல்வெட்டித்துறை விளையாட்டுக் கழகமாக இயங்குகின்றது.

இதன் காப்பாளர் Dr. ஆ.சி. ராஜேந்திரன் அவர்கள்
தலைவர் திரு. மு. தங்கவேல் அவர்கள்
செயலாளர் திரு. சு. சிவானந்தன் அவர்கள்

அங்கத்துவ கழகங்கள்

1. வல்வை ஒற்றுமை வி.க
2. வல்வை றெயின்போஸ் வி.க
3. வல்வை நெடியகாடு இ. வி.க
4. வல்வை சைனிங்ஸ் வி.க
5. வல்வை ரேவடி யூனியன் இ.வி.க
6. வல்வை உதயசூரியன் கழகம்
7. வல்வை தீருவில் இ.வி.க
8. வல்வை நேதாஜி இ.வி.க
9. வல்வை ஊறணி இ.வி.க
10. வல்வை இளம்கதிர் இ.வி.க
11. தொண்டமானாறு ஒற்றுமை வி.க
12. தொண்டமானாறு விக்னேஸ்வரா வி.க
13. கம்பர்மலை யங்கம்பன்ஸ் வி.க
14. கம்பர்மலை கம்பன் வி.க
15. ஆதிகோவில் வி. கழகம்

## பேஸ் மென்டில் வீடுகள்

வல்வை சந்தியில் 100 வருடங்களுக்கு முன் பிரபல வர்த்தகர் திரு. அருணாசலம் என்பவர் பேஸ்மென்டில் வீடுகளையும், முன்புறம் கடைகளையும் கட்டியிருந்தார். அவரின் பிள்ளைகளான திரு. அ. மயில்வாகனசுந்தரம் (சிங்கபபூர்) திரு. அ. கதிரவேற்பிற்ளை திரு. அ. அப்புசுந்தரம் திரு. அ. குழந்தை வடிவேல் ஆகியோர் 1970 ஆண்டு இடிக்கும்வரை வேல் ஸ்ருடியோ புத்தக கடை, இரும்பு தொழிற் சாலை சர்பத் கடை என்பவற்றை நடத்தி வந்த னர். அயல் ஊர்களில் வல்வை கடற்கரையை அண்டிய வீடுகளில் பாதாள அறைகளை கட்டியுள்ளார்கள் என்ற கதைகளும் உலாவி வருவது குறிப்பிடத்தக்கது.

## ஹெலியன்ஸ் நாடக மன்றம்

ஹெலியன்ஸ் நாடக மன்றம் 1965ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஆரம்ப கர்த்தாவாக திரு. வே. முத்துசாமி, திரு. ச. காந்திதாசன், திரு. குமரச்செல்வன், திரு. பா. ரகுபதி, திரு. பா. கலாபதி திரு. சிவகுரு மனோகரன் ஆகியோர் இருந்தனர். இதில் உறுப்பினராக பலர் இருந்தனர். இவர்கள் சிதம்பராக் கல்லூரி இரு மாடிக் கட்டிட நிதிக்காக விற்கப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டு ரிக்கற்களை அதிகமாக விற்று அதற்கான முதற் பரிசை பெற்றுக் கொண்டதன் மூலம் வல்வையில் அறிமுகமானவர்கள். பல நாடகங்களை தென்னிந்திய நடிகர்களுக்கு ஒப்பிடும் அளவிற்கு மேடை ஏற்றி வட கிழக்கு மாகாணங்களின் மக்கள் மனதில் இடம்பெற்றனர். குறிப்பாக விசுவாமித்திரர் சாணக்கிய சபதம், அமரகாவியம் சிறந்த வரவேற்பைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கு ஆலோசகர்களாக நாடகத்துறையில் 'நாடகமாமணி' என்னும் பட்டத்தைப் பெற்ற திரு. சா. மிருசிலீன்பிள்ளை (செல்வராசா) அவர்கள் திரு. வி. இரத்தினவடிவேல், திரு. இரா ஆனந்தராஜா ஆகியோர் இருந்தனர். ஹெலியன்ஸ் நாடக மன்றத்தினரின் புகைப்படக் கண்காட்சி ஒன்றையும் 1988ம் ஆண்டு வல்வை மகளிர் பாடசாலை மண்டபத் தில் நடத்தியிருந்தனர். நாடகத்துறையில் மட்டும் அல்லாது பல சமூக பணிகளையும் திறம்பட செய்யும் அமைப்பாக விளங்குகின்றது.

# கடற்படையினருக்கு எதிரான முதலாவது பாரிய தாக்குதல்

1984 ஆகஸ்ட் 4ம் திகதி சனிக்கிழமை வல்வையிலுள்ள பொலிகண்டி கிராமத்தில கடற்கரையோரம் புலிகளது மோட்டார் படகு நிற்கிறது. கடல் கண்காணிப்பு ரோந்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கடற்படையினர் புலிகளின் படகை கண்டுவிட்டனர். புலிகளின் மோட்டார் படகு திடீரென கடற்படையினரின் வியூகத்திற்குள் சிக்கிக் கொள்கின்றது. புலிகளின் படகில் இருந்தது நான்கு போராளிகள் மட்டுமே, கடற்படையினர் 18 பேர். கடற்படையினருக்கும் போராளிகளுக்கும் மோதல் ஆரம்பிக்கின்றது.

மோதலின் முடிவில் கடற்படையினரின் ஆறு பேர் மாண்டனர். மூன்று பேர் படுகாயம் அடைந்தனர். நவீன ரோந்து படகையும் கைவிட்டு கடற்படையினர் பின்வாங்கிச் சென்றனர். இலங்கை கடற்படையினருக்கு எதிரான முதலாவது பாரிய தாக்குதல் அதுதான். இத் தாக்குதல் சம்பவத்தை

அடுத்து வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கைக்கு உத்தரவிட்டது ஜி. ரி. அரசு. கடற்படைக் கப்பல்கள் வல்வை கடற்கரையில் முற்றுகையிட்டன. கடற்படை படகுகளிலிருந்து கிராமங்களை நோக்கி குண்டுகள் ஏவப்பட்டன. 5000 பேர்வரை வீடுகளை விட்டு வெளியேறினர்.

தரைமார்க்கமாக வந்த படையினர் பா. குமார குருபரன் மற்றும் ஓர் இளைஞரை பிடித்து சென்றதுடன் குடியிருப்புகள், மீன்பிடி வள்ளங்கள் என்பனவற்றை எரித்து நாசம் செய்தனர். ஆகஸ்ட் 5ம் திகதி நெடியகாடுப் பகுதியில் கமாண்டோ படையினர் ரோந்து சென்று கொண்டிருந்தனர். பிரதான வீதியில் மகளிர் பாடசாலை அருகில் நிலக்கண்ணிவெடிகளைப் புதைத்து வைத்துவிட்டு புலிகள் காத்திருந்தனர். ஜீப் வண்டி சிதறியது. ஜீப்பில் இருந்த ஒன்பது கமாண்டோக்களும் கொல்லப்பட்டனர். உதவி பொலிஸ் அதிபர் ஜயரட்ண என்பவரும் மாண்டு போனார். இதில் பிடிபட்ட இளைஞர்கள் இன்றுவரை இல்லை, அழித்து விட்டார்கள்.

# இந்திய மையலாய் படுகொலை

:ditorial **The Sunday Telegraph** *13.8.89*

## India's My Lai

**OVER 50 Tamil civilians, including women and children, appear to have been murdered in a raid on a village by Indian troops who were originally sent to Sri Lanka to restore peace. So India joins the melancholy list of powers which, though democratic and based on the rule of law, have not always prevented a breakdown of moral restraint among their armed forces serving abroad. It is India's My Lai. Or perhaps it is her Amritsar.**

**From Nehru onwards, India's leaders have lectured the world about how to behave. But, if anything, this massacre is worse than My Lai. Then American troops simply ran amok. In the Sri Lankan village, the Indians seem to have been more systematic; the victims being forced to lie down, and then shot in the back. Yet India would long have had us believe that such horrors are largely perpetrated by Western powers with imperialist antecedents.**

**Such horrors occur when troops are cooped up in a situation which looks likely to have no solution or end, and have themselves been the victim of terrorist atrocities. Post-colonial Indians, then, are no different from the rest of humanity. The massacre does not mean that India's political system is any less democratic and legally-based than did My Lai of America's. But we await the naming by New Delhi of the Indian version of Lieutenant Calley, the American officer in command at My Lai, and his punishment.**

வடமாராட்சி ஒபரேஷனின் பின்பு தமிழ் உரிமைப் போராட்டத்தின் திருப்பு முனையாக இலங்கை இந்திய (1987 July 29) ஒப்பந்தம் ஏற்பட்டு தமிழ் மக்களின் சார்பாக அமைதிப்படை என்ற பெயரில் இந்திய இராணுவம் வந்தது. எமக்கு உதவி புரிய வந்த இராணுவம் முதிர்ந்த அரசியல்வாதி ஜி. ரி இன் தந்திரத்தால் எமது விடுதலை இயக்கித்திற்கும் இந்திய இராணுவத்திற்கும் மோதல் ஏற்பட்டது. அதன் விளைவு 1989ம் ஆண்டு ஆகஸ்ட் 2,3,4ம் திகதி வல்வெட்டித்துறையில் நடந்த சம்பவம் இந்தியாவிற்கு வல்வை ஒரு மைலாய் ஆகிவிட்டது.

1. 63 பேர் கொல்லப்பட்டனர். இதில் முதியவர்களும், பெணகளும், இளைஞர்களும், வல்வையில் தஞ்சம் புகுந்த அகதிகளும் அடங்குவர்.

2. 123 வீடுகள் எரித்து நாசமாக்கப்பட்டன.

3. 45 கடைகள் தீயிடப்பட்டன.

4. வல்வை சனசமூக நிலையம் தீயிடப்பட்டது

5. 176 மீன்பிடி வள்ளங்கள் தீயிடப்பட்டன

6. 34 பேர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்

வல்வெட்டித்துறையில் நடந்தது மைலாய்க்கு சமமானது. இது மைலாயை விட மோசமான காட்டுமிராண்டித்தனமான செயல் என லண்டன் தினத்தந்தி (Daily Telegraph) அதன் ஆசிரிய தலையங்கத்தில் கூறியுள்ளது. அமெரிக்க துருப்பினர் வியட்னாம் மைலாயில் அட்டகாசம் செய்தனர். இந்திய இராணுவம் திட்ட மிட்ட முறையில் நிலத்தில் பலாத்காரமாக கிடத்தி முதுகில் சுட்டுள்ளனர். இதில் வேற்றுமை யாதெனில் மைலாய் விடயம் அமெரிக்க இராணுவத்தின் கொடிய செயல்கள் யாவும் அமெரிக்க பத்திரிகையாளர்கள், மக்கள், மாணவர்கள் மூலமாகவே வெளிப்படுத்தப்பட்டன. வல்வெட்டித்துறை அனர்த்தம் லண்டன் FINANCIAL TIMES டில்லி நிருபர் DAVID HOUSEGO

நேரில் சென்று பார்வையிட்ட பின்பு தான் 17.8.89 பத்திரிகையில் விபரமாக வெளிவந்தது. லண்டன் TELEGRAPH' பத்திரிகையும் Aug 13ம் திகதி வெளியிட்டிருந்தது. ஆனால்? INDIAN EXPRESS பத்திரிகை ஒரு மாதத்தின் பின்பு செப்டெம்பர் 3ம் திகதி அதன் ஆசிரியர் RITA SEBAS TIAN அதுபற்றி வெளியிட்டிருந்தார்.

ஆகவே வல்வெட்டித்துறை கோரச் சம்பவம் இந்திய அரசு திட்டமிட்டே இருட்டடிப்பு செய்துள்ளது. அதற்கு இந்திய பத்திரிகைகள் யாவும் துணை போயுள்ளன. எத்தனை இந்தியருக்கு இதுபற்றி தெரியும் இக் கொலை பற்றி Mr. George FERNANDEZ என்பவர் படங்களுடன் 60 பக்கங்களை உள்ளடக்கிய ஆங்கில நூலை வெளியிட்டிருந்தார். அவர் தனது ஆசிரிய தலையங்கத்தில் இச் சிறு பிரசுரத்தினால் உலக மக்கள் பிரதானமாக இந்திய மக்கள் உண்மையைக் கண்டறிய வேண்டுமெனவும் பாதிக்கப்பட்ட வல்வெட்டித்துறை மக்களுக்கு நீதி வழங்க ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டிருந்தார்.

1. MASSACRE AT VALVETTITURAI INDIAS MYLAI - GEORGE FERNANDEZ
2. வல்வை இந்திய படுகொலை - வல்வை ந. அனந்தராஜ்
3. யாழ்ப்பாணத்தில் என் பணி - லெப் ஜெனரல் எஸ் சி. பாண்டே

## மைலாய் என்று எதைக் குறிப்பிடுவது. அறிவது அவசியம் அது பற்றி

## மைலாய்ப் படுகொலை

1960களில் போராளிகளை ஒடுக்குவதற்காக வியட்நாம் அரசுக்கு உதவியாக அமெரிக்க இராணுவம் அங்கு சென்றிருந்தது. மைலாய் என்பது வியட்நாம் நாட்டில் இருக்கும் குவாங்கை மாகாணத்தில் உள்ள ஒரு சிறு கிராமம். 1968ம் ஆண்டு மார்ச் மாதம் 16ம் திகதி அமெரிக்கப் படையின் பிரிவு ஒன்று லெப் வில்லியம் கெலி தலைமையின் கீழ் அக் கிராமத்திற்குள் புகுந்து ஆயுதம் ஏந்தாத அப்பாவி வியட்நாமிய மக்கள் பலநூறு

**INDIAN EXPRES**

THURSDAY, August 24, 1989

# Another warning

VELVETTITURAI, the small town on Sri . northern coast, has become a blemish on the army which it will find hard to live down. The c account of the IPKF's attack on August 2 on the re of the town given by David Housego, the Correspon the **Financial Times**, London, after a visit there sho barbarity of it all. It shows too the lunacy of what is on in that hapless country. The LTTE ambushed an patrol in the market-place. The Indian jawans fired and followed up with chilling reprisals against the in tants. According to the local Citizens' Committee, enraged troops left 52 civilians dead and set fire to houses. There have been other incidents of this kind, n of them provoked by the LTTE, in the last two years this is the most shocking of them all. It has again serve underline the high cost the men of the IPKF have hac pay in terms of earning a bad name.

பேர்களைக் கொன்று குவித்தது. பல பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். பலர் தமது வீடுகளிலேயே வெட்டப்பட்டுக் கொல்லப்பட்டனர். கற்பனைக்கு எட்டாத தாங்கொணாத கொலைகள் அன்று நிகழ்த்தப்பட்டன. பெரும்பாலோரை ஆடு மாடுகளை ஓட்டிச் செல்வது போன்று விரட்டிச் சென்று சாக்கடை நீர் ஓடும் வாய்க்காலில் நிறுத்தி சுட்டுக் கொன்றனர். சுமார் 4 மணித்தியாலங்கள் இந்த வெறியாட்டம் தொடர்ந்தது. இந்த சம்பவம் அமெரிக்க உயர் இராணுவ அதிகாரிகளால் அமெரிக்க மக்களுக்குக் கூடத் தெரியாத வண்ணம் மறைக்கப்பட்டது. அன்றைய திகதியிடப்பட்ட இராணுவ முறைகேடான சம்பவம் ஒன்று நடைபெற்றிருப்பதாகக் கூற வில்லை. 1968ம் ஆண்டு மார்ச் மாதம் 28ம் திகதி இடப்பட்ட அறிக்கையொன்று மைலாயில் நன்று திட்டமிட்டு தாக்குதல் ஒன்று வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருப்பதாகக் கூறி கொல்லப்பட்டவர்கள் கிளர்ச்சிக்காரர்கள் தான் எனக் கூறியது. இப்படுகொலை பற்றி கேள்வியுற்ற இராணுவ வீரன் ஒருவன் 1968ம் ஆண்டு மார்ச் மாதம் 29ம் திகதி உயர் அதிகாரிகளுக்கும் பல அரசியல் தலைவர்களுக்கும் இந்தப் படுகொலை பற்றி விசாரணை நடத்தும்படி கேட்டு எழுதினான் ஆனால் எதுவுமே நடக்கவில்லை. 1969ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 3ம் திகதி 'லைவ்' என்ற சஞ்சிகை ரோனால்ட் என்ற இராணுவ வீரனால் எடுக்கப்பட்ட குறித்த சம்பவம் தொடர்பான படங்களை பிரசுரித்த பின்தான் விஷயம் அம்பலமானது. தமது வீரர்கள் அவ்விதம் காட்டுமிராண்டித்தனமாக நடந்திருக்க முடியாது என்று நம்ப மறுத்தனர் பல அமெரிக்கர்கள். வேறு பலர் வியட்நாமிய நிலைமையை சீர்கெட வைத்ததுடன் அமெரிக்கர்களுக்கு ஆத்திரம் ஏற்படும் விதத்தில் நடந்து கொண்டதால்தான் இது நடைபெற்றது என்றனர்.இறுதியில் 25

# பருத்தித்துறை தொகுதியும் வல்வை பாராளுமன்ற உறுப்பினர்களும்

திரு. சி. பாலசிங்கம்
திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலம்
தோழர். பொன் கந்தையா
திரு. க. துரைத்தினம்
திரு. த. இராஜலிங்கம்

1977ம் ஆண்டு தேர்தலின்போது

வல்வெட்டித்துறை, தொண்டமானாறு ஆகிய இரு கிராமங்களும் உடுப்பிட்டி தேர்தல் தொகுதியுடன் இணைக்கப்பட்டது.

## பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட பிரமுகர்கள்

திரு. சி.சி. சுந்தரலிங்கம்
திரு. கு. மோதிலால்நேரு
திரு. பொ. கனகராசா
திரு. பூ.ஆ. விசாகரத்தினம்
திரு. ம. ஞானச்சந்திரன்

# பிரமுகர்கள் வரிசையில்

## திரு. சி. விஷ்ணுசுந்தரம்

1927ம் ஆண்டு மார்கழித்திங்கள் 16ம் திகதி சிற்றம்பலம் பார்வதிப்பிள்ளை தம்பதியினருக்கு புத்திரராகப் பிறந்தார். கல்விக்கூடங்கள் கலைக் கூடங்களுக்கும் மற்றும் ஏழை எளியவர்க்கு தாம் ஈட்டிய செல்வத்தை பகிர்ந்து கொடுத்த பண்பாளன் அமரர் சி. விஷ்ணுசுந்தரம் ஆவார். திரு. விஷ்ணு அவர்கள் யாழ் மக்களுக்கும் குறிப்பாக தாம் பிறந்த வல்வை மக்களுக்கும் ஆற்றிய சமய, சமூக தொண்டுகள் பலவாகும். கோயில்களைத் திருத்தியும் கோயில்களை புனருத்தாணம் செய்தும் பெருமையடைந்தார். சிதம்பராக் கல்லூரி வல்வை மகளிர் பாட-சாலை

சிவகுரு பாடசாலை, உடுப்பிட்டி அ. மி. பாட-சாலை யாவற்றுக்கும் தம்மால் இயன்ற நிதி யுதவி செய்து நகரத்து பாடசாலைகள் போல், தமது கிராமத்துப் பாடசாலைகளும் முன்னேற்ற மடைய வேண்டும் என புது மாடிக் கட்டிடங்களை அமைக்க உதவி புரிந்தார். ஊறணி இந்திராணி வைத்தியசாலையில் தன் தாயின் பெயரால் 40 படுக்கைகள் கொண்ட பிரசவ மாடி விடுதியை அமைத்துக் கொடுத்தார்.

இதை விட கிழக்கில் நடந்த சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் 1983 இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு கப்பலில் காங்கேசன் துறைமுகம் வந்து இறங்கிய மக்களுக்கும் திரு. விஷ்ணு சுந்தரம் அவர்கள் நிதியுதவி செய்தார். எல்லாவற்றிற்க்கும் மேலாக இனவிடுதலைப் போராட்டத்தை ஆதரித்து நின்ற தமிழரசு கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, விடுதலைப்புலிகள் இயக்கத்தையும் ஆதரித்து நின்றவர். உதவிகள் பல புரிந்தவர்.

அமரர் சிற்றம்பலம் விஷ்ணுசுந்தரம் நினைவு
வெளியீடு - 20.7.1993

## வல்லிபுரம் J.P

திரு. இ. வல்லிபுரம் அவர்கள் சுங்க திணைக்கள அதிகாரியாக கடமை புரிந்து இளைப்பாறிய அர-சாங்க உத்தியோகத்தர். வல்லிபுரம் அவர்கள் வல்வையிலும் கொழும்பிலும் செய்த சமூக சேவையை பாராட்டி அரசாங்கம் அகில இலங்கை சமாதான நீதிபதி பட்டத்தைக் கொடுத்து கௌரவித்தது.

பல வருடங்களுக்கு முன்னர் கொழும்பு இந்து மாமன்ற தலைவராகவும் சிதம்பராக் கல்லூரி கொழும்பு பழைய மாணவர் சங்கத் தலைவராகவும் செயலாற்றியவர்.

வல்வை முத்துமாரி அம்பாளின் தொண்டன். திருவிழாவின் உபயகாரராகவும் இருந்து அவ்வப்போது இலங்கைக்கு விஜயம் செய்யும் தென்னிந்திய பாடகர்கள் நடன தாரகைகள் போன்றவர்களை வல்வைக்கு அழைத்து வல்வை மக்களும் பார்க்கும் சந்தர்ப்பங்களை வழங்கியவர். வல்வை திரு. சிவ. ஆறுமுகம் அவர்களினால், வல்வை ஆலயங்கள் மீது பாடப்பெற்ற பாடல்களை ஒலி இழை நாடாவாக பதிவு செய்து (தென்னிந்திய பாடகர்களினால் பாடப்பட்ட) வெளியிட்டு வைத்தவர்.

திரு. வல்லிபுரம் அவர்கள் வெள்ளவத்தை மயூராபதி அம்பாள் ஆலயத்தின் நம்பிக்கை பொறுப்பாளராக இருந்து வருபவர். இவர் காலத்தில் ஆலயம் துரித வளர்ச்சி அடைந்துள்ளது.

ஆலயத்தை நல்ல முறையில் நிர்வகித்தும் கல்யாண மண்டபம், நிர்வாகசபை அலுவலகம், இந்து சமய பாடசாலை ஆகியவற்றை உள்ளடக்கிய ஐந்து மாடிக் கட்டிடத்தையும் பூர்த்தி செய்தது சிறப்பான சேவையாகும்.

## க. சபாரத்தினம்

திரு. க. சபாரத்தினம் அவர்கள் வல்வை பட்டினசபை தலைவராக இரண்டு தேர்தலில் தெரிவு செய்யப்பட்டு பல வருடங்கள் சேவையாற்றியவர். 1961ம் ஆண்டு சத்தியாக்கிரக போராட்டத்தில் பங்கு பற்றி ஆதரவு அளித்த தன் காரணமாக ஆறுமாதம் தலைவர்களோடு தடுப்புக்காவலில் இருந்த பிரமுகர்.திரு. சபாரத்தினம் அவர்கள் 1955ம் ஆண்டிலிருந்து வல்வையில் ஊரிக்காடு, சிதம்பராக் கல்லூரி மைதானம் அருகாமையில் பெரிய அளவிலான கப்பல் கட்டும் தொழிற்சாலையை திறம்பட நடத்தி வந்தார். இதன் மூலம் பலருக்கு வேலைவாய்ப்பை கொடுத்ததோடு வல்வையின் பாரம்பரிய கப்பல் கட்டும் தொழிலை நினைவு கொள்ளும் வண்ணம் இருந்தது. அவருக்குப் பின்பு அவரது பிள்ளைகள் நிர்வகித்து வந்தனர்.

ஈழப்போராட்டம் விரிவடைந்த பின்பு, அருகாமையில் உள்ள இராணுவ முகாம் இருந்த காரணமாக பல வருடங்களாக இயங்கி வந்த தொழிற்சாலை மூடப்பட்ட நிலையில் இருக்கின்றது. இங்கு தயாரிக்கப்படும் கப்பல்கள், மீன்பிடி வள்ளங்களை இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனமும், தனியாரும் கொள்வனவு செய்தனர். திரு. சபாரத்தினம் அவர்கள் வல்வை மக்களுக்கு சேவையாற்றுவதுடன் நாட்டின் பொருளாதார வளத்திற்கும் சேவையாற்றிய பிரமுகர் ஆவர்.

## எஸ்.வி.சிவசுப்பிரமணியம்


வல்வை ஊரிக்காட்டில் அமைந்துள்ள சுப்பிரமணியம் குளிர்பான தொழிற்சாலை வடபகுதியில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தொழிற்சாலையாகும். இதன் ஆரம்ப கர்த்தா சட்டத்தரணி அ.குமரகுரு அவர்களின் தந்தை திரு அமர சேனாதிபதி அவர்களே.

பின்பு அவர்களின் உறவினரான திரு எஸ்.வி. சிவசுப்பிரமணியம் அவர்கள் தொழிற்சாலையை வெளிநாட்டிலிருந்து இயந்திரங்களை வருவித்து பல ஆண்டுகளாக நடாத்தி வந்தார். இங்கு உற்பத்தி செய்யும் குளிர்பானம் வடகிழக்கு மாகாணங்களில் உள்ள இடங்களுக்கெல்லாம் விநியோகம் செய்யப்பட்டதது.

திரு சிவசுப்பிரமணியம் வல்வையில் உள்ள பொது நிறுவனங்களுக்கு அவ்வப்போது உதவி செய்த பெரியார் ஆவார்.


| |
|---|
| தேமதுரத் தமிழோசை உலகெல்லாம் பரவ வகை செய்தல் வேண்டும் |

## சிங்களப் படத் தயாரித்த எம்மவர்



திரு. N. சிவசுப்பிரமணியம் அவர்கள், வல்வை பட்டினசபையின் உறுப்பினராகவும், பிரபல வர்த்தகராகவும் இருந்த திரு. தா. சி. நாகரெத்தினம் அவர்களின் புதல்வராவார். 1965ம் ஆண்டு "சத்த பணகா" என்ற திரைப்படத்தையும் அதன் பின்னர் படத்தையும் தயாரித்து இலங்கையின் படதயாரிப்பாளர் எனும் பெயரையும் புகழையும் பெற்றவர்.

## வானொலி தமிழ் வர்த்தக சேவையின் முதல் பெண் அறிவிப்பாளர் திருமதி ந.புவனலோஜனி



பள்ளி மாணவியாக இருந்து கொண்டு, இயல், இசை, நாடகத் துறையில் காட்டிய ஆர்வத்தினால் 1966ம் ஆண்டு இலங்கை வானொலி தமிழ் வர்த்தகசேவை ஒலிபரப்பில் முதல் பெண் அறிவிப்பாளராகத் தெரிவு செய்யப்பட்ட பெருமையைக் கொண்டவர் இயற்றமிழ் போதகாசிரியர் வல்வைப்புலவர் ஸ்ரீ ச.வயித்தியலிங்க பிள்ளை வழி வந்த (பூட்டியாவார்) புவனலோஜனி.

திருமதி புவனலோஜனி நடராஜசிவம் அவர்கள் திரு சங்கரவேலுப்பிள்ளை(சட்டத்தரணி) பறுவதாவர்த்தினி ஆகியோரின் புதல்வியாவர். இலங்கை ரசிகர்களிடையே மட்டுமல்ல இந்திய நேயர்கள் மத்தியிலும் புவனலோஜனி என்ற பெயர் வானொலி



அறிவிப்புத்துறையில் மிகவும் பிரபலம் பெற்று விளங்கியது. விளம்பர அறிவிப்புக்களில், தமிழில் பெண் குரலில் அப்பொழுதே தனித்துவமான பாணியை உருவாக்கி அறிமுகப்படுத்தியவர் இவர். அக்காலத்தில் சிரேஷ்ட அறிவிப்பாளராக இருந்த திரு எஸ்.பி.மயில்வாகனத்திடம் பயிற்சி பெற்ற தமிழ் வர்த்தக ஒலிபரப்பின் அடிப்படையான அமைப்பை முற்று முழுதாகப் புரிந்து இன்றுவரை வர்த்தக ஒலி பரப்புக்கான மொழிநடை, அதற்கான உச்சரிப்பு, அமைதி பயன்படும் உருவகங்கள் ஆகியவற்றை பேணி சுவை குன்றா விளம்பர நிகழ்ச்சிகளை நடத்தி வருபவர். பெண்களுக்கான சஞ்சிகை நிகழ்ச்சிகள், சிறுவர் நிகழ்ச்சிகள் (இல்லறஜோதி, பெண் உலகம், பூவும் பொட்டும், மணிமலர்) பலவும் இவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

தமிழ் வர்த்தக சேவையில் முதன்முதலாக நம் நாட்டுக் கலைஞர்களின் சொந்தத்திறமையை வெளிக் கொணரும் வகையில் அரங்கேற்றம் என்னும் நிகழ்ச்சியைத் தயாரித்து அளித்ததன் மூலம் எஸ்.கலாவதி போன்ற கலைஞர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்தார். அறிமுகமான பாடல்கள் இசைத்தட்டுக்களாக்கப்பட்டு "இலை மறைத்த இசை" என்ற தலைப்பில் ஒலி பரப்பப்பட்டது. வர்த்தக சேவையில் மட்டுமல்லாமல் இலங்கை வானொலியின் தேசிய சேவையிலும் கல்விச் சேவையிலும் அறுபதுகளின் பிற்பகுதியில் பல நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கி உள்ளார்.

வளரும் பயிர் என்ற அரைமணி நேர சிறுவர் நிகழ்ச்சியைத் தொடராகப் பல வருடங்கள் நேரடி ஒலிபரப்பாக நடத்தி அந் நிகழ்ச்சியைப் பிரபலப்படுத்தி வளரும் சிறுவர்களுக்கு வானொலிக் கலையை வசமாக்க உதவியவர். அந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பல சிறுவர் சிறுமியர் பின்பு வானொலிக் கலைஞர்களாக, அறிவிப்பாளர்களாக உருவாகியிருக்கிறார்கள் என்பதில் பெருமைப்படுகிறார் இவர்.

1992ம் ஆண்டு சிறுவர் மாதர் நிகழ்ச்சிகளுக்கான புலமைப்பரிசில் பெற்று மலேசியா சென்று வானொலி பற்றிய பல நுணுக்கமான விஷயங்களில் பயிற்சி பெற்று சிறப்புச் சான்றிதழ் பெற்று திரும்பிய முதல் தமிழ் வர்த்தக சேவைப் பெண் அறிவிப்பாளர் என்ற பெருமையும் இவருக்குண்டு. இவர் கணவர் திரு சி.நடராஜசிவம் பல தமிழ், சிங்கள வானொலி தொலைக்காட்சி நாடகங்களில் நடித்து குறிப்பாக சிங்கள நேயர்களின் அபிமானத்தைப் பெற்றவர். திரு எஸ்.பி.மயில்வாகனன், திரு விவியன் நமசிவாயம், திரு வி.ஏ.சிவஞானம் ஆகிய மூவரையும் ஆசான்களாகப் பெற்றதில் பெருமை கொள்வதாக கூறுகிறார் புவனலோஜனி நடராஜசிவம். வல்வை முத்துமாரி அம்மன் இந்திரவிழாவின் போது குச்சம் வீதியின் தொங்குபாலத்தில் நடைபெறும் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கியும் உள்ளார்.

'வானொலி மஞ்சரி' இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மே 1997 பக்கம் 6,7

# நாகர் கோயில் கப்பல் திருவிழாவில் வல்வைக்கப்பல்

பருத்தித்துறையில் நாகர் கோயில் கிராமம் உள்ளது. நெய்தல் நிலமும் மருத நிலமும் சந்திக்கும் இடத்தில் உள்ளது. இக்கோயிலின் மூலமூர்த்தி சிவலிங்கத்தைத் தனது படத்துள் அமைந்து வைத்துள்ள ஐந்து தலைநாகம். நாகதம்பிரான் என்னும் சொற்றொடர் சிவபெருமானுக்கே உள்ள வேறொரு பெயராகும். தம்பிரான் என்னும் சொல் சிவபெருமானுக்குப் பெயராயும், பெரியபுராணம் வழங்கும் தம்பிரான் தோழர் என்னும் சொற்றொடர் சுந்தரமூர்த்தி சுவாமிகளை குறிக்கும் நாகமாகிய தம்பிரான் கடவுள் என்று பொருள்படும். இப் பொருளையிட்டு அவ்வூரில் பல கதைகளும் எழுந்துள்ளது.

பறங்கியர் யாழ்ப்பாணத்தை ஆண்ட காலத்தில் நாகர் கோயிற் கடற்கரையில் அவர்கள் போர் கப்பல் ஒன்று நங்கூரமிட்டு தங்கள் படையில் சேர்க்க ஆயிரம் இளைஞர்களை அவ்வூரில் பிடித்து கப்பலில் ஏற்றினார்கள். மக்கள் நாகதம்பிரானுக்கே இவ் அநியாயத்தை முறையிட்டு பழிகிடந்தனர். தம் மக்களின் இடரைக் கண்ட தம்பிரான் அவர்களைக் காக்க திருவுளங் கொண்டார். குறித்தநாளில் கொண்டு செல்லத் தீர்மானித்தனர். ஊரவர் கப்பல் நங்கூரமிட்டு நிற்கும் கடற்கரையிலே திரளாய் வந்து எங்கும் அழுகையும் ஓலமுமாக இருந்தது. கப்பல் புறப்படுவதற்கு கப்பலின் நடுப்பாய்களை சரிப்படுத்த மரத்தில் ஏறினான் மாலுமி ஒருவன். அங்கு நாகபாம்பு படுத்திருப்பதைக் கண்டான். அவன் இறங்கி ஓடி கப்பல் தலைவனிடம் சொன்னான். கப்பல் தலைவன் துப்பாக்கியால் சுட பாம்பு ஆயிரம் துண்டுகளாக சிதறியது. ஆனந்தம் அடைந்தனர். இவ்வாறு இருக்கையில் ஒவ்வொரு துண்டும் ஆயிரம் பாம்புகளாக உயிர் எடுத்து படம்

எடுத்துச் சீறியது. பின்னர் புயலும் எழுந்து கப்பல் பலமாக ஆடியது. தலைவன் பாரத்தைக் குறைப் பதற்காக ஏற்றிய இளைஞர்களை இறங்கக் கட்டளையிட அவர்களோடு ஒவ்வொரு பாம்பும் இறங்கியது. பின்னர் ஒரு பாம்பு மட்டும் இறங்காது படமெடுத்து நாதமிட்டுச் சீறும் பயங்கரமான ஒலி கேட்டது. பின்னர் கப்பல் முழுவதும் தேடிய பொழுது சமையல்காரன் தன் உதவிக்கு ஒருவரை ஒளித்து வைத்திருந்தது தெரிந்தது. அந்த இளை ஞரையும் இறக்கியதும் பாம்பும் இறங்கிவிட்டது.

இக்கோயிலில் ஆண்டு தோறும் புரட்டாதி மாதம் திருவிழா நடக்கும். திருவிழாக்களில் ஒன்று கப்பல் திருவிழா. எமது வல்வை மூதாதையர் வித்தனை ஒழுங்கை முதலாம் வீட்டில் வாழ்ந்த திரு துரை மேஸ்திரியாரால் செய்து அன்பளிப்புச் செய்த கப்பலையே பயன்படுத்துவார்கள். அன்று பறங்கியர் போல் உடையணிந்து பறங்கியர் அவ்வூர் இளை ஞர்களைப் பிடித்து தம் கப்பலில் ஏற்றிப் பின் நாக தம்பிரானின் அருளால் இறக்கி விட்ட வைபவத்தை மக்கள் முன்னிலையில் பாட்டுப்பாடி நடித்துக் காட்டுவார்கள். கடைசி திருவிழாவுக்கு பறங்கியர் நங்கூரமிட்ட கடலுக்கு சுவாமியை எடுத்துச் சென்று தீர்த்தமாடுவர்.

# வல்வையின் பழக்க வழக்கங்கள்

யாழ்ப்பாணத்தின் வழக்கில் பழக்க வழக்கங்கள் காலத்திற்குக் காலம் மாறிவருகின்றன. ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கு முன் அங்கு நிலவிய பழக்க வழக்கங்கள் இன்று மிக அருகியே வருகின்றன. பொதுவாக தமிழ் நாட்டிலுள்ள பழக்க வழக்கங்களுடன் ஒற்றுமையுடையன வாய் இருந்த போதிலும் இந்த நாாட்டிற்கே சிறப்பான வழக்கங்களும் உள்ளன. இரண்டாம் உலக மகா யுத்தங்களினாலே வல்வை வாசிகளின் பழக்க வழக்கங்களிலே பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. இதற்குரிய காரணம் வல்வை வாசிகளில் பலர் பிற நாடுகளுக்குப் போய் வந்ததால் உண்டான கல்வி வளர்ச்சியே யாகும்.

## பிறப்பு:

முன்னைய நாட்களில் பிரசவ மருத்துவமனை கள் கிடையாது. பயிற்றப்பட்ட பிரசவம் பார்க் கும் பெண்கள் சிலரால் அவரவர்கள் வீட்டிலே நடந்தன. ஒரு பெண் கர்ப்பிணியாகி பத்து மாதமும் சென்று, பிள்ளை பிறக்கும் நாட்களில் இருந்த பழக்க வழக்கங்கள் சிலவற்றை நோக்குவோம்

மனைவி கர்ப்பமுற்றால், கணவன் கடைப்பிடி த்து ஒழுக வேண்டிய முறைகளுட் சில வரு மாறு:- மயிர் களைதல் ஆகாது. சாவீட்டிற்குப் போக நேர்ந்தால் மயானம் செல்லல் ஆகாது. ஈமச் சடங்குகளில்பங்குபற்றல் ஆகாது. தூரப் பயணம் செய்தல் ஆகாது. கடல் கடத்தல் முற்றுமாக கூடாது. ஏழாம், ஒன்பதாம் மாதங் களில் நல்லநாட் பார்த்துப் பிள்ளைப் பெறு விற்கு வேண்டிய நாட்சரக்கு வாங்குதல் வேண் டும். இங்கு வாங்கி வந்த மிளகினை எண்ணிப் பார்க்கையில் ஒற்றையானால் ஆண்குழந்தை இரட்டையானால் பெண்குழந்தை என மதிப்பிடுவார்கள். இச் சரக்குகளை வாங்கி புதுப் பானையில் இட்டு வீட்டிற்குக் கொண்டு வர வேண்டும். குழந்தை பெற்ற பெண்ணுக்கு சாப் பாட்டுக்கு முன் "காயம்" என்று சொல்லிப் பெறும் ஒரு மருந்து வேர்க்கொம்பை அரைத்தும், வேறு சில சரக்குகளையும் சிறிய அளவில் சேர்த்தும் கட்டிக் கூழாகக் காய்ச்சி கொடுப்பார்கள்.

வயிற்றுநோ தொடங்கியவுடன் கணவனே மருத் துவிச்சியிடம் சென்று அழைத்துவர வேண்டும் பின்பு குடிமகனுக்கு அறிவிக்க வேண்டும். குடி மகன் தனது மனைவியிடம் வேண்டிய மாற்று சேலைகளைக் கொடுத்து அனுப்புவார். வீட்டிலே பிள்ளை பெறுவதற்காக ஒரு அறையை ஒழுங்கு படுத்தி வைப்பர். வயிறுநோ தொடங்கியவுடன் பெண்ணுக்கு நெருங்கிய தொடர்புடைய சுமங் கலி ஒருத்தி பிள்ளைப்பேறு நடக்கும் அறையில் நிறைநாழி வைப்பார். நிறைநாழி என்பது நாழி அளவுள்ள கொத்தில் நெல் நிரப்பி அந் நெல் லில் காம்புச் சத்தம் ஒன்றினை காம்பானது மேலே நிற்க நாட்டி வைப்பதாகும். பிரசவம் முடிந்து சில நாளையின் பின்பு பக்திபூர்வமாய் முதற் குடிமகனுக்கு நிறைநாழியை வழங்குவார் கள். பிரசவ வீட்டில் வேப்பெண்ணெய் விளக்கு எரியும். உற்றார், உறவினர். அருகிலுள்ள பெண் களும் வந்து அருகிருப்பர். அவர் யாவருக்கும் வெற்றிலை வழங்கப்படும். மருத்துவச்சியே அங்கு முதன்மை இடத்தை வகிப்பாள். அவள் கட்டளைப்படியே ஒழுகுதல் வேண்டும். பிள்ளை பிறந்தவுடன் பின்வருமாறும், பிறவாறும் கூறி வாழ்த்துவாள்.

நெல்லுப் பொதியோடும் வந்தீரோ - தம்பி

நெல்லு மலைநாடும் கண்டீரோ - தம்பி

உள்ளிப் பொதியோடும் வந்தீரோ - தம்பி

உள்ளி மலைநாடும் கண்டீரோ - தம்பி

வேந்தர்க்கு வேந்தராய் வந்தீரோ - தம்பி

வேந்தர் தம்மணியும் கண்டீரோ - தம்பி

வாழ்த்துக் குறிப்பால் குழந்தை பிறந்ததும் ஆணாயிருந்தால் வெளிக் கூரையைத் தட்டு வார்கள். இதனால் வெளிக் கூரையில் காத் திருந்த பிதிர்கள் காலஞ்சென்ற முற்சந்ததி யார்கள் தங்களுக்கு பிதிர்காரியம் செய்ய ஆண் வாரிசு வந்துவிட்டதென கொள்வார்கள். பெண்ணாயிருந்தால் வீட்டுச் சமையல் அம்மி யில் குழவியால் தட்டுவார்கள். பிள்ளைக்கு குறிப்பு எழுதுவதற்காக பிறந்ததை அறிந்தவு டன் அடியளந்து நேரங் கணக்கிடுவர். இர-வாயின் வானத்தே வெள்ளியின் நிலை கண்டு கணித்தனர். பிள்ளை பிறந்தவுடன் ஆண் குழந்தையெனின் கற்கண்டும், பெண் குழந்தை யெனின் சருக்கரையும் கொடுப்பார்கள்.

பிள்ளை பிறந்த நாள் முதல் நொச்சி, பருத்தி, பாவட்டை, ஆமணக்கு, வேம்புபட்டை ஆகிய வற்றின் குழைகளை அவித்து தாய்க்கு குழை வெந்நீர் வார்ப்பார்கள். குழைவெந்நீர் வார்ப்ப தற்கு முன் ஒரு கரண்டி வேப்பெண்ணெய்யைக் குடிக்கக் கொடுப்பார்கள்.

ஐந்தாம்நாள் 'கொத்தி' என்னும் பேயை அக ற்றுமுகமாக சில சடங்குகள் செய்யப்படும் அன்று சோறு சமைத்து பலவகைக் கறிகளு மாக்கி மாலை நேரத்தில் மருத்துவிச்சியைக் கொண்டு பிரசவ அறையில் படைப்பிப்பர். உணவுப் பொருட்களை அப் பேய்க்குப் பரப்பி வைத்தபின் தென்னம்பாளையைக் கீறிக் கட் டிய சூள் ஒன்றைக் கையில் எடுத்து அங்கு எரியும் விளக்கில் கொழுத்தித் தாயையும் பிள்ளையையும் சுற்றி "தாயும் பிள்ளையும் சுகம்" என்று முடியும் பாட்டைக் கூறி வாழ்த்தி விட்டு அறையின் மூலை முடுக்கு எங்கணும் "செத்தைக்க பத்தைக்க நில்லாதே கொத்தி யாத்தே" என்னும் பாட்டைப் பாடி கொத்திப் பேயை அழைத்துக் கொண்டு போவாள். அவள் போகும்போது பிரசவம் நடந்த பாய், தலை-யணை, சேலை முதலியவற்றை சுறுட்டிக் கொண்டு கொத்தியின் படையலை ஒரு பழம் பெட்டியில் இட்டு, தனது உணவையும் நல்ல பெட்டியில் இட்டுச் சூளை மினுக்கிய வண்ணம் கொத்திக்கு பிரியமான பாட்டுக்களைப் பாடிக் கொண்டு ஒரு பாழடைந்த தனிமையான இடத் தில் பாய் முதலியவற்றை எறிந்து அங்கு கொத்தியின் உணவையும் வைத்து சூளை நிலத்தில் உரஞ்சி நூர்ப்பாள். அதனை அப்படி நூர்க்காது அவ்விடத்தில் எறிந்து விட்டுப் போனால், கொத்திப்பேய் திரும்பவும் பிள்ளை பிறந்த அறைக்கு வழி கண்டுபிடித்து வந்து பிள்ளையைத் தூக்கிக் கொண்டுபோய்விடும் என நம்பினர். சூளை நூர்த்தபின் மருத்துவச்சி தனது உணவை வீடுகொண்டு செல்வாள்.

பதினோராம் நாள் தாய்க்கு எண்ணெய் தேய்த்து முழுகவார்த்துச் சிறந்த உணவுகள் கொடுப்பர். பிள்ளை பிறந்து இருபத்தியோராம்நாள் வரை தாயை வெளியில் முகம் காணாது அறையிலோ, புறத்திண்ணையிலோ இருக்க விடுவர். ஆனால் குழந்தையை தினமும் காலையில் உடம்பெங் கனும் நல்எண்ணெய் தேய்த்து அங்கங்கள் அழ-காய் அமையும்படி ஒவ்வொரு அங்கத்தையும் கையாற் பிடித்து இளம் வெய்யிலிற் கிடத்தி விடு வர். மூக்கு, காது, தலை முதலிய உறுப்புக்களை மூதாட்டி ஒருவர் பிடித்து விடுவார். அவ்வாறு ஒவ்வொரு அங்கத்தையும் பிடித்து விடும்போது ஒவ்வொரு பாட்டுப் பாடுவது வழக்கம்.

மூக்கைப் பிடிக்கும்போது

"நாய்க்கு மூக்குண்டு - நரிக்கு மூக்குண்டு

நான்பெத்த மோனைக்கு மூக்குவா மூக்குவா மூக்குவா"

இருபத்தியோராம்நாள் ஆனவுடன் தாய் வீட்டில் எங்கணும் உலாவுவாள். அத்தோடு துடக்குக் கழிப்பர். அன்று வீடு, கொல்லைப்புறம் யாவற்றை யும் கழுவி மெழுகிச் சுத்தம் செய்து கிணறு இறைத்து யாவரும் முழுகித் தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து குடும்ப புரோகிதரை அழைத்து வந்து புண்ணியானம் செய்விப்பர். இயல்பு குறைந்தவர்கள் கோயில் ஐயரிடம் சிறிய தொகை கொடுத்து பஞ்ச கௌவியம் வாங்கி வந்து வீடு, கிணறு எல்லா இடமும் தெளிப்பர்.

முப்பத்தோராம்நாள் உற்றார், உறவினர், அயல வர், நண்பர் யாவரும் ஒருங்கு கூடுவர். பெரு விருந்து நடைபெறும். அன்று காலையில் கோயி லுக்குக் கொண்டுபோய் அங்கு கடவுளர்க்கு விசேடமான பூசை நடப்பித்து வழிபாடு செய்து வருவார்கள்.பின்பு தொட்டிலில் குழந்தையை இடும் மங்களம் நடைபெறும். தொட்டிலை தந்தை செய்வித்து கொடுப்பார். சிலர் தமக்கு பரம்பரையாகக் கிடைக்கும்தொட்டிலில் இடுவார் கள். மாமன்மார் அரைஞாண் கயிறு கைகள் காலு கட்டுப் காப்புகள் பஞ்சாயுதம் முதலிய அணிகலன்களை செய்வித்துக் கொடுப்பர். புண்ணி யயானம் முடிந்தவுடன் தாயிடத்தில் இருந்து தந்தை பிள்ளையை வாங்குவார். அவர் மாமனார் கையிற் கொடுப்பார். மாமனார் த்ாம் கொண்டு வந்த நகைகளை அணிவித்து பிள்ளையைத் தொட்டிலில் இடுவார். பின்பு அங்கு குழுவி இருக் கும் சிறியதாய், பெரியதாய் முதலிய பெண்கள் தாலாட்டி ஓராட்டுவர்.

1. ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ

சீரார் பசுங்கிளியே தெவிட்டாத செந்தேனே

பேரார் குலக்கொழுந்தே பெருமானே ஆராரோ.

2. பச்சை இலுப்பை வெட்டி பால்வடியத்

தொட்டில் கட்டி

தொட்டிலுமா பொன்னாலை தொடுகயிறு முத்தாலே

3. முத்தென்ற முத்தோ, முதுகடலின் ஆணி முத்தோ;

சங்கீன்ற முத்தோ, சமுத்திரத்தின் ஆணி முத்தோ;

ஆராரோ ஆராரோ, ஆரிவரோ ஆராரோ

ஆரடிச்சு நீரழுதீர் அஞ்சாதே கண்மணியே

அம்மான் அடிச்சாரோ, ஆமணக்கம் கம்புவெட்டி

பேத்தியடிச்சாளோ, பிரப்பந்தடியாலே

ஆச்சி அடிசசாளோ, ஆவரசந் தண்டுவெட்டி உமக்கு;

முத்தனப்பான் செட்டி, முடிதரிப்பான் ஆசாரி

பட்டுவிற்பான் செட்டி; பட்டை விலைமதிப்பான் பட்டாணி

பூவாலை பாயிழைப்போம், பொன்னாலே காப்பிடுவோம்

சாவா மருந்தும் தந்திடுவோம் கண்ணுறங்கு.

தாலாட்டுப் பாடும்போது தாம் நினைத்தவாறும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறும் பாடுவர்.

## கல்வி:

குழந்தை நான்கு வயதைத் தாண்டியபின் வரும் சரஸ்வதி பூசை முடிவில் விஜய தசமியன்று வித்தியாரம்பம் நடைபெறும். அன்று பெற்றோர் தம் குழந்தைகளைக் கூட்டிச் சென்று கோயில் பூசை முடிந்ததும் குருக்களைக் கொண்டு வித்தியாரம்பம் செய்விப்பர்.

குருக்கள் ஒவ்வொரு குழந்தைக்கும் தனி உயிரெழுத்துக்களையும், மெய்யெழுத்துக்களையும் சொல்லிக் கொடுத்து அவை எழுதப்பட்ட ஏட்டையும் கொடுப்பர். முற்காலங்களில் கடதாசியில் எழுதப் பழக்கும் பழக்கம் இருந்ததில்லை. ஏட்டைப் பார்த்தும் படித்தும், நிலத்தில் எழுதி பழகியுமே கற்றுக் கொண்டார்கள் ஆகவே பத்தொன்பதாம் நூற்றாண்டின் வரை பிள்ளைகள் எழுத்தாணியால் ஏட்டில் எழுதவும் கற்றுக் கொண்டார்கள். பிள்ளைகள் பாடஞ் சொல்லும் ஆசிரியர் வீட்டிற்குச் சென்று அவர்கள் வீட்டுத் திண்ணைகளிலிருந்தே கற்றுக் கொண்டார்கள். ஓரளவு படித்தேறியவுடன் கடற்றொழில் செய்பவர்கள் தகப்பனோடு, தமையனோடு, மச்சானோடு கடற்றொழிலுக்குப் போய் விடுவார்கள். கப்பலோடிகள் கப்பல்களிற் செல்லத் தொடங்கிவிடுவார்கள்.

## திருமணம்:

முதலாவது உலக மகாயுத்தம் முடியும் வரையில் வல்வை திருமணங்கள் யாவும் மிகவும் சுருக்கமான முறையிலே நடைபெற்றன. ஆதி வல்வையர் யாவரும் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்கள். முன்னே கூறப்பிட்ட படி இரண்டு மூன்று தலைமுறைகளை கவனித்துப் பார்த்தால் யாவரும் கிட்டிய உறவோ எட்டிய உறவோ உள்ளவர்களாக இருப்பார்கள். வெளியூர்களில் சம்பந்தம் செய்யும் வழக்கம் மிக மிகக் குறைவு. அதுவும் பருத்தித்துறை, தொண்டமானாறு ஆகிய இரு ஊர்களுக்கிடையே மட்டும் நடந்திருக்கின்றன. திருமணத்திற்கான செலவுகளும் மிகக் குறைவாக இருந்தது.

வீட்டைக் கழுவி மெழுகிக் கோலம் போடுவார்கள். நெருங்கிய உறவு முறையாருக்குச் சொல்லி அழைப்பார்கள். பெண்வீட்டுக்கார ஆண்களில் இரண்டு நாலுபேர் மாப்பிள்ளை வீட்டுக்கு வேட்டி சால்வையுடன் போய் அவைகளை உடுக்கச் செய்து பெண்வீட்டிற்குக் கூட்டி வருவார்கள். மாப்பிள்ளை பெண் வீட்டிற்கு அழைத்து வரப்பட்டதும், இருக்கச் செய்து, விளக்கடிக்குக் கூட்டிச் சென்று அவர் உட்கார்ந்ததும், மணப்பெண் மாப்பிள்ளை கொண்டுவந்த உடுப்புக்களை அணிந்து கொண்டு வந்து மாப்பிள்ளைக்கு வெற்றிலை பாக்குக் கொடுத்ததும் திருமணம் நிறைவுற்று விடும்.


மாப்பிள்ளைக்குப் பெண்வீட்டில் மூன்று சுமங்கலிகளால் சமைக்கப்பெற்ற சோறும் மூன்று நான்கு கறிவகைகளும் கொடுத்து அவர் சாப்பிட்டதும் அவர் சாப்பிட்ட இலையிலேயே பெண்ணும் சாப்பிடுவாள். சீதனம் என்ற பேச்சுக்கே இடமில்லை. தங்கள் இயல்பிற்குத் தகுந்த வகையில் காதை, மூக்கை, கழுத்தை நிரப்பிவிடுவார்கள். அவர்கள் புறம்பாய் வாழ்வதற்கு ஒரு வீடு, அநேகமாய் கொடுப்பார்கள்.

ஏதோ கல்யாணம் செய்யத்தான் போகிறோமே என நினைத்தோ என்னவோ வாலிப வயதிலேயே முடிந்துவிடும். பெண் 16-18 வயதிற்குள்ளும் ஆண் 20-25 வயதிற்குள்ளும் திருமணம் முடிந்துவிடும். கல்யாணம் முடிந்து மூன்றாவது நாள் மாப்பிள்ளை வீட்டிற்குக் கால்மாறிச் சென்று அங்கே மூன்று தினங்கள் தங்கிவிட்டு பெண்வீட்டிற்கு வந்துவிடுவார்கள். அப்பால் வல்வையிலுள்ள கோவில்களிற்கும், சந்நிதி முருகனிடமும் போய் வருவதோடு அது ஒரு பழைய குடும்பமாகிவிடும்.

கப்பல் முதலாளிமார், தண்டயல் வீடுகளில் ஆபரணங்கள் பொன்னுக்குப் பதில் தங்கத்தில் இருக்கும். சில செல்வர்கள் வீட்டில் மார்புப் பதக்கம், கல்அட்டிகை, காசுமாலை முதலானவைகளும் உண்டு. 1950ம் ஆண்டு வரையில் ஒரு பவுணின் விலை 13 ரூபா முதல் 20 ரூபாவிற்குட்பட்டதாக இருந்தது.

# இடைக்காலத் திருமணம்:


வல்வையில் நடுத்தர குடும்பத்தினர் பொருளாதாரத்தில் வளர்ந்திருந்த காரணத்தால் வீடென்றும் நகையென்றும், பணமென்றும் லட்சக்கணக்கில் கொடுக்கும் நிலையில் இருந்தார்கள். அப்போது ஆங்கில கல்வி கற்று ஒரு வைத்திய கலாநிதியாகவோ, பொறியியலாளா-ராகவோ, பட்டய கணக்காளராகவோ, வழக்கறிஞராகவோ இருந்து விட்டால் கல்யாண பேச்சை எடுத்தவுடன் ரொக்கம் எத்தனை லட்சம் கொடுப்பீர்கள் என்பதே முதற் கேள்வியாக விருக்கும் பெண்ணின் கல்வி, குணம், அழகு, உடைநடை பாவனை பற்றிக் கேட்கமாட்டார் கள். மேலும் அவர்கள் எவ்வளவு கொடுப்பார் கள் என்பதாகச் சொல்லி ஏலம் போடுவது போல தொகையை உயர்த்துவார்கள். இது மட்டுமல்ல ஒருபகுதி கல்யாணம் கேட்டால் அந்தப் பேச்சைத் தொடர்ந்து முடிவு செய்வ தில்லை. வேறு பகுதியார் வருவாரோ என பேச்சை இழுத்துக் கொண்டே போவார்கள். இதன் காரணமாக நடுத்தர குடும்பங்களின் திருமணம் பின்னடைந்து சென்றன.



இந்திய - ஸ்ரீலங்கா அரசுகளின் கூட்டு சதியால் பலாலியில் சயனைட் உட்கொண்டு 12 போராளிகள் வீரச்சாவை அணைத்து கொண்டனர். தீருவில் வெளியில் தீயாகிவிட்ட

குமரப்பா, புலேந்திரன், அப்துல்லா, ரகு, நளன், பழனி மிரேஷ், கரன், அன்பழகன், தவக்குமார், ரெஜினோல்ட், ஆனந்தகுமார் ஆகிய போராளிகளின் நினைவாலயம். இந் நிலைவாலயத்திற்கு செல்லும் பாதை பொதுமக்களின் உதவியுடன் அகலமாக்கப்பட்டு மாவீரர் வீதியென்று பெயர்மாற்றம் செய்யப் பட்டது.


நாங்கள் வன்முறை மீது
காதல் கொண்டவர்களோ
அன்றி அதுமாதிரியான
நோய்களால் பாதிப்புற்ற
மனநோயாளிகளோ
அல்லர். மாறாக
விடுதலையை
முன்வைத்து போராடும் ஓர்
ஸ்தாபனத்தின் அங்கம்
வகிக்கும் நேர்மையான
போராளிகள்.
நீதிமன்றத்தில்
ந. தங்கத்துரை



# உசாத்துணை நூல்கள்


1. ஊரின்னிசை - பூ.க. முத்துக்குமாரசாமி னுஆ, செ. வைத்தியலிங்கபிள்ளை
2. சிவன் கோயில் குடமுழுக்கு விழா மலர் - சங்கர வைத்திலிங்கம்
3. வல்வை முத்துமாரி அம்மன் கோவில் சரித்திரம் - வே. வ. சிவப்பிரகாசம்
4. சன்னதி சித்திர பெருந்தேர் வெள்ளோட்டமலர் - 1984
5. நம் தாயார் தந்த தனம் - வல்வை கமலா பெரியதம்பி
6. Re Opening of a North Ceylon Port
7. Early Settlements in Jaffna . Ponnampalam Ragupathy
8. தொண்டமானாறு ஆச்சிரமகலை பண்பாட்டு மலர் - 1994
9. கந்தரலங்கார மூலமும் உரையும் - வல்வை இயற்றமிழ்ப் போதகாசிரியர் ச. வயித்தியலிங்க பிள்ளை
10. ஈழத்தமிழ் இலக்கிய வளர்ச்சி - க.செ. நடராசா
11. இதய ஒலி சஞ்சிகை - உரும்பிராய் டாக்டர் க. இ. சரவணமுத்து டாக்டர்
12. 1.1.1803 அரோசிமித் உத்தியோகபூர்வ படத்தின் பிரகாரம் உள்ள குளங்களும் ஸ்தலங்களும் - ஸி. சுந்தரலிங்கம்
13. தமிழர் வரலாறும் இடப்பெயர்களும் - கதிர் தணிகாசலம், கரணவாய்
14. 1982, 1984, 1980 GUNNESS BOOKS
15. தமிழிரசு கட்சி வெள்ளி விழாமலர் - 1975
16. இலட்சிய இதயங்களோடு - அ. அமிர்தலிங்கம்
17. வல்வை கப்பலின் அமெரிக்க பயணம் - ந. அனந்தராஜ் 1974
18. The Boston Daily Globe (2. Aug 1938) அமெரிக்க பத்திரிகை
19. Daily Times (2. Aug 1938) அமெரிக்க பத்திரிகை
20. என்று முடியும் எங்கள் போட்டிகள் - எஸ் கே. மகேந்திரன்
21. யாழ்ப்பாண வைபவமாலை - மயில்வாகன புலவர்
22. வல்வை சனசமூக சேவா நிலைய வெள்ளிவிழா மலர் - 1968
23. வல்வை சனசமூக சேவாநிலைய பொன்விழா - ஈழநாதம் பத்திரிகை
24. ஈழத்து கவிதை கனிகள் - டாக்டர் சிலோன் விஜயேந்திரன் மி.ஆ
25. வல்வெட்டித் துறையிலிருந்து அமெரிக்கா வரை கப்பல் ஓட்டிய தமிழர்கள் - பாமா ராஜகோபால்
26. ஆழிக்குமரன் ஆனந்தன் - பாமா ராஜகோபால்
27. அன்னையர் பாமலர் சிவ. ஆறுமுகம்
28. காவிய நாயகன் கிட்டு - பழ. நெடுமாறன்
29. The Fall and Rise of the Tamil Nation - V. Navaratnam (EX.MP)
30. "PRABAHARAN Family and Society" The Island Page 13, Sunday De, 18.1994 - TARAKI
31. Indias Mylai (Massacre at Valvettiturai) - George Fernandez
32. இலங்கை தமிழர் போராட்ட வரலாறு - பாவை சந்திரன்
33. அமரர் ச. ஞானமூர்த்தி அவர்களின் சிவபத நினைவுமலர்
34. தமிழீழம் நாடும் அரசும் - சு. இராசரத்தினம்
35. ஆறுமுகநாவலர் சரித்திரம் - யாழ்ப்பாணம் நல்லூர் த. கைலாசபிள்ளை 1916
36. ஈழம் தந்த ஆறுமுகநாவலர் - பொ. பூலோகசிங்கம் BA (Hons) பக்கம் 159
37. London Financial Times 17.8.89 Page 40
38. இந்திய படுகொலை - வல்வை ந. அனந்தராஜ்

# VALVETTITURAI




VALVETTITURAI UC AREA (PART)

# நன்றி மறப்பது நன்றன்று

நூல் வெளியீடும் விருப்பத்தை கடிதமூலம் தெரியப்படுத்தி அணிந்துரை வழங்குமாறு கேட்டவுடன் நூலைப் பார்வையிடாமலே வல்வையின் சிறப்புமிகு சம்பவங்களை நினைவுபடுத்தி அணிந்துரையாக அன்போடு வழங்கி என்னை உற்சாகப்படுத்திய தமிழர் விடுதலைக்கூட்டணி தலைவர் மதிப்பிற்குரிய திரு மு.சிவசிதம்பரம் அவர்களுக்கும், வாழ்த்துரை அனுப்பிய அண்ணன் திரு மாவை.சேனாதிராசா அவர்களுக்கும்

ஈழத்தமிழருக்காக சிறு வயதினிலேயே தடுப்புக்காவல் கைதியாகிச் சென்றவரும், குட்டிமணி தங்க துரை, நடேசுதாசன், ஜெகன் ஆகியோர்களது வழக்கில் சட்டத்தரணிகளில் ஒருவராக விளங்கி, அவர் களுடன் நெருங்கிப் பழகியவரும், நூலைப் பார்வையிட்டு பொருத்தமான பெயரைச் சூட்டிய அண்ணன் திரு நவரத்தினம் (கரிகாலன்) சட்டத்தரணி அவர்களுக்கும்

நூலை அழகுற மின்கணணி மூலம் அச்சமைத்தும் வடிவமைத்தும் தந்த ஈழநாடு (கனடா பதிப்பு) ஆசிரியர் தம்பி T.K.பரமேஸ்வரன் அவர்களுக்கும், இந்நூலை அழகுற அச்சுப் பதிப்புச் செய்து தந்த விவேகா அச்சகத்தினருக்கும்

கிடைத்தற்கரிய சில நூல்களை இரவல் தந்துதவிய "காலம்" சஞ்சிகையின் ஆசிரியரும் வாழும் தமிழ் நூல் கண்காட்சியை இங்கு நடாத்துபவருமான திரு செல்வம் அவர்களுக்கும்

நூல் சிறப்பாக அமைய பல்வேறு ஆலோசனைகளை வழங்கிய நண்பர் திரு கனக.மனோகரன் அவர்களுக்கும் இப்பணியில் ஈடுபட்ட காலங்களில் தனது சிரமம் பாராது உபசரித்த அவரது துணைவியார் அவர்களுக்கும்


இப்புத்தகத்தை வெகுவிரைவில் வெளியிட வேண்டும் என வற்புறுத்திய மைத்துனர் திரு ந.அனந்தராஜ், தங்கை வனிதாமணி, பிள்ளைகளுக்கும் நன்றி.

என்னைக் காணும் போதெல்லாம் நூலை விரைவில் வெளியிட வேண்டும் என ஊக்குவித்த எமது கனடா வல்வை நலன்புரிச்சங்க ஆரம்ப அமைப்பாளர்களில் ஒருவரான அண்ணன் திரு கு.ஜவகர் லால் நேரு அவர்களுக்கும், திரு அருள்சுந்தரம் விஷ்ணு (கலையரங்கம்) அவர்களுக்கும் திரு கு.யோகராசா, திரு பொன்.சிவகுமாரன், திரு ராஜரெட்ணம் வேணு, திருமதி வேணு, திரு தி.சதானந்தன், திரு பரம் செந்திவேல் திரு ஜெயபாலன் ஆகிய அன்புள்ளம் கொண்டவர்கள் என்றும் என் அன்புக் குரியவர்கள்.

இப்பணியில் ஈடுபட்ட நேரங்களில் எல்லாம் ஒத்துழைப்புத் தந்து 'அப்பா ஊர் புத்தகமா' எழுதுகிறீர்கள், நாங்கள் பக்கம் போட்டுத் தருகிறோம் என பக்கம் போட்டுத் தந்தஎன் இளவல்கள் சந்திரசேகர் (சந்துரு) சௌமியன் (சௌமி) ஆகியோருக்கும்

இன்று (28.06.97) எமது அழைப்பையேற்று இவ்வெளியீட்டு விழாவுக்கு வருகை தந்த அன்புள்ளங் கொண்ட அனைவர்க்கும்

என் நன்றிகள் உரித்தாகுக.



# நூலாசிரியர் பற்றி ....

வல்வை மக்கள் மனம் தளராமல் தமிழ்மக்களுடைய உரிமைப் போராட்டத்திலும் தமது பங்கைச் செலுத்தி வருகிறார்கள். இப்படியாகத் துணிச்சலும், தமிழார்வமும், தியாக உணர்வும் கொண்ட மக்களைக் கொண்டது தான் வல்வைநகரம்.

நமது தமிழ்மக்களுடைய உரிமைகளை வெற்றெடுக்கும் இயக்கம் நிச்சயம் வெற்றி பெறும். அந்த வெற்றியில் வல்வை மக்களுடைய பங்களிப்பு மிகவும் பெரியது. தமிழி னம் முழுவதும் வல்வை மக்களை நன்றியுடன் போற்றிப் பாராட்டும்.

இந்த நூலைப் பொருத்தமாக நண்பர் நகுலசிகாமணி எழுதுகிறார். ஏனென்றால் தமிழர் போராட்ட நடவடிக்கைகளிலெல்லாம் அவர் முக்கிய பங்கு கொண்டவர். வல்வையின் சரித்திரத்தை நன்றாக அறிந்தவர். எனவே இவரது முயற்சி வெற்றிபெற பாராட்டுகின்றேன்.

மு.சிவசிதம்பரம்
தலைவர், தமிழர் விடுதலைக்கூட்டணி

★★★

தம்பி நகுலசிகாமணி எங்களை நினைத்து வாழ்த்துச் செய்தி கேட்டு எழுதியமை மனதில் நெகிழ்ச்சியையும் ஆதங்கத்தையும் ஏற்படுத்தியது. நாம் ஒன்றாக இருந்து பணிபுரிந்த காலங்களை எண்ணும் போது கண்கள் குளமாகின்றன. உங்களின் வல்வெட்டித்துறை வரலாற்றுச்சுவடுகள் வரலாற்றுப் படைப்பாக வெளிவரும் என்று நம்புகின்றேன். வரலாறு தொடரும். மலர் மணங் கமழும் என வாழ்த்தி நிற்கின்றேன்.

அன்புடன்
மாவை சோ.சேனாதிராசா

★★★

இந்தப் பனுவலைப் படைத்தவர் என்னுடன் படித்தவர், பால்ய நண்பர், சக மாணவராக மட்டுமல்ல சக விடுதலைப் (அறப்) போராளியாகவும் இருந்தவர்.

தாய் மண்ணான வல்வை நெய்தல் மண்ணோடு கொட்டியாய் - ஆம்பலாய் - நெய்தலாய் ஒட்டி வாழ்ந்தவர். ஊர்ப் பணிகளில் உளப்பூர்வமாகத் தோய்ந்தவர்.

நகுலனின் உளத்தில் இந்த நூலைப் படைக்கும் எண்ணம் கருவாகி கால் நூற்றாண்டின் பின்னரே இன்று கனடாவில் உருவாகியிருக்கின்றது. அர்ப்பணிப்போடு கூடிய அயரா உழைப்பின் வெளிப்பாடு தான் இந்த அற்புத வெளியீடு.

இந்த நூலும் நூலோனும் நாமமும் நீடு வாழ்வது நிச்சயம்

சட்டத்தரணி கனகமனோகரன்

★★★

வரலாற்றைப் படைப்பது மாத்திரமல்ல அதை எழுத்தில் வடிப்பதும் எளிதான காரியமல்ல. ஆனால் எதையுமே திண்ணிய நெஞ்சோடும் - திடம் கொண்ட தோளோடும் சந்தித்துப் பழகிப் போன அந்த வல்வையின் மைந்தர்களில் ஒருவரான அண்ணன் ந.நகுலசிகாமணி அவர்கள் வல்வையின் வரலாற்றுப்பின்னணியை - மக்களின் வாழ்க்கை முறையை - பண்பாட்டை - சமயப் பழக்க வழக்கத்தை - ஈழத்தமிழர் அரசியலில் - அவர்கள் போராட்டங்களில் வல்வையர் பங்க ளிப்பை இன்னும் பல்வேறு விடயங்களை ஆதாரங்களோடு தொகுத்து வழங்கியுள்ளார். கருத்தில் படியும் படியாகத் தீட்டி யிருக்கிறார்.

அவர் பணி வாழ்க!

**T.Kபரமேஸ்வரன்**
ஆசிரியர் ஈழநாடு (கனடா)

★★★